# விரியும் மலர் நானுனக்கு...

## 1

நிமிர்ந்த நன்நடை நேர்கொண்ட
பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத
நெறிகளும் திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்!

கண்ணாடி முன் அமர்ந்திருந்த பாரதிக்குத் தலை நிறையப் பூச்சூடினாள் லட்சுமி. அம்மாவின் திருமணத்தின் போது போட்ட நகையில் மீதமிருந்த ஒரே நகையான வெள்ளைக் கற்களும் முத்தும் பதித்த அட்டிகையை அக்காவின் கழுத்தில் மாட்டினாள் செல்லம்மா. கைகளுக்குத் தங்க நிறக் கண்ணாடி வளையல்களை மாட்டிக் கொண்டிருந்தாள் கடைக்குட்டி பராசக்தி. உதட்டுச் சாயம், கண்ணுக்கு மை என எந்த அலங்காரமும்

இன்றியே ரோஜா நிற உதடுகளும் கருவிழிகளில் காந்த மூமாய் மின்ன முகத்தில் நாணமோ எதிர்பார்ப்போ பூரிப்போ இன்றி அமைதியாகத் தன் எதிரில் இருந்த கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் பாரதி. இந்தத் திருமணம் தேவையா என்ற கேள்வி ஏழாவது முறையாய்த் தோன்ற, தாளாமல் அன்னையிடம் கேட்டே விட்டாள் பாரதி.

"இப்ப கல்யாணத்திற்கு என்னம்மா அவசரம்? நான் படிக்கணும். இன்னும் ஒரு வருடம் இருக்கிறதே. அது முடிந்த பின் இதை வைத்துக் கொண்டால் என்ன? பிளீஸ்மா. எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. வேண் டாம்மா!" - என்ற மகளின் வாயைப் பதறி மூடினாள் லட்சுமி.

"என்ன பேச்சு கண்ணம்மா இது? நேற்று இரவே அம்மா தெளிவாச் சொன்னேனே. இது தானா நம்மைத் தேடிவந்த வரன் கண்ணம்மா. ரொம்பப் பெரிய இடம். மாப்பிள்ளையோட அப்பா உங்க அப்பாவிற்குத் தூரத்துச் சொந்தமாம். போன வாரம் மீனா அத்தை வீட்டுக் கல்யாணத்திற்குப் போயிருந்தோமே. அப்பத்தான் மாப்பிள்ளையோட அம்மாவும் அப்பாவும் உன்னைப் பார்த்தாங்களாம். அவங்களுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சாம்.

"மீனா அத்தைகிட்ட விசாரிச்சு நம்ம வீட்டுக்கே நேத்து வந்திட்டாங்க. அப்பாவுக்கும் ரொம்ப சந்தோஷம். அதனாலதான் இன்னிக்கு நல்ல நாள்னு இன்னிக்கே நிச்சயம் பண்ணிடலாம்னு சொல்லிவிட்டுட்டாங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவாங்க. இந்த நேரத்தில இப்படியெல்லாம் பேசி வெக்காதம்மா. அப்பா காதில



விழுந்தா அவ்வளவுதான்!" - என்ற தாயைப் பார்த்துப் பரிதாபமாய்க் கேட்டாள் பாரதி.

"ஏம்மா இப்படி இருக்கீங்க. எவனோ ஒருத்தன் வந்து கேட்டா உடனே கட்டிக் கொடுத்துடுவீங்களா? அவங்க யாரு, என்னன்னு விசாரிக்க மாட்டீங்களா? ஒவ்வொரு இடத்திலயும் என்னவெல்லாம் நடக்குதுன்னு தெரியுமா உங்களுக்கு? வீட்டுக்குள்ளேயே இருக்கிற உங்களுக்குத் தெரியாதும்மா. ஆனா அப்பா எப்படி எதையும் விசாரிக்காம சம்மதிச்சாங்க?"

"எல்லாம் விசாரிச்சாச்சு. அவங்க என் சொந்தக்காரங்க. நல்ல மனுஷங்க. பரம்பரைப் பணக்காரங்க. இதைவிட வேறென்ன வேணும்?" - என்ற அதிகாரக்குரலோடு வந்தார் பெரியசாமி. அனைவரும் பயமாய் எழுந்து நிற்க, பாரதி மட்டும் தந்தையை நேராய்ப் பார்த்தாள்.

"பெத்தவங்க நல்லவங்களா இருக்கலாம். ஆனா மாப்பிள்ளை எப்படிப்பட்டவர் என்று பார்த்தீர்களா அப்பா. எதையும் யோசிக்காமல் நிச்சயம் வரை ஏன் போனீர்கள். என்னிடம் ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் நீங்களாகவே எப்படி முடிவை எடுக்கலாம்?" - எனக் கேட்ட மகளைக் கூர்ந்து பார்த்தார்.

"உன் அம்மாவிற்கும் எனக்கும் திருமணமாகி இருபத் தாறு ஆண்டு ஆகிறது. நாங்கள் நன்றாகத்தான் வாழ் கிறோம். அவளிடம் கேட்டுவிட்டா அவள் அப்பா என்னைக் கட்டிவைத்தார். ம்?" - மிரட்டலாய் ஒலித்தது அவர் குரல்.

"அம்மா வாழ்ந்த காலம் வேறு அப்பா. அப்போது பெண்கள் படிப்பதற்குக்கூட வெளியே வரமாட்டார்கள். இப்போது அப்படி இல்லையே. பெண்கள் வெளியில் சென்று படிக்கிறோம். நாட்டில் நடப்பதைத் தெரிந்து

கொள்கிறோம். நல்லது எது, கெட்டது எது எனத் தெரிந்து கொள்ளும் திறமையும் இருக்கிறது. எனக்கு என்னவோ இந்த இடம் சரியானதாகத் தோன்ற வில்லையப்பா. அவ்வளவு பெரிய பணக்காரர் ஏன் எந்த வசதியும் இல்லாத நம் வீட்டில் வந்து பெண் கேட்கவேண்டும்? அதுவும் பத்தே நாளில் கல்யாணம் என்று ஏன் அவசரப்படுத்த வேண்டும்? ஏன், ஊட்டியில் இல்லாத பெண்களா? அங்கெல்லாம் விட்டுவிட்டு இந்தத் தஞ்சாவூரில் உள்ள குக்கிராமத்தில் ஏன் பெண் தேடி வந்தார்கள்? எனக்கு நிறைய டவுட் இருக்குப்பா. நீங்கள் யோசிக்காமல் சம்மதித்திருக்கக் கூடாது," - என்றாள் பாரதி.

பெரியசாமி மனைவியை ஏறிட்டார். "பார்த்தியாடி! இதுக்குத்தான்... இதுக்குத்தான் பொம்பளைப் புள்ளைய வீட்டோட வைக்கணும்னு சொன்னேன். கேட்டியா? என்னவோ பெரிய இவளாட்டம் அக்காவும் தம்பியும் சேர்ந்து என் வாயை அடைச்சிட்டு... பொல்லாத படிப்பெல்லாம் படிக்க வெச்சீங்களே. பார்த்தியா உன் பொண்ணை. எனக்கே படிப்புச் சொல்லித் தர்றா. நான் யாருடி? நான் யாரு? எனக்கு நல்லது கெட்டது தெரியாதா? இவ எனக்குச் சொல்லித் தர்றா பாரு." - கோபமாய்க் கத்த, லட்சுமி பயந்து நடுங்கினாள்.

"நல்லதை யார் சொன்னாலும் ஒத்துக்கணும்ப்பா. இதுல பெரியவங்க என்ன? சின்னவங்க என்ன? அம்மாகிட்ட ஏன் பாயறீங்க? நீங்க மாப்பிள்ளைய பார்த்தீங்களா? என்ன வேலை செய்யறார்? அப்பா! இதுலயும் உங்க வறட்டுக் கர்வத்தைப் பார்க்காம உண்மையைச் சொல்லுங்கப்பா. ஏன்னா இது என்னோட வாழ்க்கை மட்டுமில்ல, நம்ம குடும்பத்தோட எதிர்காலமும் இதுல அடங்கியிருக்கு. அவசரப்பட வேண்டாம்ப்பா.



கொஞ்சம் பொறுமையா இருங்கப்பா. இன்னும் ஒரு வருஷம் தான். படிப்பு முடிஞ்சதும் வேலையில ஜாயின்ட் பண்ணிடுவேன். அப்புறம் செல்லம்மாவையும் சக்தியையும் நானே படிக்க வைச்சிடுவேன். அதுக்கப்புறம் நீங்க சொல்றபடி. கல்யாணம் பண்ணிக்கிறேம்ப்பா. அதுவரை இதெல்லாம் வேண்டாம்ப்பா?" - என்றாள் மெல்லிய குரலில்.

"ஆமா! ஏற்கெனவே ஊருக்குள்ள எல்லாரும் பெரியசாமி வேலை வெட்டி இல்லாம வீட்டே கதின்னு கிடக்கிறான். அவன் மாப்பிள்ளை தான் மாடா உழைச்சுக் கொட்டுறான். புள்ளைங்களைக் கூட அவன் தான் படிக்க வைக்கிறான்னு பேசுறானுங்க. இதுல நீ வேலைபார்த்து என் புள்ளைங்களை ஆளாக்கி தியாகி ஆகிட்டு என்னை இன்னும் கேவலப்படுத்தலாம்னு பார்க்கிறீயா? இதோ பார்! எனக்குன்னு சில கடமைகள் இருக்கு. நீ மட்டும் புள்ள இல்ல. இதோ வரிசையா பெத்து வெச்சிருக்காளே உங்க அம்மா. இது அத்தனையும் கரையேத்த வேண்டாமா? முதல்ல உன்னை அனுப்பினாத்தானே அடுத்ததை வெளியேத்த முடியும்?

"உன் அதிர்ஷ்டம். பெரிய இடம் தானா தேடி வருது. வலிய வர்ற சீதேவியை யாராவது எட்டி உதைப்பாங்களா? மாப்பிள்ளைக்கு ஊட்டியில நாலஞ்சு எஸ்டேட் இருக்கு. அதோடு பெரிய ஹோட்டலும், ரிசார்ட்சும் இருக்கு. அண்ணன் தம்பின்னு ரெண்டே பேர்தான். மாமன் மாமியார்னு புடுங்கல் இல்லை. அவங்க ரெண்டு பேரும் கோயம்புத்தூர்ல இருக்காங்க. அங்கயும் காட்டன்மில் வீடு எல்லாம் இருக்குதாம். அதை உன் மாமனாரும் மாப்பிள்ளையோட தம்பியும் பார்த்துப்பாங்களாம். உனக்கு எந்தக் கவலையும் இல்லாம ஊட்டியில ராணி

மாதிரி வாழலாம். எத்தனை தவம் செய்தாலும் இப்படி ஒரு வரன் கிடைக்குமா? ஒத்தைப் பைசா வரதட்சிணை வேண்டாம்னு சொல்லிட்டாங்க. இந்தக் காலத்தில கூலி வேலைக்குப் போறவன் கூட இருபது சவரன் கேட்கிறான். நகை விக்கிற விலையில நம்மால ஒத்த சவரன் வாங்க முடியுமா? அதனாலதான் உடனே சம்மதம் சொல்லிட்டேன்.

"நம்ம குடும்பத்தைப் பத்தி தெரிஞ்சுதான் நம்ம குடும்பத்தில சம்பந்தம் வெச்சிக்கணும்னு தேடி வந்திருக்காங்க. இந்த மாதிரிக் கண்டதையும் பேசி, வர்றவங்களை ஓட வெச்சிடாதே. அப்புறம் நான் மனுஷனா இருக்கமாட்டேன்!" - உறுமிவிட்டு வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வெளியேறத் திரும்பினார்.

''அப்போ என்னோட படிப்பு?'' - பாரதி குரல் கொடுத்தாள்.

''பொல்லாத படிப்பு. இனிமே படிச்சு என்ன பண்ணப் போற? அவ்ளோ பெரிய குடும்பத்தில உன்னை வேலைக்கா அனுப்பப் போறாங்க. பேசாம சந்தோஷமா குடும்பம் நடத்து."

"அப்பா! வீணாகப் போறது என் படிப்பு மட்டுமில்லப்பா. மாமாவோட உழைப்பு. இத்தனை வருஷம் என் படிப்புக்காக அவர் பண்ணிய செலவு. எல்லாமே வீணாப் போயிடுமேப்பா!'' - தொண்டை அடைக்க வேண்டினாள் பாரதி.

"அவனை யாரு செலவு பண்ணச் சொன்னது? நீ வக்கீலுக்குப் படிச்சு எங்கே போய் வாதாடுவே. லட்சம் லட்சமா செலவு பண்ணினதுக்கு நாலு நகை நட்டாவது சேர்த்திருக்கலாம். கூறுகெட்ட பய. வயசுதான் ஏறுதே தவிர மண்டையில ஒரு களிமண்ணும் கிடையாது. அவன் ஒண்ணும் உன்னைச் சும்மா படிக்க வைக்கலம்மா. நீ படிச்சு வக்கீலானதும் உன்னையே கட்டிக்கலாம்னு பார்க்கிறான். படிக்காத தற்குறிக்குப் படிச்ச பொண்ணு பொண்டாட்டியா வரணுமாக்கும்!'' - என்றவரைப் பார்வையால் எரித்தாள் பாரதி.

"அப்பா! மாமா ஒன்றும் அப்படிப்பட்டவர் இல்லை. ஒரு நல்ல உள்ளத்தை இப்படி அசிங்கமாய்ப் பேசிக் களங்கப்படுத்தாதீர்கள். இது கடவுளுக்கே பொறுக்காது!" - வெடித்தாள்.

"நீதான் உன் மாமனை மெச்சிக்கணும். நீ பொறந்ததுல இருந்தே நீதான் அவனுக்குன்னு சொல்லிட்டுத் திரியுறான். நான்தான் பிடி கொடுக்காம இருக்கேன்!" - என்றார் பெரியசாமி.

"ஆமாம். ஒவ்வொரு முறை கரும்பு விற்ற காசு, நெல் விற்ற காசு எனத் தம்பி கத்தையாய்ப் பணம்கொண்டு வரும்போதெல்லாம் இதையெல்லாம் எனக்காக வாங்கலப்பா. உன் கண்ணம்மாவுக்காகவும், உன் அக்காவுக்காகவும் தான் வாங்கிக்கிறேன். எப்படியும் கண்ணம்மா உனக்குத்தான் என்று பேசிய வாய் இன்று கூசாமல் என்னவெல்லாம் சொல்கிறது!'' - லட்சுமி தனக்குள்ளே சொல்லிக்கொண்டாளே தவிர, அவளால் வேறொன்றும் சொல்லமுடியாமல் போனது. இன்று நேற்றல்ல, பெரியசாமியின் கையால் தாலி வாங்கிய அன்று மூடிய வாய்தான். இன்று வரை கணவனின் முன் வாயைத் திறப்பதில்லை. திறக்க அவர் அனுமதிக்கவும் இல்லை.

ஒரு வார்த்தை சொன்னால் உடனே தலையாட்டி ஏற்றுக் கொள்ள வேண்டும். மறுத்துப் பேசவோ, பார்க்கவோ கூடாது. இது அந்த வீட்டில் எழுதப்படாத சட்டம். அந்தச் சட்டத்திற்கு உட்பட்டே வாழப் பழகியிருந்தாள் லட்சுமி. அவள் விருப்பத்தைக் கேட்கவோ மதிக்கவோ அங்கே அனுமதி இல்லை. அவள் வாழ்வில் அவளாக விரும்பிச் செய்தது ஒன்றே ஒன்றுதான். தன் பெண் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டிய பெருமை ஒன்றுதான்.

முதலாவதாய்ப் பிறந்த பாரதிக்குத் தன் அன்னையின் பெயரான கண்ணம்மா என்று வைத்தார் பெரியசாமி. இறந்தவர்களின் பெயரை அப்படியே வைக்கக் கூடாது. கூட எதுவும் சேர்த்துதான் வைக்க வேண்டும் என்று சொல்லித் தனக்கு மிகவும் பிடித்த பாரதியின் பெயரைச் சேர்த்துப் பாரதி கண்ணம்மா என்று வைத்தாள் லட்சுமி. இயல்பாகவே பாரதியாரை அவளுக்கு மிகவும் பிடிக்கும். அவரது கவிதைகளும் பாடல்களும் உயிர். பாரதியாரின் பரம ரசிகை லட்சுமி. புகுந்த வீடு வந்தபிறகு கவிதையாவது பாடல்களாவது! அடுக்களை மட்டுமே அவளுக்கு அடைக்கலமானது. ஆனாலும் பாரதியாரின் மீதுள்ள பற்று மறையவில்லை.

அடுத்து அடுத்து இரண்டும் பெண்களாகவே பிறந்துவிட, பெரியசாமி குழந்தைகளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பெயர் சூட்டவும் இல்லை. ஆனால் அதற்காக லட்சுமி கவலைப்படவும் இல்லை. பாரதியின் துணைவியான செல்லம்மாவின் பெயரையும், சக்தி வேண்டிக் கேட்ட அன்னை பராசக்தியின் பெயரையும் தன் பிள்ளைகளுக்கு வைத்து அதிலேயே ஆனந்தம் அடைந்து கொண்டாள்.



பிறந்த வீடு நான்கு தெரு தாண்டியே இருந்தபோதும் அனுப்ப மாட்டார் பெரியசாமி. உடன் பிறந்த ஒரே தம்பியான நடராஜன்தான் அவ்வப்போது வந்து பண உதவியோ பொருள் உதவியோ செய்துவிட்டுப் போவான். அக்காளின் நிலை கண்டு அவனும் வருந்தாத நாளில்லை. திருமணம் செய்துகொண்டு தனக்கென்று ஒரு குடும்பம் வந்து விட்டால் அக்காவிற்கும், அக்காவின் குழந்தைகளுக்கும் படி அளக்க முடியாமல் போய்விடுமே என்று திருமணத்தையே அடியோடு மறந்து விட்டான் நடராஜன்.

அவனுக்கு எப்படியும் பாரதியைக் கொடுக்க வேண்டும் என்று லட்சுமிக்கு அதீத ஆசை. பெரியசாமியும் அப்படிச் சிலசமயம் சொல்லும் போதெல்லாம் பூரித்துப் போய்விடுவாள். ஆனால் திடீரெனக் கணவன் அந்தர் பல்டி அடித்ததும் மனம் நொந்து போனாள். மறுத்துப் பேசவும் வழியின்றி மனம் குமுறிக் கொண்டிருந்த போதுதான் தன் மகளே தந்தையின் முகத்திற்கு நேராய்க் கேள்வி கேட்டதும் சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் லட்சுமி. பாரதியும் பெயருக்கேற்றாற்போல் துணிச்சலாகவே வளர்ந்தவள்.

தந்தையைக் கண்டு மற்றவர்கள் நடுங்கினாலும் அசராமல் நின்று, தவறு என்றால் தயங்காமல் தட்டிக் கேட்பாள். அதனாலேயே கூடுமானவரை பெரியசாமி மூத்த மகளிடம் வாக்குவாதம் செய்யாமல் விலகிவிடுவார். இன்றும் பேச்சு நீண்டு கொண்டு போகவே அவஸ்தையாய் வாசலைப் பார்த்தார்.

“எந்த நேரத்திலும் அவர்கள் வந்துவிடலாம். மகளோ எதற்கும் மசிவதாக இல்லை. கல்யாணம் வேண்டாம் என்று ஒரே பிடியாய், நிற்கிறாள். விடக்கூடாது. அவள்

விருப்பத்திற்கு வளைய விடக்கூடாது. இவளிடம் பேசவும் முடியாது..." என்றவர், ஒரு முடிவுடன் மனைவியைப் பார்த்தார். எந்தப் பிரச்சனை என்றாலும் அவர் எடுக்கும் ஒரு ஆயுதம் உண்டு. இன்றும் அதையே எடுத்தார். பெற்றவளோடு பாரதியும் அரண்டுதான் போனாள்.

## 2

தூண்டில் புழுவினைப் போல் - வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சம் துடித்ததடி!

குடும்பத்தில் ஆடவர்கள் வேலைக்குச் சென்றால் அங்கே சண்டையோ சச்சரவோ வருவதில்லை. காலையில் எழுந்து வேலைக்குச் செல்லும் ஆண் பணி முடிந்து களைத்து வருகையில் பதமாய்க் கவனித்து உணவு பரிமாறி உண்டு உறங்கி, மறுநாள் மீண்டும் வேலைக்குப் புறப்பட்டுச் செல்லும் நேரம் சண்டை போடவோ குற்றம் குறை காணவோ பொழுதும் இருக்காது. அவசியமும் இருக்காது. பொருளாதாரச் சிக்கலும் வராது. ஆனால் இதுவே ஒரு குடும்பத் தலைவன் வேலைக்குச் செல்லாமல் இருந்துவிட்டால் அனைத்தும் தலைகீழாகி விடும். பிரச்சனைகளின் ஆணிவேர் பொருளாதாரம். அதாவது வருமானம் இல்லாமை. இந்த இல்லாமை எல்லாச் சங்கடத்தையும் வரவழைக்கும்.



பெரியசாமியும் இந்த ரகம்தான். உடல் உழைப்பில் அதிக நாட்டமும் ஆர்வமும் இல்லாதவர். வசதியாக இருந்தவரை உழைக்காமலேயே இருந்து பழகியதால் உடலும் வளைய மறுத்தது. குந்தித் தின்றால் குன்றும் குறையுமே. அப்படித்தான் பெரியசாமியின் சொத்துக்கள் விற்பனையாயின. சொத்துக்கள் போனபின் மனைவியின் நகைகள் காணாமல் போயின. இதில் லட்சுமியின் சம்மதமோ அபிப்பிராயமோ கேட்கப்படுவதில்லை. பிள்ளைகள் வளரும்வரை அவரைக் கேள்வி கேட்க ஆளில்லை. ஆனால் பிள்ளைகள் வளரும் போது, துணிமணி வாங்க அது இதென்று தேவை வரும்போது, பணப் பற்றாக்குறை பல சண்டைகளை விளைவித்தது. பெரியசாமி தொடங்கும் சண்டையை அவர்தான் முடித்தும் வைப்பார். ஒரே ஒரு வார்த்தை கேட்டு அனைவரின் வாயையும் அடைத்துவிடுவார். அதோடு அன்றைய போர் முடிவிற்கு வந்துவிடும். இன்றும் அதே முறையைக் கையில் எடுத்தார்.

"அப்போ உன் மாமனை நினைச்சுக்கிட்டுத்தான் கல்யாணம் வேண்டாம்னு தள்ளிப்போடுறியா? அவனைக் கட்டிக்கிட்டு என்ன செய்யப் போற நீ? எப்பவும் வயல்காடு, கரும்புத் தோட்டம்னு காடு கரையிலேயே பழியாக் கிடப்பவனை, ஒரு படிப்பறிவு இல்லாத முட்டாப்பயலைக் கட்டிக்கொண்டு கிணற்றடியிலும் மாட்டுத்தொழுவத்திலும் உன் காலத்தைக் கடத்தப் போகிறாயா? இதுக்கு நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். நான் பார்த்த மாப்பிள்ளையைக் கட்டிக் கொண்டால் அவர்களை வைத்தே மற்ற இரு பெண்களைக் கடத்தி விடுவேன். என் கனவில் மண்ணையள்ளிப் போட்டுவிடாதே. இந்தத் திருமணம் மட்டும் நடக்க

வில்லையென்றால் நான் இதே உத்திரத்தில் கயிற்றில் தொங்கி விடுவேன். அப்புறம் தாயும் மகள்களுமாய் எவனைக் கட்டிக்கொண்டாலும் சரி!" - உச்ச ஸ்தாயியில் பெரியசாமி கத்த, "ஐயோ" - என வாயை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள் லட்சுமி.

பாரதி கண்களை இறுக மூடிக்கொண்டாள். அப்பா தனது பிரம்ம அஸ்திரத்தை எய்துவிட்டார். கயிற்றில் தொங்கிவிடுவேன் என்ற ஒற்றைச் சொல் போதும். அம்மாவும் இனிக் கெஞ்சி அழுவாள். பாவம், அம்மா! நம்மால் அழ வேண்டாம். இந்த அப்பாவும்தான் என்னென்ன பேசுகிறார். போயும் போயும் மாமா உடனா தன்னை இணைத்துப் பேச வேண்டும். அவர் எனக்கு இன்னொரு தகப்பன் ஆயிற்றே. எப்படிப் பார்த்தாலும் மாமாவிற்கு முப்பத்து ஐந்து வயதிற்கும் மேல் இருக்கும். அவரைப் போய்ச் சந்தேகப்படலாமா? தன் படிப்பிற்காகச் செலவு செய்வதும் புதிது புதிதாய் ஆடைகள் வாங்கித் தருவதும் தவிர தவறான பேச்சோ பார்வையோ இல்லாத மாமாவை எப்படி அப்பா இப்படிப் பேசலாம். இதுவரை ஒரு துணி எடுத்துத் தந்திருப்பாரா? ஒரு நோட்டு... புத்தகம்? ஏன் அம்மாவிற்கு ஒரு முழம் பூ கூட வாங்கித் தந்ததில்லையே. மாப்பிள்ளை மட்டும் யார் கேட்டது இவரிடம்? இதில் மிரட்டல் வேறு. வெறுப்பால் முகத்தைச் சுழித்தாள்.

தன்னை வைத்தே மற்றப் பெண்களைக் கரையேற்று வாராமே. ஹ்ஊம்... கடைசிவரை உழைத்துச் சம்பாதிக்கப் போவதில்லை. நமக்கும் விடியப் போவதில்லை. இந்த வீட்டில் இருக்கும்வரை அப்பாவுடன் போராடித் தளர்ந்து தான் போகவேண்டும். ஏதோ கொஞ்சம் தைரியம் இருக்கும் தனக்கே இந்த நிலையென்றால், வாய்பேசாத



இந்த இரண்டு பெண்களையும் என்ன செய்வார் அப்பா? ஏதேனும் கூனோ, குருடோ, கிழவனோ பெண்ணை மட்டும் தாருங்கள் என்றால் இந்தா பிடி என்று கொடுத்து விடுவார்.

வேண்டாம். அந்த அவல நிலை இவர்களுக்கு வர வேண்டாம். வரும் மாப்பிள்ளை நல்லவனோ கெட்டவனோ ஆனால் வசதியானவன். நான் நன்றாக வாழ்வேனோ இல்லையோ, இந்தப் பெண்களையாவது நல்லபடியாக வாழவைக்கலாம். நல்ல இடமாக... நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து மணமுடிக்கலாம். வீடு வெளிச்சம் பெற மெழுகுவத்தி தன்னைத் தானே உருக்கிக் கொள்வதில்லையா? அதுபோல் நம் குடும்பத்திற்கு வெளிச்சம் வர நம்மையே பணயமாக வைத்துக்கொள்ள வேண்டியது தான்.

முடிந்தால் அம்மாவைக் கொஞ்ச நாளாவது தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும். நல்லவிதமாய்ச் சமைத்துச் சாப்பிடக் கொடுக்கலாம். வெளியில் நாலு இடங்களில் அழைத்துச்சென்று காட்டலாம். பாவம் அம்மா! எத்தனை வருடமாய் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கிறாள். அம்மாவிற்காகவேனும் இந்த மாப்பிள்ளையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தன்னைத் தானே தேற்றித் தன் மணவாழ்க்கைக்குத் தயாராகி நிமிர்ந்த போது, அப்பா கையில் கயிறோடு வந்தார். "எனக்குத் தெரியும்டி. நீ சம்மதிக்கமாட்டே. உன் மனசில எவனோ இருக்கான். படிக்கப்போன இடத்தில எவனையும் பார்த்து வெச்சிருக்கியா? அதனால தான் என் உயிரைப் பத்திக்கூடக் கவலைப்படாம நிக்கிற இல்ல. இல்லேன்னா அந்தக் காட்டுப் பயல நினைச்சுட்டு

இருக்கியா?" - கேட்டுக் கொண்டே ஸ்டூலை எடுத்துப் போட்டு அதன் மேல் ஏறினார்.

"என் தாலியக் காப்பாத்தும்மா!" - என்றவாறு காலில் விழ முயன்ற அன்னையை அணைத்துக் கொண்டாள் பாரதி. தங்கைகளின் அழுகை மனதை ரணமாக்க, "அப்பா... ஆ... ஆ..." - என வீறிட்டாள்.

"ஏம்ப்பா! உங்க புத்தி சாக்கடையை விடக் கேவலமாப் போச்சு. கண்டவனையும் பார்க்கிறதுக்கா நான் படிக்கப் போனேன். படிச்சு உழைச்சு உங்களையெல்லாம் காப்பாத்தணும்ற வெறியிலதான படிக்கிறேன். அப்படி இருக்கும்போது வேற எண்ணம் எனக்கு எப்படி வரும்? மாமா பாவம்ப்பா. நமக்காக உழைச்சு தன்னோட வாழ்க்கையையே தொலைச்ச தெய்வம் அவர். அவர்கூட என்னை இணைச்சுப் பேச உங்களுக்கு எப்படி மனம் வந்தது. நீங்க எனக்கு உயிர் கொடுத்தவருன்னா, அவர் எனக்குக் கல்வி கொடுத்த தெய்வம். அவரைப் போய் நான்... ச்சே! நீங்க இத்தனை கேவலமா போவீங்கன்னு நினைக்கலியே.

"பெத்தவங்க புள்ளைங்க மேலே நம்பிக்கை வைக்கணும். அந்த நம்பிக்கைதான் பிள்ளைகளைக் கெட்ட வழிக்குப் போகாம தடுக்கும். நான் இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்கிறேன். என் அம்மாவிற்காக... என் தங்கைகளின் வாழ்க்கைக்காக... அந்த மாப்பிள்ளை யாராக இருந்தாலும் சரி. எப்படி இருந்தாலும் சரி. இந்த நிமிடமே தாலி கட்டுவதாக இருந்தாலும் சரி. நான் தயார். எனக்குச் சம்மதம்!" - என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினாள்.



ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு கையிலிருந்த கயிற்றைச் சுருட்டிப் பரண் மீது போட்டார். மனைவியிடம் வந்தார். "பாருடி! இப்பத்தான் இறங்கி வந்து இருக்கா. நீ அவகிட்ட போயி எதையாவது பேசிக் காரியத்தைக் கெடுத்திடாதே. அப்புறம் எனக்கு இந்தக் கயிறுதான். புரியுதா?" - என்றவாறு மிரட்டும் போதுதான் வாசலில் கார் வந்து நின்றது. அவசரமாக ஓடினார் பெரியசாமி.

பூஜையறையில் நின்று கண்களை மூடி வேண்டிக் கொண்டு நின்ற பாரதியின் காதுகளிலும் அந்த ஓசை கேட்கத்தான் செய்தது. காரின் ஓசையும் அதைத் தொடர்ந்து சில பேச்சுக் குரல்களும் ஆர்ப்பாட்டமான தந்தையின் குரலும் கேட்டும் கண்களைத் திறக்க மனமின்றி நின்று கொண்டிருந்தாள்.

"அக்கா! அவங்க எல்லாம் வந்தாச்சு. வாக்கா, உனக்கு பவுடர் போட்டு விடச் சொன்னாங்க அம்மா!" - என்ற செல்லம்மாவின் குரலில் தன் கண்களைத் திறந்தாள். லேசாகக் கலங்கியிருந்த விழிகளைக் கண்டதும், பதறி, "அக்கா! உனக்கு விருப்பம் இல்லாமல் நீ சம்மதிக்க வேண்டாம். நீ படிக்க வேண்டும் என்று நான் மாப்பிள்ளையிடம் ரகசியமாய்ச் சொல்லிவிடவா?" - எனக் கேட்ட தங்கையை அணைத்துக்கொண்டு சிரித்தாள் பாரதி.

"எனக்கு ஒரு வருத்தமும் இல்லை செல்லம். எனக்கு அம்மாவும் நீங்களும் தான் முக்கியம். நாம் இதுவரை ஊட்டி பார்த்ததே இல்லையே. திருமணம் முடிந்ததும் உங்களையும் அழைத்துக்கொண்டு சுற்றிக்காட்டுகிறேன். ஜாலியா டூர் போகலாம்," - என்றாள் பாரதி.

“நிஜமாவாக்கா? அக்கா, எனக்கு ஊட்டிக்குப் போகணும்னு ரொம்ப ஆசை. அங்க எல்லாமே பச்சைப் பசேல்னு இருக்குமாமே. அப்புறம் நிறைய விதவிதமான ரோஜாப்பூக்கள் எல்லாம் இருக்குமாம். எப்பவும் சில்லுனு இருக்குமாம். நீ ரொம்ப குடுத்து வெச்சவக்கா. அங்கேயே இருக்கப் போறியே. அத்தான்கிட்ட சொல்லி எங்களுக்கும் அங்கே ஒரு வாடகை வீடு பார்க்கச் சொல்லுக்கா. உன் பக்கத்தில இருந்த மாதிரியும் இருக்கும். ஆசைதீர ஊட்டிய பார்த்த மாதிரியும் இருக்கும்.” - இளையவளின் கண்கள் கனவில் மிதக்க, பாரதியின் இதயம் வலித்தது.

“லட்சுமி! கண்ணம்மாவைக் கூட்டிட்டு வாம்மா.” - அப்பாவின் குரல் கேட்டது. “எம் பொண்ணோட பேரு பாரதி கண்ணம்மா. நான் என் அம்மா பேரைச் சொல்லித்தான் கூப்பிடுவேன். நீங்க பாரதின்னும் கூப்பிடலாம். கண்ணம்மான்னும் கூப்பிடலாம். உங்க விருப்பம்போலக் கூப்பிடுங்க!” - என அசடு வழிந்ததும் கேட்டது.

லட்சுமி வந்து மகளுக்கு லேசாய் பவுடரை ஏற்றி, புடவையை நீவி விட்டு, கையில் காபி ட்ரேயைக் கொடுத்தாள். “கொண்டு போய்க் கொடுத்திட்டு எல்லோருக்கும் நமஸ்காரம் பண்ணும்மா!” எனக் காதிற்குள் சொல்லி அனுப்பினாள். நான்கு காபிக் கோப்பைகள் மட்டுமே இருக்க, அன்னையைக் கேள்வியாய்ப் பார்த்தாள் பாரதி.

“பெண் பார்க்கத்தானே என்று மாப்பிள்ளை குடும்பம் மட்டும்தான் வந்திருக்கிறதம்மா. கூட்டம் அதிகம் இல்லை. பதட்டமில்லாமல் வா,” என்றவாறு மகளை அழைத்து வந்தாள் லட்சுமி. அமைதியாகவே வந்து அனைருக்கும் காபியைக் கொடுத்தாள். மாப்பிள்ளையின்



தாயும் தந்தையும் ஆளுக்கொரு காபிக் கோப்பையை எடுத்துக்கொள்ள, அடுத்ததாய் உள்ள நபரிடம் காபி ட்ரேயை நீட்டினாள்.

“இவன்தாம்மா மாப்பிள்ளை. என் மூத்த மகன் பிரசாத். நல்லா பார்த்துக் கொள்ளம்மா!” - என்றார் சிவராமன். லேசான புன்னகையோடு கண்களை மட்டும் உயர்த்தி அவனைப் பார்த்தாள் பாரதி. குனிந்த தலையும் அடர்ந்த கேசமும் மட்டுமே தெரிந்தது. காதிற்குள் செல்போனை வைத்துக்கொண்டு மெல்லிய குரலில் தீவிரமாய் யாரிடமோ பேசிக் கொண்டிருந்தான் அவன். அருகில் பெண் வந்து நிற்பதையும் காபியை நீட்டுவதையும் கூட உணராத உரையாடல். அருகிலிருந்தவர்களுக்குக் கூடக் கேளாத தொனியில் பேசிக் கொண்டிருந்தான். இடது கையில் போன் இருக்க, வலது கை மட்டும் விரல்களை நீட்டுவதும் மடக்குவதுமாக... தடிமனான கைச்செயினும் கண்ணில்பட்டது. மற்றப்படி நிமிர்ந்துகூடப் பாராத அவன் முகம் தெரியவில்லை.

அவளது அவஸ்தை புரிந்தவனாக அருகிலிருந்தவன் உதவிக்கு வந்தான். “ஸாரி அண்ணி. எங்க அண்ணா எப்பவுமே இப்படித்தான். சாப்பிடும்போது கூட போனைக் கீழே வைக்க மாட்டான். என்னவோ செல்போன் கண்டுபிடிச்சதே இவனுக்குத்தான் என்கிற நினைப்பு. அண்ணா! பேசியது போதும். முதல்ல போனைக் கொடு.” - என்றவாறு அவன் கையில் இருந்த போனை வாங்கி கட் பண்ணினான் அவன். இப்போதாவது நிமிர்வான் என்ற பாரதியின் எண்ணம் பொய்த்துப் போனது.

“ஸாரி! நான் காபி சாப்பிடுறதில்ல!” - என்ற முணுமுணுப்போடு தம்பியின் கையிலிருந்த போனை

வாங்க முயல, அதற்குள் அதுவே அழைத்தது. அவசரமாய் வாங்கிக் காதிற்குள் கொடுத்து முன்போலவே அவன் பேச ஆரம்பிக்க, பாரதி ஏமாற்றமாய் அடுத்தவனிடம் காபியை நீட்டினாள்.

"தேங்க்ஸ். அண்ணி! என் பேர் பிரதாப். மாப்பிள்ளை யோட தம்பி. இனிமே உங்களுக்கும். என்னை பிரதாப்னே நீங்க கூப்பிடலாம்," - என்றவாறே காபியை எடுத்துக் கொண்டவனை மனநிறைவோடு பார்த்துப் புன்னகைத் தாள். இளமையும் அழகும் களையும் கம்பீரமும் அவனிடம் நிறைந்திருந்த போதும், முகத்தில் குறும்பும் குழந்தைத்தனமும் நிறைந்து இருந்தது. மீதமுள்ள காபியைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த செல்லம் மாளும், சக்தியும் அக்காவைப் பிடித்துக் கொண்டனர். "அக்கா! மாப்பிள்ளை ரொம்ப அழகு பாரேன். ஆனால் ஏன் முகத்தைக் குனிந்துகொண்டே இருக்கிறார்? கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தால் என்னவாம்?" - குறைப்பட்டுக் கொண்டாள் சக்தி.

"சக்தி! மாப்பிள்ளையை விட அவர் தம்பி அழகாய் இருக்கிறாரடி. பேசாமல் அவருக்கே நம் அக்காவைக் கொடுத்துவிடலாம். சிரித்த முகமாய் இருக்கிறார். ஜாலியாகப் பேசுகிறார். எனக்கு அவரைத்தான் ரொம்பப் பிடித்திருக்கிறது!" - என்றாள் செல்லம்மா.

"அப்போ நீயே அவரைக் கட்டிக்கோ. ரெண்டு பேருமே பிரியாம இருக்கலாம். நீதான் அக்கா இல்லாம இருக்கமாட்டியே. அப்பாகிட்ட போய்ச் சொல்லவா? உடனே ரெடி பண்ணிடுவாங்க!" - எனச் சக்தி சொல்ல,



பெண்கள் மூவருமாய்ச் சிரித்துவிட, லட்சுமி அருகில் வந்து அதட்டினாள்.

"என்னடி பேச்சு இது - கொஞ்சமும் வெட்கம் இல்லாமல்? அவர்கள் காதில் விழுந்தால் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அமைதியாக இருங்கள். அவர்கள் பேசுவதைக் கேட்போம்," - என்றாள் கிசுகிசுப்பாய்.

அனைவரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு, வாயை மூடிக்கொள்ள, சிவராமன் பேசுவது தெளிவாகவே கேட்டது. "சம்பந்தி! நீங்க தப்பா நினைக்கக்கூடாது. எம்பையன் கொஞ்சம் கூச்ச சுபாவம். பெண் பார்க்கவே வர மாட்டேன் என்றவனை நாங்கள்தான் கட்டாயப் படுத்தி அழைத்து வந்தோம். எப்போதும் பிஸியாகத்தான் இருப்பான்," - என்றவரிடம்,

"அதுதான் பார்த்தாலே தெரிகிறதே. இதற்குள் பத்து முறை போன் வந்துவிட்டதே. பேசட்டும், பேசட்டும். தொழில்தானே முக்கியம். நான்கூட இந்த வயசில இப்படித்தான் சுறுசுறுப்பா இருந்தேன்!" - என்று தன்னையே மெச்சிக்கொண்டார் பெரியசாமி.

"பரவாயில்ல சம்பந்தி. நல்லா புரிஞ்சுகிட்டீங்க. அப்புறம் அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை, நல்ல முகூர்த்தம். அப்பவே கல்யாணத்தை வெச்சிடலாம். நானு சும்மியா இருக்கேன்னு யோசிக்காதீங்க. உங்களுக்கும் சேர்த்தே நான் பத்திரிகை அடிச்சுடுறேன். எங்க சொந்தக்காரங்க எல்லாரும் வெளியூரிலும் வெளிநாட்லயும் இருக்கிறதால சும்மா கொஞ்சப் பேர்தான் இப்ப வருவாங்க. கல்யாணத்தை உங்க வீட்லயே வெச்சுடலாம். கல்யாணம் முடிஞ்சதும் நேரே ஊட்டிக்குப் போறோம். மறுநாள் அங்கே ரிசப்ஷன் வெச்சுடலாம்.

"கல்யாணம் வரைக்கும் நாங்க தஞ்சாவூர்லதான் இருக்கப்போறோம். ஹோட்டல்ல ரூம் புக் பண்ணி யிருக்கோம். இன்னும் ரெண்டு நாள்ல பொண்ணுக்குப் புடவை, நகை எல்லாம் வாங்கணுமே. நான் போன்லயே முக்கியமானவங்களை அழைச்சிடுவேன். ஏன்னா ஊட்டிக்கும் தஞ்சாவூருக்கும் அலைய முடியாதில்லையா? அதனால தான் இந்த ஏற்பாடு. உங்க தரப்புல நீங்க எதுவும் பண்ணவேண்டாம். எம்மருமகளைப் பத்திரமாகப் பார்த்துக்கோங்க. அவளுக்கு என்னென்ன தேவைன்னு சொன்னீங்கன்னா எம் பசங்க வாங்கிட்டு வந்திடுவாங்க. வேற எதுவும் செய்யணும்னா சொல்லுங்க." - என்றார் சிவராமன்.

பெரியசாமி வாயெல்லாம் பல்லாக, "வேற என்ன சம்பந்தி? அதுதான் எல்லாமே சொல்லிட்டீங்களே. எங்களுக்குப் பரிபூரணச் சம்மதம். மாப்பிள்ளை ஒரு வார்த்தை பொண்ணைப் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டா இன்னும் சந்தோஷமா இருக்கும். அவர் போன் பேசி முடிக்கட்டும். கேட்டுச் சொல்லுங்க சம்பந்தி." - என்றார்.

சிவராமன், "பிரசாத்! போதும். போனை ஆப் பண்ணு!" - என அடிக்குரலில் சீறினார். மௌனமாக போனை வைத்தான் பிரசாத். "மாப்பிள்ளையிடம் பெண்ணின் அப்பா பேசவேண்டுமாம். இரண்டு வார்த்தை பேசு." - என்றார் சாதாரணமான குரலில்.

"ம்?" - என்றவாறு நிமிர்ந்த பிரசாத்தை அனை வருக்குமே பிடித்துப் போனது. பாரதி சன்னல் கம்பிகளின் வழியே தனது வருங்காலக் கணவனின் முகத்தை ஆர்வமாய்ப் பார்த்தாள். முதன்முறையில் நிமிர்ந்து பார்க்கும் அந்நிய ஆடவனின் முகம் அவளது மனதிற்குள்



நுழைந்து பதிந்துகொண்டது. நிமிர்ந்து அமர்ந்த மிடுக்கும் கம்பீரமும் கூரிய விழிகளும் அழகு முகமும் பாரதியின் விழிகளில் கலந்துவிட்டன. வெட்கமும் நாணமும் போட்டிபோட அவன் என்ன சொல்லப் போகிறான் என்ற ஆர்வம் தாளாமல் நின்றாள்.

"இல்ல மாப்பிள்ளை, பொண்ணு வந்தப்போ நீங்க சரியா பார்த்த மாதிரி இல்ல. நான் பொண்ணைக் கூப்பிடட்டுமா? நீங்க பார்த்துப் பிடிச்சிருக்குன்னு சொன்னா மனசுக்கு நிறைவா இருக்கும். அதான்..." - என இழுத்தார் பெரியசாமி.

"தேவையில்லை. அப்பா அம்மாவுக்குப் புடிச்சா போதும். எல்லாம் அவங்க விருப்பம்தான்!" - விட்டேற் றியாய்ப் பதில் சொல்லிவிட்டு மீண்டும் ஒலித்த செல் போனை எடுத்துக் காதிற்குக் கொடுத்தவாறே எழுந்து வெளியேறினான். ஒரு நொடியில் தனக்குள் தோன்றிய அனைத்து இன்ப உணர்வுகளும் பொசுங்கிப் போய்விட, பாரதியின் முகம் வெளிறியது.

## 3

நீ எனது இன்னுயிர் கண்ணம்மா
எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்
துயர் போயின போயின துன்பங்கள்
நினைப்பொன் எனக் கொண்ட பொழுதிலே...

ஏன் மாமா இப்படிப் பண்ணிட்டீங்க? எதுக்கு இத்தனை அவசரம் உங்களுக்கு? யார் என்னன்னு விசாரிக்காம எப்படித் தட்டை மாத்தினீங்க? எங்கிட்ட ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே. நான் என்ன உங்களுக்கு வேண்டாதவனாகிவிட்டேனா? சொல்லுங்க மாமா?" - கோபமும் வேகமுமாகக் கேட்டான் நடராஜன்.

உழைத்து உரமேறிய கட்டுமஸ்தான உடம்பு. வெயிலின் தாக்கத்தில் நிறம் குறைந்திருந்தாலும் அழகும் களையும் கூடியே இருந்தன. உயரமும் வாட்டசாட்டமுமாய் நின்ற தம்பியை வேதனையாய்ப் பார்த்தாள் லட்சுமி. கண்ணம்மா என்றால் தம் தம்பிக்கு உயிர் என்பதை நன்கு அறிந்தவளாயிற்றே. இனி இவன் நிலை என்ன ஆகுமோ என்ற பதைப்பு ஒருபுறம். காலம் முழுக்க இப்படியே இருந்துவிடுவானோ என்ற பயம் மறுபுறம். கணவனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தவள் எழுந்து தம்பியின் அருகே வந்தாள். பெரியசாமியோ சாப்பிடுவது ஒன்றே குறி என்பதுபோல் நிமிர்ந்தும் பாராமல் சாப்பிட்டுக் கொண்டிருக்க,

"தம்பி! நீ ரெண்டு நாளா ஊர்ல இல்லையே. அதனால்தான் உங்கிட்ட சொல்ல முடியல்ல!" - எனத் தயக்கமாக இழுத்தாள் லட்சுமி.

"ஏங்க்கா, கிருஷ்ணமூர்த்திக்குக் கல்யாணம்னு சொல்லிட்டுத்தானே போனேன். போனவன் அப்படியே போயிடுவான்னு நினைச்சிட்டீங்களோ. பொண்ணுக்குத் தாய்மாமன் நான். என்னை ஒரு வார்த்தை..."

"தாய்மாமன் மட்டுந்தானே!" - என்றவாறு கை கழுவிவிட்டு எழுந்தார் பெரியசாமி. திக்கென அதிர்ந்தான். "மா... மாமா..." - குரல் தடுமாறியது.



"இல்லே. தாய்மாமன் மட்டுந்தானே. வேற எதுவும் இல்லியே?" - என்றார் மீண்டும் அதே குரலில்.

"என்ன பேச்சு மாமா இது?"

"நான் சரியாத்தான்டா பேசுறேன். தாய்மாமான்னா என்ன பண்ணனும். சீர் செய்துட்டு கல்யாணச் சாப்பாட்டைச் சாப்பிட்டுட்டு போய்க்கிட்டே இருக்கணும். அதை விட்டுட்டு ஏன் மாப்பிள்ளை பார்த்தே எதுக்குப் பார்த்தே ஏன் எங்கிட்ட கேட்கலன்னு முட்டாள் மாதிரி கேள்வி கேட்கக் கூடாது!" - என்றார் விட்டேற்றியாய்.

மாமாவின் குரலில் கர்வம் தொனிப்பது தெளிவாகத் தெரிந்தது. "ஏன் மாமா? தாய்மாமன் உறவு அவ்வளவுதானா? குழந்தை பிறந்ததும் தொட்டில் வேட்டி கட்டுறதில இருந்து அதுக்கு மொட்டை போடுறதுக்கு காது குத்துறதுக்கு இந்த மாமன் மடி வேணும். அப்புறம் வளர்ந்து பெரியவளாகும் போது சீர்செய்ய ஓலைகட்டத் தாய்மாமன் வேணும். அப்புறம் கல்யாணம் சீமந்தம் வந்தது போனதுன்னு கருமாதி வரைக்கும் இந்தத் தாய்மாமன் உறவு வேணும். இதெல்லாம் மத்தவங்களுக்குத்தான். ஆனா உங்க குடும்பத்துக்கு நான் எவ்வளவு முக்கியமுன்னு உங்களுக்கே தெரியும்!" - என்றவனை அலட்சியமாய்ப் பார்த்தார்.

"சரிப்பா! உன் உறவு பெரிய உறவுதான். அதுக்காக என் பொண்ணுக்கு நல்ல மாப்பிள்ளை அமைஞ்சா அதை முடிக்க வேண்டியது ஒரு தகப்பனான என்னோட கடமை. அதுல ஏன் நீ தலையிடுற. எம் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க நான் யாரைக் கேட்க வேண்டும்? ஏதோ உன் அக்காவும் உன் அக்கா பிள்ளைகளும் கஷ்டப்படுதேன்னு கொஞ்சம் உதவி செய்தே. அதுக்காக இந்தக் குடும்பமே

உன் பேச்சைக் கேட்டு நடக்கணும்றது ரொம்ப அதிகம். பிறகு நான் ஏன் ஒருத்தன் இங்கே இருக்கிறேன்?" - என்றார் பெரியசாமி.

உன் கண்ணம்மாவிற்காக என்பதுபோய் உன் அக்கா பிள்ளைகளுக்காக என்று மாறியிருந்தது. மாமாவின் பேச்சும் வார்த்தைகளும் கூட நிறைய மாறித்தான் இருக்கின்றன. இரண்டே நாளில் இத்தனை மாற்றம் நிகழுமா?

"கண்ணம்மாவுக்கு வயசும் ஏறிக்கிட்டே போகுது மாப்பிள்ளை. பேசாம தாலிகட்டி உன் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயி மிச்சத்தைப் படிக்க வையேன். அடுத்ததுக்கும் வயசு ஏறுதில்ல. மூத்தவளுக்கு முடிச்சாத் தானே அடுத்தவளுக்கு மாப்பிள்ளை பார்க்க முடியும்!" - என்று போன வாரம்தானே தன்னிடம் சொன்னார்.

அதற்குள் இப்படி மாறிவிட முடியுமா? முடியும். பணம் பத்தும் செய்யும். அந்தப் பத்தில் ஒன்றாய் மாமாவின் மனதையும் மாற்றிவிட்டது. வசதியான இடம். பணக்காரச் சம்பந்தம். இனித் தன் உதவி இவர்களுக்குத் தேவையிராது தான். ஆனால் கண்ணம்மா... கண்ணம்மா எப்படி இந்தத் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டாள். படிப்பு முடிந்து பெரிய வக்கீலாகிக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். திருமணம் என்ற பேச்சே எடுக்கக்கூடாது என்றவள் எப்படி ஒப்புக்கொண்டாள்?

ம்க்கும். அவளுக்கும் மாப்பிள்ளையைப் பிடித் திருக்கும். படிப்பு என்ன பெரிய படிப்பு? மாப்பிள்ளையே திருமணத்திற்குப் பிறகு படிக்க வைப்பார். தன் மனைவி பட்டதாரி. பெரிய வக்கீல் என்று பீற்றிக்கொள்ளக்



கசக்குமா என்ன? நான் கிராமத்தான், படிக்காதவன், விவசாயத்தைப் பார்ப்பவன். என்னை மணந்தால் ஊட்டிக்குச் சுற்றிக்காட்டக்கூடப் போக முடியாது. இந்த வரன் அப்படி அல்லவே. ஊட்டியிலே பங்களா எஸ்டேட் என எல்லாம் இருக்கிறதாமே. நன்றாக வாழட்டும். இந்தப் பொறுப்பில்லாத தகப்பனிடம் இருந்து கஷ்டப்படுவதை விட அங்கேனும் சென்று அமர்க்களமாய் வாழட்டும். நமக்கு இந்த வாழ்வு போதும். தோட்டம், வயல் இது போதும் - என்ற முடிவோடு அமைதியாய்த் திரும்பி நடந்தான் நடராஜன்.

"தம்பி! என்னய்யா கிளம்பிட்ட, ஒருவாய் சாப்பிட்டுப் போப்பா!" - என்றவாறு பின்னே வந்தாள் லட்சுமி.

"இல்லக்கா. வயிறும் மனசும் நிறைஞ்சுபோச்சு. நான் போறேன்," - என்றவாறு விடுவிடுவென நடந்து வெளி யேறினான்.

"ஐயோ! எம்புள்ள மனம் நொந்து போறானே. அவன் மனசில ஆசையை வளர்த்திட்டு இப்படி நெருப்பை அள்ளிக் கொட்டிட்டீங்களே. அவன் மனம் என்ன பாடுபடும்னு நினைச்சீங்களா? தம்பீ! என்னை மன்னிச் சிடுப்பா. இந்த அக்காவால் ஏதையும் செய்ய முடியாதே. இந்தப் போக்கத்தவளை மன்னிச்சிடுப்பா!" - என அக்கா அழுவது கேட்டும் உள்ளம் நோக நிற்காமல் போய் விட்டான்.

உள்ளம் நொந்ததால் கண்கள் கலங்கின. மனதைக் கட்டுப்படுத்தப் பெருமுயற்சி செய்தான் நடராஜன். இனிக் கண்ணம்மா தனக்கில்லை என்ற எண்ணமே அவனை வதைத்தது. இல்லை, இது சரி வராது. தன்னை

விடப் பன்னிரண்டு வயது சிறியவளை எப்படி மணக்க முடியும்? நாம்தான் திருமண வயதை எப்போதோ தாண்டிவிட்டோமே. இனி இப்படி ஆசைப்படுவது பெரிய தவறு. பாவம் கண்ணம்மா. எத்தனை அழகு அவள். அவளுக்கு நான் எப்படிப் பொருத்தமாவேன். அவள் ஒரு அபூர்வமான வைரம். வைரத்தினைத் தங்கத்தில்தானே பதிக்க வேண்டும். அப்போதுதானே அதன் மதிப்பும் பெருமையும் உயரும். நான் ஒரு சாதாரண விவசாயி தானே. இந்த முட்டாளுடன் அவளை எப்படி இணைக்கப் பெற்றவர்களுக்கு மனம் வரும்? மாமா செய்தது சரிதான்.

நான்தான் தேவையின்றி ஆசையை வளர்த்துக் கொண்டேன். தப்பு. பெரிய தப்பு. இத்தனை வருடம் பழகியும் கண்ணம்மாவின் விரல்கூடத் தன்மீது பட்ட தில்லையே. ஆசைப்பட்டு ஒரு பொருள் கேட்டதில்லை. கொஞ்சிப் பேசியதில்லை. அவள் விரும்பியதெல்லாம் படிப்பு ஒன்றைத்தான். ஏதோ தன்னால் அதையாவது கொடுக்க முடிந்ததே. பெருமூச்சுடன் நடந்தவனை அந்த இனிய குரல் நிறுத்தியது.

"ஹாய் மாமா! ஊருக்குப் போயிட்டு எப்போ வந்தீங்க?" - என்றவாறு கையில் பூஜைக் கூடையுடன் எதிரே வந்தனர் கண்ணம்மாளும் செல்லம்மாளும், நெற்றியில் சந்தனமும் குங்குமமும் மின்ன, பாரதியின் முகம் பேரழகோடு பிரகாசித்தது. ஓ! இதுதான் கல்யாணக் களையோ? அப்படியென்றால் மாப்பிள்ளையைப் பிடித் திருக்கிறது என்றுதானே அர்த்தம். அதனால்தானே என் கண்ணம்மாவின் முகத்தில் இத்தனை பூரிப்பு. இதுபோதும். என் கண்ணம்மாவின் இந்தப் பொன்முகமும் இந்தப் புன்னகையும் போதும். பாரதியின் முகத்தைத் தன்



மனப் பெட்டகத்துள் பத்திரமாய்ப் பொத்தி வைத்துக் கொண்டான்.

"என்ன மாமா! இப்போத்தான் புதுசா பார்க்கிற மாதிரி பார்க்கிறீங்க!" - லேசான வெட்கத்தோடு கேட்டாள் பாரதி.

"ஆமாம்மா! இத்தனை வருடம் குழந்தையாவே பார்த்திட்டேன். இப்போ நீ கல்யாணப் பொண்ணில்லையா? அதான் புதுசா தெரியற. மாப்பிள்ளையை உனக்குப் புடிச்சிருக்கா கண்ணம்மா?" - என்றவனின் கேள்விக்குத் தனது கன்னச் சிவப்பையே பதிலாக உரைத் தாள் பாரதி.

ஒரு மன நிறைவுடன், "நல்லா இரும்மா. உன் மனம் போல் மாங்கல்யம் அமைஞ்சு சந்தோஷமா நிம்மதியா வாழும்மா. மாமாவுக்கு வேலை இருக்கு. போகட்டுமா?" - விலக முயன்றவனை நிறுத்தினாள் பாரதி.

"ஒரு நிமிஷம் மாமா. நானே உங்களைப் பார்க்க வரணும்னு நினைச்சேன். அப்பாதான் வெளியே விடவே இல்லை. இப்பக்கூட கோயில்ல நெய் விளக்கு ஏத்துற துக்காகச் செல்லம்மாவையும் கூடவே அனுப்பினாங்க. நல்லவேளை, உங்களை இங்கேயே பார்த்திட்டேன்," - என்றாள் பாரதி.

மனம் ஒரு நொடியில் எங்கெங்கோ சிறகடித்துப் பறக்க, "என்னம்மா விசயம், சொல்லும்மா?" - என்றான் பதட்டத்தை மறைத்தவாறே.

"மாமா! ஸாரி மாமா. எனக்காக எவ்வளவு செலவு பண்ணி லா காலேஜ்ல சீட் வாங்கிக் கொடுத்தீங்க. இன்னும் ஒரே வருஷத்தில பாரதி, பி.காம்.பி.எல்.னு என் பேருக்குப்

பின்னால பட்டம் போட்டு நானும் கறுப்பு கோட் போட்டு கோர்ட்ல வாதாடப் போயிருப்பேன். ஆனா இந்த அப்பா மொத்தமா எல்லாத்தையும் போட்டு உடைச்சிட்டார். நான் என்ன சொல்லியும் கேட்கலை!" - என நிறுத்தினாள்.

"ஆமாம் மாமா! கயிற்றை எடுத்து வந்து உத்திரத்துல மாட்டத் தொடங்கினதும் நாங்க அழுதுட்டோம். அப்புறம் தான் அக்கா சரின்னு ஒத்துகிட்டா. அக்கா பாவம் மாமா. அவளுக்குப் படிக்கத்தான் ரொம்ப ஆசை!" - என்றாள் செல்வம்மா.

பாரதியை ஏறிட்டான் நடராஜன். "ஏம்மா! உங்க அப்பாதான் பூச்சாண்டி காட்டுவார்னு தெரியாதா? அவருக்குப் பயந்தா கல்யாணத்திற்கு ஒத்துகிட்டே?"

"இல்லே மாமா. அப்பா சும்மா பாசாங்கு பண்ணு வார்னு எனக்கும் தெரியும் மாமா. நான் அதுக்காக ஒத்துக்கல்ல மாமா. நான் உங்களுக்காகத்தான் ஒத்து கிட்டேன்!" - என்றாள் தயக்கமாக.

அதிர்ந்து நிமிர்ந்தான் "என்ன? எனக்காகவா? ஏன்? எனக்கு என்ன? சொல்லும்மா. எனக்காக ஏன்... எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" - அவனது பதட்டம் செல்லம்மாவிற்கு வேதனையாய் இருந்தது.

பாரதி உதட்டைக் கடித்துக்கொண்டு மௌனமாய் நிற்க, "இந்த அப்பா புத்தி ரொம்ப மோசமா போச்சு மாமா. அக்கா உங்களை நினைச்சுகிட்டுத்தான் கல்யாணம் வேண்டாம்னு சொல்றான்னு அசிங்கமா பேசிட்டாங்க தெரியுமா. அக்கா துடித்துப் போயிட்டா!" - என்ற சின்னவளின் குரலில் மேலும் அதிர்ந்தான் நடராஜன்.



"என்ன? நானா? என்னை நினைத்துக்கொண்டா?"

"பார்த்தீங்களா மாமா? கேட்கும்போதே உங்கள் மனமும் உடலும் எப்படித் துடிக்கிறது. எனக்கு எப்படி இருந்திருக்கும்? அதனால் தான் மாமா என்னால் உங்கள் பெயர் களங்கப்பட்டுவிடக்கூடாது என்றுதான் சம்மதித் தேன். நீங்கள் என் தெய்வம் மாமா. எனக்குக் கல்வி கொடுத்த தந்தை. என் தேவைகளைக் கேட்டுக் கேட்டு நிவர்த்தி செய்த என் தாய். எனக்கு எல்லாமே நீங்களாய் இருக்க, இந்த அப்பா கொஞ்சமும் வாய் கூசாமல் பேசிவிட்டாரே. இனியும் மறுத்தால் அது உங்களை அசிங்கப்படுத்துமே என்றுதான் மாமா என் படிப்பைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் திருமணம் செய்ய முடிவெடுத்தேன். என்னால் நீங்கள் களங்கப்படக் கூடாது மாமா. உங்கள் பால் மனம் எனக்குத்தான் தெரியும் மாமா!" - என்றாள் பாரதி.

உடல் முழுக்க அதிர்ந்து உதறிக்கொண்டது. "கடவுளே! எப்படிப்பட்ட பிழையை பாவத்தைச் செய்ய இருந்தேன். தந்தையாய் அன்னையாய்க் காண்கிறேன் என்றவளிடம் என் மனவிருப்பத்தைச் சொல்லியிருந்தால்... ஐயோ! என்னை ஒரு புழுவைப் போல் அல்லவா பார்த்திருப்பாள். இத்தனை காலம் மனதோடு வளர்ந்த நேசம் மனதிற் குள்ளேயே புதைந்து போகட்டும். இனி அது வெளியே வரவே வேண்டாம். நான் விரும்பினேன் என்று தெரிந்தாலே என்னை வெறுத்துக் குப்பையைப் போல் ஒதுக்கிவிடுவாள்.

அந்தக் கொடுமை நிகழ வேண்டாம். எப்போதும் போல் அவளுக்கு நல்ல தாய்மாமனாகவே இருந்து விடுகிறேன். மனமே, அமைதியாகி விடு. விழியே,

கலங்கிவிடாதே. என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே. என் கண்ணம்மா என்னை வெறுத்து விலகிவிடக்கூடாது- மனதிற்குள் சமாதானம் செய்தவாறே, "படிப்பு என்னம்மா பெரிய படிப்பு. மாப்பிள்ளைதான் பெரிய இடம். படித்தவர் என்கிறார்களே. திருமணமானபின் மிச்சப் படிப்பைப் படிக்க வேண்டும் என்று சொல். அவர் படிக்க வைப்பார். உன் அப்பா பேச்சைத் தூக்கிக் குப்பையில் போடு. கண்டதையும் நினைத்துக் கவலைப்படாமல் சந்தோஷமாக இரு. நீ நல்லா வாழ்வே. சரி, நான் அப்புறமா வீட்டுக்கு வர்றேன். நீங்க கிளம்புங்க. நேரமாச்சு. அப்புறம் அதுக்கும் திட்டுக் கிடைக்கும். நான் போகட்டுமா?" - என்றவாறு விலகி வேகமாக நடந்தான் நடராஜன்.

"ஏன் செல்லா! மாமா சொன்னது போல் நடக்குமா? கல்யாணத்திற்குப் பிறகும் என்னைப் படிக்க வைப்பாங் களா? ஒத்துப்பாங்களா?" - என்றாள் பாரதி ஆர்வமாய்.

"அக்கா! ரெண்டு மாசம் லீவுதானே. லீவ் முழுக்க சந்தோஷமா இரு. அதுக்குள்ள மாப்பிள்ளை உன்கிட்ட சரண்டர் ஆயிடுவார். அப்புறம் என்ன? நீ என்னுன்னா என்னெயா நிற்கமாட்டாரா? உன் இஷ்டப்படியே படிக்கலாம்ங்கா. நீ அதிர்ஷ்டக்காரிதான்!" - என்றதும் முகம் முழுக்கப் பூரித்துப் போனாள் பாரதி.

"நிஜமாவாடி சொல்றே? இதெல்லாம் நடக்குமா?"

"ஏன் நடக்காது? உன்னை மாதிரி ஒரு அழகுச் சிலை சொன்னா ஏன் கேட்கமாட்டார், மாப்பிள்ளை? பேமிலி ரொம்ப நல்ல மாதிரிதான் தெரியுதுக்கா. எல்லாருமே படிச்சவங்க போலிருக்கு. மாப்பிள்ளையும் ரொம்ப



அழகுதான், இல்லக்கா. எப்படியோ நம் வீட்டுச் சிறையிலிருந்து உனக்கு விடுதலை கிடைச்சிருக்கு. நம்ம அப்பா செய்த ஒரே நல்ல காரியம் இதுதான். நீ நல்லபடியா வாழ்ந்தா அதுவே போதும்க்கா."

"அதெல்லாம் சரிதான்டி. ஆனா மாப்பிள்ளை என்னை நிமிர்ந்து கூடப் பார்க்கலியே. ஒருவேளை என்னைப் பிடிக்கலியோ?" - கேட்கும் போதே பாரதியின் குரல் படபடத்தது.

"அட போக்கா! உன்னைப் பிடிக்காமலா அவ்ளோ பெரிய பட்டுப்புடவையும் நகையும் வாங்கிக் கொடுத்து அனுப்பினார். நீ அவரைப் பார்க்காத போது பார்த் திருப்பார். உன்னைக் கூடப் பிடிக்காம போகுமா? பாரேன். இனிமே அத்தான் உன்னைத்தான் குட்டி போட்ட பூனைமாதிரி சுத்திச் சுத்தி வருவாரு. நீதான் அவரோட மகாராணி. இப்பக்கூட உன்னைத்தான் நினைச்சிக்கிட்டு கனவில மிதந்திட்டு இருப்பாரு. நிஜம்தாங்க்கா. நாம எத்தனை சினிமாக்களில் பார்த் திருக்கோம்!" - என்றாள் செல்லம்மா சிரித்துக் கொண்டே.

பாரதியின் முகம் வெட்கச் சிவப்பைப் பூசிக் கொண்டது. தன் வருங்காலக் கணவனை எண்ணிக் கனவில் மிதக்கத் தொடங்கினாள். ஆனால் அவள் அறிந் திருக்கவில்லை, தனது வருங்காலம் தனக்கு எத்தனை படிப்பினை தரப்போகிறது என்று. தன் வாழ்க்கையைச் சூறாவளியாக மாற்றித் தன்னைச் சுழற்றியடிக்கப் போவதை உணரவும் இல்லை. இதமான கனவுகளோடு வீட்டை நோக்கி நடந்தாள்.

# 4

வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நான் உனக்கு
பூணும் வடம் நீ எனக்கு
புதுவயிரம் நான் உனக்கு!

"சொன்னா புரிஞ்சுக்கோ. நான் இங்க எவ்ளோ பெரிய சிக்கல்ல மாட்டிட்டு இருக்கேன் தெரியுமா? என்னால இப்ப கிளம்பி வரமுடியாது. கார் கீ என்னோட கிரெடிட் கார்டு, ஏன் என்னோட பர்ஸ்கூட எங்கிட்ட இல்ல. விட்டா ஓடி வந்திடுவேன்னு அப்பா எல்லாத்தையும் எடுத்து வெச்சிட்டாங்க. ஒரு பத்து ரூபா நோட்டுகூட எங்கிட்ட இல்லை. விஷயம் கைமீறிப் போகும்னு நான் நினைக்கல்ல. இப்போ என்ன பண்றதுன்னு நானே மண்டையைப் பிய்ச்சிட்டு இருக்கேன். நீ வேற பேசியே கொல்லாதே. நான் எப்படியும்..." படக்கெனத் தனது கைப்பேசி பிடுங்கப்பட்டதும் அதிர்ந்து திரும்பினான் பிரசாத்.

அங்கே முகம் முழுக்கக் கேலிச் சிரிப்போடு நின்றான் பிரதாப். "ஆமா! அப்படி யார்கிட்ட பேசிட்டே இருக்க அண்ணா. ஒரு நிமிஷம்கூட உன் போனுக்கு ஓய்வே இல்லையே. நீ இரு. நான் பேசறேன்," - என்றவாறு போனைக் காதிற்குக் கொடுத்தான்.



"ஹலோ! யாருங்க பேசுறது?" - என்ற கேள்விக்குப் பதில் இல்லை. மௌனம் காத்தது. "ஓ.கே. நீங்க யாரா இருந்தாலும் சரி. இனிமே இப்படி போன் பண்ணி டார்ச்சர் பண்ணாதீங்க. இனிமே போன் எங்கிட்டதான் இருக்கும். எது பேசுவதாக இருந்தாலும் எங்கிட்ட பேசுங்க. அவன் புது மாப்பிள்ளை. அவனை ஏன் தொந்தரவு பண்றீங்க. போன் வந்தாலே அவன் டென்ஷனாகிடுறான். நாளை மறுநாள் காலையில் அவனுக்குக் கல்யாணம். அதுவரை டோண்ட் டிஸ்டர்ப் மீ. அண்டர்ஸ்டேண்ட்?" - என்றவாறு போனை கட்செய்து ஸ்விட்ச் ஆஃப் பண்ணினான் பிரதாப்.

"டேய். இப்ப ஏன் ஸ்விட்ச் ஆஃப் பண்ணினே? முதல்ல போனை எங்கிட்ட கொடு." - கோபமாய்க் கேட்டான் பிரசாத்.

"அதான் சொன்னேனே. கல்யாணம் முடியும் வரை எங்கிட்டதான் போன் இருக்கும்னு. அது உனக்கும் சேர்த்துத்தான் சொன்னேன். அப்பா உன்னை வாட்ச் பண்ணிட்டே இருக்காங்க அண்ணா. என்னாச்சு உனக்கு? எதுவும் பிரச்சனையா? போன்ல பேசினது யாரு. சொல்லு. எங்களுக்குத் தெரியாம எதுவும் சிக்கல்ல மாட்டி இருக்கிறாயா? எதுவா இருந்தாலும் சொல்லுண்ணா," - என்ற தம்பியை முறைத்தான் பிரசாத்.

"நான் என்ன குழந்தையா? இல்லை, நீ என்னைவிடப் பெரியவனா. ஒரு பிரச்சனையும் இல்ல. முதல்ல போனைக் கொடுடா," என்றவாறே, தம்பியின் கையிலிருந்த போனைப் பறிக்க முயல, பிரதாப் விலகித் தந்தையின் அருகில் சென்று சிவராமன் கைகளில் போனைக் கொடுத்தான்.

"இந்தாங்கப்பா! இது உங்ககிட்டயே இருக்கட்டும். இதை வெச்சுகிட்டு நாலு நாளா ரூம்லயே அடைஞ்சு கிடக்கிறான். இனி மேரேஜ் முடியுறவரை இவன்கிட்ட கொடுக்க வேண்டாம். எஸ்டேட்ல இருந்து போன் பண்றவங்களுக்கு நம்ம நம்பரும் தெரியுமே. நம்மகிட்ட பேசட்டும். இதை ஆன் பண்ணவேண்டாம். அப்ப நாங்க கிளம்பட்டுமாப்பா?" - என்றான் தந்தையிடம்.

"ம் சரிப்பா. காரை நீயே ஓட்டு. அவன் ஓட்ட வேண்டாம். சாவியும் உன்னிடமே இருக்கட்டும். அப்புறம் போகும்போது சும்மா கையை விசிட்டுப் போயிடாதீங்க. ஸ்வீட், பூ, பழம் எல்லாம் வாங்கிட்டுப் போங்க. பணம் இருக்கா? வேணுமா?" - என்றவாறே பாக்கெட்டினுள் கையை நுழைத்தார்.

"இல்லப்பா! எங்கிட்ட இருக்கு. அப்புறம்... அவங்க கிட்ட எதுவும் சொல்லணுமா...?"

"எல்லாம் ரெடியா இருக்குன்னு சொல்லு. இன்விடேஷன் கொடுத்திட்டாங்களான்னு கேளு. ம்... அப்புறம் கல்யாணம் முடிஞ்சதுமே எல்லாருமா ஊட்டிக்குக் கிளம்பணும்னு சொல்லிடு. அவங்க தயாரா இருக்கணுமே. அப்புறம் அன்னிக்கு இந்த துரை யார்கிட்டயும் முகம் கொடுத்துப் பேசல்ல. இன்னிக்கு ரிலாக்ஸா உட்கார்ந்து பேசச் சொல்லு. இப்படியே உர்ருன்னு இருந்தா அவங்களுக்கு நம்ம மேல வீணான சந்தேகம் வரும். ஒழுங்கா இருக்கச் சொல்லு. சரி. கிளம்புங்க. பார்த்துப் பத்திரமா போயிட்டு வாங்க," - என்றார்.

"என்ன நடக்குது இங்கே? நான் எங்கேயும் போகல்ல. சும்மா என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க!" - பிரசாத்



கோபமாய்த் திரும்ப, "டேய் நில்லுடா," - என்றவாறு அவனை நெருங்கினார் சிவராமன்.

"உம் மனசுல என்ன நினைச்சுட்டு இருக்கே. ஒழுங்கா தம்பிகூடப் பொண்ணு வீட்டுக்குப் போயிட்டு வா. முகத்தைச் சிரிச்ச மாதிரி வெச்சிக்க. வீணா என் கோபத்தைக் கிளறாதே. அப்புறம் வளர்த்த பிள்ளை என்றும் பார்க்க மாட்டேன். ஜாக்கிரதை. ம்... கிளம்பு." - உறுமினார்.

"அப்பா! சும்மா கத்தாதீங்க. நீங்க பண்றது எதுவும் எனக்குப் பிடிக்கல்ல. தஞ்சாவூர்ல ஒரு கல்யாணம் இருக்கு, வான்னு கூட்டிட்டு வந்தீங்க. இங்கே வந்து பார்த்தா பொண்ணு பாருன்றீங்க. கல்யாணம்கறீங்க. என்னோட விருப்பத்தைக் கேட்டீங்களா? உங்க விருப்பத்திற்கு முடிவெடுக்க இது ஒன்னும் பிஸினெஸ் இல்ல. என்னோட வாழ்க்கை. அதை எப்படி நீங்க முடிவு பண்ணலாம்?" - உதடு துடிக்கக் கேட்ட மகனை உற்றுப் பார்த்தார்.

"பெத்தவங்களுக்குத் தெரியும்டா, நம்ம புள்ளைக்கு எப்படி வாழ்க்கை அமைச்சுக் கொடுத்தா நல்லா வாழ்வான்னு எங்களுக்குத் தெரியும்டா. இப்ப கசப்பாத் தான் தெரியும். ஆனா வாழும்போது தான் அதன் அருமை தெரியும். குடும்பம் நடத்த அருமையான பெண் வேணும்டா. அப்பத்தான் குடும்பம் நல்லா இருக்கும். உன் வயசுக்குப் பார்க்கிறதெல்லாம் நல்லாத்தான் தெரியும். ஆனா எங்களுக்குத்தான் தெரியும் பால் எது விஷம் எதுன்னு. பேசாமல் சொன்ன பேச்சைக் கேட்டு நட."

"பாலோ விஷமோ? வாழப்போவது நான்தானே. எனக்குப் பிடிக்க வேண்டாமா? எனக்கு இந்தத் திருமணம் பிடிக்கவில்லை. வேண்டாம்... வேண்டாம்..." திட்டவட்டமாக மறுத்தான் பிரசாத்.

"ஓஹோ... அந்த அளவிற்குப் போயிற்றா? நீ எதை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறாய் என்று எனக்குத் தெரியும். நீ நினைப்பது கனவிலும் நடக்காது. நான் சொல்வதைக் கேட்டு நடந்தால் உனக்கு நல்லது. இல்லை, நீ எனக்குப் பிள்ளையே இல்லை என்று அறிவித்து விடுவேன். என் சொத்தில் ஒரு பைசா தராமல் வீட்டை விட்டு வெளியேற்றி விடுவேன். சம்மதம் என்றால் சொல். நான் இப்போதே உயிலை எழுதிவிடுகிறேன்." - சிவராமனும் எகிற. பிரதாப் தலையும் புரியாமல் வாலும் புரியாமல் நின்றான்.

"அப்பா! இது என்ன பேச்சு. அண்ணன் அப்படி என்ன செய்துவிட்டான்? இப்போது கல்யாணம் வேண்டாம் என்றுதானே சொல்கிறான். அதற்கு ஏன் இத்தனை பெரிய வார்த்தையை விடுகிறீர்கள்?" - என்றான் தந்தையிடம்.

"இல்லடா! இவனைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. இவன் என் மானத்தைக் காற்றில் பறக்க விடுவதற்காகவே பிறந்திருக்கிறான். இவன் புத்தி ஏன் இப்படிப் போகிறது? இன்னும் ஒருநாள்தான் இருக்கிறது திருமணத்திற்கு. இந்த நேரம் வந்து என்ன பேசுகிறான் பார்த்தாயா? இந்த வார்த்தையை மட்டும் உன் அம்மா கேட்டால் போதும். அடுத்த கணமே உயிரை விட்டு விடுவாள். இவன் எங்கள் உயிரை எடுத்துபின்தான் அடங்குவான் போலிருக்கிறது. இவன் பிள்ளை இல்லை. எமன். போச்சு. மானம் போச்சு. மரியாதை போச்சு. இந்த உசுரு மட்டும் இன்னும் ஏன் இருக்கணும்? அதுவும் போகட்டும். அப்புறம் அவன் இஷ்டத்திற்கு எவளைக் கட்டிக்கொண்டாலும் சரி. இனி நான் ஏன் இருக்க வேண்டும்?" - படபடப்பாய்ப் பேசியவாறே இருக்கையில் சாய்ந்தார்.



பதறித் தந்தையின் அருகில் வந்தான் பிரதாப் "அப்பா! பதறாதீங்கப்பா. பி.பி. ஏறிடும். அண்ணன் ஒண்ணும் உங்கள் மானம் பறிபோக விடமாட்டாரப்பா. அவர் உங்கள் பிள்ளை அப்பா. கொஞ்சநாள் கழித்துத் திருமணம் செய்யலாம் என்று இருந்திருப்பார். இப்போ திடீரென்று முடிவானதும் டென்ஷனாகி விட்டார். மற்றப்படி ஒன்றுமில்லையப்பா. நீங்கள் பயப்படும்படி ஒன்றும் நேராது. அண்ணா, என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய். வா. அப்பாவிடம் ஸாரி கேள். அப்பாவின் உடம்பைப் பற்றி உனக்குத் தெரியாதா? இனி இப்படியெல்லாம் பேசாதே. அப்பா ஒன்றும் உனக்குப் பிடிக்காத பெண்ணையோ அழகில்லாத பெண்ணையோ பார்க்க வில்லையே.

"பிறகேன் இப்படிப் பேசுகிறாய். எங்கு தேடினாலும் இப்படி ஒரு பெண் உனக்குக் கிடைக்காது. அத்தனை அழகு, அமைதி, அடக்கம், லா காலேஜ் ஸ்டூடன்ட்டாம். ஆனா முகத்தில் ஒரு செருக்கு, ஆணவம் தெரிகிறதா, பாரேன். அப்படியே மகாலக்ஷ்மி மாதிரி தெய்வீகமான சாந்தமான முகம் அண்ணா. நீ சரியாகப் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். அண்ணியைப் பார்த்தால் இப்படிப் பேசமாட்டாய் நீ!"

"சொல்லுடா. நல்லாச் சொல்லு. எப்படிப்பட்ட பெண் அது. அதைப் போய்க் கட்ட மாட்டேன் என்கிறானே. அப்படி இவன் கண்ணை எது மறைக்கிறது? ஏன் இப்படி அலைகிறான்! என் மனமும உடம்பும் கொந்தளிக்கிறதே!" - அரற்றினார் சிவராமன்.

"என்ன! அப்பா புள்ளையெல்லாம் என்ன பேசிட்டு இருக்கீங்க? இந்தாங்க பிரசாதம். எடுத்துக்கங்க. கோவில்ல

"நல்ல கூட்டம்ங்க!" - என்றவாறு மூச்சு வாங்க வந்து நின்றாள் அம்பிகை. நடந்து வந்ததில் உடல் முழுக்க வியர்வையில் குளித்திருக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கினாள்.

"ஏன் அம்பிகை, இப்படி ஆஸ்துமாவை வெச்சுகிட்டு வெளியில அலையுற? பாரு, எப்படி மூச்சு வாங்குதுன்னு- முதல்ல உட்காரு. கொஞ்சம் தண்ணி குடி." - என்றவாறு அவள் நீட்டிய திருநீறை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டு டேபிளில் இருந்த வாட்டர் ஜக்கிலிருந்து டம்ளரில் நீர் ஊற்றி மனைவியிடம் நீட்டினார்.

"இருங்க. புள்ளைங்களுக்குத் திருநீறு பூசிட்டு, குடிக்கிறேன். இன்னிக்கு சாமிக்கு நல்ல அலங்காரம்ங்க. வெள்ளிக்கிழமை இல்லியா? அதான் நல்ல கூட்டம். அப்பா! எவ்ளோ பெரிய கோயில். தஞ்சாவூர்க் கோயிலைப் பார்க்கணும்னு எத்தனை நாள் ஆசை எனக்கு. நல்ல வேளைதான் நமக்கு இந்த ஊர்ல பொண்ணு கிடைச்சது. கோயிலை நல்லா சுத்திப் பார்த்தேங்க. மனசுக்கு நிறைவா இருக்குது. நாளைக்கும் போயிடணும்!" - என்றவாறு பிள்ளைகளுக்குத் திருநீறும் குங்குமமும் இட்டாள் அம்பிகை.

பிரசாத்தின் முகத்தைக் கண்டதும் சற்றுப் பதறினாள். "என்ன ராஜா, முகமெல்லாம் வாடிக்கிடக்கு? என்னப்பா ஏதும் பண்ணுதா? சொல்லுடா கண்ணா!" - தாயின் பரிவைக் கண்டதும் மனம் உருகிப்போனான் பிரசாத்.

"இல்லம்மா! கொஞ்சம் தலைவலியா இருக்கு. அப்பா என்னைப் பொண்ணு வீட்டுக்குப் போன்னு விரட்டுறாங்க. ரொம்ப டயர்டா இருக்கும்மா. சொன்னா புரிஞ்சுக்க மாட்டேங்கிறாங்க." - என்றான் தாயிடம்.



"ஏங்க, உடம்பு முடியாத புள்ளைய ஏன் அலைய விடுறீங்க? அலைஞ்சு காய்ச்சல் எதுவும் வந்திட்டா என்ன பண்றது? அவன் ரெஸ்ட் எடுக்கட்டும். எங்கேயும் போக வேண்டாம். நீ வா ராஜா. படுத்துக்கோ," - என மகனின் தோள்பற்றி அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

"ம். அப்படியே மடியில போட்டுத் தாலாட்டுப் பாடித் தூங்க வை. பச்சைக் குழந்தை பாரு. இன்னும் ஒரு வருஷத்தில அவனே ஒரு புள்ளைக்குத் தகப்பன் ஆயிடுவான்." - கிண்டலாகக் கூறிய கணவனை முறைத்தாள்.

"இருக்கட்டுமே. எத்தனை பிள்ளைக்குத் தகப்பன் ஆனாலும் எனக்கு அவன் குழந்தைதான். பெற்றவளுக்குத்தான் அது புரியும். உங்களுக்குப் புரியாது!" - என்றவாறு மகனைக் கட்டிலில் படுக்கவைத்து, அவனது நெற்றியை இதமாய்ப் பிடித்துவிட்டாள் அம்பிகை.

"சரிம்மா. சரி. உன் பிள்ளையை நீயே கொஞ்சிக்கோ. நானும் பிரதாப்பும் பொண்ணு வீடு வரைக்கும் போயிட்டு வர்றோம். கதவை உள்ளே பூட்டிக்கோ. காபி, டீ, சாப்பாடு எதுவும் வேணும்னா கீழே ரிசப்ஷனுக்கு போன் போடு. அவங்களே கொண்டு வந்திடுவாங்க. வரட்டுமா?" என்றவாறு சின்ன மகனுடன் கிளம்பிய கணவனை வழியனுப்பிவிட்டு, கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டுத் தன் மகனின் அருகே வந்து அமர்ந்தாள் அம்பிகை.

"சூடா காபி குடிக்கிறியாப்பா? தலைவலி குறையும்!" - என்றாள் பரிவாய்.

"இல்லம்மா! இப்ப பரவாயில்ல. நீங்க என் பக்கத்திலேயே இருங்கம்மா. நான் தூங்கி நாலு நாளாச்சும்மா. தூங்கட்டுமா?" - என்றான் தாயின் மடிமேல் கையைப் போட்டவாறே.

"தூங்கு ராஜா. இடம் மாறினதுல தூக்கம் வரலியா உனக்கு. அதோட கல்யாணப் பதட்டம் இருக்கா? குணமும் தங்கம்தானாம். நீ குடுத்து வெச்சவன்ப்பா. எல்லாருக்கும் அழகு இருக்காது. ஆனா உனக்கு எல்லாம் நிறைவா அமைஞ்ச பொண்ணைக் கடவுள் தந்திருக்கிறார்.

"அதுக்கு நன்றி சொல்லத்தான் அம்மா கோயிலுக்குப் போயிட்டு வந்தேன். நீயும் தங்கமான புள்ளையாச்சே. உனக்கேத்த பொண்ணை உனக்கு அமைச்சுக் கொடுத் திருக்கிறார். எப்படியோ எல்லாம் நல்லபடியா நடக்க ணும்ப்பா. எத்தனை வருட ஏக்கம் இது. சரி. நான் பேசிட்டே இருக்கேனே. பிறகெப்படி உனக்குத் தூக்கம் வரும். நீ தூங்குப்பா," - என்றவாறு மெல்லத் தட்டிக் கொடுத்தாள் அம்பிகை.

கண்களை மூடிக்கொண்டான். மூடிய விழிகளுக்குள் எதிர்காலம் வந்து மிரட்டியது. "எப்படி... எப்படி இந்தப் பெண்ணை மணக்க முடியும். அது பெரிய பாவமல்லவா? மினியின் முகத்தில் எப்படி விழிக்க முடியும்? போனிலே வாட்டி எடுத்துவிட்டாள். நேரில் பார்க்கும்போது என்ன நடக்குமோ? அவள் முகத்திலும் தான் எப்படி விழிக்க முடியும்? அவள் என்னைப் பார்ப்பாளா? பேசுவாளா? தன் காதலனை இன்னொரு பெண்ணின் கணவனான பின் எப்படி ஏற்றுக்கொள்வாள்?

நான் துரோகியாகிவிடுவேனே. இது ஏன் அப்பாவிற்குப் புரியமாட்டேன் என்கிறது. மினியிடம் என்ன குறையைக் கண்டார்? பணம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக இப்படி மனச்சாட்சியே இல்லாமல் பிரிக்கலாமா? இதில் மிரட்டல் வேறு. அம்மாவின் பலவீனமான இதயத்தைக்



காரணம் காட்டித் தாயிடமும் பேச அவர் அனுமதிக்க வில்லை. ஒருவேளை அம்மாவிடம் பேசியிருந்தால் பெற்ற மனம் கேளாமல் அம்மா மினியையே தனக்குக் கட்டி வைத்திருப்பார்கள்.

எத்தனை இன்பமாய் எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டிய திருமண நாள்! இப்படித் தூக்குத் தண்டனைக் கைதி, தன் இறுதி நாளை எண்ணுவது போல ஆயிற்றே. என்னால் முடியாது. மினியைத் தவிர இன்னொரு பெண்ணைக் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாது. இந்தக் கொடுமையை என்னால் செய்யவும் முடியாது."

தலையை உதறிக்கொண்டே எழுந்தான் பிரசாத். "என்னப்பா! தூக்கம் வரலியா? ரொம்ப தலைவலிக்குதா? ஒரு மாத்திரை தரட்டுமா? என்னப்பா, அப்படிப் பார்க்கிற? கண்ணெல்லாம் கலங்கி இருக்கே. என் ராஜா. என்னப்பா பண்ணுது?" - தாயின் பட்டுவிரல்கள் தன் உடல் முழுக்க வருட, தன்னையும் மீறிக் கண்ணீர் வழிந்தது.

மஞ்சள் பூசிய அன்னையின் அழகு முகமும் நெற்றியில் சுடர்விட்டுப் பிரகாசித்த குங்குமமும் பரிவும் கனிவுமான பார்வையும் பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றியதே தவிர, வாயிலிருந்து ஒற்றை வார்த்தை கூட வர மறுத்தது. தொண்டை அடைத்துக் கொண்டது.

மகனின் நிலை எதையோ உணர்த்த, அம்பிகை ஆடிப்போனாள். எப்போதும் உற்சாகமும் துள்ளலுமாய்த் திரியும் பிள்ளை பம்பரமாய்ச் சுழன்று உழைக்கும் பிள்ளை இங்கு வந்த நாள் முதலாய் அறைக்குள்ளேயே அடைந்து கிடக்கிறானே. எப்போதும் இருக்கும் புன்னகையைக் கூடக் காணவில்லையே. ஒருவேளை... ஒருவேளை...

என் பிள்ளைக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லையோ! அதைச் சொல்ல முடியாமல்தான் இப்படித் தவிக்கிறானோ! வயது வந்த பிள்ளை. ஒருவேளை அவன் மனதில் வேறு எண்ணம் இருக்கிறதோ? அப்படி எதுவும் இருந்தால்... நாளை திருமணத்திற்குக் காத்திருக்கும் இந்தப் பெண்ணின் நிலை?

ஆண்டவா! அது எத்தனை பெரிய பாவம்! என் பிள்ளையின் மனதில் எதுவும் இருக்கக் கூடாது. என் பிள்ளை மனதை நோகடிக்க வைத்துவிடாதே. மகனின் தலையை வருடினாள் அம்பிகை.

"என்னப்பா! ஏன் ராஜா கண் கலங்குது? அம்மாகிட்ட சொல்லுப்பா. இன்னும் ஒரு நாள்ல கல்யாணத்தை வெச்சிட்டு இப்படிக் கண்கலங்கினா அம்மா மனசு என்ன பாடுபடும்னு உனக்குத் தெரியாதா? சொல்லுப்பா. எதுவா இருந்தாலும் அம்மாகிட்ட சொல்லு. அம்மா இருக்கும் போது நீ இப்படி அழலாமா? சொல்லுப்பா." - அன்னையின் பரிவான வருடலில் இதமான வார்த்தையில் தன் மனக்குமுறல்களைக் கொட்டிவிட எண்ணி வாயைத் திறந்தபோது, அழைப்பு மணி ஒலித்தது.

"நீ படுத்துக்கோ. நான் போயி பார்க்கிறேன்," - என்றவாறு எழுந்து வந்து கதவைத் திறந்தாள் அம்பிகை. ரூம் பாய் நின்றிருந்தான்.

"மேடம், ஸாருக்குத் தலைவலியாமே. இது மிளகுத் தூள் போட்ட தக்காளி சூப். சூடாக் குடிச்சா தலைவலி பறந்துடும். இதைக் குடிக்கச் சொல்லுங்க மேடம்," - என்றவாறு பீங்கான் கோப்பையை நீட்டினான். ஆவி பறக்க மிளகு வாசனையுடன் தக்காளி சூப் கமகமத்தது.



"அட! எனக்கு இது தோணாமப் போச்சே. கொடுப்பா. என் புள்ளை தலைவலியில ரொம்ப கஷ்டப்படுறான். ஆமா, இதை யார் ஆர்டர் பண்ணினா?" - எனக் கேட்டவாறே சூப் கோப்பையை வாங்கிக் கொண்டாள்.

"உங்க ஹஸ்பண்ட்தான் மேடம். வெளியே போகும் போது ஆர்டர் பண்ணிட்டுப் போனாங்க. தயார் பண்ணி எடுத்திட்டு வரக் கொஞ்சம் லேட் ஆயிடுச்சு. ஸாரி மேடம்!" - என்றான் பணிவாய்.

"பரவால்லப்பா. ரொம்ப தேங்க்ஸ். கப்பை அப்புறமா வந்து எடுத்துக்க."

'சரி மேடம்' - என்றவாறு அவன் விலகியதும் கதவைப் பூட்டிவிட்டு மகனிடம் வந்து சூப்பை நீட்டினாள். "இதைக் குடிப்பா. தலைவலி உடனே சரியாகிடும். பாரேன். உனக்குத் தலைவலின்னதும் உங்கிட்ட இருந்து வருடி விட்டேனே தவிர இது தோணவில்லையே எனக்கு. ஆனால் உன் அப்பா சூப்பிற்கு ஆர்டர் பண்ணிட்டுப் போயிருக் காங்க. பிள்ளைக்கு எது செய்தால் உடல் குணமாகும் என்று தெரிந்து வைத்திருக்காங்க பாரேன். அப்பா அப்பாதான்! இல்லப்பா?" - என்றாள் மகனிடம்.

உண்மைதான். சூடான பானம் புளிப்பும் காரமும் கலந்து தொண்டையில் இறங்கியதும் தலைவலி பாரம் எல்லாமே மாயமாய்ப் பறந்து போய்விட்டது. "பெத்த வங்களுக்குத் தெரியும்டா, பிள்ளைங்களுக்கு எது செய்தா நல்லா இருக்கும்னு!" சற்று முன்பு அப்பா பேசிய வார்த்தை நினைவில் மோத, தாயிடம் பேச முயன்ற வார்த்தைகள் அனைத்தும் மறந்து போய்விட, அமைதியாய் உறங்க ஆரம்பித்தான் பிரசாத்.

# 5

உணவு செல்லவில்லை – சகியே
உறக்கம் கொள்ளவில்லை
மணம் விரும்பவில்லை – சகியே
மலர் பிடிக்கவில்லை!

**சா**ப்பாட்டை அளைந்து கொண்டிருந்த பாரதிக்குத் தன்னை நினைக்கவே வெட்கமாகத்தான் இருந்தது. நேற்றுவரை ஒழுங்காய் உண்டு உறங்கி அதிகாலையில் எழுந்தவள்தான். ஆனால் இப்போது எல்லாம் தலை கீழாகி விட்டது. பசி என்பதே சுத்தமாய் மறந்து விட்டிருந்தது. சாப்பாடு இறங்க மறுத்தது. படுக்கை முள்ளாய்க் குத்தியது. இமைகள் மூடமாட்டேன் என அடம்பிடித்தன. நடுச் சாமம் தாண்டும்வரையிலும் நித்திரை வரவில்லை. விடிகிற வேளையில் நித்திரையோடு கனவுகளும் தோன்றி இம்சிக்கின்றன. தன்னைச் சுற்றி அனைவரும் இருந்த போதும் அவர்களில் ஒருவரின் குரல்கூடத் தன் செவியைத் தீண்டவில்லை.

தானும் தன் இணையும் ஏதோ ஒரு தீவில் தனித்திருப்பதாகவே தோன்றுகிறது. இது என்ன விந்தை! திருமணமே வேண்டாம் என்ற நான் எப்படி மாறிப் போனேன்? ஒருவரைப் பார்த்தவுடன் இப்படி மாற முடியுமா? இல்லை... அப்படி இல்லை. இவர் யாரோ ஒருவர் இல்லை. எனக்கென்று பிறந்து என்னைச் சேரத்



தேடி வந்த துணை. இது பூர்வீக பந்தம். அதனால்தான் பார்த்த சில நிமிடங்களிலே தனக்குள் நிலையாய்க் குடிகொண்டுவிட்டார். மீண்டும் எப்போது பார்ப்போம் என்ற ஏக்கமே அவளை இளைக்கச் செய்தது. கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவளை அசைத்தாள் சக்தி.

"அக்கா! நாங்க எல்லாம் எப்பவோ சாப்பிட்டாச்சு. நீ என்ன இன்னும் அப்படியே வெச்சிட்டு உட்கார்ந்திருக்க. உனக்குப் பிடிக்கலையா?" - என்ற தங்கையை நிமிர்ந்தும் பார்க்க முடியவில்லை.

"இல்ல. சாப்பாடு நல்லா இருக்கு. எனக்குத்தான் பசிக்கல்ல. அப்புறம் சாப்பிடுறேனே," - என்றவாறு எழுந்த மகளைக் கவலையாய்ப் பார்த்தாள் லட்சுமி. மகளின் நிலை கலங்க வைத்தது.

கைகளைக் கழுவிவிட்டுத் திரும்பிய மகளைத் தனியே அழைத்துச் சென்றாள். "அம்மாடி! நாலு நாளா நீ சரியா சாப்பிடவே இல்லையே. ஏம்மா? உனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கலியா? அதனால்தான் இப்படிச் சாப்பிடாம உன்னையே வருத்திக் கொள்கிறாயா? சொல்லும்மா," - என்றாள் வருத்தமாய்.

தன்னை இத்தனை துல்லியமாய்க் கவனித்த அன்னையிடம் என்ன சொல்லித் தப்பிப்பது எனத் தவிக்கையில் வந்து கைகொடுத்தாள் செல்லம்மா.

"ஐயோ அம்மா! அப்பாவோட சேர்ந்து உங்க புத்தியும் மழுங்கிப் போச்சா? அக்கா மனசு இப்ப இங்க இல்லம்மா. தஞ்சாவூர்ல ஹோட்டல் மதுராவில உள்ள ரூம்ல இருக்கு. புரியலையா? மாப்பிள்ளை போறப்போ அக்காவோட மனசையும் கூடவே கூட்டிட்டுப் போயிட்டாரும்மா.

அதனாலதான் இவ பசலை நோய் தாக்கி அலையுறா!" - என்றாள் நமுட்டுச் சிரிப்புடன்.

லட்சுமி ஆச்சர்யமாய்க் கண்களை விரித்தாள். மகளின் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தாள். "உண்மையாவா கண்ணம்மா? இது பொய்யில்லையே! அம்மா ரொம்ப பயந்து போயி இருந்தேன்டா. என் வயித்தில பாலை வார்த்திட்டேடா." - கண்கள் கலங்கக் கூறிய அன்னையை அணைத்துக் கொண்டனர் இரு பெண்களும்.

"இந்த மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் கூட ரசனையே இல்லம்மா. மூணு கிலோ மீட்டர் தூரத்திலதான் உட்கார்ந்திட்டு இருக்கார். ஒரு வாட்டி வீட்டுக்கு வந்திட்டுப் போலாமில்ல. அக்காவுக்கும் சந்தோஷமா இருக்கும். ச்சே. இந்த ஆம்பிளைங்களே இப்படித்தானா?" - செல்லம்மா சத்தமாகவே முணுமுணுக்க,

"சத்தியமா நான் அப்படி இல்ல. அதனாலதான் உங்களைப் பார்க்க மூன்றாவது முறையா ஓடி வந்திட்டேன்!" - என்றவாறு வாசலில் நின்றவனைப் பார்த்ததும் வெலவெலத்துப் போனாள் செல்லம்மா.

"அச்சோ! அம்மா! மாப்பிள்ளை வீட்டுக்காரங்க!" - என்றவாறு அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

புடவைத் தலைப்பைப் போர்த்திக்கொண்டே, "அடடே, வாங்க தம்பி, வாங்க. உள்ளே வாங்க!" - என வரவேற்றாள் லட்சுமி.

தாயின் முதுகிற்குப் பின்னே நின்ற பாரதியின் கண்கள் வாசலுக்கு வெளியே தேட, தனக்குள் சிரித்துக் கொண்டான் பிரதாப்.



"நான் மட்டும்தான் வந்தேன் அண்ணி. நானும் அண்ணனும்தான் புறப்பட்டோம். அண்ணனுக்குத் திடீர்னு ரொம்பத் தலைவலியாகிப் போச்சு. பயப்படாதீங்க. சாதாரணத் தலைவலிதான். அதனாலதான் அலைய வேண்டாம்னு ரெஸ்ட் எடுக்கச் சொல்லிட்டாங்க அம்மா. சரின்னு அப்பா கிளம்பினாங்க. அவங்களுக்கும் ஒரு வேலை வந்திட்டது. சரி, நாம சும்மாதானே இருக்கோம்னு வந்திட்டேன். அத்தே! உங்களுக்கு ஒண்ணும் சிரமம் இல்லையே!" - என்றான் லட்சுமியிடம்,

"சேச்சே! இதிலென்ன சிரமம் இருக்கு. உட்காருங்க தம்பி, என்ன சாப்பிடுறீங்க? காபியா, டீயா?"

"ஐஸ்கிரீம்!" - என்றான் பிரதாப்.

"ஐஸ்கிரீமா? அது இங்கே கிடைக்காதே!" - என்றாள் தயக்கமாய்.

"நான் வாங்கிட்டு வந்திருக்கேன் அத்தை. எல்லாரையும் கூப்பிடுங்க. நாம சேர்ந்தே சாப்பிடலாம். நான் ஒண்ணும் மாப்பிள்ளை இல்ல. அதனால தைரியமா எங்கூடப் பேசலாம். கம்... கம்... ஏய் சக்தி குட்டி, நீ வா முதல்ல!" - என்றவாறே சேரில் அமர்ந்து கொண்டு, தன் கையோடு கொண்டுவந்த பாக்ஸைத் திறந்தான்.

உள்ளே உடல் முழுவதும் வியர்த்த நிலையில் பெரிய சைஸில் கார்னெட்டா கோன்கள் வரிசையாய் இருக்க, அதில் ஒன்றை எடுத்து சக்தியிடம் கொடுத்தான். "ஹய்! கோன் ஐஸ். ஏய் செல்லா. சீக்கிரம் வா. உனக்குப் பிடிச்ச கோன் ஐஸ். சில்லுன்னு இருக்கு. சீக்கிரம் வாயேன்," - எனக் கூவினாள் சக்தி.

"ஓ! உங்க அக்காவுக்கு இதுதான் பிடிக்குமா? அப்போ ரெண்டு கொடுத்திடலாமா?" - என்றான் குறும்பாய்.

"ரெண்டு என்ன, இந்த பாக்ஸோட கொடுத்தாலும் அஞ்சே நிமிஷத்திலே காலி பண்ணிடுவா!" - என்றாள் ரகசியமாய்.

"அடேயப்பா. அவ்ளோ பிடிக்குமா?" - வியந்தான்.

"அவ ஒரு ஐஸ்கிரீம் பைத்தியம். ஆனா அப்பாவுக்கு இது பிடிக்காது. நல்லவேளை அத்தான். நீங்க அப்பா இல்லாதபோது வந்திருக்கீங்க. இருந்தா நாங்க யாருமே வெளியே வரக் கூடாது!" - என்றவளை இரக்கமாய்ப் பார்த்தான் பிரதாப்.

"ஏன்? ஏன் வரக்கூடாதாம்?" - என்றான் இயல்பாய்.

"ஆமா! எங்க மாமாகூடப் பேசினாலே அப்பாவுக்குப் பிடிக்காது. எங்க வீட்டுக்கு யார் வந்தாலும் நாங்க வெளிய வரமாட்டோம். அம்மாகூட வரக்கூடாது. அப்பாவுக்குப் பிடிக்காது."

"ஏய், வாயை மூடுடி. இப்படித்தான் எல்லார் கிட்டயும் பேசுறதா? ஓட்டைவாய்!" - எனச் சிடுசிடுத்தாள் செல்லம்மா.

"ஏங்க உங்களுக்கு இவ்ளோ கோபம் வருது? உண்மையைச் சொன்னா அது தப்பா?" - எனக் கேட்டவனை முறைத்தாள்.

"என்ன? என்ன உண்மை" - கோபமாய்க் கேட்டான்.

"நீங்க ஒரு ஐஸ்கிரீம் பைத்தியம்ற உண்மை!" - என்றான் சிரிக்காமல். பற்கள் அனைத்தும் நொறுங்கி விடுவது போல் கடித்தாள் செல்லம்மா. சக்தியைப் பார்த்து வாய்க்குள்ளேயே திட்டினாள்.

"போதும். போதும். ஏற்கெனவே ஐஸ்கிரீம் உருகுது. இதில உங்க கோபக்கனல் பட்டு உடனே உருகிவிடப்



போகிறது. ஸோ, முதல்ல ஐஸ்கிரீம். அப்புறம் நம்ம டிஸ்கஸ். ஓ.கே." என்றவாறு அனைவருக்கும் கோனை எடுத்து நீட்ட, முதலில் தயங்கி நின்றவர்கள் மறுக்க முடியாமல் வாங்கிக் கொண்டனர். ஓரமாய் நின்று கொண்டு பிறகு பிரதாப்பின் பேச்சினால் கவரப்பட்டு நெருங்கி வந்து அவனைச் சுற்றித் தரையில் அமர்ந்து கொண்டனர்.

அனைவரும் கீழே இருக்கையில் தான் மட்டும் நாற்காலியில் அமர விருப்பமின்றி, அவனும் தரையில் அமர்ந்துகொள்ள, நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டே இருந்தனர்.

கல்லூரியில் நடந்த சுவாரஸ்யமான கலாட்டாக்கள், சுற்றுலா சென்ற அனுபவங்கள், அண்ணனுக்கும் தனக்கும் ஏற்படும் சின்னச்சின்னச் சண்டைகள், தனக்கு மிகவும் பிடித்த சமையல், பிடிக்காத பொருள்கள், பிடித்த சினிமா என அவன் கண்களை உருட்டி, தலையைச் சாய்த்தும் விரல்களை அசைத்தும் பேசிய விதம் அனைவருக்குமே சலிப்பை ஏற்படுத்தவில்லை. அவனது பேச்சில் சிரிப்பில் கலகலப்பில் தங்களையே மறந்து போயினர்.

பிரதாப்பின் குணமும், பேச்சும் லட்சுமிக்கு ரொம்பவே பிடித்துப் போனது. மாப்பிள்ளையும் இப்படியே இருந்துவிட்டால் போதும். தன் மகள் சந்தோஷமாய் வாழ்வாள். தம்பியின் குணம் அண்ணனுக்கு இல்லாமலா போய்விடும்? பிரதாப்பை விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தவள் மனம் இன்னும் பூரித்தது. பிரதாப்பின் இடது புறம் சற்று விலகியே அமர்ந்து அவனுக்குச் சரிக்குச் சரியாய் வாதாடிக் கொண்டும் இடையில் கோபப்படுவதும் பிறகு பிரதாப் சமாதானம் செய்ததும் சிரிப்பதுமாய் இருந்த செல்லம்மாளைப்

பிரதாப்புடன் இணைத்துப் பார்த்ததில் பெற்றவள் மனம் குளிர்ந்தது. இதுவும் நடந்தால், இந்தப் புள்ளை நமக்கு மருமகனாக வந்தால் எப்படி இருக்கும்? கண்களில் கனவு தோன்றியது.

இது அதிகப்படி ஆசைதான் என்றாலும் கற்பனை யிலாவது சந்தோஷப்பட்டுக் கொள்ளலாமே. ஏதோ பெரியவளின் அதிர்ஷ்டம். அவனைப் பார்த்ததும் பிடித்துப்போய் பைசா வரதட்சிணை கேட்காமல் ஏற்றுக் கொண்டனர். அதேபோல் அடுத்த பெண்ணையும் ஏற்றுக் கொள்வார்கள் என நினைப்பது பேராசை. வேண்டாம். இப்படி மனதைக் கட்டுப்பாடின்றி அலைய விடக்கூடாது. ஏதோ இயல்பாய் வந்து பேசிக்கொண்டிருக்கிறான் இந்தப் பிள்ளை. நம் எண்ணம் தெரிந்துவிட்டால் இந்தப் பக்கமே திரும்பியும் பார்க்கமாட்டான். நடக்காத ஒன்றை ஏன் கற்பனை செய்து பார்க்க வேண்டும்? வேண்டாம். தன்னையே திட்டிக்கொண்டாள் லட்சுமி.

"ஏன் நடக்காது? கண்டிப்பா நடக்கும். நான் நடத்திக் காட்டுறேன்!" - என்ற பிரதாப்பின் குரலில் கலைந்தாள்.

"ஹலோ! சொல்றது சுலபம். ஆனா அதெல்லாம் நடக்காது. இப்போ இப்படித்தான் பேசுவீங்க. நாளைக்குக் கல்யாணம் முடிஞ்சதும் எங்களையெல்லாம் திரும்பிப் பார்க்கக்கூட உங்களுக்கு நேரமிருக்காது. போயிட்டு வர்றேன்னு கூடச் சொல்வீங்களோ இல்லையோ!" - வேண்டுமென்றே சீண்டினாள் செல்லம்மா.

"அதெப்படி விட்டுட்டுப் போவேன். கையோட கூட்டிட்டுப் போயிடுவேன். அதைச் சொல்லத்தானே வந்தேன். மற்றதை எல்லாம் பேசியதில் இது மறந்து போயிற்றே. அத்தே! நீங்க எல்லாரும் ஊட்டிக்கு வரத்



தயாரா இருங்க. மேரேஜ் முடிஞ்சதும் நாமெல்லாம் ஊட்டி போறோம். அங்கே ஒரு வாரம் தங்கியிருந்து ஊட்டியை நல்லா சுத்திப் பார்த்திட்டு வரவேற்பு முடிஞ்சதும் நானே இங்க வந்து விட்டுடுறேன். சரியா? மாமா வந்ததும் சொல் லிடணும். எப்போ வருவாங்க? எங்கே போயிருக்காங்க?" - என்றான்.

"சொந்தக்காரங்களுக்குப் பத்திரிகை கொடுக்கப் போயிருக்காங்க தம்பி. வர ராத்திரியாகும்னு நினைக் கிறேன். அடடே! மணி மூணாகப் போகுதே. வந்த புள்ளைய பசியோட வெச்சி பேசிட்டு இருக்கோமே. தம்பி, ஒரு பத்து நிமிஷம் பொறுங்க. இப்ப சாப்பாடு ஆகிடும்," - எனப் பரபரப்பாய் எழுந்தாள்.

"பரவால்ல அத்தே. பொறுமையாவே செய்யுங்க. பேச்சு சுவாரஸ்யத்தில பசியே தெரியல்ல. ஹோட்டல்ல சாப்பிட்டு நாக்கு செத்தே போச்சு. உங்க கையால இன்னிக்கு சாப்பிட்டுத்தான் கிளம்புவேன்!" - என்றான் உரிமையாய்.

பாரதியும் அன்னையோடு இணைந்து சமையலில் ஈடுபட, "நீங்க மீன் சாப்பிடுவீங்களா? அம்மா மீன் குழம்பு ரொம்ப சூப்பரா பண்ணுவாங்க. தெருவே மணக்கும். உங்களுக்கு மீன் குழம்பு பிடிக்குமா?" - எனக் கேட்டாள் செல்லம்மா.

"பிடிக்குமாவா? நான் மீன் குழம்பு ரசிகன்ங்க. ஒரு பிடி பிடித்துவிடுவேன். அதிலயும் பழைய மீன் குழம்புன்னா ரொம்ப ரொம்ப பிடிக்கும்!" - என்றான் நாவூற.

"அட... வெரிகுட். அம்மா நேத்து வெச்ச மீன் குழம்பு இருக்கில்ல. அதையே சூடு பண்ணிக் குடுத்துடுங்க.

ஸ்பெஷலா எதுவும் செய்ய வேண்டாம்!" - என உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தான்.

"அடிக்கழுதை! வீட்டுக்கு வந்த புள்ளைக்குப் பழைய குழம்பைக் கொடுக்கச் சொல்றியே. நம்மைப் பத்தி என்ன நினைப்பாங்க? வாயாடிக் கழுதை!" - எனத் திட்டினாள் லட்சுமி.

"அம்மா சொல்றது உண்மையா சக்தி?" - திகைப்பாய்க் கேட்டான்.

"எது?" - சக்தி புரியாமல் விழிக்க, "அதான் இரண்டு முறை சொன்னார்களே. இந்த பேப்பரை எல்லாம் சாப்பிடுமே. உதைக்குமே. அதன் பேரைத்தான் சொன்னார்கள். உனக்குக் கேட்கவில்லையா?" - அவன் தீவிரமாய்ப் பேசிக்கொண்டிருக்க, செல்லம்மாவிற்குக் கோபத்தில் மூக்கின் நுனி சிவக்க, சுற்றுமுற்றும் தேடினாள்.

அக்கா படித்துவிட்டு வைத்திருந்த தடிமனான புத்தகம் கண்ணில்பட்டது. வேகமாய் அதை எடுத்து அவன் முதுகில் மொத்தினாள். "நான் கழுதையா? நான் கழுதையா? என்ன தைரியம்?" - எனக் கேட்டுச் சாத்தினாள்.

உள்ளே இருந்து ஓடிவந்தாள் பாரதி. புத்தகத்தைப் பறித்து, "என்னடி இது? கொஞ்சமும் மரியாதை இல்லாமல்..." - என அதட்டினாள்.

"அட விடுங்க அண்ணி. உண்மையைச் சொன்னால் கோபம் வருவது இயல்புதானே!" - என்றதும், மீண்டும் அடிக்கப் பாய்ந்தவளை நிறுத்தினாள் பாரதி.

"ஏய் என்ன? இப்பவே கொழுந்தனுக்கு சப்போட்டா. விடு என்னை. என்னைக் கழுதை என்று சொல்லலாமா அவர்?" - எகிறினாள் செல்லம்மா.



"சக்தி! நீயே சாட்சி. நான் அந்த வார்த்தையை ஒரு முறையாவது சொன்னேனா? உன் அக்காதானே திரும்பத் திரும்பச் சொல்கிறாள்?" என்றான் கேலியாய்.

செல்லம்மாவின் முகம் சுணங்கிப் போயிற்று. சட்டெனப் பேச்சை மாற்றினான் பிரதாப். "அண்ணி! இது உங்க புக்கா. படிச்சு முடிச்சிட்டீங்களா? எங்கே பிராக்டிஸ் பண்றீங்க?..."

அக்காவும் தங்கையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இதுவரை இயல்பாக கேலியாகப் பேச முடிந்தது. இதை எப்படிச் சொல்வது? ஒரு கணத் தயக்கத்திற்குப் பிறகு, "அக்காவுக்கு இதுதான் பைனல் இயர். திடீர்னு மேரேஜ் முடிவானதால படிப்பை முடிக்க முடியாதேன்னு ரொம்ப பீல் பண்றா. ஏன் பிரதாப், நீங்க உங்க அண்ணன்கிட்ட சொல்லி அக்கா படிக்க ஏற்பாடு பண்ண முடியுமா? மாப்பிள்ளையைப் பார்க்கவே முடியவில்லையே. அதனால்தான் உங்களிடம் கேட்கிறோம்," - என்றாள் செல்லம்மா.

"இவ்வளவுதானே. விடுங்க அண்ணி. மேரேஜ் ஹனிமூன் எல்லாம் முடியட்டும். என் பிரண்ட் கூட வக்கீலுக்குத்தான் படிச்சிருக்கான். அவன்கிட்ட சொல்லி எல்லா ஏற்பாட்டையும் பார்த்துக்கிறேன். நீங்க தைர்யமா இருங்க!" - என்றதும் சகோதரிகளின் முகம் புன்னகை பூத்தது.

"ஆமா! செல்லம், நீ என்ன படிக்கிற? சொல்லவே இல்லையே!"

செல்லம்மாவின் முகம் புன்னகையைத் தொலைத்துக் கறுத்தது. "நான் படித்து முடித்துவிட்டேன். மேலே படிக்க விருப்பம் இல்லை. படிப்பும் ஏறாது!" - என்றாள் கடுப்பாய்.

"பொய் சொல்றா. நாங்க எல்லோருமே நல்லா படிப்போம். அதுவும் செல்லா இன்னும் நல்லா படிப்பா. டீச்சருக்குப் படிக்கணும்னு அவளுக்கு ரொம்ப ஆசை. ஆனா அப்பாதான் படிக்கவிடல்ல!" - என்றாள் சக்தி.

"அப்போ பெரிய அக்காவை மட்டும் எப்படிப் படிக்க வெச்சாங்க?"

"அக்காவை அப்பா ஒண்ணும் படிக்க வைக்கலை. எங்க நட்ராஜ் மாமாதான் படிக்க வைச்சாங்க. பாரதி அக்கா அப்பாகிட்ட சண்டை போட்டுத்தான் படிக்கப் போனாங்க. அக்கான்னா அப்பாவுக்குக் கொஞ்சம் பயம்!" - எனச் சொல்லிச் சிரித்தாள் சக்தி.

"நீங்க இப்போ என்ன படிக்கிறீங்க குட்டி?"

"நான் பிளஸ் டூ படிக்கிறேன். இந்த வருஷத்தோட நிறுத்திடுவாங்க!" - என்றாள் ஏக்கமாய்.

"நீ என்ன படிக்கணும்னு ஆசைப்படுற?" - சாதாரணமாய்க் கேட்டவனை முறைத்தாள் செல்லம்மா.

"ஏன் இப்படிக் கேட்டு அவ ஆசையைத் தூண்டி விடுறீங்க? இப்பத்தான் அவ அழறதை நிறுத்தியிருக்கா. நீங்க ஆரம்பிச்சு வெச்சுடாதீங்க!" - என்றாள் வெடுக்கென.

"ஷ்ஷ்ஷ். இது எங்களுக்குள்ள பர்சனல். நீங்க சொல்லுங்க சக்திக் குட்டி. என்னவாகப் போறீங்க?" - கொஞ்சலாகவே கேட்டான் பிரதாப்.

"என்னோட ஆசை ரொம்ப பெரிசு அத்தான். சின்ன வயசில இருந்தே ஐ.ஏ.எஸ். படிக்கணும்னு தான் ரொம்ப ஆசை. கலெக்டராகி கம்பீரமா மக்களுக்குச் சேவை செய்யணும். பாரதி சொன்ன புதுமைப் பெண்ணா துணிச்சலாகவும் நேர்மையாவும் பணிபுரியணும்றதுதான்



என்னோட லட்சியம். பட். எல்லாம் கனவிலதான் நடக்கும் போலிருக்கு!"- அந்தச் சின்னஞ்சிறு கண்களில் தெரிந்த ஏக்கம் மனதைத் தாக்க,

"பாரதி கண்ட புதுமைப் பெண் இப்படி நம்பிக்கை இல்லாமல் பேசலாமா? 'கனவு மெய்ப்பட வேண்டும். கைவசம் ஆவது விரைவில் வேண்டும்'னு பாரதி உனக்காகத் தான் பாடியிருக்கார் சக்தி. ஆமா, உன் கனவு கண்டிப்பா நனவாகும். நீ நல்லா படிச்சு பர்ஸ்ட் மார்க் எடுத்திடு. மத்ததை நான் பார்த்துக் கொள்கிறேன். உன்னைக் கலெக்டராக்குவது என் பொறுப்பு. பர்ஸ்ட் மார்க் எடுத்திடுவியா?" - என்றான் உற்சாகமாய்.

சக்தி, செல்லம்மா மட்டுமல்ல, சமையல் அறையிலிருந்து வெளியே வந்த லட்சுமியும் பாரதியும் கூட மெய்சிலிர்த்துப் போயினர். சக்தி கண்களில் நீர் வழியக் கை கூப்பினாள்.

"நீயும் படிக்கிறியா, செல்லம்?" - என்றவனின் கேள்வியில் துள்ளி நிமிர்ந்தாள் செல்லம்மா.

## 6

வான மழை நீ எனக்கு
வண்ண மயில் நான் உனக்கு
பானமடி நீ எனக்கு
பாண்டமடி நான் உனக்கு
ஞான ஒளி வீசுதடி!

"நீங்கள் என்ன தேர்தலில் நிற்கப் போகிறீர்களா பிரதாப்?" - சந்தேகமாகக் கேட்டாள் செல்லம்மாள்.

"என்ன திடீர்னு அரசியல் பேசுகிறாய்? அதெல்லாம் நமக்கு அலர்ஜி. ஆமாம் எதற்காக இந்தக் கேள்வி?"

"இல்லை. அரசியல்வாதி மாதிரி வாக்குறுதிகளை அள்ளி வீசுறீங்களே. அதனாலதான் கேட்டேன். ஏதோ வந்திங்க. கலகலப்பா பேசுனீங்க. கல்யாணம் முடிஞ்சதும் ஊருக்குப் போயிடுவீங்க. அதற்கப்புறம் உங்களைப் பார்க்கக்கூட முடியுமோ இல்லையோ? அதற்குள் ஏன் இத்தனை வாக்குறுதிகள்? என்னை விடுங்கள். பாவம், சக்தி சின்னப்பெண். அவள் மனதில் ஆசையை வளர்த்து ஏமாற்ற வேண்டாம். இப்போதுதான் அவள் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு வருகிறாள். அதைப் பாழாக்க வேண டாமே!" - என்றவளை உற்றுப்பார்த்தான் பிரதாப்.

அவனது பார்வையின் கூர்மையைத் தாங்காமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

"இப்போ உன் பிரச்சனை என்ன செல்லம்? என்னைப் பார்க்க முடியுமா முடியாதா என்பதுதானே. நிச்சயம் பார்க்க முடியும். அண்ணன் மட்டும்தான் ஊட்டியில் இருப்பார். நான் அப்படி இல்லை. கொஞ்சநாள் அம்மா அப்பாவோடு கோயம்புத்தூரில் இருப்பேன். அடிக்கடி எஸ்டேட் கணக்கைப் பார்க்க ஊட்டிக்குப் போவேன். தேயிலை ஏற்றுமதி இறக்குமதி என மதுரை, திருச்சி, சென்னை, மும்பை என்று சுற்றிக்கொண்டே இருப்பேன். இனி இந்த ஊரையும் சேர்த்துக் கொள்கிறேன்.

"சக்தியின் படிப்பிற்காக என்றாவது இங்கு வருவேன். படிப்பு ஒரு வரம். அது எல்லோருக்கும் கிடைக்காது



செல்லம். பணம் கொட்டிக் கிடக்கும் பிள்ளைகளுக்குப் படிப்பு துளியும் ஏறாது. அதை நம்மால் ஏற்றவும் முடியாது. ஆனால் படிக்கும் ஆர்வமும் புத்திக்கூர்மையும் திறமையும் இருக்கும் பிள்ளைகளுக்கு வசதி வாய்ப்பு இராது. அதை நம்மால் தர முடியும். தர வேண்டும்.

"ஆயிரம் பேருக்குச சாப்பாடு போடுறதை விட ஒருவருக்குக் கல்வி கொடுப்பதில்தான் அதிகப் பலன் உண்டு. என்னால் முடிந்த உதவியை நான் எப்போதுமே செய்வதுண்டு. அதை நீ நம்ப வேண்டும் என்றில்லை. தடுக்க வேண்டாம். சந்தேகிக்க வேண்டாம்!" - என்றான் முடிவாய்.

"ஹைய்யோ! தேங்க்யூ அத்தான். தேங்க்யூ ஸோமச். நான் இனிமே இன்னும் நல்லாப் படிப்பேன்! என் பிரெண்ட்ஸ் கிட்ட எல்லாம் சொல்வேன். ரொம்ப தேங்க்ஸ் அத்தான்!" - ஆனந்தக் கூத்தாடினாள் சக்தி.

"சரி... சரி... எல்லோரும் சாப்பிடலாம் வாங்க!" - என்ற லட்சுமி அனைவருக்கும் பரிமாறினாள். செல்லம்மா எதுவும் பேசாமல் அமைதியாகவே இருக்க, "அத்தே! நான் உங்கள் வீட்டில் சாப்பிடுவது ஒருவருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கே. நான் வேண்டுமானால் போய்விடவா?" - என்றவாறே எழுந்தவனின் கைப்பற்றி அமர வைத்தாள் செல்லம்மா.

"இந்தப் பழைய குழம்பை யார் சாப்பிடுவதாம்? பேசாமல் உட்கார்ந்து சாப்பிடுங்கள். இந்த மாப்பிள்ளை முறுக்கையெல்லாம் இங்க காட்ட வேண்டாம். உங்கள் அண்ணன்தான் மாப்பிள்ளை. அது நினைவு இருக்கட்டும்!" - என எச்சரித்தாள்.

"ஏன்! நான் மாப்பிள்ளையாக வந்தால் ஏற்றுக்கொள்ள மாட்டாயா?" - என அவளுக்கு மட்டுமே கேட்கும் தொனியில் அதிர வைத்தான். அதிர்ச்சியில் வாயடைத்துப் போனவளைப் பார்த்து நமட்டுச் சிரிப்போடு சாப்பிட்டு முடித்து எழுந்தான்.

கைகழுவும் போது பாரதி அவனருகில் வந்தாள். தயங்கி நின்றவளைக் கண்டதும், "என்னங்க அண்ணி? என்ன விஷயம்? சும்மா சொல்லுங்க," - எனக் கேட்டான்.

"வந்து... பிரதாப்! உங்க அண்ணனுக்கு நிஜமாவே தலைவலிதானா?" - என்றாள் தயங்கியவாறே. தூக்கிவாரிப் போட்டது பிரதாப்பிற்கு.

"ஏன் அண்ணி, திடீர்னு உங்களுக்கு இந்தச் சந்தேகம்?"

"இல்ல பிரதாப். இது சந்தேகம் இல்லை. தெளிவு படுத்திக்கிறதுன்னு சொல்லலாம். அண்ணிக்குப் பொண்ணு பார்க்க வந்தப்போ கூட அவர் சரியா இல்லை. என்னைப் பார்த்தது போல்கூட இல்லை. இதோ நீங்கள் கூட இரண்டு முறை வந்துவிட்டீர்கள். ஆனால் அவர் ஒருமுறை வர வில்லையே. ஆர்வம் இல்லையா? இல்லே, என்னைப் பிடிக்கவில்லையா? எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லிவிடுங்கள் பிரதாப். நான் சமாளித்துக் கொள்வேன். எதையும் மூடி மறைக்க வேண்டாம். ப்ளீஸ். உண்மையைச் சொல்லுங்கள் பிரதாப்!" - மெல்லிய குரலில் இறைஞ் சியவளைப் பார்க்கையில் உள்ளம் பதறியது.

ஐயோ! இந்தப் பெண்ணின் மனம் இப்படித் தவிப்பதைக் கூட உணராமல் அண்ணன் வெறும் ஜடமாய் இருக்கிறானே. எத்தனை முறை அழைத்தும் வராமல் இருந்து சாதித்துவிட்டானே. இப்போது என்ன சொல்லிச் சமாளிப்பது? அவசரமாய் யோசித்தான். சட்டென,



"என்ன அண்ணி, இப்படியெல்லாம் கேக்குறீங்க? எதையும் மறைக்கவும் இல்லை. பொய்யும் சொல்ல வில்லை. அண்ணனுக்கு உண்மையாகவே தலைவலிதான். என்னைவிட அவன்தான் ஆர்வமாய்ப் புறப்பட்டான். அவன் வந்ததால் அங்கு எஸ்டேட்டில் ஒரு வேலையும் நடக்கவில்லையாம். போனுக்கு மேல் போன் வந்து கொண்டே இருக்குது. ரொம்பவும் டென்ஷனாயிட்டான்.

"அண்ணிக்குக் கூட நிச்சயப் புடவை கொண்டு வரும்போது அவனும் வருவதாகத்தான் இருந்தது. அவனுக்குக் கொஞ்சம் கூச்ச சுபாவம். என்னைப் போல் சகஜமாகப் பேசமாட்டான். அதனால்தான் என்னை மட்டும் அனுப்பி உங்களிடம் பேசி உங்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டுவரச் சொன்னான். அவனுக்கு எப்போதும் உங்கள் நினைவுதான். என்ன, உங்களை நேரில் பார்க்க வெட்கப்படுகிறான். மற்றப்படி நீங்கள் நினைப்பது போல் எதுவுமில்லை. நம்புங்கள் அண்ணி!" சற்றும் பிசகாமல் அவன் சொன்ன விதம் நம்பிக்கையை ஊட்ட, நிம்மதியாய்ச் சிரித்தாள் பாரதி.

"தேங்க்ஸ் பிரதாப். நான் கேட்டதைத் தப்பா நினைச் சுக்காதீங்க. என்னவோ என் மனசுல ஒரு உறுத்தல். அதான் கேட்டுட்டேன். சரி, உங்க அண்ணனை நல்லா ரெஸ்ட் எடுக்கச் சொல்லுங்க. நான்... நான் கேட்டதாகவும் சொல்லுங்க." - என்றாள் மென்மையாய்.

"கண்டிப்பா அண்ணி. நான் போயிச் சொன்னதுமே அவன் துள்ளிக் குதித்து எழுந்துவிடுவான். அப்போ நான் கிளம்பட்டுமா?" - என்றவாறு புறப்பட்டான்.

"ம்" - எனத் தலையசைத்து வழியனுப்பினாள்.

லட்சுமியிடம் வந்தான். "ரொம்ப தேங்க்ஸ் அத்தை. என்னை ஒரு அந்நியமா நினைக்காம என்கூடச் சாதாரணமா

பேசிப் பழகி நல்லா உபசரிச்சி கவனிச்சிகிட்டீங்க. நான்கூட நீங்க எல்லாரும் எங்கிட்ட இப்படி சகஜமா பேசுவீங்கன்னு நினைக்கல்ல. ரொம்ப தேங்க்ஸ் அத்தே. கல்யாணத்தில மீட் பண்ணுவோம். மாமா வந்ததும் சொல்லுங்க. ஊட்டிக்குக் கிளம்பத் தயார் பண்ணிக்கங்க." - என அவன் பாதம் தொட்டு வணங்கினான்.

பதறிப்போனாள் லட்சுமி. "எழுந்திருங்க தம்பி. நல்லா இருங்க. உங்க மனசு போல வாழ்க்கை அமையட்டும்!" - மனமார வாழ்த்தினாள்.

"தேங்க்ஸ் அத்தே! சக்திக் குட்டி, வரட்டுமா? நான் சொன்னது நினைவு இருக்கட்டும். மார்க் நிறைய எடுக்கணும். புரியுதா? பை."

"பை அத்தான். நான் நல்லாப் படிக்கிறேன்."

"ம். வெரிகுட். ஓ.கே. நான் போயிட்டு வர்றேன்!" - பொதுவாய் அனைவரிடமும் விடைபெற்று வெளியேறி காரில் ஏறினான். அனைவரும் வாசல் வரை வந்து வழியனுப்ப, "அடடே! இதை மறந்துட்டேனே. அத்தே! பூ, ஸ்வீட் எல்லாம் வாங்கிட்டு வந்து கார்லயே வெச்சிட்டேன்," - என்றவாறு இரண்டு பாலிதீன் பைகளை எடுத்து, "செல்வம்! இதை வாங்கிக்க ப்ளீஸ்..." - என்றான்.

அதுவரை உர்ரென்று நின்றவள் சட்டென உற்சாகமாய் வேகமாய் காரின் அருகில் சென்றாள். அவள் கையில் பையைத் திணித்தவாறு, "ம்! உன்னை நினைத்தால்தான் பயமாய் இருக்கிறது செல்வம்!" - என்றான் ஒரு மாதிரியான குரலில்.

"ஏன்? எனக்கு என்ன?" - கோபமாய்ச் சீறினாள் செல்லம்மா.



"சும்மாவே என்னை அந்த மொத்து மொத்தினாய். உன்னிடம் அகப்பட்டுக் கொண்டு எத்தனை மாணவர்கள் வாங்கிக் கட்டிக் கொள்வார்களோ? எதற்கும் நீ ஆசிரியை கனவை விட்டுவிட்டு ஐ.பி.எஸ். ஆகி விடேன். அந்தப் பதவிதான் உனக்குப் பொருத்தமாக இருக்கும். இந்தக் கோபமும் வேகமும் குற்றவாளிகளைக் கலங்கடித்துவிடும். எப்படி என் ஐடியா?" - என்றான்.

"சிக்கலை. எப்போதுமே நடக்காத ஒன்றுக்கு நாங்கள் ஏங்குவதில்லை. என்ன, ஸ்கூலுக்குப் போய்த்தான் பாடம் நடத்த வேண்டுமா, இப்போதே பத்துப் பிள்ளைகளுக்கு டியூசன் சொல்லிக் கொடுக்கிறேனே, இது போதும். என்றோ கிடைக்கும் விருந்திற்காக இன்று கிடைத்த கூழை வேண்டாம் என்று சொல்ல மாட்டேன். என் கனவு குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து அவர்களை நல்ல முறையில் ஆளாக்க வேண்டும் என்பதுதான். அதற்குப் பள்ளிக்கூடம் தேவையில்லை. என் வீட்டுத் திண்ணையே போதும். நீங்கள் ஒன்றும் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்!" - என்றாள் ரோஷமாய்.

"உத்தரவு டீச்சர், நான் வருகிறேன். செல்வம்! எனக்கு யெல்லோ ரோஸ் ரொம்ப பிடிக்கும். அதையும் வாங்கிட்டு வந்திருக்கேன். உனக்கும் பிடிக்கும்னா வெச்சுக்க. சந்தோஷப்படுவேன். வரட்டுமா? பை!" - என்றவாறு காரைக் கிளப்பினான். கார் புறப்பட்டதும் அனைவருக்கும் கை அசைத்து விட்டு நகர்த்தினான்.

சற்று நேரம் ஒன்றும் புரியாமல் அப்படியே நின்றாள் செல்லம்மா. சக்தி வந்து உலுக்கிய பின்பே சுதாரித்தவள் வீட்டுக்குள் நுழைந்து முதல் வேலையாய் கவரைப் பிரித்துப் பார்த்தாள். ஒரு பெரிய மல்லிகைப் பூப்பந்தும்,

அதன் மீது ஒரு கொத்து மஞ்சள் திற ரோஜாக்களும் இருந்தன. முழுதும் மலராது இருந்த இளம் மொட்டுக்கள்.

ஆசையாய் அதை எடுத்துத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். "அய்! மஞ்சள் ரோஜா! குடுக்கா!" - என்ற சக்தியிடம்,

"ம்ஹூஉம். இது எனக்கு மட்டும்தான். இதை யாருக்கும் தரமாட்டேன்!" - என்றாள்.

"அய்யே! இது என்ன மல்லிப் பூவா தலைநிறைய வெச்சுக்க? இது ரோஜாப்பூ அக்கா. ஒத்தையா வெச்சாத் தான் அழகா இருக்கும்."

"அது எனக்குத் தெரியாதா? நீ சொல்லித் தர்றியா?"

"இதில பத்துப் பூ இருக்குமே. பத்து நாளா வெச் சுப்பியா. வாடிப் போயிடுமே. அத்தான் வாங்கிட்டு வந்ததை வீணாக்காதே. எனக்குக் கோபம் வரும்!" - கோபமாய்க் கண்களை உருட்டினாள் சக்தி.

"என்ன பெரிய அத்தான்! போடி! நான் தரமாட்டேன். இது எனக்குத்தான். எனக்கு மட்டும்தான்!" - என்றவாறு உள் அறைக்குள் நுழைந்து ஒரு பாட்டிலில் நீர் நிறைத்து ரோஜாவைப் பிரித்து ஒவ்வொன்றாய்ச் செருகினாள். பளிச்சென அழகாய்ச் சிரித்த ரோஜாக்கள் பிரதாப்பின் சிரித்த முகத்தை நினைவூட்ட, அதை ஆசையாய் எடுத்துப் படுக்கையின் அருகே இருந்த மேஜை மீது வைத்தாள். விழிகளை விலக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

"இந்தச் செல்லாவிற்கு என்னவோ ஆகிவிட்டது. பூச்சாடியெல்லாம் தயார் பண்றாளே. எப்படியோ போகட்டும். நீ வாக்கா. நாம மல்லிப் பூ வெச்சுக்கலாம்!"



என்றவாறு சக்தி நகர்ந்துவிட பாரதி அசையாமல் நின்றாள். தன் தங்கையின் முகமும் அந்தக் கண்களில் தோன்றிய ஜொலிப்பும் எதையோ உணர்த்த, புன்னகையோடு விலகிச் சென்றாள்.

"நான் மாப்பிள்ளையாக வந்தால் ஏற்றுக் கொள்ள மாட்டாயா?"

"இப்போ உன் பிரச்சனை என்ன செல்லம்? என்னைப் பார்க்க முடியுமா முடியாதா என்பதுதானே. நிச்சயம் பார்க்க முடியும்." "அதெப்படி, விட்டுட்டுப் போவேன். கையோட கூட்டிட்டுப் போயிடுவேன்!" - எனத் தொடர்ச் சியாய்ப் பிரதாப்பின் வார்த்தைகளே காதிற்குள் ஒலித்துக் கொண்டிருக்க, செல்லம்மா மெல்ல மெல்லத் தன்னிலை மறந்து கொண்டிருந்தாள். அவள் மனதிற்குள் நுழைந்து கொண்ட பிரதாப் அவள் மனம் முழுவதையும் ஆக்கிர மித்துக் கொண்டான்.

## 7

நீலக் கடலினிலே - நின்றன்
நீண்ட குழல் தோன்றுதடி!
கோல மதியினிலே - நின்றன்
குளிர்ந்த முகம் காணுதடி!

பச்சை வயல் சிலுசிலுவென வீசிய தென்றலில் அசைந்தாடியது. பக்கத்து வயலில் அறுவடை செய்த நெல்லின் மணம் நாசியைத் தீண்டியது. சுற்றிலும் பசுமையும் குளுமையும் நிறைந்திருந்த அந்தத் தோப்பில் வரிசையாய் நின்றிருந்த மாமரங்களில் பருத்த மாங்காய்கள் காய்த்துத் தொங்கின. அணில்களும் கிளிகளும் தங்களின் பசியாறிவிட்டு ஓடிவிளையாடிக் கொண்டிருந்தன. வைக்கோல் போரில் சிதறிக் கிடக்கும் சிலநெல்மணிகளைத் தங்களது சிறிய அலகுகளால் கொத்தி உமி நீக்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன, சின்னஞ்சிறு சிட்டுக் குருவிகள்.

பம்ப் செட் மோட்டாரில் தண்ணீர் சீறிப்பாய்ந்து கொண்டிருக்க, ஓடும் நீரில் சில காக்கைகள் மூழ்கி அளைந்துக் கொண்டிருக்க, ஓடும் நீரில் சில காக்கைகள் மூழ்கி அளைந்துக் குளியல் போட்டுக் கொண்டிருந்தன. காகங்களின் கரைதலும் அணில், பறவைகளின் கீச் கீச் சங்கீதமும் அவனை அசைக்கவில்லை. மாமரத்தின் அடர்ந்த நிழலில் ஒற்றைக் கயிற்றுக் கட்டிலில் படுக்கை விரிப்போ தலையணையோ இன்றி வெறுமையாய்ப் படுத்திருந்தான். துளியும் அசையாமல் அவன் படுத்திருந்த கோலம் அவன் ஒரு உயிரற்ற பொருளாய்த் தோன்றியதாலோ என்னவோ, இரண்டு அணில்கள் அவன் மீது ஏறுவதும் இறங்குவது மாகத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

அவற்றின் விளையாட்டைக் கலைக்க விரும்பாமல் மூடிய விழிகளைத் திறக்காமல் அசையாமல் படுத்திருந் தான் நடராஜன். கண்ணம்மாவின் கழுத்தில் இந்நேரம் தாலி ஏறியிருக்கும். புக்ககம் போய்க் கொண்டிருப்பாள். என்னை யாரும் தேடினார்களோ இல்லையோ. அக்கா கூடத் தேடியிருக்கமாட்டாள். அனைவரும் குடும்பமாய் ஊட்டி செல்லும் ஜோரில் இருப்பார்கள். இதில் நம்



நினைவு எங்கே வரும்? நேற்றே தாய்மாமன் சீராகக் கண்ணம்மாவிற்கென்றே தேடிச் சேர்த்துவைத்த பத்து சவரன் நகையையும் ஐம்பதாயிரம் பணத்தையும் தன் சார்பாகத் தனம் மூலமாகக் கொடுத்தனுப்பி இருந்தான். பதிலுக்கு அக்கா கொடுத்தனுப்பிய கல்யாணச் சாப்பாடு கேட்பாரற்றுக் கிடந்தது.

எப்படியோ எல்லாம் நல்லபடியாக நடந்தால் சரி. விழிகளில் நீர் நிறைந்து சூடாய் வழிந்தது. அதை ஒரு கரம் துடைத்துவிட, பதறிக் கண் விழித்தான்.

"அழுவுறியா மாமா? ஏன் மாமா? ஏன் அழறே?" - என்றவாறு அருகில் நின்றாள் செல்லம்மா. மஞ்சள் நிறப் பட்டுடுத்தி தலைநிறையப் பூச்சூடி காதோரமாய் ஒற்றை மஞ்சள் ரோஜாவுடன் நின்றபோது கண்ணம்மாவையே பார்த்ததுபோல் மகிழ்ந்தான் நடராஜன். கலங்கிய விழி களைத் துடைத்துக்கொண்டே எழுந்து அமர்ந்தான்.

"அக்காவை நினைச்சுத்தானே அழறே மாமா. உன் மனசுல அக்காதானே இருக்கு. மறைக்காம சொல்லு மாமா!" - என்றாள் வேதனையாய். பெருமூச்சுடன் வேறுபுறமாய்த் திரும்பிக் கொண்டான்.

"அப்பா தப்பு பண்ணிட்டாரோன்னு தோணுது மாமா!"

விசுக்கெனத் திரும்பினான். "ஏன்? என்னாச்சு செல்லம்மா?" - என்றான் பதட்டமாய்.

"ஆமாம் மாமா! மாப்பிள்ளை முகமே சரியில்லை. கடமைக்காகத் தாலி கட்டுவதுபோல் கட்டினார். உடனே ஊட்டிக்குப் போக வேண்டும். கூட வேறு யாரும் வரவேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார் மாமா.

வரவேற்பு இருக்கு அது இதென்று சொன்னார்கள். ஆனால் இப்போது மாப்பிள்ளையின் அப்பா பேயறைந்தது போலிருக்கிறார். அவங்க அம்மா உடம்பு முடியாமப் படுத்திட்டு இருக்காங்க. மாப்பிள்ளை தம்பி அண்ணன் கல்யாணத்திற்குக் கூட வராமல் ஊட்டிக்குப் போய் விட்டாராம். என்ன நடக்கிறதென்றே புரியவில்லை மாமா.

"அப்பா பேசினாலே மாப்பிள்ளை சீறுகிறார். யாரையும் மதிக்கவில்லை. அதனால்தான் அம்மா உங்களை அழைத்து வரச் சொல்லி என்னை அனுப்பினார்கள். உடனே வாருங்கள் மாமா. அக்கா போகும் முன் நாம் போகவேண்டும்!" - அவசரப்படுத்திய செல்லம்மாவின் பதட்டம் தன்னையும் தொற்றிக்கொள்ள, வேகமாக எழுந்து மரக் கிளையில் தொங்கவிடப்பட்டிருந்த சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டே, "ஏன் செல்லம்மா! எல்லோருமே ஊட்டிக்குப் போறதாதானே பேச்சு. இப்ப என்ன ஆச்சு...?" - நடந்துகொண்டே கேட்டான்.

"எதுவுமே புரியல்ல மாமா! மனைவிக்கு உடம்பு முடியாததால வரவேற்பைப் பிறகு வெச்சிக்கலாம்றாரு மாப்பிள்ளையோட அப்பா. மாப்பிள்ளையோ கடுகு மாதிரி வெடிக்கிறார். கலகலப்பா பேசிட்டு இருந்த மாப்பிள்ளையோட தம்பி எப்போ ஊட்டிக்குப் போனார், ஏன் போனார்னே தெரியல்ல. அதைப்பத்தி யாரும் மூச்சே விடல்ல. அம்மாதான் அழுதிட்டே இருக்காங்க." - நடராஜனின் நடைக்கு ஈடாக நடந்து கொண்டே பதிலளித்தாள்.



ஐந்தே நிமிடத்தில் வீட்டை அடைந்துவிட, "உங்க இஷ்டப்படி எல்லாம் நடந்து போச்சில்ல. இனி என்ன? என்னை அனுப்புங்கள். கார் சாவியைத் தாருங்கள் அப்பா. அவசரம் புரியாமல் விளையாடாதீர்கள். நீங்கள் அம்மாவை அழைத்துக் கொண்டு கோவைக்குக் கிளம்புங்கள். இதைக் காரணம் காட்டி என்னைத் தடுக்க வேண்டாம். நான் உடனே புறப்பட வேண்டும். அங்கு என்ன ஆச்சோ, ஏதாச்சோ. எனக்கு இன்னும் ஒரு நிமிடம் கூட இங்கே இருக்க முடியாது. சாவியைத் தருகிறீர்களா? இல்லை, நான் மட்டும் போய்விடவா?" - பிரசாத்தின் கோபத்தில் தன் சட்டைப்பையிலிருந்து சாவியை எடுத்து நீட்டினார் சிவராமன். கூடவே போனையும் கொடுத்தார்.

"இது... இதனாலதான் பிரச்சனை இவ்வளோ பெரிசாச்சு. அங்க மட்டும் ஏதாவது அசம்பாவிதம் நடந்தது, அப்புறம் நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது!" - கோபக்கனலாய்ச் சீறிவிட்டு போனை ஆன் செய்தான். அது இருட்டாகவே இருந்தது.

"போச்சு! சுத்தமா சார்ஜ் இல்லை. உங்களை யார் ஸ்விட்ச் ஆஃப் பண்ணச் சொல்லியது? எல்லாம்... எல்லாம் என் நேரம். நான் கிளம்புறேன்," - என்றவாறு வாசலை நோக்கி வந்தான் பிரசாத்.

மாப்பிள்ளை அழகாய்த்தான் இருக்கிறார். ஆனால் ஏன் இத்தனை கோபமாய் இருக்கிறார்? தொழிலில் ஏதும் நஷ்டம் வந்துவிட்டதோ? அதனால்தான் இவ்வளவு அவசரமாய்ப் போகவேண்டும் என்கிறாரோ? என்ன அழகு! என்ன நிறம்! மாமா இந்த மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்ததில் தவறு ஒன்றுமில்லை. இத்தனை அழகான மாப்பிள்ளை கிடைத்தால் விடமுடியுமா? நான்

என்ன நிறம்? உழைத்துக் கறுத்த தன் உடம்பை ஒரு முறை பார்த்துக் கொண்டான் நடராஜன். இவர்தான்... இவர்தான் என் கண்ணம்மாவிற்குப் பொருத்தம். சரியாகத்தான் சேர்ந்திருக்கிறார்கள் இருவரும். பிரசாத்தை விட்டுப் பார்வையை விலக்க முடியாமல் வாசலிலேயே நின்றுவிட்டான் நடராஜன்.

"ஹேய்! யார் நீ? வழி விடு. நான் போக வேண்டும்." - வெடித்தான் பிரசாத்.

"மன்னிச்சிடுங்க மாப்பிள்ளை! நான்... நான் கண்ணம்மாவின் தாய்மாமன்..."

"ஸோ வாட்? நீ எந்த மாமனாய் வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போ. எதற்காக என் வழியை மறைக்கிறாய்? நான் அவசரமாகப் புறப்பட வேண்டும்."

"உங்க அவசரம் புரியுது மாப்பிள்ளை. ஆனாலும் இப்படிக் கல்யாணம் முடிஞ்சதும் அவ்ளோ தூரம் கிளம்புறீங்க. கண்ணம்மா, பாவம்! சின்னப்புள்ள. தனியா வரப் பயப்படுமே. எங்க அக்காவையும் மாமாவையும் மட்டுமாவது உங்க கூடக் கூட்டிட்டுப் போங்களேன். கொஞ்சம் தைர்யமா இருக்கும் அதுக்கு." - நயமாகவே கேட்டவனை அலட்சியமாய்ப் பார்த்து,

"சின்னப் புள்ளைய வீட்டோட வெச்சிக்க வேண்டியதுதானே. ஏன் கல்யாணத்துக்கு அலையணும். என்னைச் சாகடிக்கவா?" - பிரசாந்தின் பேச்சில் அனைவருமே ஆடித்தான் போயினர். பாரதியின் கண்கள் சட்டெனக் கலங்கின. முதன்முறையாய் வயிற்றுக்குள் பயம் உண்டாகிப் பிசைந்தது.

சிவராமன் முன்னே வந்தார். "டேய்! பேசும் வார்த்தையைப் புரிந்து பேசு. முட்டாள்தனமாய் உளறாதே.



இப்ப என்ன, நீ போக வேண்டும். அவ்வளவுதானே? கிளம்பு. அதற்கு ஏன் இத்தனை ஆர்ப்பாட்டம் செய்கிறாய்? சம்பந்தி, நீங்க பதற வேண்டாம். எஸ்டேட்ல வேலை பார்க்கிற ஒரு தொழிலாளிக்கு விபத்தாகி உயிருக்குப் போராடிட்டு இருக்கிறதா நேத்து ராத்திரிதான் எனக்கு போன் வந்தது.

"இவன் உடனே போகணும்னான். நான்தான் திருமணம் முடிஞ்சதும் போகலாம்னு சின்னவனை உடனே அனுப்பி வைத்தேன். அவன்கிட்ட இருந்து இன்னும் போன் வரல்ல. அதனாலதான் இவன் இவ்ளோ பதட்டமா இருக்கான். பதட்டத்தில பேசினது எதையும் மனசுல வெச்சுக்காதீங்க. அவன் கிளம்பிப் போகட்டும். மத்ததை எல்லாம் அப்புறம் பேசிக்கலாம். பாரதி! நீயும் கிளம்புமா. அத்தைக்கு உடம்பு குணமானதும் நாங்க வந்து பார்க்கிறோம். அவன் பிரச்சனையைக் கொஞ்சம் புரிஞ்சு நடந்துக்கம்மா. மத்தப்படி எம்புள்ள நல்லவம்மா!" - என்றார் குரல் கம்ம.

ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு, "பரவாயில்ல மாமா, நான் பார்த்துக்கிறேன். நான் என்ன சின்னப்பிள்ளையா? நான் சமாளித்துக் கொள்கிறேன் மாமா. நீங்கள் அத்தையைக் கவனித்துக் கொள்ளுங்கள். அம்மா, நான் வரட்டுமா! அங்கே நிலமை சரியானதும் உங்களுக்கு லட்டர் போடுகிறேன். நீங்க எல்லோரும் வாங்கம்மா. வரும்போது மாமாவையும் கூட்டிட்டு வாங்கம்மா. செல்லா! சக்தி! நான் போகட்டுமா?" - விடை பெறுகையில் தன்னையும் மீறிக் கண்ணீர் சுரந்தது.

பிறந்து வளர்ந்த வீடு, கூடவே வளர்ந்த தங்கைகள், தங்களைத் தவிர வேற உலகமே இல்லை என்று வாழும்

அப்பாவி அன்னை. இவர்களை விட்டு முன்பின் அறியாத ஒரு ஆடவனுடன் அதுவும் இத்தனை கோபமாய்ப் பேசும் ஒருவனுடன் போவதை நினைத்து உடலும் மனமும் நடுங்கத்தான் செய்தன. இருந்தும் தன் நடுக்கத்தை வெளிக்காட்டினால் அன்னையால் தாங்கிக் கொள்ள முடியாது என்று தெரிந்ததால் முகத்தில் துணிவைக் காட்டித் தைரியமாகவே நடந்தாள் பாரதி.

கூடவே வந்த தங்கையைத் திரும்பவும் பாராமல் நடந்தாள். காரில் ஏறும் முன் ஓரமாய் நின்ற நடராஜனைப் பார்த்தாள். "மாமா! நான் போகட்டுமா?" - என்றாள் கண் கலங்க.

"பத்திரமா போயிட்டு வா கண்ணம்மா. உன் மனசு போல சந்தோஷமா வாழ்வே." - கண்கள் பனிக்க ஆசிர் வதித்தான்.

"அம்மா ஊட்டிக்கு வரும்போது கண்டிப்பா நீங்களும் வரணும் மாமா. வருவீங்கள்ல?" - அவளது கேள்விக்குப் பதிலளிக்கும் முன், "போதும். இப்படியே பேசிட்டு இருந்தா விடிஞ்சிடும்!" - காருக்குள் இருந்து கத்தினான் பிரசாத். ஒருகணமும் தாமதிக்காமல் காரினுள் ஏறினாள் பாரதி. கதவைச் சாத்தும் முன் கார் சீறிப் பாய்ந்தது. பதறிப் பயந்து கதவை மூடிவிட்டு அமைதியாக இருந்தாள் பாரதி.

படபடப்பு அடங்கச் சற்று நேரம் ஆனது. மனம் சற்று நிதானத்திற்கு வந்ததும் யோசிக்க ஆரம்பித்தாள். பிரசாத்தின் மீது கோபம் வரவில்லை. மாறாக மதிப்பும் மரியாதையும் கூடியது. தன்னிடம் வேலைபார்க்கும் ஒரு தொழிலாளிக்கு ஆபத்து என்றதும் இப்படிப் பதறித்



துடிப்பவர் நிச்சயம் நல்ல மனிதராகத்தான் இருப்பார். கோபத்தில் பேசியதைக் கேட்டு ஒரு கணம் தவறாக நினைத்துவிட்டோமே. சூழ்நிலை சரியானதும் ஸாரி கேட்க வேண்டும்.

அந்தத் தொழிலாளியும் எப்படி இருக்கிறாரோ தெரியவில்லையே. கடவுளே! அந்த நபர் யாராக இருந் தாலும் சரி... அவருக்கு எதுவும் அசம்பாவிதமாக நடந்து விடக்கூடாது. நல்லபடியாக உயிர்பிழைத்துவிட வேண்டும். முதன்முறையாய் வாழப்போகும் இடத்தில் கெட்ட செய்தியோடு நுழையக் கூடாது. அவர் பிழைத்துவிட்டால் இவரும் கோபம் பதட்டம் குறைந்து சந்தோஷப் படுவாரே... அப்போதாவது சிரிப்பாரா? தன் கணவனின் கடுகடுத்த முகம் சிரித்தால் எத்தனை அழகாய் இருக்கும் எனத் தன் மனக்கண்ணில் கொண்டு வந்து பார்த்தாள். சிரித்த முகத்தோடு இருந்த பிரசாத் இன்னும் அழகாக இருந்தான்.

மனதிற்குள்ளே சிரித்துக்கொண்டு ஆவலாய் வெளியே பார்க்கத் தொடங்கினாள் பாரதி. கிடைத்த வாழ்க்கையை முழு மனதோடும் திருப்தியோடும் ஏற்றுக்கொண்டு அவனுடன் ஆனந்தமாய் வாழத் தயாரானாள். ஆனால், சீறிப்பாய்ந்த காரின் வேகத்தை விடப் பிரசாத்தின் இதயம் வேகமாய்த் துடித்தது. மனம் முழுக்க மினி... மினி... என்ற ஒற்றைச் சொல்லே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

"என்ன ஆயிற்று மினி உனக்கு? என்னைப் பிரிய மனமின்றியா இந்த முடிவை எடுத்தாய். என்னைத் தவிக்கவிட்டுப் போய்விடாதே. இந்தப் பணக்கார வீட்டில் பிறந்ததைத் தவிர நான் வேறு ஒரு பாவமும் செய்ய வில்லை. என்னை வெறுத்துவிடாதே மினி.

"என் மனம் முழுக்க நீதான் இருக்கிறாய். அதில் இன்னொரு பெண்ணுக்கு இடமில்லை. என்னை நம்பு மினி. இது என்னை மீறி நடந்த கட்டாயத் திருமணம். இதில் எனக்குத் துளியும் விருப்பம் கிடையாது. உன்னைத் தவிர வேறு யாரிடமும் என் மனம் செல்லாது மினி. நான் தாலிகட்டிய இந்தப் பெண்ணை நான் இதுவரை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

"என் மனம் துடிப்பது உனக்குக் கேட்கிறதா? ஐயோ! நேற்றே எனக்குத் தெரியாமல் போயிற்றே. தெரிந் திருந்தால் உடனே வந்திருப்பேனே. என்னிடம் மறைத்து விட்டார்கள் மினி. என்னை ஏமாற்றி விட்டார்கள். நான் ஏமாந்து போனேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நீதான் என் மனைவி. என் உடல் பொருள் ஆவி அனைத்தும் உனக்கே அர்ப்பணம். இவள் பெயரளவில் மட்டுமே என் மனைவி. என் தாலியை மட்டுமே வாங்கியிருப்பவள். இதைத் தவிர வேறொன்றும் என்னிடமிருந்து இவளுக்குக் கிடைக்காது. இது நிச்சயம். என்னை மிரட்டித் தாலியை மட்டும்தான் கட்டவைக்க முடியும்.

"இவளுடன் வாழ்வதும் வாழாததும் என் விருப்பம். அதை ஏன் இந்தப் பெரியவர்கள் உணரவில்லை. உன்னை ஏன் என் அப்பாவிற்குப் பிடிக்காமல் போனது? ஐயோ! நீ எப்படித் துடிக்கிறாயோ. உன் அருகில் இல்லாத பாவி ஆகிப்போனேனே. இதோ வந்து விட்டேன். வந்து கொண்டே இருக்கிறேன்." வெறியோடு காரை இயக் கினான் பிரசாத். அந்த வேகத்தில் மிரண்டு போனாள் பாரதி.



# 8

மேனி கொதிக்குதடி - தலைசுற்றியே
வேதனை செய்குதடி - வானில்
இடத்தை எல்லாம் இந்த வெண்ணிலா
வந்து தழுவுது பார்!

"சிவரஞ்சனி மருத்துவமனை" - என்ற போர்டைத் தாங்கியிருந்த மருத்துவமனை வெளிச்சத்தில் மூழ்கியிருக்க, டாக்டர்களும், நர்சுகளும், நோயாளிகளும் ஸ்வெட்டரின் உதவியால் குளிரிலிருந்து தங்களைக் காத்துக்கொண்டு சாரலாய்ப் பெய்து கொண்டிருந்த பனிமழையைத் திட்டிக் கொண்டிருந்தனர்.

பனிச்சாரல் சில பனிக்கட்டிகளோடு பெய்து கொண்டிருக்க, ஊட்டி முழுவதும் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தது. மாலை ஐந்து மணிக்கே முழுவதும் இருட்டிவிட, சாலையில் வாகனங்கள் பனிமூட்டத்தால் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தன. டீக்கடைகளில் மட்டுமே கூட்டம் மொய்த்துக் கொண்டிருக்க, பழக்கடை களிலும் ஐஸ் கார்னரிலும் ஈக்கள் மட்டுமே நடமாடிக் கொண்டிருந்தன.

பணி முடிந்து வீடு புறப்பட்ட மருத்துவமனைத் தொழிலாளர்கள் பனிமழையைச் சபித்துக் கொண்டிருந் தனர். அவர்கள் அவஸ்தை அவர்களுக்கு. வெப்பத்தால்

நொந்து கிடப்பவர்களுக்கு லேசான சாரல் விழுந்தாலே ஆனந்தமாய்க் கொண்டாட ஆசை வரும். மழையை ரசிக்கத் தோன்றும். மண்வாசனையை நுரையீரல் முழுக்க நிரம்பிக் கொள்ளத் தோன்றும். மண் குளிர்ந்துவிடுமா என்ற ஏக்கம் வரும். கிணற்றில் நீர் மட்டம் ஏற வேண்டுமே என்று வேண்டிக் கொள்வதுண்டு.

ஆனால் இடைவிடாமல் மழை பெய்து கொண்டே இருந்தால், அது பல இடைஞ்சல்களை விளைவிக்கும். சாலையெங்கும் நீரும் சகதியும் நிறைந்து இருக்கும். நல்ல துணிகளைப் போட்டுக்கொண்டு நடக்க முடியாது. அப்படியே போனாலும் அதைத் துவைத்துக் காயப்போட முடியாது. துணிகளும் நாறிப்போய்விடும். மாலையில் தொடங்கும் குளிர் காலைவரை வாட்டியெடுத்து விடும். ஆக மழை வந்தாலும் கஷ்டம். வராமல் வறண்டு போனாலும் கஷ்டம்.

மருத்துவமனை வராந்தாவில் நின்ற ஜெயஸ்ரீ தன் சக நர்ஸ் சுதாவிடம் சலித்துக்கொண்டாள். "இத்தனை நேரம் இல்லாமல் இந்த மழை இப்போ ஏன் வந்தது? யார் கேட்டார்கள்? ஏற்கெனவே லேட்டாகிவிட்டது. அம்மா வேறு பயந்துபோய்த் தேடிக் கொண்டிருப்பார்கள். ச்சே, இந்த மழையோடு பெரிய அவஸ்தை."

"இது எப்பவும் நடக்கிற கூத்துதானே ஜெயஸ்ரீ! இன்னிக்கு ஏன் உனக்கு இவ்வளோ கோபம். என்ன, டாக்டர் யாரும் டோஸ் விட்டாங்களா?" - கேலியாய்க் கேட்டாள் சுதா.

"அட! அப்படி எதுவும் என்றால் பரவால்லப்பா. இது வேற. நேத்து ஒரு சூசையிட் கேஸ் வந்திச்சே. அது கூட ஒரு பொறுக்கி நாயும் இருக்குப்பா. அதுவும்... அது



பார்வையும். அவனைப் பார்த்தாலே வாமிட் வந்திடும் போலிருக்கு. சும்மா... சும்மா... டவுட் கேக்கிறேன் பேர்வழின்னு மேல வந்து உரசுது. உடம்பெல்லாம் எரியுதுப்பா!" - என்றாள் வெறுப்பாய்.

இது அவ்வப்போது நடப்பதுதான். சில சமயம் பேஷண்டுகள் அளவுமீறி வழிவதும் உண்டு. கையில் ஊசிபோட்டுக் கொள் என்றால் இடுப்பில் போடுங்கள் மேடம். கையில் என்றால் எனக்குப் பயம் என்னும் ஆண்களைப் பார்க்கையில் வெறுப்பும் கோபமும் வரும் தான். ஆனால் அதை வெளிப்படையாகக் காட்டவும் முடியாது. சிரித்தே சமாளிக்க வேண்டும். இல்லையென்றால் வேறு மாதிரியான புகார்கள் டாக்டரிடம் போகும். அப்படி நேரும்போது இந்த வேலைக்கு வந்திருக்கவே கூடாது என்றுகூடத் தோன்றும். ஆனால் எங்குதான் பிரச்சனை இல்லை. பெண்ணாகப் பிறந்த போதே நம்மோடு பிரச்சனையும் பிறந்து விடுகிறதே. சமாளித்துத்தான் ஆக வேண்டும். இது ஜெயஸ்ரீக்கும் தெரியும். சுதாவிற்கும் புரியும்.

சுதா ஆதரவாய்த் தோழி தோளைத் தொட்டாள். "என்னப்பா! ரொம்ப டார்ச்சர் பண்ணிட்டானா? பேஷண்ட்டோட ரிலேஷனா இல்லே ஹஸ்பெண்டா? நீ பேஷண்ட்கிட்டயே சொல்லிப் பார்க்கலாமே. ஏன்னா ஒரு பெண்ணோட பீலிங்ஸ் இன்னொரு பெண்ணால புரிஞ்சுக்க முடியுமே."

"அடப் போப்பா! அதுங்க ரெண்டுமே சரியில்லப்பா. அண்ணனும் தங்கையுமாம். ஆனா பார்த்தா அப்படித் தெரியல்ல. ஏதோ சதிகாரக் கும்பல் மாதிரித் தெரியுது!" - என்றாள் ஜெயஸ்ரீ.

"ஏய்! என்னடி சொல்றே?"

"ஆமாம்ப்பா! இவ எஸ்.பி. டீ எஸ்டேட்ல வேலை பார்க்கிறாளாம். ஆனா பேச்சைப் பார்த்தா அந்த எஸ்டேட்டுக்கே ஓனர் மாதிரிப் பேசுறா. அதோட இந்த தற்கொலையே நாடகம் மாதிரிதான் தோணுது. ஏம்ப்பா! விஷம் குடிச்சுச் சாகணும்னு நினைச்சா ஒரு ஸ்பூன் விஷமா குடிப்பாங்க. இவ ஒரு ஸ்பூன்கூடச் சாப்பிட்டிருக்க மாட்டா. அதையும் வாந்தி பண்ணியிருக்கா. இப்ப அவ பெர்பெக்ட்லி ஆல்ரைட். பட். ரெண்டு பேருமே டிஸ்சார்ஜ் ஆகாம வெயிட் பண்றாங்க. யாரையோ எதிர்பார்த்திட்டு இருக்கிற மாதிரி இருக்கு." - ஜெயஸ்ரீ சொல்லிக்கொண்டே போக, அண்ணன் போனுக்குத் தொடர்பு கொள்ளமுடியாமல் வெளியே வந்து வராந்தா ஓரமாய் நின்று முயற்சித்துக் கொண்டிருந்த பிரதாப்பின் காதில் தெளிவாய் விழ, அதிர்ந்து போனான்.

"டாக்டரும் பீஸ் கிடைச்சா போதும்னு கண்டுக்க மாட்டேங்கிறார். ஆனா அந்த தடியன் வழிவதும் என்னை ஏதாவது கேட்பதும் நெருங்கி வருவதும் நினைச்சாலே கூசுது. சரியான பொறுக்கி. நம்ம கலா சிஸ்டரைக் கூட விட்டு வைக்கலையாம். இன்னிக்கு நைட் டியூட்டி அவங்கதான். என்ன பாடுபடப் போறாங்களோ!" - வார்த்தையோடு குளிரும் சேர்ந்துகொள்ள நடுங்கினாள் ஜெயஸ்ரீ.

"ஏய்! இந்த மழை விடாது போலிருக்கே. நமக்கும் டயமாகுது. பேசாம குடையைப் பிடிச்சிட்டுப் போகலாம் வா. அம்மா வேற பஸ் ஸ்டாப்ல வந்து காத்து நிற்பாங்க. போலாமா?" - என்றவாறு படிக்கட்டில் இறங்கிக் குடையை விரிக்க, "எக்ஸ்கியூஸ் மீ சிஸ்டர்ஸ்! ப்ளீஸ் ஒன் மினிட்!" என்ற குரலில் இருவரும் திரும்பினர்.



"சிஸ்டர்! ஐ எம் பிரதாப். எஸ்.பி. எஸ்டேட் ஓனரோட சன். உங்ககிட்ட கொஞ்சம் பேசணுமே," - என்றான் தயக்கமாய்.

ஜெயஸ்ரீ லேசான பயத்துடன் சுதாவைத் திரும்பிப் பார்த்தாள். "இதில பயப்பட ஒன்னுமில்ல சிஸ்டர். இப்ப நீங்க பேசினதைக் கேட்டேன். ஏற்கெனவே எனக்கு டவுட்தான். அதான் உங்ககிட்ட கேட்டு கிளியர் பண்ணிக் கலாம்னு கூப்பிட்டேன். ப்ளீஸ் ஹெல்ப் மீ சிஸ்டர்."

"ம். என்ன? என்ன தெரியணும்?"

"மனோகர் தன்னோட தங்கை விஷம் சாப்பிட்டுச் சாகக்கிடக்கிறான்னு எங்களுக்கு போன் பண்ணினான். அதைக் கேட்டு என் பிரதரோட மேரேஜ்க்கு கூட நிற்காமல் ஓடிவந்தேன். ஏன் என்ன காரணம்னு சொல்ல மாட்டேங்கிறான். ஆனா தன்னோட தங்கை இன்னும் அபாய கட்டத்தைத் தாண்டலன்னு சொல்லி என்னையும் உள்ளே விடல்ல அவன். அந்தப் பொண்ணு எப்படி இருக்கா சிஸ்டர்? எதுவும் ஆபத்தான நிலைமை இல்லியே. ப்ளீஸ் உண்மையைச் சொல்லுங்க சிஸ்டர். இதுல எங்க குடும்ப மானமும் தொழிலாளர்கள் அக்கறையும் இருக்கு சிஸ்டர். ப்ளீஸ்!" - என்றவனை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள்.

"உங்க அண்ணனோட கல்யாணத்தைக் கூடப் பார்க்காம ஓடி வர்ற அளவிற்கு ஒன்றுமே இல்லை ஸார். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இது தற்கொலை முயற்சியே இல்லை. யாரையோ பயமுறுத்த - இல்லை - ஏமாற்றச் செய்த செயலாகத்தான் இருக்கும். அந்தப் பெண் குடித்த விஷம் அவளை மருத்துவ மனைக்குள் கொண்டு வரும் முன்பே வாந்தி மூலம் வெளியேறி விட்டது. அவ நார்மலாத்தான் இருக்கா.

"ஆனாலும் அந்த ஆள் தன்னோட தங்கை ரொம்ப வீக்கா இருக்கா. ஒரு ரெண்டு நாள் இங்கேயே இருக்கட்டும்னு டாக்டர்கிட்ட கேட்டு இங்க தங்கியிருக்கான். மத்தப்படி நீங்க பயப்படுற மாதிரி ஒன்னும் இல்லை. அதோட அவ ஐ.சி.யூ.விலும் இல்லை. ஜெனரல் வார்டுல தான் இருக்கா. நீங்க தாராளமா போய்ப் பார்க்கலாம்," - என்றாள் ஜெயஸ்ரீ.

பிரதாப்பின் குழப்ப முடிச்சுகள் அவிழ்ந்துவிட, "தேங்க்யூ சிஸ்டர். தேங்க்யூ ஸோமச். இனி நான் பார்த்துக் கொள்கிறேன் சிஸ்டர்! மழைவிடவில்லையே. நான் வேண்டுமானால் என் காரில் ட்ராப் பண்ணவா?" - எனக் கேட்டான்.

"வேண்டாம் ஸார். கேட்டதற்கு நன்றி. நாங்கள் போய்விடுகிறோம்," - என்றவாறு தங்களது குடைகளை விரித்துக்கொண்டு இருவரும் இறங்கிச் சென்றுவிட, பிரதாப் தன் செல்போனை உயிர்ப்பித்துத் தந்தையிடம் தொடர்பு கொண்டான். மறுமுனையில் சிவராமன்,

"எனக்குத் தெரியும்ப்பா! அந்த மனோகர் கேரக்டர் சரியில்லை. அவன் தங்கையுடன் சேர்ந்து ஏதோ சதி செய்கிறான் என்று தெரிந்துதான் பிரசாத்திற்கு அவசரமாய் அதுவும் வெளியூரில் வைத்துத் திருமணத்தை முடித்தேன்."

"ஏம்ப்பா! அவங்க சரியில்லை என்று தெரிந்தே ஏன் வேலையில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? பேசாமல் வேலையைவிட்டே அனுப்பி விடலாமா? தெரிந்தே ஏன் பாம்பிற்குப் பால் வார்க்கிறீர்கள்?"

"இல்லப்பா! அவனை வெளியே அனுப்புவது ஒன்றும் பெரிய விஷயமில்ல. ஆனா அவன் அப்பா உயிரோட இருந்தவரை நமக்காகவே உழைச்சிட்டு இருந்தான்.



அந்த அடிப்படையில்தான் மனோகரைத் தேயிலையை மூட்டையாகக் கட்டுற வேலைக்கு அமர்த்தினேன். அவன் எப்படியோ பிரசாத்தைக் காக்கா பிடித்துத் தன் தங்கையையும் அங்கு சேர்த்து விட்டிருக்கான். இது எனக்கே சமீப காலமாகத்தான் தெரியும். அந்தப் பொண்ணும் சரியில்லன்னு நம்ம மானேஜர் சொன்னாரு. உன் அண்ணன் எது சொன்னாலும் நம்ப மாட்டேன் என்கிறான். இப்ப எதற்காக இந்தத் தற்கொலை ட்ராமா என்று தெரியவில்லையே?" - தந்தையின் குரலில் வருத்தம் தொனித்தது.

"நீங்கள் ஒன்றும் வருத்தப்பட வேண்டாம் அப்பா. நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் எப்போது இங்கு வருவீர்கள்?"

"இப்போது முடியாதப்பா. அம்மாவிற்கு மூச்சிரைப்பு அதிகமா இருக்கு. அவளை விட்டுவிட்டு என்னால் வர முடியாது. நீ கொஞ்சம் பார்த்துக் கொள். அப்பப்போ எனக்கு போன் பண்ணு. பிரசாத் வந்து விட்டானா?"

"இதுவரை இல்லையப்பா. அவனுக்குத்தான் ட்ரை பண்றேன். லைன் கிடைக்கவே இல்லை. ஏன்னே தெரியல்ல."

"அவன் போன்ல சார்ஜ் சுத்தமா இல்லப்பா. சார்ஜ் ஏத்தக்கூட பொறுமை இல்லாம அவசரமா கிளம்பிட்டான். பிரதாப்! அவன் நம்ம மேல ரொம்பக் கோபமா இருக்கான். பாவம், அந்தப் பொண்ணு. அந்தப் பொண்ணு மேலதான் எல்லாக் கோபத்தையும் காட்டிட்டு இருக்கான். நீ ஒரு பத்து நாளாவது அங்கே இருந்து உன் அண்ணியைப் பத்திரமா பார்த்துக்கோ."

"சரிப்பா! நான் பார்த்துக்கிறேன். அப்பா! அதோ நம்ம அண்ணன் கார் வருது. நீங்க போனை வையுங்கப்பா. நான் அப்புறம் பேசுறேன்," - என்றவாறு போனை கட் பண்ணிவிட்டு, இன்னும் லேசாய்த் தூறிக் கொண்டிருந்த மழையைப் பொருட்படுத்தாமல் இறங்கி ஓடினான்.

காரை அடைந்ததும், "அண்ணா! அண்ணி எங்கே? நீ ஏன் இந்த மழையில் இங்கு வந்தாய்? அதுதான் நான் இருக்கிறேனே! சரி, அண்ணி எங்கே?" - எனக் கேட்ட தம்பியை எரித்து விடுவதைப் போல் பார்த்தான் பிரசாத்.

"என்ன செய்தீர்கள் மினியை? அப்பாவும் பிள்ளையுமாய்ச் சேர்ந்து கொன்றே விட்டீர்களா? என் மினி இங்கு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது என்னிடம் மறைத்து மணமேடையில் உட்கார்ந்து இன்னொருத்திக்குத் தாலி கட்ட வைத்து விட்டீர்களே. அதனால் தான் அவள் உயிரையே விடத் துணிந்துவிட்டாள் என் மினி. இதோ பார்! நீ போயிடு. என் கண்முன் நிற்காதே. என் மினிக்கு ஏதாவது ஆகிவிட்டால் என் தம்பி என்று கூடப் பார்க்க மாட்டேன். உன்னைக் கொன்றே விடுவேன். போ. போய்டு." - பிரசாத்தின் கத்தலில் ஒரு சிலர் திரும்பிப் பார்த்தனர்.

பிரதாப் ஆணி அடித்தாற்போல் அசையாது நின்றான். இது அவன் எதிர்பாராத திருப்பம். "ஏதோ ஒரு பெண் நம் எஸ்டேட்டில் வேலை செய்பவள் ஏதோ விபத்தில் சிக்கி மருத்துவமனையில் இருக்கிறாளாம். போய்ப் பாருப்பா. பணம் எதுவும் தேவைப்படும். பார்த்துக்கொள்," என்று தானே அப்பா அனுப்பினார். அதுவும் இரவோடு இரவாக.

இங்கு வந்து பார்த்தால், "எதுவாக இருந்தாலும் உங்க அண்ணன் வரட்டும். அவரிடமே பேசிக்கொள்கிறோம்,"



- என்கிறான் அந்த மனோகர். இது நாடகம் என்பதும் தெளிவாகத் தெரிந்து போனது. ஆனால் எதற்காக இந்த நாடகம் என்று மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்கையில் இவன் வந்து புதிதாய்க் குண்டைத் தூக்கிப் போடுகிறானே. அதுவும் தன்னையும் தந்தையையும் இணைத்துப் பேசுகிறானே.

அப்படியென்றால் அண்ணன் அந்தப் பெண்ணை விரும்புகிறானா? கடவுளே! இது அப்பாவிற்கும் தெரியுமா? தெரிந்துமா இந்தத் திருமணத்தை நடத்தி வைத்தார். இது எப்பேர்ப்பட்ட துரோகம். இரண்டு பெண்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதி ஆயிற்றே. இதை எப்படி நம் அப்பா செய்தார்? நம்பிக்கை இல்லாமல் அண்ணனை ஏறிட்டான்.

"அண்ணா! அண்ணா...! நீ இந்தப் பெண்ணை விரும்பினாயா?" - கேட்கும் போதே குரல் நடுங்கிற்று.

"விரும்பினாயா என்ன, விரும்பினாயா? விரும்பினேன். விரும்புகிறேன். இன்னும் விரும்புவேன். என் இறுதி மூச்சுவரை அவளைத்தான் அவளை மட்டும்தான் விரும்புவேன்!" - உறுதியாக ஒலித்த பிரசாத்தின் குரலில் அதிர்ந்து போனான்.

"என்ன... என்ன சொல்கிறாய் நீ?"

"உண்மையைத் தான் சொல்கிறேன். ஏன் உன் அப்பா உன்னிடம் சொல்லவில்லையா? அதெப்படிச் சொல்லாமல் இருப்பார்? நீதான் அவருடைய செல்ல மகன் ஆயிற்றே. உனக்கும் தெரியும். தெரிந்துதானே என்னிடம் கூடச் சொல்லாமல் நீ மட்டும் புறப்பட்டு வந்தாய்."

"அண்ணா, நிறுத்து! எனக்கு எதுவுமே தெரியாது. யாருக்கோ ஒரு தொழிலாளிக்கு விபத்து என்றுதான்

ஓடிவந்தேன். சத்தியமாய் எனக்கு எதுவும் தெரியாது. நீயாவது சொல்லியிருக்கலாமே. பெண் வீட்டிற்கு வரமாட்டேன் என அடம் பிடித்தாயே. அப்போதே எத்தனை முறை உன்னிடம் கேட்டேன். ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் இப்படி நடக்க விட்டிருக்க மாட்டேனே. அண்ணியின் நிலையைப் பற்றி யோசித்தாயா நீ?" - பிரதாப்பின் குரலில் தவிப்பும் வேதனையும் தொனித்தது.

"ஏன்டா! இரண்டு வருடமாய் நேசித்தவள் தன் உயிரையே விடத் துணிந்து மருத்துவமனையில் கிடக்கிறாள். நீயானால் இன்று வந்த எவளோ ஒருத்திக்காக வருத்தப்படுகிறாய்."

"அண்ணா! யாரோ ஒருத்தியில்லை. அண்ணி உன் மனைவி!" - சீறிய தம்பியை அலட்சியமாய்ப் பார்த்தான் பிரசாத்.

"ம். அது உனக்கும் ஊருக்கும்தான். எனக்கு எப்போதுமே என் மினிதான் மனைவி. இதில் எந்த மாற்றமும் இல்லை. வழியை விடு. என் மினியைப் பார்க்க வேண்டும்," - எனத் தன்னைவிட்டு விலகிய அண்ணனின் கையைப் பற்றினான் பிரதாப்.

"சரி அண்ணா. மற்றதை விடு. இப்போது போகிறாயே உன் மினியைப் பார்க்க. அவளுக்கு ஒன்றுமே இல்லை. சும்மா ஒரு வாய் விஷத்தைக் குடித்து அதையும் வெளியேற்றிவிட்டுச் சும்மா இங்கே வந்து படுத்திருக்கிறாள். இது சத்தியமான உண்மை. வேண்டுமானால் டாக்டரிடம் கேட்டுக்கொள். மனோகரும் அவளும் சேர்ந்து உன்னை எதற்கோ ஏமாற்ற இந்த நாடகம் போடுகிறார்கள். அண்ணா, நான் சொல்வதைக் கேள்." - பதறியவனின் கைகளை உதறினான் பிரசாத்.



"சபாஷ்டா! அப்பாவிற்குத் தப்பாமல் பிறந்த பிள்ளை நீதான். இதே கதையைத்தான் அவரும் சொல்லிப் பார்த்தார். என்னிடம் செல்லுபடியாகவில்லை. இப்போ உன்கிட்ட சொல்லிக் கொடுத்தாரா? அவ ஏன்டா சும்மா இங்க வந்து படுக்கணும். அவளைப் பத்தி உனக்கு என்ன தெரியும்? எவ்ளோ அமைதியான அடக்கமான பொண்ணு தெரியுமா! எனக்காக உயிரையே விடத் துணிந்தவள். அவளைப் போய்ச் சந்தேகப்படச் சொல்கிறாயா? என்னை என்ன மனச்சாட்சி இல்லாதவன் என்று நினைத்தாயா?" - வெடித்தான்.

"அண்ணா... என்ன சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டாயா? எனக்காக உயிரை விடுவாள் என்கிறாயே, உயிரை விட நினைத்தவள் ஒரு ஸ்பூன் விஷமா சாப்பிடுவாள்? இல்லண்ணா. உன்னை ஏமாற்ற ஏதோ சதி நடக்கிறது அண்ணா. புரிந்துகொள். படித்தவன்தானே நீ."

"அவள் ஒரு ஸ்பூன் மருந்து குடித்தாள் என்று நீ பார்த்தாயா?"

"அது வந்து... நர்ஸ்தான் சொன்னாங்க... நான் கேட்டேன். இப்பத்..."

"ஸ்டாப் இட் பிரதாப்." - கத்தினான் பிரசாத்.

"பொய்க்கு மேலே பொய்யா சொல்லிட்டே போகாதே. என் தம்பிங்கறதாலேதான் உன்னை ஒன்றும் பண்ணாமல் விடுகிறேன். போ. போயிடு. என் மினியைப் பற்றி எனக்குத் தெரியும். நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். போ. போய் உன் அப்பாவிடம் சொல்லு. உங்கள் மகனை மிரட்டித் தாலி மட்டும்தான் கட்ட வைக்க முடியும். குடும்பம் நடத்த வைக்க முடியாது என்று சொல். இனி

யாரும் என்னைப் பார்க்க வரக் கூடாது என்றும் சொல்லிவிடு. நான் யாரையும் பார்க்க விரும்பவில்லை. எல்லோருமாய்ச் சேர்ந்து என்னை ஏமாற்றிவிட்டீர்கள்."

"இல்லை அண்ணா. உனக்கு இப்போ புரியாது. கொஞ்ச நாள் போனா உனக்கே தெரியும். அப்போ சொல்லு உன்னை யார் ஏமாத்தினது என்று. ஒன்று மட்டும் சொல்கிறேன் கேள். அண்ணா. அண்ணி பாவம். நீதான் என் எதிர்காலம் என்று உன்னையே நம்பி வந்திருக்கிறார்கள். எங்கள் மீதுள்ள கோபத்தில் அண்ணியைத் தண்டித்துவிடாதே. என்ன ஆட்டம் போட்டாலும் கடைசியில் அடங்கும்போது உன்னைத் தாங்க அண்ணி தான் வருவார்கள். அந்தப் பக்கம் தான் நிரந்தரம். அதை மட்டும் மறந்துவிடாதே.

"நீ யாரை வேண்டுமானாலும் நம்பு. ஆனால் எச்சரிக்கையாய் இரு. எந்தச் சூழ்நிலையிலும் எதிலும் கையெழுத்துப் போட்டுவிடாதே. இது நம் பரம்பரைச் சொத்து. அற்ப காரியத்திற்காய் இதை இழந்துவிடாதே." பிரதாப்பின் வார்த்தைகளை நின்று கேட்க மனமின்றி விடுவிடுவென உள்ளே சென்றவனை வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தான் பிரதாப்.

தெரிந்தே புதை குழியில் விழுவேன் என்று பிடிவாதமாய்ச் செல்பவனை எப்படித் தடுக்க முடியும்? எது இவன் கண்ணை மறைக்கிறது? அந்தப் பெண் மீது கொண்டுள்ள மோகமா? நேசமா? இனி அண்ணியின் நிலை என்ன ஆகும்? தன்னால் என்ன செய்ய இயலும் என்று எண்ணும்போதே கண்கள் கலங்க, அதுவரை சாரலாய்ப் பெய்த மழை வலுக்க ஆரம்பித்து ஆக்ரோஷமாய் அவனை நனைக்க ஆரம்பித்தது.



# 9

நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட மனிதரை
நினைந்து விட்டால்
நெஞ்சு பொறுக்குதில்லையே!

**சொ**ட்டச் சொட்ட மழையில் முழுவதுமாய் நனைந்தவாறு தன் முன் வந்து நின்ற மைத்துனனைக் கண்டதும் மனம் பதறினாள் பாரதி. வேகமாக அறையில் நுழைந்து பூத்துவாலை கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள்.

"என்னங்க பிரதாப், இப்படி நனைஞ்சு வந்திருக்கீங்களே. ஜுரம் எதுவும் வந்திடப்போகுது. துவட்டிக்கங்க. கார்லதானே வந்தீங்க. பிறகேன் இப்படி நனைஞ்சிருக்கு. பிரதாப்! பிரதாப்! என்ன ஆச்சு? ஏன் ஒன்னும் பேசாம நிக்கிறீங்க. பிரதாப்?" - அண்ணியின் குரல் காதில் கேட்ட போதும் அவளை நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி எங்கோ வெறித்துக் கொண்டிருந்தான். மனம் அன்வாய்க் கனன்று கொண்டிருந்தது.

"என்னாச்சு உங்களுக்கு, பிரதாப்! ஏற்கெனவே ரொம்பக் குளிருது. இதுல இப்படி ஈரத்தோட நின்னா ஜன்னி வந்திடும். ப்ளீஸ். சொன்னாக் கேளுங்க. தலையைத் துவட்டிட்டு துணியை மாத்திடுங்க."

அதற்கும் பதிலின்றி அசைவற்று அவன் நிற்கவே, சற்றும் தாமதியாமல் டவலை அவன் தலையில் வைத்து நன்றாகத் துவட்ட ஆரம்பித்தாள். "உங்களுக்கு என்ன சின்னக் குழந்தை என்ற நினைப்பா? மழை என்றால் ரொம்பப் பிடிக்குமோ? அதற்காக இப்படியா நனைவது? நனையும்போது நன்றாகத்தான் இருக்கும். உடம்புக்கு எதுவும் வந்து படுத்தால் என்னாவது?" - ஒரு தாயின் அக்கறையோடு அவள் அதட்டிய விதமும் பரிவோடு தலை துவட்டிய விதமும் அதுவரை அடக்கி வைத்திருந்த விழிநீரை வெளியேற்றியது.

ஒரு ஆண் என்றும் பாராமல் விம்மி அழ ஆரம்பித்தான் பிரதாப். தலையைத் துவட்டிவிட்டு டவலை எடுத்த பாரதி பிரதாப்பின் முகத்தைப் பார்த்துப் பதறிப் போனாள்.

"ஐயோ! பிரதாப்! என்ன ஆச்சு? என் இப்படி அழறீங்க? என்னன்னு சொல்லுங்களேன். என் உடம்பெல்லாம் பதறுதே. ஹாஸ்பிடலில் அந்தத் தொழிலாளிக்கு எதுவும் ஆயிற்றா? உயிரே போயிற்றா? என்ன ஆச்சு பிரதாப்? எதுவென்றாலும் சொல்லுங்கள். அழாதீர்கள் ப்ளீஸ். எனக்குப் பயமாய் இருக்குதே!" - பாரதியின் கண்களும் கலங்கின.

"அண்ணி! என்னை மன்னித்து விடுங்கள் அண்ணி. சத்தியமாய் இப்படியெல்லாம் நடக்கும் என்று எனக்குத் தெரியாது அண்ணி. எல்லாமே நம்மை மீறி நடந்து விட்டதே. நான் என்ன செய்வேன்? எப்படிச் சொல் லுவேன்?" - குலுங்கி அழுதவனைத் தோள் பற்றி அமர வைத்தாள். டவலால் முகத்தைத் துடைத்துவிட்டாள்.

"முதல்ல பொறுமையா இருங்க பிரதாப். ப்ளீஸ் அழறதை நிறுத்துங்க. அவசியமின்றி ஒரு துளிக்



கண்ணீரைக் கூட வீணாக்கக் கூடாது என்று நினைப்பவள் நான். கண்ணீரைக் கண்டு துயரங்கள் விலகாது பிரதாப். ரிலாக்ஸ். உங்களை நீங்களே கட்டுப்படுத்திக்கங்க. ஓ.கே. சொல்லுங்க. என்ன ஆச்சு? ஹாஸ்பிடல்ல எதுவும் அசம்பாவிதமா நடந்திடுச்சா?" - துளியும் பதட்டமின்றி நிதானமாய்க் கேட்ட பாரதியை வியப்பாய்ப் பார்த்தான் பிரதாப். கண்ணீர் சட்டென நின்றுவிட -

"ம். வெரிகுட். முதல்ல போய் ட்ரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாங்க. நான் சூடா இஞ்சி டீ போட்டு எடுத்துட்டு வர்றேன்," - என்றவாறு பாரதி எழுந்து உள்ளே செல்ல, யோசனையாய் எழுந்து தன் அறைக்குள் நுழைந்தான். "அண்ணியிடம் சொல்லலாமா? சொன்னால் என்ன ஆகும்?"

ஐந்தே நிமிடத்தில் சூடான டீயுடன் ஒரு தட்டில் நொறுக்குத் தீனியும் கொண்டு வந்தாள் பாரதி. "பிரதாப், டீ ரெடி!"

"இதோ வந்திட்டேன் அண்ணி!" - என்றவாறு மாற்றிய உடையுடன் தலையை நன்றாய்த் துவட்டிக்கொண்டே வந்து அமர்ந்தான்.

"ம்... மொதல்ல டீ சாப்பிடுங்க. அப்புறம் பேசலாம்," - என்றவளிடம் மறுவார்த்தை பேசாமல் அமைதியாக டீயை அருந்தினான். களைத்த உடம்பிற்கு, குளிருக்கு இதமாய் இருந்தது இஞ்சி கலந்த தேநீர்.

அமைதியாய்க் குடித்து முடித்துக் கப்பைக் கீழே வைத்ததும் பாரதி கேட்டாள்.

"ம். இப்போ சொல்லுங்க. நான் ஏன் உங்களை மன்னிக்கணும்?"

"அது... வந்து அண்ணி..." - என்றவாறு மெல்ல அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அன்றுதான் கழுத்தில் ஏறியிருந்த பொன் தாலி மின்னியது. மஞ்சளும் குங்குமமும் ஜொலித்தது. திருமணப் புடவையைக் கூட இன்னும் மாற்றாமல் இருந்தாள். தலைவாரிப் பூச்சூடிக் கணவனின் வருகைக்காக எதிர் நோக்கி இருக்கும் இவளிடம் உன் கணவன் தான் விரும்பிய பெண்ணைப் பார்க்கப் போயிருக்கிறான். கடமைக்காக மட்டுமே உனக்குத் தாலி கட்டியிருக்கிறான் என்று சொல்ல முடியுமா?

என்னதான் மனதில் துணிவு இருந்தாலும் தன் கணவன் மனதில் இன்னொரு பெண் இருக்கிறாள், இப்போது அவளுடன்தான் இருக்கிறான் என்று சொன்னால் தாங்குவாளா? அவளால் ஜீரணிக்க முடியாது. வேண்டாம். முதன் முதலாய் ஆயிரம் கனவுகளோடு புகுந்தவீட்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் என் அண்ணியின் மனதை நொறுக்கிவிட வேண்டாம்.

எத்தனை நாள் அண்ணியைவிட்டு விலகி இருப்பான். ஒரே வீட்டில் ஒரே அறையில் எத்தனைகாலம் ஒதுங்கி வாழ முடியும் அவனால். அண்ணியின் அன்பும் அரவணைப்பும் நிச்சயம் அண்ணனை மாற்றும். இருவரும் சந்தோஷமாய் வாழ்வார்கள். நிச்சயம் இது நடக்கும். மனோகரின் கபட நாடகம் தெரியவரும் போது அண்ணியின் நல்ல மனம் அவன் கண்ணில் படாமலா போகும். அப்படி ஒரு சூழல் வரும்வரை பொறுத்திருப்பதுதான் நல்லது.

அதற்கு முன் எதையாவது உளறிக் கொட்டி அனைத்தையும் கெடுத்துவிடக் கூடாது. மனதை ஒருமுகப்படுத்திக் கொண்டு, "இல்லை அண்ணி, நான் உங்க கல்யாணத்தைப் பார்க்க நிற்காமல் இங்கே வந்துட்டேன் இல்லையா? அதோட இந்தப் பிரச்சனையால உங்க ரிஷப்சன் நடக்காமப் போச்சு. உங்க பேமிலில உள்ளவங்களும் கூட வர முடியாமப் போச்சே. அதான் எனக்கு ரொம்ப கஷ்டமாப் போச்சு. அதான் அப்படிப் பேசி... கஷ்டப்பட்டு... ஸாரி அண்ணி. நான் ரொம்ப அப்செட் ஆகிட்டேன்!" - பூசி மெழுகினான்.



மெலிதாய்க் கைதட்டியவாறு சிரித்தாள் பாரதி. "எனக்குத் தெரியும். இப்படித்தான் எதையாவது சொல்வீர்கள் என்று தெரியும். உங்களை முதன்முதலாய்ப் பார்த்த அன்றே எனக்கு உங்களைப் பற்றித் தெரிந்து போனது. ஆள் வளர்ந்த அளவிற்கு இன்னும் குழந்தைத் தனம் மாறவில்லை. இன்னும் சிறுபிள்ளைதான் நீங்கள். என்ன பிரதாப் இது? இது ஏதோ அசம்பாவிதம். இதற்கு நீங்கள் ஏன் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

"உங்கள் கண்ணீரைக் கண்டதும் என்னவோ ஏதோ என்று பதறிப் போனேன் தெரியுமா? இனி இப்படியெல்லாம் அழக்கூடாது. சரியா? அதுசரி. ஹாஸ்பிடலில் என்ன ஆயிற்று? விபத்தில் சிக்கியவர் பிழைத்து விட்டாரா? ஆபத்து ஒன்றும் இல்லையே?" - என்றதும் கொஞ்சம் திணறிப் போனான்.

"அது... அது பரவால்ல அண்ணி. இப்ப அண்ணன் அங்கேதான் இருக்கான். கொஞ்சம் ஹாஸ்பிடல்-பார்மாலிட்டீஸ் எல்லாம் இருக்கு. ஸோ அவன் எப்போ வருவான்னு சொல்ல முடியாது. நீங்க ஒன்னும் தப்பா நினைச்சிக்காதிங்க அண்ணி."

"சேச்சே! ஆபத்துல உள்ளவங்களுக்கு ஹெல்ப் பண்றதைப் போய்த் தப்பா நினைப்பாங்களா. ஆனா உங்க அண்ணன் காலையில இருந்து எதுவுமே சாப்பிடல்ல

பிரதாப். நான் சமைக்கிறேன். நீங்க சாப்பிட்டுட்டுப் போய் அவரை வரச் சொல்றீங்களா?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினான். "அது... அண்ணி! என்னை இங்கே அனுப்பும் போதே அண்ணி ரொம்ப டயர்டா இருப்பா. ஹோட்டல்ல சாப்பாடு வாங்கிட்டுப் போ பிரதாப். அவளைச் சாப்பிட்டுப் படுத்துக்கச் சொல்லு. நான் பேஷண்ட்டைப் பார்த்துட்டு எஸ்டேட்ல போய் மானேஜரைப் பார்த்துப் பேசிட்டு வர லேட்டாகும். பாவம், அவ வெயிட் பண்ணாம தூங்கட்டும். நீயும் அங்கே அவளுக்குத் துணையா இரு. புது இடம் இல்லியா? பயப்படப் போகிறாள்!" என்று சொல்லித்தான் அனுப்பினான். நான்தான் மழை அதிகமாக இருந்ததால் நிற்காமல் வந்துட்டேன். ஸாரி அண்ணி.

"ஒரு டென் மினிட்ஸ் இருங்க. இங்கே பக்கத்தில ஒரு ஹோட்டல் இருக்கு. நான் போய் டிபன் வாங்கிட்டு வர்றேன்," - என்றவாறு எழுந்தான் பிரதாப்.

இப்படிச் சரளமாகப் பொய் பேசுவது மனதை அறுத்தது. மீண்டும் இங்கே இருந்தால் தொடர்ந்து பொய் பேச வேண்டுமோ என அஞ்சியவாறே எழுந்தவனைக் கையசைவால் அமரவைத்தாள் பாரதி.

கண்கள் ஆச்சர்யமாய் மலர, "நிஜமாவா பிரதாப்? இது உண்மைதானா? அவரே சொன்னாரா? என்னால் நம்பவே முடியவில்லையே!" - குரலில் உற்சாகம் பொங்கக் கேட்டவளைப் பார்த்து லேசாய்ச் சிரித்தான்.

"உண்மைதான் அண்ணி. அவரே சொன்னார். வேண்டுமானால் போன் போட்டுத் தருகிறேன். பேசுகிறீர்களா?" - என்றவாறு போனை எடுத்தான்.



"அய்யோ! நான் சந்தேகப்பட்டுக் கேட்கல்ல பிரதாப். சந்தோஷமா இருக்கு பிரதாப். இந்த நிமிஷம் வரை நான் பயந்திட்டேதான் இருந்தேன். ஏன்னா இன்னிக்கு முழுக்க நாங்க ட்ராவல் பண்ணியும் உங்க அண்ணன் ஒரு வார்த்தை கூட எங்கிட்ட பேசவே இல்லை. தெரியுமா? ரொம்ப பயந்து போயிட்டேன். அதான் அப்படிக் கேட்டேன்."

"இதுல பயப்பட என்ன இருக்கு அண்ணி? வேலைன்னு வந்திட்டா அண்ணன் சாப்பாடு, தூக்கம், வீடு எல்லாத்தையுமே மறந்திடுவான். அதிலும் ஒரு உயிருக்கு ஆபத்து என்றதும் அந்தப் பதட்டத்தில் பேசாமல் இருந்திருப்பான். மற்றப்படி அவனுக்கு உங்கள் மீது ப்ரியம் அதிகம் அண்ணி."

"அதைத்தான் நீங்கள் சொல்லும்போதே தெரிந்து கொண்டேனே. இனி எந்தப் பயமும் இல்லாமல் சந்தோஷமாக இருப்பேன். தேங்க் யூ பிரதாப்!" - நன்றியும் சந்தோஷமுமாய்க் கூறியவளைப் பார்க்க இயலாமல் எழுந்தான் பிரதாப்.

"அண்ணி! நீங்கள் வீட்டைப் பூட்டிக் கொள்ளுங்கள். நான் போய் டிபன் வாங்கிட்டு வர்றேன்."

"நோ... நோ... நான் இருக்கும் போது ஏன் வெளியில் வாங்க வேண்டும்? ஒரு பத்து நிமிஷம் இருங்கள். நானே தயாரித்துவிடுவேன். கிச்சன்ல பார்த்தேன். சமையல் பொருள் எல்லாமே இருக்கு பிரதாப். இங்கு சமையலுக்கு ஆள் உண்டா என்ன?"

"ஆமாம் அண்ணி. மேரியம்மான்னு ஒரு பெண்மணி இருக்காங்க. காலையில வந்துட்டு சாயங்காலம் போயிடுவாங்க. அண்ணன் தனியா இருந்ததால சமைச்சு துணிகளைத் துவைச்சுப் போட்டு வீட்டைச் சுத்தமா

வெச்சுப்பாங்க. மேரேஜ்க்காக நாங்க அங்க வந்துட்டதால லீவு கொடுத்து அனுப்பிவிட்டோம்.

"இன்னிக்கு சொல்லி விட்டிருக்கேன். நாளைக்கு மார்லிங் வந்திடுவாங்க அண்ணி. கூடமாட ஹெல்ப் பண்ணின மாதிரியும் இருக்கும். பேச்சுத் துணைக்கும் ஆள் கிடைத்த மாதிரியும் ஆச்சி. இப்ப எதுவும் சாமான் வாங்க வேண்டுமா? சொல்லுங்கள், வாங்கி வருகிறேன்."

"இல்ல பிரதாப். கோதுமை மாவு இருக்கு. சப்பாத்தி போடவா? உங்களுக்குப் பிடிக்குமா?" - ஆர்வமாய்க் கேட்டாள்.

"வீட்டுச் சாப்பாடு எல்லாமே பிடிக்கும் அண்ணி. எது செய்தாலும் ஓ.கே. நானும் ஹெல்ப் பண்ணட்டுமா?"

"ஒரு ஹெல்ப்பும் வேண்டாம். நானே செய்திடுவேன். நீங்க ரெஸ்ட் எடுங்க. ஆமா, சப்பாத்திக்குத் தக்காளி சட்னி வெக்கட்டுமா? சூப்பரா இருக்கும்."

"ஓ.கே. அண்ணி. உங்க கைமணம் எப்படி இருக்குன்னு பார்க்கலாம்!" - என்றான் சிரித்தவாறே.

பாரதி உற்சாகமாய் எழுந்து கிச்சனுக்குள் சென்று விட, 'இன்று சமாளித்துவிட்டோம். இனி மற்ற நாட்கள் எப்படி நகருமோ? ஊருக்குப் போகுமுன் அண்ணனிடம் தெளிவாய் இன்னொரு முறை பேசி விட்டுச் செல்ல வேண்டும். அம்மா ஆரோக்கியமாய் இருந்தால் இங்கு வரச் சொல்லி ஒரு மாதமேனும் தங்கச் சொல்லலாம்.'

யாருக்கு அடங்காவிட்டாலும் அம்மா என்றால் அண்ணன் பணிந்து விடுவான். எதிர்த்து ஒரு வார்த்தையும் பேசமாட்டான். ஆனால் அம்மாவிற்கும் இது தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமே. ஏற்கெனவே பலவீனமான



இதயம். இதில் ஆஸ்துமா வேறு இம்சிக்கிறது. கூடுமான வரை அம்மாவிற்குத் தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தனது சிந்தனையிலேயே உழன்று கொண்டிருந்தவனை செல்போன் சிணுங்கிக் கலைத்தது. டேபிளின் மீது இருந்த போனை எடுத்துப் பார்த்தான். அட! அண்ணன்!

போனைக் காதிற்குக் கொடுத்தான். "சொல்லுண்ணா."

"இப்ப எங்க இருக்கே?"

"வீட்லதாண்ணா இருக்கேன்."

"என்னோட ரூம்ல பீரோவில பணம் இருக்கும். ஒரு பிப்டி தவுஸண்ட் எடுத்துட்டு உடனே ஹாஸ்பிடலுக்கு வா."

பிரதாப் அதிர்ந்தான். "ஐம்பதாயிரமா? எதுக்கு?"

"ஏன், சொன்னாத்தான் எடுத்திட்டு வருவியா?"

"அப்படி இல்லண்ணா! இந்த ராத்திரி நேரத்தில எதுக்குன்னுதான்..."

"ஹாஸ்பிடல் பில் கட்டணும். சீக்கிரம் வா."

"அண்ணா! நான் மார்லிங் மனோகரிடம் இருபதாயிரம் கொடுத்தேனே. அவன் பில் கட்டவில்லையாமா?"

"அது எப்படிப் போதும்? நான் கொண்டு வந்த முப்பதாயிரமே போதாது என்றுதானே உன்னிடம் கொண்டுவரச் சொல்கிறேன்," - என்று வெடித்தான் பிரசாத்.

"இருபது, முப்பது, ஐம்பது... என்ன ஒரு லட்சமா? இரண்டு நாள் மருத்துவச் செலவிற்கு ஒரு லட்சமா?

"அண்ணா! நீ டாக்டரிடம் கேட்டாயா?"

"உன் வேலையைக் காட்ட இது நேரமில்லை. சொன்னதை மட்டும் செய். விஷத்தைக் குடித்த உடன் அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் எல்லாம் கைமாத்தாய்ப் பணம் வாங்கி இந்த ஹாஸ்பிடலில் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறான் மனோகர். அந்தப் பணத்தை எல்லாம் கொடுக்க வேண்டாமா? தேவையில்லாமல் கேள்வி கேட் பதை நிறுத்திவிட்டுப் பணத்தை எடுத்திட்டு வா.

"சாவி கப்போர்டில் இருக்கும். உடனே வா!" - என்றவாறு போனை வைத்துவிட்டான்.

என்ன அநியாயம்? இரண்டு நாட்கள் கூட முழுதாக வில்லை. அதற்கு ஒரு லட்சமா? பணம் பறிக்கும் படலம் ஆரம்பமாகிவிட்டது. இந்த அண்ணனுக்கு ஏன் இது புரியவில்லை. இல்லை, புரிந்தும் வீம்பிற்காகச் செய் கிறானா? இனி இது தொடராது என்று என்ன நிச்சயம்?

"போன்ல யார் பிரதாப்? அப்படியே நின்னுட்டீங்க!" - என்றவாறு மாவு பிசைந்த கையோடு வந்த பாரதி கேட்டாள்.

"ம்? அ... அண்ணன்தான் அண்ணி. ஹாஸ்பிடலுக்கு பீஸ் கட்டணுமாம். பணம் எடுத்திட்டு வரச் சொன்னார். பொதுவாகவே நம்மிடத்தில் வேலை செய்பவர்களுக்குப் பணியிடத்தில் ஏதேனும் விபத்து என்றால் அதற்கான மருத்துவச் செலவை நாம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

"அதுதானே முறை. நீங்கள் பணத்தை எடுத்துட்டுப் போங்க."

"ஓ.கே. அண்ணி!" - என்றவாறு அறைக்குள் நுழைந்து பணத்தை எடுத்துக்கொண்டு உடை மாற்றிவிட்டு கார் சாவியோடு அவன் வந்த போது,



"ஆமாம் பிரதாப்! நான் அப்போதே கேட்க வேண்டு மென்று நினைத்தேன். அடிபட்ட நபர் ஆணா பெண்ணா? எப்படி விபத்து நடந்தது? எஸ்டேட்டில் விபத்து எப்படி நடக்கும்? எனக்குப் புரியவில்லையே!" - என்றாள் பாரதி.

ஒருகணம் உடல் முழுக்க அதிர, பேச்சற்றுப் போனான் பிரதாப். எந்தக் கேள்வியை அவள் கேட்டுவிடக்கூடாது என்று நினைத்துப் பதறிக் கொண்டிருந்தானோ, அந்தக் கேள்வி அவள் வாயிலிருந்து வந்ததும் பதிலின்றித் தவித் தான்.

எப்படிச் சொல்ல முடியும்? இது விபத்தில்லை பெண்ணே! உன் கணவனை விரும்பிய உன் கணவனால் நேசிக்கப்பட்ட ஒரு பெண் உங்கள் திருமணத்தைத் தடுக்க அல்லது ஏற்றுக்கொள்ள முடியாமல் இந்தத் தற்கொலை முடிவை எடுத்து விஷம் குடித்துவிட்டு மருத்துவமனையில் இருக்கிறாள் என்று எப்படிச் சொல்ல முடியும்? இறைவா! மீண்டும் மீண்டும் என்னைப் பொய் உரைக்க வைக் கிறாயே! இது உனக்கே நியாயமா?

"சொல்ல வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள். நீங்கள் கிளம்புங்க." - என்றாள் பாரதி, ஏமாற்றமாய். தன்னைச் சுதாரித்துக் கொண்டவனாய்,

"அப்படியெல்லாம் இல்ல அண்ணி! இங்க தேயிலைத் தோட்டத்தில் அதிகமான மழை பொழியும் போது சில சமயம் மண்சரிவு ஏற்படுவதுண்டு. அப்படி ஒரு சரிவில்தான் ஆணும் பெண்ணுமாய் இருவர் சிக்கிக் கொண்டனர். இருவருமே இப்போது மருத்துவ மனையில்தான் இருக்கின்றனர்."

"கடவுளே!" - நெஞ்சில் கைவைத்துக் கொண்டாள் பாரதி.

"நிலச்சரிவு என்றால்... மண் சரிந்து அவர்களை மூடி விட்டதா? மண்ணிற்குள் சிக்கி... மூச்சுத் திணறி... ஐயோ! பிரதாப், அவர்கள் உயிருக்கு ஆபத்து ஒன்றும் இல்லையே!"

"நீங்கள் பயப்படுவது போல் எதுவும் நடக்கவில்லை அண்ணி. அதற்குள் மற்றத் தொழிலாளர்கள் ஓடிவந்து அவர்களை மீட்டுவிட்டார்களாம். அவர்கள்தான் மருத்துவ மனையில் சேர்த்துவிட்டு நமக்கு போன் செய்தார்கள். நாளை அல்லது மறுநாள் டிஸ்சார்ஜ் செய்து விடுவார்கள் என்று நினைக்கிறேன். பெரிதாகக் காயம் இல்லை!" - என்றதும் தான் நிம்மதியான மூச்சை விட்டாள்.

"சரி பிரதாப். பணத்தைக் கொடுத்துவிட்டுச் சாப்பிட வந்துவிடுங்கள். முடிந்தால் அண்ணனையும் அழைத்து வாருங்கள். வர இயலாது என்றால் ஹோட்டலில் சாப்பிட்டு வரச் சொல்லுங்கள். பட்டினி கிடந்தால் உடம்பிற்கு ஆகாது!" - என்றவளைப் பார்க்க மனம் வலித்தது.

"சரி அண்ணி! அண்ணன் சாப்பிட்ட பிறகே நான் கிளம்பி வருகிறேன். போதுமா? இப்போது நான் கிளம்புகிறேன். கதவைப் பூட்டிக் கொள்ளுங்கள்," - என்றவாறு பிரதாப் வெளியேறிக் காரில் ஏற, அவன் சென்றதும், கேட்டைத் தாழிட்டுவிட்டு, வீட்டினுள் கதவைப் பூட்டிவிட்டுச் சமையலில் ஈடுபட்டாள் பாரதி.

மனம் அதில் ஒன்றவில்லை. இன்று காலையில்தான் நமக்குத் திருமணம் நடந்தது. அப்படியென்றால்... இந்த இரவு என் முதல் இரவு. கணவன் ஓரிடத்தில்... தான் தனியாக வீட்டில்... உற்றார் உறவு யாருமின்றித் தனியாய் இருக்கிறேனே. தனிமை அவளை மிரட்டியது.



இன்று மட்டும்தானே. நாளையே வந்துவிடுவார் எனத் தன்னையே தேற்றிக் கொண்டாள் பாரதி. ஆனால் தொடர்ந்து வந்த இரவுகளும், ஏன் - பகல் பொழுதுமே அவளுக்குத் தனிமையை மட்டுமே தந்தன. தனிமைச் சிறையில் அவளைப் பூட்டின.

## 10

இதம்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதம் திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந்து இழிவுற்றாலும்
விதம் தரு கோடி இன்னல்...

மருத்துவமனையில் பிரசாத்தின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாள் யாமினி. மனோகரின் தங்கை. சின்னஞ்சிறு முகமும் பொன்நிறமும் கார் கூந்தலுமாய் அழகாய்த்தான் இருந்தாள். அந்த அழகை அடிப்படை யாகக் கொண்டுதான் அண்ணனும் தங்கையுமாய்க் கோடீஸ்வர வீட்டுப் பிள்ளை பிரசாத்தைத் தங்கள் கைப்பிடிக்குள் கொண்டு வந்திருந்தனர்.

பிரசாத் தன் தங்கையைக் கட்டிக்கொண்டால் இந்த எஸ்டேட் பங்களா எல்லாமே தன் தங்கைக்குச் சொந்தம் ஆகிவிடும். தங்கைக்குச் சொந்தம் என்றால் அது தனக்கும் தானே என்ற கனவுடன் பகல் இரவாய் வலைபின்னிப் பிரசாத்தைப் பிடித்திருந்தான் மனோகர்.

எஸ்டேட்டில் வேலைசெய்த கார்மேகம் மீது சிவராம னுக்கு அலாதி ப்ரியம். கார்மேகம் மாரடைப்பினால் இறந்துபோய்விட அநாதையாய் நின்ற மனோகருக்கு அடிப்படை வேலைப்பிரிவில் வேலை கொடுத்து அடைக் கலம் தந்தார் சிவராமன்.

ஆனால் மனோகருக்குக் கடினமான உழைப்பு பிடிக்க வில்லை. அழுக்கு லுங்கியும் பனியனுமாய் மூட்டை தூக்கி ஏற்றுவதும் இறக்குவதும் வெறுப்பாக இருந்தது. படிப்பறிவும் அதிகம் இல்லை. அது இருந்தால் மானேஜர், சூபர்வைஸர் என ஏதாவது வேலையைக் கேட்டிருப்பான்.

அதற்கும் வழியின்றிப் போகவே தினமும் பளிச்சென்ற உடையில் அழகிய ராஜகுமாரனாய் விலையுயர்ந்த காரில் வந்து இறங்கும் பிரசாத்தின் மீது அவன் பார்வை விழுந்தது. வாழ்ந்தால் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஆசை தோன்றி நாளுக்கு நாள் அது வளர்ந்து வெறி யாகவே மாறிவிட்டிருந்தது.

பிரசாத்தின் மென்மையான குணமும் தயாள குணமும் அவனை மடக்கச் சுலபமாக இருந்தது. தந்தை வழிப் பாட்டி வீட்டில் இருந்த தன் தங்கையை அழைத்து வந்து வேலை கேட்டுக் கெஞ்சி ஆபீஸில் கணக்கை எழுதி வைக்கும் பணியில் அமரவைத்துவிட்டான்.

தங்கையிடமும் பேசிப் பேசித் தன் வழிக்குக் கொண்டு வந்தான். ஏற்கெனவே பிரசாத்தைக் கண்டநாள் முதல் மையல் கொண்டிருந்த யாமினி அண்ணனின் பேச்சிற்கு மறுப்பில்லாமல் ஒத்துக்கொண்டாள்.

அதன்படி பிரசாத்தை அக்கறையாய்க் கவனித்து இன்பமாய்ப் பேசி ஒட்டி உறவாடிச் சுலபமாய்த் தன் வசப்படுத்திக் கொண்டாள் யாமினி.



பிரசாத்தைப் பொறுத்தவரை யாமினி ஒரு அப்பாவி. அருமையான பெண். அவளைப் போல் ஒரு அழகி கிடையாது. தனக்காகவே வாழ்பவள் என்ற எண்ணம். இவை அனைத்துமாய்ச் சேர்ந்து அவள்தான் உலகம் என்னுமளவிற்கு அவளிடம் ஒன்றிவிட்டான்.

அந்த மயக்கத்தில் அவளது பிறந்தநாள், தீபாவளி, பொங்கல் என எந்த விசேஷம் வந்தாலும் பணத்தை வாரியிறைக்க ஆரம்பித்தான். பட்டும், பொன்னும், அணிகலன்களுமாய் யாமினிக்குக் குவியத் தொடங்க, வருமானக் கணக்கைப் பார்வையிட மாதம் ஒருமுறை ஊட்டிக்கு வரும் சிவராமன் அதிர்ந்து போனார்.

அந்த ஒரு மாதம் மட்டுமே வருமானத்தை விடச் சில லட்சங்கள் செலவு அதிகரித்திருக்க, விஷயம் புரியாமல் மானேஜரைக் குடைந்ததில் அவர் பட்டும் படாமலும் சொல்லி வைத்தார்.

மகனைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார் சிவராமன். அவர் அறைக்குள் இருப்பதை உணராத யாமினி, "ஏங்க! எங்க அண்ணன் அவ்வளவு தூரம் வீட்ல இருந்து நடந்தே வரக் கஷ்டப்படுது. நான் உங்ககூட கார்ல வந்திடுறேன். என் அண்ணன் நம்மகூட வரவும் சங்கோஜப்படுது. அதனால..." - என இழுத்தாள்.

"அதனால என்ன யமினி? உன் அண்ணனுக்கும் கார் வாங்கிக் கொடுத்திடவா? சொல்லு. செய்திடலாம்," - எனக் கொஞ்சிய மகனின் குரலில் தூக்கிவாரிப் போட்டது சிவராமனுக்கு.

மூட்டை தூக்குபவனுக்குக் காரா? இவனுக்கென்ன புத்தி மழுங்கிவிட்டதா?

"சேச்சே! கார் எல்லாம் வேண்டாங்க. அதை நிறுத்த எங்க வீட்ல இடமா இருக்கு! இப்ப ஏதோ பைக் வந்திருக் காமே. அதை ஓட்டணும்னு எங்க அண்ணனுக்கு ரொம்ப ஆசை. ஆனா எங்க சம்பளத்தில வாங்க முடியாதே. நீங்க கொஞ்சம் கடன் கொடுத்தா அண்ணன் பைக் வாங்கிடும். எங்க சம்பளத்தில மாசாமாசம் கொஞ்சம் பிடிச்சிடுங்க. கடன் அடைஞ்சிடும். கடன் தர்றீங்களா...?" - ஏக்கமாய் யாமினி கேட்டதும் உருகிப் போனான் பிரசாத்.

"என்னை அவமானப்படுத்தாதே மினி. வாங்கிக் கொடுடா என்று உரிமையாய்க் கேள் மினி. வாங்கித் தந்துவிடுகிறேன். அந்த உரிமை உனக்கு இருக்கிறது. இனி இப்படிக் கடன் அது, இதென்று கேட்காதே!" - என்றதும், அவனைக் கட்டிக்கொண்டாள் மினி.

மறுநாளே புத்தம்புது பைக்கில் மனோகர் வலம்வர செலவுக் கணக்கில் ஒன்றே கால் லட்சம் ஏறியிருந்தது. இதை இப்படியே விடக்கூடாது என்ற தீவிரத்தில் மகனுக்கு அருமையான பெண்ணைத் தேடத் தொடங்கினார் சிவராமன்.

அந்த நேரத்தில் தான் தஞ்சாவூரில் திருமணத்தின் போது தூரத்து உறவான பெரியசாமியைச் சந்தித்தார். அவரது மூத்த பெண்ணான பாரதியைக் கண்டதும் அவர் மனதில் பெரிய நம்பிக்கை எழுந்தது.

எளிமையாய், கம்பீரமாய், முகத்தில் கூர்மையான அறிவுக் களையோடு அழகு தேவதையாய் இருக்கும் இந்தப் பெண்தான் என் மருமகள். இவளால் மட்டுமே பாதை மாறிப் போன மகன் திருந்துவான் என்ற எண்ணம் தோன்ற, உடனே பெண்கேட்டுத் திருமணத்தையும் ஏற்பாடு செய்தார்.



தஞ்சாவூரில் பெரியப்பாவின் பெண்ணிற்குத் திருமணம். நீயும் வரவேண்டும் என்று பெரியப்பா ரொம்ப ஆசைப்படுகிறார். நீ தம்பியையும் அழைத்துக் கொண்டு உடனே வா என்று போன் பண்ணி மகன்களை வர வழைத்துத் தன் வேலையைக் கச்சிதமாக முடித்துக் கொண்டார் சிவராமன்.

ஆத்திரத்தில் குதித்தவனை அன்னையின் உடல்நிலை அது இதென்று கடைசியில் மகனே இல்லையென்று அறிவித்து விடுவேன் என மிரட்டிப் பணியவைத்தாலும் பிரசாத்தின் மனம் உலைக்களமாகிப் போனதை அவர் அறியவில்லை.

அவரது எண்ணம் தன் மகன் புதுமனைவி வந்ததும் மற்றதை மறந்துவிடுவான் என்று. ஆனால் மகனின் மனம் மனைவி என்ற ஒருத்தியையே வெறுத்து மறந்துவிடும் என்று நினைக்கவில்லை.

இதோ! தன் மடியில் குழந்தையாய்க் கிடக்கும் இவளை மறந்து விடுவேன் என்று அப்பா எப்படி நினைக்கலாம்? எத்தனை கனவுகள் கண்டு இருப்பேன். என் மினியுடன் தான் வாழ்வு என்று சத்தியமே செய் திருந்தேனே.

அனைத்தையும் தன் திருமணத்தன்று வளர்த்த அக்னியில் பொசுக்கிவிட்டாரே அப்பா. அவர் எண்ணம் ஒருபோதும் பலிக்கப் போவதில்லை என்று கொதித்துக் கொண்டிருந்தான் பிரசாத்.

"என்னங்க! உங்களுக்கு எப்படி மனம் வந்தது? என் உயிர் பிரியும் போது கூட உங்களைத்தான் பார்க்க வேண்டும் என்றுதான் அண்ணனை உங்களுக்கு போன் பண்ணச் சொன்னேன். ஆனால் வந்து நின்றது உங்கள்

தம்பி. அவர் பார்வையும் பேச்சும் கொஞ்சமும் சரியில்லை!" - என்றாள் யாமினி.

"ஆமாம் ஸார்! ஏதோ நாங்க வேணும்னே இங்க வந்து படுத்திருக்கிறதா நினைக்கிறார் ஸார். எப்பவும் சந்தேகமாத்தான் பார்க்கிறார். உங்களைப் பார்க்க என் தங்கை துடித்த துடிப்பு எனக்குத்தானே தெரியும். பாவி மக! என்னிடம் கூட ஒரு வார்த்தை சொல்லாமல் விஷம் குடித்து விட்டாளே! கடுமையான விஷமாம் ஸார். டாக்டர் சொன்னார்.

"கூடுதலாய் ஒரு சொட்டுக் குடித்திருந்தாலும் உயிரை விட்டிருப்பாளாம். கேட்டபோது நான் அழுதேவிட்டேன் ஸார். எப்படியோ அவ ஆசைப்பட்டது போல் நீங்க வந்துட்டீங்க. ஸார்... அங்கே எதுவும் நடந்துவிட வில்லையே!" - தயக்கமாய் இழுத்தான் மனோகர்.

அவமானத்தோடு தலையைக் குனிந்து கொண்டான் பிரசாத். "ம்ச். எல்லாமே கைமீறிப் போச்சு மனோகர். நான் அவள் கழுத்தில் தாலி கட்டிய பிறகுதான் எனக்கு இந்த விஷயமே தெரிந்தது. என்னிடம் அதுவரை யாருமே சொல்லவில்லை."

மடியில் படுத்திருந்த யாமினி விருட்டென எழுந்தாள். மனோகர் ஏமாற்றத்தில் நொறுங்கிப் போனான். ச்சே! எத்தனை முயன்றும் கைநழுவிப் போய்விட்டானே என்ற ஆத்திரத்தில் முகம் கன்றிப் போனான். அதற்குள், யாமினி பிரசாத்தின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றினாள்.

"என்ன? என்ன சொன்னீர்கள்? அவள் கழுத்தில் தாலியே கட்டிவிட்டீர்களா? ச்சி! இத்தனை நேரம் இன்னொருத்தியின் கணவன் மடியிலா கிடந்தேன். அண்ணா! அண்ணா! ஏன் என்னைக் காப்பாற்றினாய்?



இதற்காகவா? இவரைப் பிரிந்து வாழ்வதற்காகவா? என்னை ஏமாற்றி விட்டார் அண்ணா! இவர் என்னை ஏமாற்றி விட்டார். இனி ஒரு நிமிஷம் கூட நான் உயிரோடு இருக்கமாட்டேன்." - பிரசாத்தை உதறித் தள்ளிவிட்டு அண்ணனிடம் ஓடினாள் யாமினி.

"மினி! என்னைக் கொல்லாதே மினி. நான் உன்னை ஏமாற்றவில்லை. நான்தான் ஏமாந்து போனேன். எனக்கு நடந்தது திருமணமே இல்லை. வெறும் கண்துடைப்பு நாடகம். என்னை நம்பு மினி." - தவித்தான் பிரசாத்.

"எப்படி ஸார் நம்புறது? வந்த உடனே இதைச் சொன்னீங்களா? நான் கேட்கலன்னா உங்களுக்குக் கல்யாணம் ஆனதையே மறைச்சிருப்பீங்க இல்ல. நானும் என் தங்கையும் எவ்வளவு நம்பினோம் ஸார். ஏமாத்திட்டீங்களே! ஏழைங்க தானேன்னு நினைச்சிட்டீங்க இல்ல ஸார்.

"பணக்காரப் பொண்ணு கிடைச்சதும் என் தங்கை உங்களுக்கு நினைப்பில்லை. இல்லையா ஸார்? கடைசியில் உங்க பணக்காரப் புத்தியைக் காட்டிவிட்டீர்களே ஸார்!" - தங்கையை அணைத்துக் கொண்டே கோபமாய்க் கேட்டான் மனோகர்.

"இல்ல மனோகர். நீ நினைக்கிற மாதிரி அவ பணக் காரியும் இல்ல. அவளைக் கண்டதும் நான் மினியை மறக்கவும் இல்ல. உண்மையைச் சொன்னா அவ முகத்தைக் கூட நான் இன்னும் பார்க்கல்ல."

மெல்லத் திரும்பி அவனைப் பார்த்தாள் யாமினி. "ஆமாம் மினி. நான் சொல்வது சத்தியம். அவளை நான் நிமிர்ந்து கூடப் பார்க்கல்ல. தஞ்சாவூர்ல கல்யாணம்னு

சொல்லி அப்பா சொன்னதை நம்பிப் போனா அவங்க சொந்தக்கார வீட்டுக்குப் போகணும்னு சொல்லித்தான் என்னை அந்த வீட்டுக்கே கூட்டிட்டுப் போனாங்க. நானும் விருந்து வீடு என்றுதான் போனேன். அந்தப் பெண் காபி தரும் போது கூட நான் உன்னிடம் தான் பேசிக் கொண்டு இருந்தேன். அவளைப் பார்க்கவே இல்லை.

"பிறகுதான் இது பெண்பார்க்கும் படலம் என்றே தெரிந்தது. அப்பாவிடம் சண்டை போட்டேன். என் பர்ஸ், கார் சாவி, போன் எல்லாத்தையும் எடுத்து வெச்சிட்டாங்க. ஹோட்டல்லேயே அடைஞ்சி கிடந்தேன்.

"உங்ககிட்ட பேசவும் முடியல்ல. கடைசியா அவ கழுத்தில தாலி கட்ட வேண்டியதாப் போச்சு மினி. ஆனா ஒண்ணு மினி, என் மனசுல நீதான் இருக்க. அதில வேறு யாருக்கும் இடமில்ல. என்னை நம்பு மினி."

"நல்லாயிருக்கு ஸார் நீங்க பேசறது. அப்போ தாலி கட்டின மனைவி அவ. என் தங்கை? இவ யாரு? உங்களுக்கு வைப்பாட்டியா?" - மனோகர் கேட்டதும் காதை மூடிக்கொண்டான் பிரசாத்.

"ச்சீ! இப்படியெல்லாம் அசிங்கமா பேசாதே மனோகர். எனக்கு உடம்பெல்லாம் கூசுது. என்னைப் பொறுத்தவரை மினிதான் என் மனைவி. அதில் எந்த மாற்றமும் இல்லை!" - என்றான் உறுதியாய்.

"இப்படிச் சொன்னா போதுமா?"

"வேறு என்ன செய்ய வேண்டும்? சொல் மனோகர். எதுவாக இருந்தாலும் நான் செய்கிறேன்." - பரிதாபமாய்ச்



சொன்னவனைப் பார்த்துச் சற்று நிதானமாய்ச் சொன்னான் மனோகர்.

"என் தங்கையின் கழுத்தில் நீங்கள் தாலி கட்ட வேண்டும்."

சற்றும் யோசிக்காமல் உடனே தலையசைத்தான் பிரசாத். "சரி. நான் மினியைத் தாலி கட்டி என் மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன். இப்போதாவது என்னை நம்புவாயா மினி?" - மன்றாடலாய்க் கேட்டான்.

"என் அண்ணன்தான் படிக்காதவன். புரியாமல் பேசுகிறான். உங்களுக்குமா புத்தியில்லை?" - கோபமாய்க் கேட்டாள் மினி.

"ஏன்? ஏன் அப்படிக் கேட்கிறாய் மினி?"

"பின்னே! முதல் மனைவி இருக்கும்போது இன்னொரு திருமணம் செய்து கொள்வது சட்டப்படி குற்றம் என்று தெரியாதா? மாட்டினால் எத்தனை ஆண்டு ஜெயில் என்று தெரியாதா? நீங்கள் மட்டுமல்ல, உங்களோடு சேர்ந்து நாங்களும் கம்பி எண்ண வேண்டும்."

"மினி! நீ என்னம்மா சொல்ற?" - பதறினான் மனோகர்.

"ஆமாண்ணா! நமக்கு இதெல்லாம் வேண்டாம். அவர் மனைவியோடு சந்தோஷமாய் வாழட்டும். என்னை விட்டுவிடட்டும். நான் பாட்டி வீட்டிற்கே போய் விடுகிறேன். கடைசிவரை அவர் நினைவோடு வாழ்ந்து விடுகிறேன்..." கண்ணீர்விட்டாள் யாமினி.

அவள் கண்ணீரைக் கண்டதும் உடைந்துபோய் அவளை இழுத்து அணைத்துக்கொண்டான் பிரசாத். "அப்படிச் சொல்லாதே மினி. நீ போய்விட்டால் அடுத்த

கணமே என் உயிர் போய்விடும். உன்னைப் பிரிந்து என்னால் வாழமுடியாது. இப்போது என்ன? நான் தாலி கட்டித்தானே உன்னை மனைவியாக ஏற்க முடியாது. என் மனதளவில் என்றோ மனைவியாகி விட்டாய். கொஞ்ச நாள் பொறுத்துக் கொள் மினி.

"அவளை விரட்டி அடித்துவிட்டு ஊரறிய உன்னை என் மனைவியாக என் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். என்னை நம்பு. என் விரல் நுனிகூட அவள் மீது படாது. உன்னைத் தவிர இன்னொரு பெண்ணை நினைக்கவும் மாட்டேன். தொடவும் மாட்டேன். என்றைக்கிருந்தாலும் நீதான் என் மனைவி. என்னை நம்பு. கூடிய விரைவில் அவளை அனுப்பிவிடுகிறேன்."

"நிஜமாவா? இதெல்லாம் நடக்குமா? நான் உங்கள் மனைவி ஆவேனா?" - குழந்தை போல் கேட்டவளின் நெற்றியில் முத்தமிட்டான்.

"நிச்சயமாய் நடக்கும். அதுவரை எனக்காகப் பொறுத்திரு மினி."

"நீ என்ன அண்ணா சொல்கிறாய்?" - கேட்டவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான் மனோகர்.

"இதில் நான் சொல்ல என்னம்மா இருக்கிறது? அவரில்லாமல் நீ வாழமாட்டாய். அவரும் உன்மேல் உயிரையே வைத்திருக்கிறார். இனி நான் சொல்ல என்ன இருக்கிறது. எப்படியோ நீங்கள் சந்தோஷமாக இருந்தால் போதும். ஸார், எது செய்வதாக இருந்தாலும் சீக்கிரம் செய்யுங்கள். எதையும் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். வளரவிட்டால் ஆபத்து. நாளைக்கே அந்தப் பெண் மீது உங்களுக்கு அன்பு தோன்றிவிட்டால் என் தங்கையின் கதி...?"



"அப்படி ஒரு போதும் நடக்காது மனோகர். நான் ஒன்றும் அப்படி மனம் தடுமாறுபவன் அல்ல!" - என்றான் வைராக்யமாய்.

அது அவர்களுக்கே தெரியாதா? திருமணமான பின்தான் என்று மினி எத்தனையோ முறை நெருங்கி இழையும் போதெல்லாம் நாசூக்காக மறுத்துவிடுவானே. வெறும் உடல் கவர்ச்சியால் விழமாட்டான் என்றுதானே பாசம் நேசம் எல்லாம் கலந்து உறவாடுகிறான்.

அந்த விதத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தபோதும், "அதெப்படி? உங்கள் வீட்டில் இதற்கு அனுமதிப்பார்களா? பெண் வீட்டில் உங்களைச் சும்மா விடுவார்களா?" - எனக் கேட்டாள் மினி.

"என்னைக் கேள்வி கேட்க யாராலும் முடியாது. பெண் வீட்டில் யார் கேட்பது? மூன்று பெண்களை வைத்துக்கொண்டு சோம்பேறியாய் வெட்டி நியாயம் பேசிக் கொண்டு திரிபவன் என்னைக் கேள்வி கேட்பானா? பத்துப் பைசா செலவு பண்ணாமல் நம் பெண்ணைக் கேட்கிறார்களே என்றுகூட யோசிக்காத முட்டாள் என்னை என்ன கேட்பான்? அதைப் பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே மினி. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்."

"ஸார், உங்கள் தம்பி வருகிறார். மெல்லப் பேசுங்கள்." - மனோகர் எச்சரித்ததும் யாமினி விலகிக் கட்டிலில் வந்து ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

அறைக்குள் நுழைந்த பிரதாப் மூவரையும் பார்த்தான். அவர்களின் அமைதி ஏதோ உணர்த்தியது. ஏதோ நடந்திருக்கிறது என்று ஊகித்தவன் அனைவரையும் வெறுப்பாய் நோக்கிவிட்டு, "அண்ணா! உன்னுடன் பேச வேண்டும். வெளியே வா," - என்றான்.

"உன்னிடம் பேச ஒன்றுமில்லை. பணத்தைக் கொடுத்து விட்டு ஊருக்குக் கிளம்பு!" என்றவனை நம்பமுடியாமல் பார்த்தான் பிரதாப்.

## 11

வேண்டும்என விளக்கில் விழும்
சிறுபூச்சிதனை யாவர் விலக்கவல்லார்?
தூண்டும் அருளால் யாம்ஓர் விளக்கை
அவித்தால் அதுதான் சுற்றிச் சுற்றி – மீண்டும்
ஒரு விளக்கில் போய் மாண்டு விழும்!

"என்ன? என்ன அண்ணா சொன்னே?" - அதிர்ச்சியாய்க் கேட்ட பிரதாப்பை ஏறிட்டுப் பார்க்க விரும்பாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான் பிரசாத்.

"தமிழ்ல தானே சொன்னேன். உனக்கு இனிமே இங்கே என்ன வேலை? நீ ஊருக்குக் கிளம்பு!"

"ஏன்? நான் ஏன் போகவேண்டும்? ஓஹோ! நான் இங்கே இருப்பது உங்களுக்குத் தடையா இருக்குமோ. சரி. நான் ஊருக்குப் போறேன். நீ வீட்டுக்குக் கிளம்பு." - என்றான் கறாராய்.

"நான் வீட்டுக்குப் போவேன். போகாமல் இருப்பேன். அதைச் சொல்ல உனக்கு எந்த ரைட்ஸும் இல்லை." - சீறினான் பிரசாத்.



"அதையே தான் நானும் சொல்றேன். இங்குள்ள வீடு நமக்குச் சொந்தமானது. உனக்குச் சொந்தமானது இல்லை. இதை எல்லாருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எனக்கு எப்போது தோன்றுகிறதோ அப்போதெல்லாம் வருவேன் - போவேன். என்னைக் கேட்க யாருக்கும் ரைட்ஸ் கிடையாது. அண்ணன் தம்பியைத் தூண்டிவிட்டு அந்தக் கோபத் தீயில் குளிர்காய நினைக்கும் ஓநாய்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

"மீறி முயற்சித்தால் என் கோபத் தீயில் பொசுங்கிப் போவார்கள். இந்தா, நீ கேட்ட பணம். வீசியெறிந்துவிட்டு வீட்டுக்கு வா. அவரவர் வீட்டிற்குப் போக அவர்களுக்கே தெரியும். வா போகலாம்," - என்றவாறு பிரசாத்தின் கைகளில் பணத்தைத் திணித்தான் பிரதாப்.

முகம் கறுத்துப்போன மனோகர், "பார்த்தீங்களா ஸார்! எப்படியெல்லாம் பேசுறார் உங்க தம்பி. இப்படித் தான் எப்பவும் பேசுறார். நாங்களா உங்களிடம் சண்டை போடச் சொன்னோம்?" - எனத் தொடங்க,

"டேய், அடங்குடா! உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? பெரிய யோக்யன் மாதிரிப் பேசுறியே. உன் சம்பளம் எவ்வளவுடா? அண்ணனை ஏன் பார்க்கிற? கேட்பதற்குப் பதில் சொல்லு. உன் சம்பளம் எவ்வளவு?" - பிரதாப் அதட்டினான்.

"அது... அது எவ்வளவா இருந்தா என்ன ஸார்? எங்க முதலாளி எவ்வளவு வேணா தருவார். அதையேன் நீங்க கேட்கிறீங்க?"

"பார்த்தேனே. உன் முதலாளி தந்ததை எல்லாம் பார்த்தேனே. அதுதான் பைக்கும் நகையும் பட்டுமாய்த்

தருகிறாரே உன் முதலாளி. ச்சீ. நீயெல்லாம் ஒரு மனிதனா? உன் தங்கையை வைத்து வியாபாரம் செய்கிறாயா?"

யாமினி முகத்தை மூடிக்கொண்டு அழ, பிரசாத் ஆக்ரோஷமானான். "டேய்! என்ன சொன்னாய்? என் மினியைப் பார்த்து என்ன சொன்னாய்?" - தம்பியின் சட்டையை எட்டிப் பிடித்தான். சற்றும் பதறாமல் அண்ணனின் கைகளை விலக்கினான் பிரதாப்.

"உண்மையைத்தான் சொல்கிறேன் அண்ணா. மனோகர் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறான். நீதான் புத்தி கெட்டுப்போய் இவர்களின் பின்னே அலைகிறாய். இப்போதும் சொல்கிறேன் அண்ணா. இறைவன் போட்ட முடிச்சை அறுக்க நினைக்காதே.

"குடும்பம் விளங்க வந்த அண்ணியைப் போன்ற குல விளக்கை விட்டுவிட்டு மின்னித் திரியும் மின்மினிப் பூச்சியை நம்பி விளக்கில் விழுந்துவிடாதே. உன் தயாள குணத்தையும் குழந்தை உள்ளத்தையும் தங்களுக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு உன்னைப் புதைகுழியில் தள்ளிவிடுவார்கள். நான் சொல்வதைக் கேள்," - என்றான்.

"அப்பாவும் பிள்ளையும் இப்படியே சொல்லித் திரியுங்கள். அப்படி என்னடா என் மினி மீது உங்களுக்கு வெறுப்பு? பாரடா! இந்தப் பூ முகத்தைப் பார். இந்தப் பூ முகத்தில் என்ன சூழ்ச்சி தெரிகிறது?"

"பூவிற்குள்ளும் நாகம் உண்டு அண்ணா. பத்தடி தள்ளியே நில்."

"ச்சே! உன்னிடம் போய்ப் பேசுகிறேன் பார். முடிவாகச் சொல்கிறேன் பிரதாப். இது என் லைப். அதை எப்படி வாழவேண்டும் என்று எனக்குத் தெரியும். மேரேஜ்



முடிந்ததோடு உங்கள் கடமையும் முடிந்துவிட்டது. இனி நீ போகலாம். உனக்கும் ஊரில் வேலை இருக்குமே!"

கையிலுள்ள செல்போனைக் காட்டினான் பிரதாப். "இது எதற்கு இருக்கிறது? இதிலேயே வேலையை முடித்துக் கொள்வேன். அப்பாவும் அங்குதானே இருக்கிறார்கள். பார்த்துக் கொள்வார்கள். எனக்கு அதைவிட ரொம்ப முக்கியமான வேலை இங்கு இருக்கிறது. அது முடியாமல் போகமாட்டேன். நம்மையே நம்பி வந்த பெண்ணை உன்னைப் போல் பொறுப்பில்லாமல் ஆதரவின்றித் தவிக்க விட்டுவிட்டுப் போகமாட்டேன். உன் மனைவியைக் காண நீ வீட்டுக்கு வா. நான் பிறகு போகிறேன்." - தீர்மானமாய்ச் சொன்னவனைக் கூர்ந்து பார்த்தான் பிரசாத்.

"என் மனைவியிடம் எனக்கு இல்லாத அக்கறை உனக்கு ஏன்? நீ என்ன அவளுக்கு..."

"போதும், நிறுத்து! இதற்கு மேல் ஒரு வார்த்தை பேசினாலும் உன் மரியாதை போய்விடும். அண்ணன் என்றும் பார்க்க மாட்டேன். இந்தச் சாக்கடைப் பன்றிகளோடு சேர்ந்து உனக்கும் புத்தி சாக்கடையாகிப் போயிற்று. என்னையும் உன் போல் நினைத்தாயா? இதற்கு மேலும் இங்கு நின்றால் அது எனக்குத்தான் அசிங்கம். நான் போகிறேன். ஊரை விட்டு அல்ல. சீக்கிரம் வீடு வந்து சேர்," - என்றவாறு விருட்டென வெளியேறினான்.

அவமானத்தில் பிரசாத் முகம் சிவந்து நிற்க, மனோகரின் கண்களில் வெறி தோன்றியது. "எங்களையா சாக்கடைப் பன்றிகள் என்றுவிட்டுப் போகிறாய். உன் குடும்பம் முழுவதையும் சாக்கடையாக்கிக் காட்டுகிறேன். உன்

அண்ணனை வைத்தே உன்னை வெளியேற்றுகிறேன். கட்டிய புது மனைவியையே விரட்டிவிடச் சம்மதித்தவன், அவனையே எதிர்க்கும் உன்னை விரட்டமாட்டானா என்ன? நீ இங்கு இருக்கும்வரை உன் அண்ணனை நெருங்க விட மாட்டாய். அதனால் முதலில் உன்னைத் தான் வெளியேற்ற வேண்டும்.

"நீ வெளியேறினால் தான் உன் அண்ணன் எங்கள் பிடிக்குள் அடங்குவான். அவனை வைத்தே என் தங்கைக்குப் போட்டியாய் வந்திருப்பவளை வெளியேற்றுவது ஒன்றும் பெரிய வேலையில்லை எனக்கு. உனக்கு வைக்கிறேன்டா செக். என்னவோ உலகில் இல்லாத பெண் கிடைத்துவிட்டாள் என்று அண்ணி அண்ணி என்று ஆர்ப்பரிக்கிறாயே. அவளை முதலில் பார்க்க வேண்டும். பிறகு அவளை வைத்தே கூட உன்னை வெளியேற்றி விடுவேன்!" - மனதிற்குள் சூளுரைத்த மனோகரின் தோளைத் தொட்டான் பிரசாத்.

"மனோகர்! அவன் எப்போதுமே இப்படித்தான். கொஞ்சம் முன்கோபி. அவன் பேசுவதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இந்தா, நீ போய்ப் பணத்தை கட்டிட்டு வா. மினியை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம். ஏற்கெனவே ரொம்ப லேட்டாகிப் போச்சு," - என்றவாறு பணத்தை மனோகரின் கையில் கொடுத்தான்.

கற்றையாய்ப் பணத்தைக் கண்டதும் மனோகரின் உள்ளம் கும்மாளமிட்டது. "அவர் பேசிட்டுப் போகட்டும் ஸார். நான் ஒன்றும் அதற்காக வருத்தப்படவில்லை. வந்து... எங்களால உங்களுக்கு ரொம்ப செலவாகிப் போச்சு. அதை எப்படித் திருப்பித் தர்றதுன்னு தான் நான் கவலைப்படுகிறேன்!" - என்றான் பணிவாய்.



"இப்படியெல்லாம் பேசாதே என்று எத்தனை முறை உனக்குச் சொல்வது? என் மினிக்கு நான் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இனி இப்படியெல்லாம் பேசிச் சங்கடப்படுத்தாதே மனோகர். போ. பில்ல செட்டில் பண்ணிட்டு வா."

"இதோ போறேன் ஸார். தங்கச்சியப் பார்த்துக்கங்க!" - என்றவாறு கதவைச் சாத்திவிட்டு வெளியேறினான் மனோகர்.

கட்டிலின் மீது அமர்ந்து இன்னும் அழுதுகொண்டிருந்தாள் மினி. மெல்ல அவளை நெருங்கித் தோளைத் தொட்டான். சட்டென நிமிர்ந்தாள். விழிகள் கலங்கிச் சிவந்திருந்தன.

அவளது விழிகளைத் துடைத்து விட்டான். "ஸாரி மினி. வெரி ஸாரி. அவன் அப்படிப் பேசியிருக்கக்கூடாது. எனக்காக அவனை மன்னித்துவிடு மினி. உண்மையில் என் தம்பி நல்லவன்தான். அவன் அண்ணியை அப்படியே விட்டுவிட்டு வந்துட்டேன் என்றுதான் கொஞ்சம் கடுமையாகப் பேசிவிட்டான். மற்றப்படி உன் மீது கோபம் இருக்காது அவனுக்கு. ப்ளீஸ் மினி. அழாதே!" - பரிவாய் ஒலித்த அவனின் குரலில் உடைந்து போனாள் மினி.

"உங்கள் தம்பி சொன்னதை நம்புகிறீர்களா?"

"எதை?"

"அதுதான்... நாங்கள்... உங்கள் பணத்திற்காக... உங்களை ஏமாற்ற..."

"சேச்சே! அவன் சொன்னால் நம்புவதற்கு நான் என்ன முட்டாளா? எனக்கு உன்னைப் பற்றித் தெரியாதா? இதென்ன கேள்வி மினி?"

"பிரசாத்! நான்... நான் உண்மையாகவே உங்களை விரும்புகிறேன். உங்களைப் பிரிந்து என்னால் வாழ முடியாது என்றுதான் இந்த முடிவை எடுத்தேன். ஆனால் அதிலும் தோற்று விட்டேன். உங்களையும் இழந்து விட்டேன். இதில் எத்தனை அவமானங்கள்! வேண்டாம் பிரசாத். நான் போய்விடுகிறேன். நீங்கள் உங்கள் மனைவியோடு சந்தோஷமாக வாழுங்கள்." - கண்ணீர் மல்கக் கூறியவளை அணைத்துக்கொண்டான்.

"பைத்தியம் மாதிரிப் பேசாதே மினி. நீதான் என் மனைவி. நீ மட்டும் போதும் எனக்கு. வேறு வாழ்க்கை எனக்குத் தேவையில்லை."

பிரசாத்தின் உண்மையான அன்பில் மென்மையான அணைப்பில் தடுமாறிப் போனாள் மினி. நான் செய்வது தவறல்லவா? இத்தனை அன்பு கொண்ட இதயத்தை ஏமாற்றுவது எத்தனை பெரிய பாவம்! அண்ணன் சொன்னதற்காக என்றே இங்கு வந்தபோதும் பிரசாத்தைக் கண்டதும் மனம் அவனை விரும்ப ஆரம்பித்துவிட்டதே.

எட்டாத பொருள் என்று விலகி நின்றவளை மனோகர் தான் நெருங்க வைத்தான். மனோகர் தன் தேவைகளைக் கேட்காமல் தங்கையை விட்டே கேட்க வைக்கும் போதெல்லாம் உடம்பு கூசத்தான் செய்தது. எனினும் சுலபமாய் விடமாட்டானே மனோகர்.

ஆனால் என்ன கேட்டாலும் துளியும் முகம் மாறாமல் உடனே பிரசாத் செய்து கொடுத்ததும் நெஞ்சம் நெருஞ்சி முள்ளாய்க் குத்தத்தான் செய்தது. மனம் தாளாமல், "அண்ணா! போதும் அண்ணா. இனி இப்படி எதையும் கேட்காதே. எனக்குக் கஷ்டமா இருக்கு!" - என்றாலும் விடமாட்டான்.



"ஏம்மா! இதெல்லாம் உன் சொத்தும்மா. உன் சொத்தில் இருந்து எனக்கு வாங்கிக் கொடுக்க ஏன் சங்கடப்படுகிறாய். இன்றில்லாவிட்டாலும் நாளை உனக்குத்தானே சொந்தம். தேவதை மாதிரி என் தங்கையையே நான் அவருக்குக் கொடுக்கப் போகிறேன். உனக்காக அவர் இதைக்கூடச் செய்ய வேண்டாமா? என்ன கொடுத்தாலும் வாங்கிக்கம்மா. தயக்கமே வரக் கூடாது. பொழைக்கத் தெரியாத பெண்ணா இருக்கியே!" - என்றவாறு போய்விடுவான்.

இந்த நிலையில் உறவினர் திருமணம் என்று பிரசாத் வெளியூர் சென்றதும் அவனைக் காணாமல் திண்டாடித் தான் போனாள் யாமினி. அவ்வப்போது போனில் பேசிக்கொண்டாலும் அவனுக்குத் திருமண ஏற்பாடு நடக்கிறது என்றதும் நொந்துவிட்டாள். அவன் இனித் தனக்கில்லை என்ற முடிவுடன் தான் ஊருக்குச் சென்று விட ஆயத்தமானாள்.

ஆனால் மனோகர் விட்டுவிடவில்லை. அவனுடைய கனவு எத்தகைய பெரிது! இந்தச் சொத்துக்காகச் சொந்தத் தங்கையையே பணயமாக வைத்துக்கொண்டு திட்டம் தீட்டியவன் இன்னொருத்தி உள்ளே நுழையவிடுவானா?

"உனக்கு அவர் வேண்டுமா வேண்டாமா? வேண்டா மென்றால் போ. வேண்டுமென்றால் நான் சொல்வதைக் கேள்," - என்றான் தங்கையிடம்.

"வேண்டும் அண்ணா. அவர் எனக்கு வேண்டும். அதற்காகத்தானே நீ சொல்கிறபடி யெல்லாம் நடந்து கொண்டேன். நாளை அவருக்குத் திருமணமாம். இதற்கு மேல் நம்மால் என்ன செய்ய முடியும்?" - எனக் கண்ணீர் விட்டாள் யாமினி.

"முடியும். என்னால் முடியும். நீ மட்டும் நான் சொல்கிறபடி செய். அடுத்த நிமிஷமே அவர் விழுந் தடித்துக்கொண்டு வருவார் பார்!" - என்று சொல்லித் தான் விஷப்பாட்டிலைக் கையில் கொடுத்தான்.

பிரசாத்தும் விழுந்தடித்துக் கொண்டுதான் ஓடி வந்தார். ஆனால் திருமணத்தை முடித்துக் கொண்டல்லவா வந்தார். இனித் தன் நிலை என்ன ஆகும்? இன்று நீ மட்டும் போதும் என்பவர் நாளையே மாறிவிட்டால் என்ன செய்வது? இவரை மறக்கவும் முடியாது. பிரிந்து போய்ப் பழையபடி பாட்டி வீட்டில் காட்டுக்குப் போய்ச் சுள்ளி பொறுக்கிப் பிழைப்பை நடத்த முடியாது.

இந்த ஐந்தாறு மாதங்களில் சொகுசாய் வாழ்ந்து பழகிய உடம்பு வணங்காது. அண்ணனின் திட்டத்தில் முழுதாய் ஈடுபாடு இல்லையென்றபோதும் பிரசாத்தை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க அவள் தயாரில்லை.

வந்தவளை விரட்டி விட்டு உன்னை மனைவியாக்கு வேன் என்று சொல்லி வாய்மூடும் முன் நீ அண்ணியுடன் வாழ்ந்தே ஆகவேண்டும் என்கிறானே இளையவன். இராமாயண லட்சுமணன் போல் எத்தனை ஆத்திரம்! ஆவேசம்!

ம்ஹூம். அவன் இருந்தால் ஆபத்துதான். இனி அண்ணன் சொல்லைக் கேட்டு அதன்படியே நடந்து கொள்ள வேண்டும். நியாய அநியாயங்களைப் பார்த்தால் என் பிரசாத்தை இழக்க வேண்டியது தான். இனி அண்ணன் சொல்தான் மந்திரம்.

யார் வந்தாலும் இவரை விட்டுக் கொடுக்கமாட்டேன். இவர் எனக்குத்தான். எனக்கு மட்டும்தான் என்றவாறு



தன்னை அணைத்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந் தவனை இறுகக் கட்டிக்கொண்டாள் யாமினி.

பில்லைக் கட்டிவிட்டு மீதமுள்ள பணத்தைத் தன் பனியனுக்குள் பத்திரப்படுத்திக் கொண்டு உள்ளே நுழைந்த மனோகர், அவர்களின் நிலை கண்டு புன்னகை பூத்தவாறு மனதில் தோன்றிய நம்பிக்கையோடு வந்த சுவடு தெரியாமல் வெளியேறினான்.

தன் கணவன் இன்னொரு பெண்ணின் அணைப்பில் கட்டுண்டு கிடப்பதை அறியாத பாரதி, கணவனின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள்.

## 12

கண்ணன் மனநிலையைத்
தங்கமே தங்கம் - கண்டுவர
வேணுமடி தங்கமே தங்கம்!

முழுதாய் மூன்று நாட்கள் ஓடிப்போய்விட நான்காம் நாள் காலையில் வந்து நின்ற கணவனைக் கண்டதும் ஆவலாய் ஓடிவந்தாள் பாரதி. ஆண்டுகள் பல பிரிந்து இருந்ததுபோல் அத்தனை தவிப்பு. உடல் முழுக்க இன்ப ஊற்றெடுக்க ஓடிவந்த மனைவியை ஏறெடுத்தும் பாராமல் தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

மனம் முழுதும் என்னவென்று சொல்லமுடியாத உணர்வுகள் அலைக்கழிக்க அவசரமாக அவனுக்குக் காபி எடுத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள் பாரதி. முகச்சவரம் செய்து கொண்டிருந்தவன் தன் முன் இருந்த கண்ணாடியில் அவள் பிம்பம் தெரிந்ததும் பாராதவன் போல் குளியலறைக்குள் நுழைந்து கொண்டான்.

அவன் கழற்றிப் போட்ட உடைகளைத் துவைக்க எடுத்துப் போட்டுவிட்டுக் காபிக் கோப்பையுடன் காத்திருந்தாள். அப்பப்பா... முழுதாய் மூன்று நாட்கள். இவரைக் காணாமல் என்ன அவஸ்தை! அதுதான் வந்து விட்டாரே. இனி என்ன? இன்றுதான் ஆசைதீரப் பேச வேண்டும். ஊருக்குக் கடிதம் போடவேண்டும் என்று சொல்ல வேண்டும்.

இந்த மூன்று நாட்களும் மூன்று யுகமாய்க் கழிந்ததைச் சொல்ல வேண்டும். பிரதாப்பும் இல்லையென்றால் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல்தான் திணறியிருப்பாள். பிரதாப் ஒரு சகோதரனைப் போல் பார்த்துக் கொண்டான். ஒரு நிமிஷம்கூட அவளைச் சோர்ந்து இருக்க விடவில்லை.

ப்ளவர் கார்டனுக்கு அழைத்துப் போய் விதம்விதமான பூந்தொட்டிகள், ரோஜாத் தொட்டிகள் என வாங்கி அவற்றை போர்டிகோவின் முன் அழகாக வரிசையாக வைப்பதற்கும் உதவினான். தேவையான உரங்களையும் வாங்கிக் கொடுத்தான். அனைத்து ரோஜாச் செடிகளும் மொட்டும் மலருமாகக் கண்ணைப் பறித்தன.

அவற்றில் பெரும்பாலும் மஞ்சள் ரோஜாக்கள் தான். அதைப் பார்க்கும் போது செல்லம்மாவின் நினைவு வந்தது. அன்று மஞ்சள் ரோஜாக்களை யாருக்கும் தரமாட்டேன்



என்றாளே. அது எப்படி வந்தது என்று இப்போதல்லவா தெரிகிறது என நினைத்துக்கொண்டு, செடிகளை வைத்துக் கொண்டிருந்த பிரதாப்பிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள்.

"ஏன் பிரதாப்! இதில மஞ்சள் ரோஸ்தான் அதிகமா இருக்கு. நான் இதை செலக்ட் பண்ணலியே. நீங்கதான் எடுத்தீங்களா?"

"ஆமாம் அண்ணி. எனக்கு மஞ்சள் ரோஜா ரொம்பப் பிடிக்கும்."

"ஓ! அப்போ அண்ணிக்கு எங்க வீட்டுக்கு வரும்போது கொண்டு வந்தீங்களே. அதுவும் நீங்கதான் வாங்கினீங்களா?"

"ஆ... ஆமாம் அண்ணி. உங்களுக்குப் பிடிக்கலையா?" - கேட்கும்போதே தடுமாறினான்.

"ம்ஹூம். ஒரு பூக் கூட நாங்க வாங்கவில்லை. மல்லிப்பூதான் வெச்சிகிட்டோம்!" - என்றாள் சிரிப்புப் பொங்க.

"ஓ! ஸாரி அண்ணி. நான் எனக்குப் பிடிச்சதை வாங்கினது தப்புத்தான். உங்களுக்கெல்லாம் புடிக்குமான்னு தெரியல்ல. அதான். அப்போ... அந்தப் பூ எல்லாமே வேஸ்டாப் போச்சா?" - குரல் உள்ளே போயிற்று.

"அதெப்படி வேஸ்டாப் போகும். நான் நாங்கன்னு சொன்னது நானும் சக்தியும். இன்னொருத்தி இருக்காளே, அவ பேரு கூட...."

"செல்லம்..." - என்றான் அவசரமாய்.

"ம். உங்க செல்லமே எல்லா மஞ்சள் ரோஜாக்களையும் வைத்துக் கொண்டாள்."

'உங்க செல்லம்' என்ற வார்த்தையில் கண்களில் மின்னல் தெறிக்க அண்ணியை நோக்கினான்.

"எனக்கு அப்பவே டவுட். செல்லாவுக்குப் பூக்கன்னா ரொம்பப் பிடிக்கும் தான். ஆனா ஒரு முழம் பூ என்றாலும் அதை நான்காய்ப் பிரிக்காமல் ஒருபோதும் அவள் மட்டும் சூடியதில்லை. ஆனால் அன்று... சக்தி வாய்விட்டுக் கேட்டும் தர மறுத்துவிட்டாள். அப்போதே நினைத்தேன். இந்தப் பூவிற்குப் பின்னே ஏதோ ரகசியம் இருக்கிற தென்று. அது இப்போதல்லவா தெரிகிறது!" - என்றதும் அவன் சிரித்த வெட்கச் சிரிப்பை எண்ணி இன்றும் முகம் புன்னகை பூத்தது.

அதன் பிறகு இன்னமும் நன்றாகவே ஒட்டிக் கொண்டான் பிரதாப். இடையிடையே வீட்டு நினைப்பில் அவள் முகம் சோர்ந்துவிட, "கவலைப் படாதீர்கள் அண்ணி. உங்களுக்கு ஒரு செல்போன் வாங்கித் தருகிறேன். அந்த நம்பரை உங்கள் வீட்டிற்குத் தெரியப்படுத்தி விடுவோம். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் பேசிக் கொள் ளட்டும்," - என்று பேசி உற்சாகமூட்டினான்.

வீட்டின் பின்புறச் சரிவில் மெல்லிய வெள்ளி நூலாய் இறங்கும் அருவியைக் காட்டினான். "அண்ணி! இதுதான் நேச்சர் ஷவர். பூத்தூறலாய் நீர் தெறிக்கும். இதில குளிக்க ஆசைப்பட்டா அண்ணனோட வந்து குளிங்க. இது ரொம்பத் தனிமையான இடம். நம் வீட்டிற்குப் பின்புறம் தான் என்றாலும் சுற்றிலும் உயர்ந்த மலைகள் இருப்பதால இங்கு என்ன நடந்தாலும் அடுத்தவர்க்குக் கேட்காது. ஆள் நடமாட்டமும் இருக்காது.

"சும்மா பார்த்து ரசிக்கணும்னா நம்ம மாடிரூம் ஜன்னல் வழியா மணிக் கணக்கா ரசிக்கலாம். அதுவும் மழை



பெய்யும் போது பார்க்க இன்னும் அழகா இருக்கும். அதோ அந்த மலை முகடுமேல மேகம் வந்து உட்கார்ந்து தூறல் போடுறமாதிரி அத்தனை அற்புதமாய் இருக்கும். எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காது அண்ணி. உங்களுக்கு போரடிக்க சான்ஸே இல்லை.

"ரொம்ப போரடிச்சா தெரு முனையிலேயே ஒரு விநாயகர் கோயில் இருக்கு. அங்கே போங்க. பக்கத் திலேயே ஒரு கார்டன் இருக்கு. மலர்க் கண்காட்சி எல்லாம் வைப்பாங்க. போய்ப் பார்த்தா பசிக்கவே செய்யாது. அவ்வளவு அருமையா இருக்கும். ரசிப்புத் தன்மை இருக்கிறவங்களுக்கு ஊட்டி ஒரு சொர்க்கம்!" - அவன் சொல்லி முடித்ததும் கண்கள் கலங்கினான் பாரதி.

செல்லம்மா எத்தனை ஆசையாய்க் கேட்டாள். ஊட்டிக்குக் கூட்டிப்போய்ச் சுத்திக்காட்டுவாயா என்று. முடியாமல் போய்விட்டதே. இந்த விபத்து மட்டும் நேராமல் இருந்திருந்தால் இன்று அம்மா தங்கைகள் அனைவருமே இங்குதான் இருந்திருப்பார்கள். இதோ எனக்கு மட்டும் சுற்றிக்காட்டும் இந்த பிரதாப் உடன் அனைவரும் சேர்ந்து ஊட்டியையே ஒரு புரட்டுப் புரட்டி இருப்பார்கள். இன்று எப்படி இருப்பார்களோ? இனி எப்போது வருவார்களோ? ஏக்கம் கண்ணீராய் வெளியேற, பதறினான் பிரதாப்.

"என்ன ஆச்சு அண்ணி?"

"எங்க வீட்லயே செல்லம்மாவுக்குத்தான் ரசிப்புத் தன்மை அதிகம். ஒரு பூவைப் பார்த்தால் கூட இதழ் இதழாய்ப் பார்த்து ரசிப்பாள். அதுவும் பூந்தோட்டம் என்றால் கேட்கவே வேண்டாம். எங்கள் மாமா சூரிய காந்தி பயிரிடுவார். அது பூத்துவிட்டால் போதும். செல்லா அதைவிட்டு நகரமாட்டாள்.

"அவளுக்குத்தான் ஊட்டிக்கு வர ரொம்ப ஆசை. ஆனால் வரமுடியாமல் போய்விட்டதே!" - பாரதியின் குரலில் ஏக்கமும் வருத்தமும் தொனித்தது.

"ப்பூ! இவ்வளவுதானா அண்ணி? இன்னும் ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளுங்கள் அண்ணி. இந்த ப்ராப்ளம் எல்லாம் சால்வ் ஆகிடும். உடனே வரவழைத்துவிடுவோம். ஒரு வாரம் பத்து நாள் என்ன, ஒரு மாதம் தங்க வைத்து நானே அவர்களைச் சுற்றிக் காட்ட அழைத்துப் போகிறேன்," - என்று பிரதாப் சொன்னதும் பூரித்துப் போனாள் பாரதி.

பிரதாப் தன் மைத்துனனாய்க் கிடைத்தது ஒரு வரம்தான். மூன்று நாட்களாய்க் கணவனைக் காணாது தன் முகம் வாடிச் சோர்ந்ததைக் கண்டதும் விடிவதற்கு முன்பாக எழுந்து, "அண்ணி! நான் போய் அண்ணனை அனுப்பி வைக்கிறேன். அண்ணனுக்கு டிபன் எல்லாம் ரெடி பண்ணி வையுங்கள்," - என்று சொல்லிவிட்டுக் கொட்டும் பனியில் புறப்பட்டுப் போய் இதோ தன் கணவரையும் வரச் செய்துவிட்டாரே. உண்மையில் பிரதாப் இஸ் கிரேட்.

மனதிற்குள்ளே மைத்துனனை மெச்சிக்கொண்டு இருந்தவள் கும்மென்ற சோப் வாசனை நாசியைத் தீண்ட, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அறைக்குள் தன் மனைவி நிற்கிறாள் என்ற உணர்வே இன்றிச் சாதாரணமாய் நிதானமாய் ஆடைகளை மாற்றித் தலையை வாரிவிட்டுக்கொண்டு வெளியே புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தான் பிரசாத். அவசரமாய் அவனருகில் சென்று காபியை நீட்டினாள். அவன் திரும்பியும் பார்க்கவில்லை.



லேசாய்த் தொண்டையைச் செருமிக்கொண்டு, "என்னங்க! காபி கொண்டு வந்திருக்கேன்," - என்றாள் பாரதி.

"நான் காபி சாப்பிடுவதில்லை!" - விட்டேற்றியாய்ப் பதில் வந்தது.

நெற்றியில் லேசாய் அடித்துக்கொண்டாள். அடடா! அன்று பெண்பார்க்க வந்தபோதே சொன்னாரே. எப்படி மறந்தேன். தன்னையே கடிந்தவாறு, "ஸாரிங்க. மறந்திட்டேன். அப்போ டிபன் எடுத்து வெக்கட்டுமா? சூடா இட்லி பண்ணியிருக்கேன்," - என்றாள் ஆவலாய்.

செண்ட் பாட்டிலை எடுத்துத் தன் ஆடைமேல் பீய்ச்சிக்கொண்டே, "நான் அர்ஜெண்டாய் வெளியே போறேன். நைட் வர லேட்டாகும். எனக்காக வெயிட் பண்ண வேண்டாம். எங்கிட்டயும் ஒரு சாவி இருக்கு," - என்றவன் அதற்கு மேல் நில்லாமல் வெளியேறிவிட்டான்.

கையிலிருந்த காபிக் கோப்பையை வைத்துவிட்டு அவசரமாய் அவள் வாசலுக்கு விரைந்தபோது அவனது கார் கேட்டைத் தாண்டிப் போயிருந்தது. வாட்ச்மேன் கேட்டை இழுத்துச் சாத்திக்கொண்டு இருந்தான். ஒரே நொடியில் முகமும் மனமும் வாடிவிடச் சோர்வாய் அப்படியே தரையில் அமர்ந்தாள்.

"என்ன இவர்? புதிதாய்த் திருமணமான கணவர் போலவா நடந்து கொள்கிறார்! என்னதான் வேலை இருக்கட்டுமே! அதற்காக வீட்டில் ஒருவேளை சாப்பிடக் கூடவா நேரம் இருக்காது? மனைவியின் முகம் பார்த்துப் பிரியமாய் ஒரு வார்த்தை பேசக்கூடவா நேரம் இராது! நேரமில்லையா? மனம் இல்லையா?

நினைப்பே பயமுறுத்தியது. ஒருவேளை அப்படியும் இருக்குமோ? பெண் பார்க்க வந்தபோதும் சரி, திருமணத்தின் போதும் சரி. அதன் பிறகு மேற்கொண்ட நீண்ட தூரப் பயணத்தின் போதும் கூடத் தன்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவோ, ஏன் தன்னை ஏறெடுத்தும் பார்க்கவோ இல்லையே.

மனம் ஒப்பித் திருமணம் செய்துகொண்ட ஒரு கணவனால் அப்படி இருக்க முடியுமா? அணைப்பு கொஞ்சல் எதுவும் வேண்டாம். முகம் பார்த்து ஒரு புன்னகை. "ஸாரிம்மா! ரொம்ப வேலை. வரட்டுமா?" என்று ரெண்டு அன்பான வார்த்தை. இதுகூட இல்லை யென்றால்... என்ன அர்த்தம்?

ஒருவேளை அவரது விருப்பம் இல்லாமல் இந்தத் திருமணத்தை நடத்திவிட்டார்களோ? ஏன் எனக்கும்தான் விருப்பம் இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது முழு மனதாய் ஏற்றுக்கொண்டு இவர் பின்னால் வரவில்லையா? இதோ இவர் வரவிற்காக இவரது முகத்தைக் காண்பதற்காக ஏங்கித் தவிக்கவில்லையா? இவருக்கு மட்டும் ஏன் அப்படித் தோன்றவில்லை.

ஒருவேளை... ஒருவேளை இவர் மனதில் யாரேனும் உள்ளனரா? இந்த எண்ணம் தோன்றிய உடன் மனம் பதறியது. கடவுளே! அப்படி எதுவும் இருந்தால்... நான் என்ன செய்வது? அதனால் தான் என்னைக் காணப் பிடிக்காமல் ஒதுங்கிப் போகிறாரா? இனி நான் என்ன செய்யப் போகிறேன்? மனக்கலக்கத்துடன் அமர்ந்திருந் தவளைப் பிரதாப்பின் குரல் வந்து உலுக்கியது.

"அண்ணி! என்ன இப்படி வாசலில் அதுவும் தரையில் அமர்ந்து என்ன யோசனை? பாருங்கள், மீண்டும் மழை



தொடங்கிவிட்டது. தரை குளிரும். எழுந்திருங்கள் அண்ணி."

தடுமாறி எழுந்தாள். பிரதாப்பை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன அண்ணி அப்படிப் பார்க்கிறீங்க. அண்ணன் வந்தாரா? சாப்பாடு கொடுத்தீங்களா? நல்லா சாப் பிட்டாரா? நீங்க சாப்பிட்டீங்களா?"

அவன் முகத்தைக் கூர்மையாய் ஆராய்ந்துகொண்டே, "பிரதாப்! என்னிடம் எதையாவது மறைக்கிறீர்களா? மறைத்தீர்களா?" - எனக் கேட்டாள் பாரதி.

திடுக்குற்றான் பிரதாப். அண்ணன் எதையேனும் உளறிக் கொட்டி விட்டானோ? கடுமையாய் நடந்து கொண்டானோ?

பதறிய உள்ளத்தை மறைத்துக்கொண்டு, "என்ன அண்ணி? ஏன் இப்படிக் கேட்கிறீங்க? நான் ஏன் உங்களிடம் மறைக்க வேண்டும்? எதை மறைக்கிறேன்? எனக்கு எதுவும் புரியவில்லையே!" - என்றான் இயல்பாய்.

மறுப்பாய்த் தலையசைத்தாள் பாரதி. "இல்லை பிரதாப்! எனக்குத் தெரிய வேண்டும். எதுவாக இருந் தாலும் சொல்லிவிடுங்கள். பொய் சொல்லுவது மட்டும் குற்றமல்ல. உண்மையை மறைப்பதும் தவறுதான். சொல்லுங்கள் பிரதாப். எனக்குத் தெரியக்கூடாது என்று எதையாவது மறைக்கிறீர்களா?"

பிரதாப்பின் உள்ளம் தடதடவென அதிர்ந்தது. "நிஜமாகவே எனக்குப் புரியவில்லை அண்ணி! எதைக் கேட்கிறீர்கள்?"

"சரி, நேராகவே கேட்கிறேன். உங்கள் அண்ணன் விருப்பத்தோடுதான் இந்தத் திருமணம் நடந்ததா? என்னை மணக்க உங்கள் அண்ணன் முழுமனதோடு சம்மதித்தாரா?"

பாரதியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் பிரதாப் திணறிக் கொண்டிருந்த போது, "அதிலென்னம்மா உனக்குச் சந்தேகம்? அவன் சம்மதத்தோடுதான் இந்தத் திருமணம் நடந்தது. திடீரென ஏனம்மா இந்தக் கேள்வி?" - என்றவாறு நுழைந்த தந்தையைக் கண்டதும் நிம்மதியாய் மூச்சுவிட்டான் பிரதாப்.

சட்டென முகத்தில் மலர்ச்சியைக் கொண்டுவந்து, "வாங்க மாமா. வாங்க. அத்தைக்கு உடம்பு எப்படி இருக்கு மாமா? அவங்க வரலையா?" - உற்சாகமாய் வரவேற்றாள்.

"அத்தைக்கு உடம்பு கொஞ்சம் பரவால்லம்மா. குளிர் நேரம் என்பதால் மூச்சிரைப்பு குறையவில்லை. வீட்டில்தான் இருக்கிறாள். இங்கு வர அவளுக்கு ஆசைதான். மழைநேரம் என்பதால் அழைத்து வரவில்லை. அது இருக்கட்டும். உன் கணவன் எங்கே? பிரதாப்பிடம் ஏனம்மா அப்படிக் கேட்டாய்?" - என்றார் சிவராமன்.

"அது... அது... சும்மாதான் மாமா கேட்டேன். அவருக்குப் பிடித்தது பிடிக்காதது எல்லாமே பிரதாப்பிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு வீட்டில் இருக்க நேரம் இல்லையே. அதனால்தான்... சும்மா பேசிக் கொண்டிருந்தோம்... இல்ல... பிரதாப்?" - மென்று முழுங்கியவாறே மைத்துனனைத் துணைக்கழைத்தாள்.

"ஆமாம்ப்பா! அண்ணன் எப்போதும் வேலை வேலை என்று பறக்கிறான். அண்ணி தனியாய் என்ன



பண்ணுவார்கள்? அதனால் ஏதாவது பேசிக்கொண்டு இருப்போம். இப்போதுகூட அப்படித்தான்..."

தகப்பனும் மகனும் பார்வையால் பேசிக் கொள்வதைப் பாரதி கவனிக்கத் தவறினாள்.

"நீ ஒருவன் வீட்டில் இருக்கிறாய் என்ற தைரியத்தில் தான் அவன் நேரம் காலம் இல்லாமல் வீட்டுக்கு வருகிறான். நீ இல்லையென்றால் மனைவி தனியாய் இருப்பாளே என்ற தவிப்பில் சீக்கிரமாய் வேலையை முடித்துவிட்டு வீடு வந்துவிடுவான். அதனால் நீ என்னுடன் கிளம்பு..." - என்றார் சிவராமன்.

"அப்பா!" - என்றான் பிரதாப் புரியாமல்.

"ஆமாம்டா! என்ன இருந்தாலும் புதுமணத் தம்பதிகள். இடைஞ்சலை விரும்பமாட்டார்கள். அதிலும் உன் அண்ணனுக்குக் கூச்சம் அதிகம். வளர்ந்த ஆண்பிள்ளை உன்னை வைத்துக்கொண்டு மனைவியிடம் பேசக்கூடத் தயங்குவான். என்னம்மா, நான் சொல்வது சரிதானே?" - மருமகளிடம் கேட்டார்.

பாரதியின் குழப்பம் அனைத்தும் தெளிவடைந்தது. முகம் புன்னகை பூத்தது. ஓ! இதுதான் காரணமா? இதற்காகத்தான் தன்னிடம் பேசக்கூடத் தயங்கினாரா? ஆனால் அன்று காரில் வரும்போதுகூட எதுவும் பேசவில்லையே. ஆம். அன்று எத்தனை பதட்டத்தில் இருந்தார். உயிர் சம்பந்தப்பட்ட விஷயமாயிற்றே.

அந்தச் சூழலில் ஒருவன் மனைவியைக் கொஞ்சுவான் என்று எதிர்பார்த்தது முட்டாள்தனமல்லவா? மற்றப்படி மாமா சொல்லும் காரணம் சரியாகத்தான் இருக்கும்.

வெட்கத்தில் தலை குனிந்துகொண்டு ஆமாம் என்பது போலத் தலையசைத்தான்.

"பார்த்தியா? நான் சொன்னது சரியாய் இருந்ததா? இன்னும் ஏன் நிற்கிறாய்? கிளம்பு. அங்கே அம்மாவைப் பார்த்துக் கொள்ள நான் வீட்டில் இருக்க வேண்டிய திருப்பதால் வெளிவேலைகள் அப்படியே கிடக்கின்றன. நீ வந்தால்தான் அது நடக்கும். அம்மா எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். வா போகலாம்." - அவசரப்படுத்தினார் சிவராமன்.

"இருங்கள் மாமா. என்ன அவசரம்? முதலில் சாப்பிட வாருங்கள் மாமா."

"இல்லம்மா! குன்னூர்ல எம்பிரண்டோட மகளுக்குக் கல்யாணம். அங்கே போயிட்டுத்தான் வர்றேன். சரி, அப்படியே உன்னைப் பார்த்திட்டு இவனையும் அழைச் சிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். இவனும் வேற நினைப்பே இல்லாமல் இங்கேயே இருந்துவிட்டானே."

"நான் இங்கே இருக்க வேறு காரணம் அப்பா," - எனத் தொடங்கிய மகனை, "அதையெல்லாம் காரில் போகும்போது சொல். மழை வலுக்கும் முன் கிளம்ப வேண்டும். வா," - என்றார்.

"இருங்க மாமா. அவர் இன்னும் சாப்பிடவில்லை. பிரதாப். நீங்கள் சாப்பிட வாருங்கள். மாமா! உங்களுக்குக் காபி கொண்டு வரவா?"

"சரிம்மா. அவனைச் சீக்கிரமாய்ச் சாப்பிடச் சொல் லம்மா," - என்றவாறு சோபாவில் அமர்ந்து தனது செல்போனை உயிர்ப்பித்து மூத்த மகனைத் தொடர்பு கொண்டார்.



"ம். அப்பாதான் பேசுறேன். இங்குதான் இருக்கிறேன். வீட்டுக்கு வா. என்ன வேலையாக இருந்தாலும் பிறகு பார்க்கலாம்," - என்றார்.

"என்ன விஷயம், சொல்லுங்கள். நான் எஸ்டேட்டில் நிற்கிறேன். இப்போது வர முடியாது." - அலட்சியமாய்ப் பதில் வந்தது.

"நான் இன்னும் பத்து நிமிடத்தில் கிளம்பிவிடுவேன் பிரசாத். தம்பியும் என்னோடு வருகிறான். புது இடம். பாவம், சின்னப் பெண். தனியாக இருப்பாள். சீக்கிரமாய் வீடு திரும்பு."

"எல்லாம் தெரியும். நீங்கள் கிளம்புங்கள்."

"சொல்வதைப் பொறுமையாய்க் கேளடா. அந்தப் பெண்ணை வெளியில் எங்காவது அழைத்துப் போ. ஊரைச் சுற்றிக்காட்டு. சந்தோஷமா வெச்சுக்க. அவ ஆசைப்பட்டதை வாங்கிக்கொடு."

"உங்க விருப்பம் போலத் தாலி கட்டியாச்சு. இனி எப்படி வாழணுமோ அப்படி வாழ எனக்குத் தெரியும். இந்த மாதிரி போன் பண்ணி அட்வைஸ் பண்ற வேலை வேண்டாம். உங்கள் வேலையை மட்டும் பாருங்கள்." - கடுப்பாய்ப் பேசி விட்டு போனைக் கட் பண்ணிவிட்டான்.

மகனின் வார்த்தைகள் முகத்தில் அறைந்தாற் போல் தோன்ற, தப்புப் பண்ணிவிட்டோமோ என முதன்முறை யாய்ப் பயந்தார் சிவராமன்.

# 13

தீர்த்தக் கரையினிலே - தெற்கு
மூலையில் செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன் - வெண்ணிலாவிலே
பாங்கியோடு என்று சொன்னாய்!

பருவ மழை குறைவில்லாமல் பெய்ததன் பலனாகக் கரும்புகள் அனைத்தும் நல்ல பருமனாகவும் உயரமாகவும் வளர்ந்து அறுவடைக்குத் தயாராக நிற்கின்றன. இன்னும் பத்தே நாளில் பொங்கல் திருநாள். நெற்கதிர்கள் தங்களின் சுமைகளைத் தாங்கமுடியாமல் தலைசாய்த்துக் கிடக்க, கதிர் அறுக்கும் பெண்கள் லாவகமாய்க் கொத்துக் கொத்தாய் அவற்றை அறுத்துக் கட்டாய்ச் சேர்த்தனர்.

தோட்டத்தின் மறுமுனையில் மஞ்சள் கிழங்கு பறித்துக் கொண்டிருக்க, மாமா அவற்றை மொத்தமாய்ச் சேர்த்து கட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்தவாறே வந்தாள் செல்லா.

நடராஜன் வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருக்க அவனைத் தொந்தரவு செய்ய மனமில்லாமல் ஓரமாய் நடந்து இரண்டு ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருந்த சம்பங்கி மலர்ப் பகுதிக்குச் சென்றாள்.

அது அவளுக்கு மிகப்பிடித்த இடம். பூக்களுக்காகவே இந்த இடத்தை ஒதுக்கி இருந்தான் நடராஜன். ஒரு



பருவம் சூரியகாந்திப் பூ பயிரிட்டு விதை எடுத்து எண்ணெய் ஆக்கி விற்றுவிடுவான். மறுமுறை சம்பங்கி பயிரிடுவான். பூக்கள் பூத்து அதன் மணம் ஊரெங்கும் பரவி மணக்கும்.

பூச்சிபொட்டு அடையாமல் போதிய இடைவெளி விட்டு மாமா பயிரிடும் அழகே தனிதான். இந்த முறை சம்பங்கிப் பூக்களுக்கு விலை கிராக்கி என்பதை உணர்ந்து அதைப் பயிரிட்டு இருந்தான்.

ஒல்லியாய் நீண்டு வளர்ந்து தலையில் ஒன்றிரண்டு பூக்களோடு எளிமையாய் நின்ற பூக்களை நிதானமாய் ரசித்து ஆழமாய் மூச்சிழுத்து முகர்ந்தாள். காற்றில் அவை அசைந்தாடிய அழகைக் கண்டு வரப்பில் அமர்ந்து கொண்டாள் செல்லம்மா.

பூக்களில் எல்லாமே அழகுதான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு. வாசனையற்ற காட்டுமலர்கள் கூடக் கொள்ளை அழகுதான். ஏதோ மாமாவின் தோட்டத்திற்கு வருவதற்கு மட்டும் அப்பா அனுமதிக்கிறாரே. இல்லையென்றால் இதைக்கூடப் பார்த்து மகிழமுடியாது. எத்தனை அழகு! அம்மாடியோவ்!

இதுவே இப்படி என்றால் ஆண்டுதோறும் ஊட்டியில் மலர்க் கண்காட்சி நடக்குமாமே. விதம்விதமாய் கலர் கலராய் எத்தனை மலர்கள் இருக்கும்! அதுவும் ரோஜாக்களே நிறைய இருக்கும் என்றாளே ரஞ்சனி. அவள் மாமா வீடு ஊட்டியில் இருப்பதால் ஆண்டுதோறும் கோடை விடுமுறையைக் கழிக்கச் சென்றுவிடுவாள். வந்தபின் ஒரு மாதமாய் அதைப் பார்த்தேன் இதைப் பார்த்தேன் என்று அளப்பாளே.

போனமுறை கூட, "டீ செல்லா! இந்த வாட்டி ஊட்டில ஒரு பூ பார்த்தேன்டி.. அது பேரு விட்டில் பிளவராம். குட்டி குட்டியாய் எத்தனை அழகு தெரியுமா! ஒவ்வொரு இதழும் ஊசி போல ஒல்லியா இருக்கு. வெள்ளை நிறத்தில சொட்டு நீலம் போட்டா எப்படி இருக்கும். அப்படி ஒரு கலர். சூப்பரா இருந்திச்சுப்பா. பொக்கேல கூட இருக்குமே அந்தப்பூதான். தொட்டியில வெச்சிருந்தாங்கப்பா. கொத்துக் கொத்தா பூத்து கண்ணைப் பறிக்குது-

"ரொம்ப ஆசைப்பட்டு அந்தத் தோட்டக்காரர் கிட்டே கேட்டு ஒரே ஒரு சின்னச் செடி வாங்கிட்டு வந்தேன். ம்ச். வாடிப்போச்சு. நம்ம ஊர்ல வளராதாம் அது. ஊட்டி கிளைமேட்லதான் வளருமாம். பணக்காரச் செடி போல!" - என்றாள் வருத்தமாய்.

செல்லம்மாவிற்கு ஏனோ அந்தப் பூவை உடனே பார்க்க வேண்டும் போல் ஆவலாய் இருந்தது. நேரில்தானே பார்க்க முடியாது. ரஞ்சனி சொன்னதை வைத்து ஊசி ஊசியாய் இதழ்கள், வெள்ளை ஊதா நிறம், குட்டியாய் கொத்தாய்ப் பூத்து நிற்கும் பூக்கள் என்று ஒவ்வொன்றாய்க் கற்பனை செய்து அதற்கு வடிவம் கொடுத்துப் பார்த்தாள்.

கற்பனையிலேயே மிக அழகாக இருந்தது அந்தப்பூ. எப்படியும் ஒரு முறையாவது ஊட்டிக்குப் போய் அந்தப் பூவைப் பார்த்துவிட வேண்டும் என்று ஆசை கொண்டது மனம்.

அன்று அந்த பிரதாப் வந்து அத்தனை உரிமையாய் உறுதியாய்ச் சொன்னானே. எப்படியும் ஊட்டியைப் பார்த்து விடலாம் என்று எத்தனை ஆனந்தமாய் எதிர் பார்த்தாள்.



அத்தனையும் கானல் நீராகிவிட்டது. ஊட்டியைக் கூடப் பார்க்க இப்போதெல்லாம் ஆசை வருவதில்லை. அக்காவைப் பார்க்க வேண்டும் என்றுதான் ஆசை வருகிறது. ஒன்றாய் வளர்ந்த இரட்டையர்களில் ஒன்றைப் பிரித்தால் எப்படி இருக்குமோ அத்தனை துன்பமாய் உணர்ந்தாள் செல்லம்மா.

தங்களது உறவு அக்காள் - தங்கை உறவல்ல. அதையும் தாண்டி நட்பு ரீதியானது. அவர்களுக்குள் ஒளிவு மறைவு என்பதே கிடையாது. வீட்டில் வெளியில் கல்லூரியில் என எது நடந்தாலும் ஒரு துளியும் கூடாமல் குறையாமல் இருவரும் பகிர்ந்து கொள்வதுண்டு.

இருவருக்கும் இடையே ஒரு வயதே வித்தியாசம் என்பதால் பேசிப் பழகவும் தடையோ தயக்கமோ கிடையாது. சக்தி நான்கு வருடம் கழித்துப் பிறந்ததால் அவளைச் சிறுகுழந்தை லிஸ்டில் விட்டுவிட்டு இவர்கள் இருவருமாய்க் கதை அளக்க, சில சமயம் சக்தி அழுவதுண்டு.

பிறகு கொஞ்சம் வளர்ந்தவுடன் படிப்பில் ஆர்வமாய் சக்தி இறங்கிவிட அக்காள் தங்கை பேச்சுக்கு இடையூறாய் வரவேமாட்டாள். அப்படி வளர்ந்த நெருக்கம். இன்று அக்கா இல்லாமல் வீட்டையே வெறுத்தாள் செல்லம்மா.

திருமணமாகிச் சென்ற மகளிடம் இருந்து ஒரு மாதம் கடந்த பின்னும் ஒரு தபால் கூட வரவில்லையே என்ற கவலையில் அம்மா இளைத்துக் கொண்டே வந்தாள். தாயைப் பார்க்கும் போது இன்னும் வேதனை கூடியது.

இந்த அக்காவும் இப்படியா மாறிப் போவாள்? என்னதான் புதிதாய்த் திருமணம் ஆனவள் என்றாலும் புதிய ஊருக்குச் சென்றிருந்தாலும் பிறந்த வீட்டை அப்படியே மறந்துவிட முடியுமா? பெற்ற அன்னையின்

நினைப்பு கூடவா வராது? ஒரே ஒரு கடிதம் போடக் கூட நேரமில்லாமல் போய்விட்டதா?

போன் நம்பர் எதுவும் தந்திருந்தால் கூடக் கடையில் இருந்து போட்டுப் பேசலாம். அதையும் தரவில்லை. ஒரு நொடி கூட விடாமல் பேசிக் கொண்டிருந்தாரே மாப்பிள்ளை. அந்த போன் நம்பரைத் தந்து விட்டுப் போனால் என்னவாம்?

மாப்பிள்ளைதான் சிடுசிடுத்துக் கொண்டிருந்தார். அவர் தம்பி தேனாய்ப் பேசினானே. அவனும்தான் போன் வைத்திருந்தான். அவனாவது நம்பர் தந்தானா? பேச்சில் மட்டும் ஒரு குறையில்லை.

வானத்தை வளைத்து விடுவேன் பூமியைப் புரட்டி விடுவேன் எனப் பேச்சு மட்டும்தான். திருமணத்திற்குக் கூட இருக்காமல் ஓடிப்போனானே. ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போனானா? இல்லை. அதன்பிறகுதான் வந்து எட்டிப்பார்த்தானா?

பெரிதாய்ப் பேசினானே. ஊர் முழுக்கச் சுற்றிக் கொண்டே இருப்பேன். இனித் தஞ்சாவூரையும் சேர்த்துக் கொள்கிறேன் என்று? இப்போது வழி மறந்துபோய் விட்டதோ? இதில் சக்தியை கலெக்டராக்குவாராம். பாவம், அந்தக் குழந்தை அவன் பேச்சை நம்பி விழுந்து விழுந்து இரவெல்லாம் கண்விழித்துப் படித்துக் கொண்டிருக்கிறாள். மனதில் எத்தனை ஆசைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறாளோ?

"நீயும் படிக்கிறாயா செல்வம்?" என்றானே. இப்போது அந்தப் பேர் கூட நினைவில் இருக்காது!" என்று எண்ணும்போதே மனம் பாரமாயிற்று.



"சண்டாளப்பாவி! இரண்டு மூன்று முறை பார்த்துப் பேசிவிட்டு இப்படி என்னைப் பைத்தியக்காரி போல் புலம்பவிட்டுப் போய்விட்டானே. சுற்றிலும் இத்தனை மலர்கள் இருந்தும் மனம் அதில் லயிக்காமல் அவனைத் தானே சுற்றி வருகிறது. வரட்டும். என்றாவது என் கையில் சிக்காமலா போய்விடுவான்?"

"என்ன செல்லா வந்து ரொம்ப நேரமாச்சா? என்னம்மா? எதுவும் அவசரமா?. தோட்டத்திற்கே வந்திட்டே!" - என்றவாறு வந்தான் நடராஜன். உடம்பு முழுக்க வியர்வை ஆறாய்ப் பெருகி ஓட, வரப்பில் ஓடிய பம்ப் செட் நீரில் கைகால்களைக் கழுவித் தலையில் கட்டியிருந்த டவலை எடுத்துத் துடைத்துக் கொண்டான்.

"என்ன செல்வா? ஒண்ணுமே பேசாம இருக்கே. என்ன? அப்பா எதுவும் சண்டை போட்டாங்களா? அம்மா எப்படி இருக்கா?" - என்றவாறு சற்றுத் தள்ளி அமர்ந்து கொண்டான்.

மாமாவைப் பார்த்த செல்லம்மாவிற்கு மனம் பாரமாகிப் போனது. முள் முள்ளாய்த் தாடி முளைத்திருக்க, பராமரிப்பின்றித் தலைமுடி காடாய் வளர்ந்திருந்தது. கன்னம் வற்றிப் போயிருந்தது. முகத்தில் எப்போதும் குடி கொண்டிருக்கும் புன்னகை மறைந்து போய்க் கண்களில் வெறுமை குடிகொண்டிருந்தது.

"ஏன் மாமா இப்படி உன்னையே நீ வருத்திக்கிற. உன்னைப் பார்க்கவே கஷ்டமா இருக்கு மாமா. நீ வீட்டுக்கு வரலைன்னு அம்மா ரொம்ப கவலைப் படுறாங்க!" - என்றாள் செல்வம்மா.

லட்சுமி, நடராஜனின் அம்மாவை அப்படி உரித்துக் கொண்டு செல்லம்மா பிறந்ததாகவே எண்ணினார்கள்.

பாட்டியின் பழைய புகைப்படம் இன்றைய செல்லம் மாவின் படம் போலவே இருக்கும். அத்தனை உருவ ஒற்றுமை. அதனாலேயே, 'எங்க அம்மா இன்னும் சாகல்ல. உன் உருவத்தில வாழ்ந்திட்டுத்தான் இருக்கா!' என்று நடராஜன் அடிக்கடி சொல்ல, அந்த உரிமையைக் கையில் எடுத்துக் கொண்ட செல்லம்மா நடராஜனை வா போ என்றே அழைப்பாள்.

முதலில் திட்டிய லட்சுமியிடம், "வேணாங்க்கா. திட்டாதே. நம்ம அம்மா கூப்பிடுறதா நினைச்சுக்கிறேன்!" - என்று நடராஜன் சொல்லிவிட, அதுவே வழக்கமாகியும் விட்டது.

"இன்னிக்காவது வீட்டுக்கு வா மாமா. அம்மா மொச்சைக் கொட்டை மாங்காய் எல்லாம் போட்டுக் கருவாட்டுச் குழம்பு வெச்சிருக்காங்க. உனக்கு ரொம்பப் பிடிக்குமே. வர்றியா வீட்டுக்குப் போவோம்." - செல்லம்மா ஆசையாய் அழைக்க, பெருமூச்சு விட்டான் நடராஜன்.

"அதெல்லாம் அப்போம்மா. இப்பல்லாம் எதுவும் புடிக்கிறதில்ல. சரி. அதைவிடு. கண்ணம்மா கடுதாசி போட்டதா? மாப்பிள்ளை நல்லா வெச்சிருக்காராமா? சந்தோஷமா வாழுதாமா?" - கண்களில் ஆர்வம் மின்னக் கேட்டான்.

"ம்ப்ச். இல்ல மாமா. இன்னும் லட்டர் வரல்ல"

"என்ன? வரலியா? ஒரு மாசம் தாண்டிப்போச்சே. இன்னுமா கடுதாசி வரல்ல. கண்ணம்மாவுக்கு உடம்பு ஏனோ சரியில்லையா. ஐயோ! அம்மா அப்பா யாராவது போய்ப் பார்த்துட்டு வந்தா என்ன?" - பதறினான்.



"அது விஷயமாத்தான் உன்னைப் பார்க்க வந்தேன் மாமா! அக்காவுக்கு இது தலைப்பொங்கல் இல்லையா? நாம சீர் கொடுக்கணுமே!"

"அட ஆமாம். பொங்கல் சீர் கொண்டு போகணுமே. ஆனா அது அவ்ளோ தூரத்துக்குப் போகணுமே. அம்மா அப்பா எப்படிப் போவாங்க?"

"அட போ மாமா. அப்பா எதை வெச்சுக் கொடுப் பாராம். அம்மா கேட்டதுக்கு வீட்ல ஒரே சண்டைதான். அதான் உன்னைப் பார்க்க வந்தேன். மாமா, நீ எங்களுக்குப் பொங்கல் ட்ரெஸ் எடுத்துத் தருவியே. இந்த முறை ட்ரெஸ் எடுக்க வேண்டாம். அந்தப் பணத்தை வெச்சி அக்காவுக்குச் சீர் செய்திடலாம். என்ன சொல்றே?" - என்றாள் ஆர்வமாய்.

நடராஜனின் முகம் வாடிப்போனது. "ஏம்மா! வருஷத்துல ஒருமுறை எடுக்கிற துணிமணி. அதையும் வேண்டாம்றியே!"

"அதைவிட அக்காவுக்குச் சீர் செய்யிறது முக்கிய மில்லையா மாமா?"

"முக்கியம் தாம்மா. அதை விடுவேனா? இந்த வருஷம் நல்ல விளைச்சல்மா. கண்ணம்மாவோட படிப்புச் செலவும் இப்ப இல்லையே. கரும்பும் நல்ல விலை போகுது. எப்படியும் நல்ல வருமானம் வரும். நீ ஒண்ணும் கவலைப் படாதே. இந்த வருஷம் பொங்கல் சீரைச் சிறப்பா செய்ய நான் இருக்கேன்.

"உங்க எல்லாருக்கும் துணிமணியும் எடுத்திடலாம். கண்ணம்மாவுக்கு நல்லதா ஒரு பட்டுச் சேலை எடுத்திட லாம். ஒரு வாரம் பொறுத்துக்கோ. அதற்குள்ள எல்லா

அறுவடையும் முடிஞ்சிடும். உடனே காசைத் தந்திடுறேன், அப்பாவைக் கொண்டு போய்ச் சீர் செய்துட்டு வரச் சொல்," - என்றான்.

"நாசமாப் போச்சு போ. ஏன் மாமா அப்பா கையில காசைக் கொடுக்கிறதுக்கு அந்தப் பணத்தைத் தூக்கி இந்தக் கிணத்துல போட்டுடலாமே. என்ன மாமா நீ. அப்பாவைப் பத்தித் தெரிஞ்சும் இப்படிப் பண்ற. பாரு மாமா. அப்பாவை அனுப்ப வேண்டாம். அம்மாவும் போக முடியாது. பேசாமல் பெண்வீட்டுச் சார்பாய் நீ போய்க் கொடுத்திட்டு வந்திடு மாமா!"

நடராஜன் துல்லியமாய் அதிர்ந்தான் "நா... நானா?"

"ஆமாம் மாமா. எங்களுக்கும் உன்னைவிட்டா யார் இருக்கா? நீ போய் அக்காவைப் பார்த்திட்டு வா மாமா."

"அதெப்படி நான் போவது? ஏற்கெனவே உன் அப்பாவிற்கு என்னைப் பிடிக்கவில்லை. தப்புத் தப்பாய்ப் பேசுகிறார். இதில் இப்போது நான் போனால் அதற்கும் ஏதேனும் தப்பாய்ப் புரிந்துகொண்டு தூற்றுவார். வேண்டாம் செல்லம்மா. பிரச்சனையை விலை கொடுத்து வாங்க வேண்டுமா?"

"ஏன் மாமா, அப்பா பேச்சு என்றுதான் நன்றாய் இருந்தது. அது என்றுமே மாறப் போவதில்லை. நீ கண்ணம்மாவை எண்ணிப்பார் மாமா. ஒரு மாதமாய் நம்மைக் காணாமல் நம்மைத் தொடர்பு கொள்ள முடியாமல் எப்படித் தவித்துக் கொண்டிருப்பாள்! அவளைப் பார்க்கப் போக வேண்டாமா? சீர் செய்யாமல் விட்டால் மாப்பிள்ளை வீட்டில் அவளை மதிப்பார்களா?"

நடராஜனின் மனம் இரங்கியது. உண்மைதான். பெண்ணை மட்டும் கொடுத்தால் போதும் என்று அவர்கள்



கேட்டார்கள்தான். அதற்காக அவளை அப்படியே விட்டுவிடலாமா? செய்ய வேண்டிய முறைகளைக் குறை வின்றிச் செய்தால்தானே புகுந்தவீட்டில் அவளுக்கு மதிப்பு இருக்கும். அப்படியே விட்டால் தலைமுழுகிவிட்டார்கள் உன்னை என்று ஏளனம் செய்யமாட்டார்களா? கூடாது. என் கண்ணம்மாவை யாரும் ஒரு குறை கூறிவிடக் கூடாது. அதை என்னால் அனுமதிக்க முடியாது. மாமா என்ன வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகட்டுமே. கொட்டுவது அவரது இயல்பு. அதற்காக என் கடமையைச் செய்யாமல் விடலாமா? ஒரு முடிவுடன்,

"சரிம்மா, பொங்கலுக்கு இன்னும் பத்துநாள் இருக்கு. எனக்கு இன்னும் நாலு நாளைக்கு வேலை இருக்கு. எங்கயும் அசைய முடியாது. அம்மாகிட்ட சொல்லு. வேலை முடிஞ்சதும் பணம் கைக்கு வந்திடும். வந்தவுடனே நம்ம கதிர் இப்ப புதுசா ஒரு குட்டி யானை வாங்கியிருக்கான். அதிலயே கரும்பு பண்ட பாத்திரம் எல்லாம் ஏத்திட்டுப் போய்க் கொடுத்திட்டு வந்திடுறேன். அம்மாவைக் கவலைப்படாம இருக்கச் சொல்லு.

"ம். அப்புறம். கணேசன் ஒரு பழைய செல்போன் விக்கப் போறதா சொன்னான். ரெண்டாயிரம் ரூபாயாம். நீங்க கண்ணம்மா கூட பேசலாம்ங்கன்னு வாங்கினேன்."

துள்ளிவிட்டாள் செல்லம்மா. "என்ன மாமா நீ! எவ்ளோ பெரிய விசயத்தை இவ்ளோ மெதுவாகச் சொல்றியே. போனை எங்கே, சீக்கிரம் கொடு. நான் பார்க்கணும்."

"பொறும்மா. ஏதோ பேட்டரி மாத்தணுமாம். மாத்திட்டுக் கொண்டு வந்து தர்றேன்னான். அவன் வந்தான்னா வீட்டுக்குத் தந்து அனுப்புறேன். சரியா?"

"ஹைய்யோ! தேங்க்ஸ் மாமா. ரொம்ப தேங்க்ஸ். இனி அக்காவோட தினமும் பேசலாம். என் செல்ல மாமா. ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் மாமா!" - சந்தோஷ மிகுதியில் மாமாவின் கன்னத்தைக் கிள்ளினாள்.

"சரிம்மா, நீ போ. அம்மாகிட்ட சொல்லு. போனுக்கு காசு போட்டுத் தர்றேன். கண்ணம்மாவோட பேசச் சொல்லு. மாமாகிட்ட மாப்பிள்ளையோட போன் நம்பர் இருக்கான்னு கேளு. எப்படியும் இருக்கும். அப்படியே இல்லாட்டியும் நான்தான் சீர் கொண்டு போறேனில்ல. அப்போ கண்ணம்மாகிட்டயே போன் நம்பர் வாங்கிட்டு வர்றேன்." - என்றான் நடராஜன்.

"ஆமா மாமா. அதுதான் சரி. அப்பாகிட்ட நம்பர் எதுவுமே இல்ல. அவரும் அக்கா வட்டரைத்தான் எதிர் பார்த்திட்டு இருக்கார். அக்காகிட்டதான் நம்பர் வாங் கணும். சரி, மாமா நான் வரட்டுமா"

"சரிம்மா. எனக்கும் வேலை இருக்கு. கரும்பு மஞ்சள் கிழங்கையெல்லாம் மார்க்கெட்டுக்கு அனுப்பணும். இப்ப வண்டி வந்திடும். பூ வேணும்னா பறிச்சிட்டுப் போ செல்லா. உனக்கு இந்தப்பூ ரொம்பப் பிடிக்கும். எவ்ளோ வேணுமோ பறிச்சிட்டுப் போ. சக்தி எப்படி இருக்கா? கரும்பு கேட்பாளே. நாலு கரும்பை வெட்டித் தர்றேன். கொண்டு போ," - என்றவாறு எழுந்தான்.

அவனையே இமைக்காமல் பார்த்தாள் செல்லம்மா. "ஏன் மாமா! எல்லாருக்கும் எது பிடிக்கும்னு தெரிஞ்சுக் கிட்டு பார்த்துப் பார்த்துச் செய்யிறியே. உனக்குன்னு பிடிச்ச ஒரே உறவை எங்களால தரமுடியலையே. உனக்கு எங்க மேலே கோபமே வரலையா மாமா? எங்களைப் பார்த்தா உனக்கு வெறுக்கத் தோணலையா?" - லேசாய்க் கண்கள் கலங்கக் கேட்டவளிடம் அவசரமாய் மறுத்தான் நடராஜன்.



"சேச்சே! என்ன கேள்வி செல்லா இது. நீ என் தாய்ன்னா, சக்தி என்னோட குழந்தை. உங்க அம்மா என்னோட சாமி. உங்களை எப்படி என்னால வெறுக் கவோ கோபப்படவோ முடியும்?"

"அப்போ கண்ணம்மா! கண்ணம்மா உனக்கு யாரு மாமா?"

ஒரு கணம் பேச்சற்று நின்றான். கண்கள் கலங்க, "கண்ணம்மா என் உயிர்!" - என்றான் அமைதியாய்.

"நீ அப்பாகிட்ட தைர்யமாய்க் கேட்டிருக்க வேண்டும் மாமா. ஐயோ! நான் கூடப் புரிந்துகொள்ளாமல் போய் விட்டேனே. அக்காவை உனக்குப் பிடிக்கும் என்று தெரியும் மாமா. ஆனால்... இப்படி உயிராய் நினைப்பாய் என்று தெரியாமல் போய்விட்டேனே. வார்த்தைக்கு வார்த்தை என்னை உன் அம்மா என்பாயே மாமா. பிள்ளையின் மனதை அறியாத பாவி ஆகிவிட்டேனே. என்னை மன்னித்து விடு மாமா. உன் மனம் எத்தனை வலிக்கும் என்று எனக்குத் தெரிகிறது மாமா. இனி நான் என்ன செய்ய முடியும்?" - முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள் செல்லம்மா.

"வேண்டாம்மா. நீ அழாதே. நீ அழக்கூடாது. எனக்கு எந்த வருத்தமும் இல்லை. நான் சந்தோஷமாகத்தான் இருக்கேன்."

"பொய் சொல்லாத மாமா. உன் மனதை உன் கண்ணீரே சொல்கிறதே!"

"இல்ல செல்வா. இந்தக் கண்ணீர் நீ நினைப்பது போல் ஏமாற்றத்தால் வலியால் வந்த கண்ணீர் இல்லை. என் கண்ணம்மாவின் மனதைப் புரிந்துகொள்ளாமல் தேவையற்ற ஆசைகளை வளர்த்துக் கொண்டேனே. அந்தத் தவறுக்கான தண்டனைதான் இது.

"என்னை இன்னொரு தந்தையாக நினைத்த பெண்ணை நான் எப்படி மணக்க நினைத்தேன்? அது எத்தனை பெரிய பாவம்! நல்லவேளையாக வாய்விட்டு எதையும் நான் சொல்லவில்லை. சொல்லியிருந்தால்..." - கண்களை இறுக மூடிப் பெருமூச்சை வெளியேற்றினான்.

"கண்ணம்மா வாயால் எப்போ அந்த வார்த்தையைக் கேட்டேனோ அப்பவே அவள் என் மகளாகிவிட்டாள். ஒரு தந்தையாய் நான் நம் குடும்பத்திற்கு உழைக்கிறேன். உங்கள் விருப்பத்தைப் புரிந்து உதவி செய்கிறேன்.

"இதை நீ வேறு எதனுடனும் ஒப்பிட்டுப் பார்த்து வருத்தப்படாதே. நான் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் உழைக்கிறேன் செல்வா. இனி இதுதான் என் உலகம். இதில் ஓய்வெடுக்க நேரம் கிடையாது. சோர்ந்து அமரப் பொழுது இருக்காது. உழைப்பு மட்டும்தான் என் மூச்சு. நீ வீட்டுக்குப் போ!" - என்றவாறு வரப்பில் இறங்கிக் கரும்புத் தோட்டத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கண்ணைவிட்டு மறையும் வரை பார்த்துக்கொண்டே நின்றாள். 'மாமா எத்தனை நல்லவர். இவர் வாழ்க்கை இப்படியே முடிந்துவிடுமா? விடக்கூடாது. இவருக்கு ஏற்ற பெண்ணாய்ப் பார்த்து மணமுடித்து வைக்க வேண்டும். திருமண வயதைக் கடந்துவிட்ட மாமாவை இனியும் இப்படியே விட்டால் வயோதிகராகிவிடுவார். அதற்குள் ஏதாவது செய்ய வேண்டும்.'



மௌனமாய் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அழகாய்ப் பூத்துச் சிரித்த மலர்களைப் பறிக்க மனம் வரவில்லை. ஏனோ பிர்தாப்பின் முகம் நினைவிற்கு வந்தது. சில நாட்களே பார்த்துப் பழகிய ஒருவனையே நம்மால் மறக்க முடியவில்லையே. அதுவும் அவனிடம் பேசியது ஒரே ஒருநாள் மட்டுமே.

அந்த நினைவே ஆட்டிப் படைக்கிறது. எங்கு திரும்பினாலும் அவன் முகம்தான் தெரிகிறது. ஆனால் மாமா... விபரம் தெரிந்த நாள் முதல் அவர் உச்சரித்த ஒரே பெயர் கண்ணம்மாதான். அவள் மட்டும்தான் அவர் உலகம். அவர் வாழ்க்கை.

இன்று அவளை முழுதாய் இன்னொருவன் கையில் கொடுத்துவிட்டு இன்று தனக்கு என்று எதுவுமே இல்லாமல் தனிக்கிறாரே. அவரது மனம் என்ன பாடுபடும். அவர் இன்னொரு பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொள்வாரா? சந்தேகம்தான். ஆனால்... அதற்காக அவரை அப்படியே விட்டுவிட முடியுமா?

கொஞ்ச நாள் போகட்டும். மெல்ல மெல்லப் பேசி மாமாவின் மனதை மாற்றிவிட வேண்டும். மனதிற்குள் தீர்மானித்துக்கொண்டே நடையை எட்டிப் போட்டு வீட்டை அடைந்தவள் உள்ளே கேட்ட உற்சாகக் குரலில் தயங்கி நின்றாள். அந்தக் குரல் யாருடையது என்பதைக் கண்டுகொண்டதும் உள்ளம் படபடவெனச் சிறகை அடித்துக் கொண்டு பட்டாம் பூச்சியாய்ப் பறக்க ஆரம்பித்தது. ஆயிரம் பட்டாம்பூச்சிகள் வண்ணமயமான சிறகுகளுடன் தன்னைச் சுற்றிப் பறப்பதை உணர்ந்தாள் செல்லம்மா.

# 14

கேட்கும் ஒலியில் எல்லாம்
நந்தலாலா - நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா...

நெஞ்சம் படபடக்க வீட்டினுள் நுழையாமல் வாசலுக்கு வெளியில் நின்றவளைக் கணேசனின் குரல் கலைத்தது. "செல்லம்மா! இந்தா போன். உன் மாமா கொடுக்கச் சொன்னான். போன் எப்படிப் போடணும்னு தெரியுமா? சொல்லித் தரவா?" - என்றவாறு நின்ற கணேசனின் குரல் வீட்டினுள் கேட்டிருக்க வேண்டும். முதலில் அப்பாவும் பிரதாப்பும் வெளியே வந்தனர்.

"என்ன கணேசா, இங்கே என்ன வேலை உனக்கு?" - அப்பாவின் அதிகாரக் குரலில் கணேசன் பயந்து போனான்.

"இல்லீங்க. நடராஜன் என்கிட்ட போன் வாங்கினான். அதை வீட்ல கொடுத்துட்டுப் போகச் சொன்னான். அதான் செல்லம்மாகிட்ட கொடுத்திட்டு இருந்தேன்."

"ஓஹோ... அந்த துரைக்கு வீட்டுக்கு வர முடியாதாமா? உங்கிட்ட கொடுத்துவிட்டிருக்கான். இந்தக் கருமத்தை - அவன்கிட்ட யார் கேட்டாங்களாம்?"

அப்பா தன் பேச்சை நிறுத்தமாட்டார் விட்டால் என்பது புரிய, அவன் கையிலிருந்த போனை வாங்கிக் கொண்டு, "தேங்க்ஸ் கணேஷ் அண்ணா. இப்பத்தான்



மாமா சொன்னாங்க. அதுக்குள்ள வந்திட்டீங்க. பேட்டரி மாத்தியாச்சா? ரிப்பேர் எதுவும் இல்லையே?" - என்றாள் செல்லம்மா.

"இல்லம்மா! நல்ல போன்தான். நான் கேமரா செல் வாங்கினேன். அதான் இதை விக்கணும்னு சொல்லிட்டு இருந்தேன். அப்போதான் நடராஜன் கேட்டான்."

"சரி... சரி... கொடுத்தாச்சில்ல. கிளம்பு. நீங்க வாங்க மாப்பிள்ளை. அவங்க மாமன்காரன் வாங்கிக் கொடுத்தனுப்பியிருக்கான். இவங்க அம்மாவோட தம்பிதான் நடராஜன். தோட்டக்காடே கதின்னு கிடப்பான்." - அப்பா பேசிக்கொண்டே உள்ளே செல்ல, அவன் அசையாமல் நின்றான்.

அவன் விலகினால் தான் வீட்டினுள் நுழைய முடியும் என்பதால் வெளியே நின்ற செல்லம்மா, அவனிடம் அசைவின்றிப் போகவும், மெல்ல நிமிர்ந்து அவனை ஏறிட்டாள்.

"என்ன கோபமா? வீடு தேடி வந்தவனை எப்படி இருக்கிறாய் என்று கேட்கமாட்டாயா செல்லம்? ம்? ...."

அப்பா இருக்கும்போதே எத்தனை தைரியமாய்ப் பேசுகிறான் என்ற வியப்பில் பிரமித்து நின்றவனை மெல்லக் கன்னத்தில் தட்டினான் பிரதாப்.

"என்ன? நம்ப முடியவில்லையா? நான்தான் பிரதாப். உங்கள் அக்காவின் கணவரின் தம்பி. என்னை நினைவிருக்கிறதா? மறந்து போயிற்றா?"

"உங்களுக்கு...?" - என்றாள் அவனை நேராய்ப் பார்த்து. வேசாய்ச் சிரித்தான் பிரதாப்.

"அதையேன் கேட்கிறாய் செல்வம்? படுத்தால் தூக்கமில்லை. பசித்தாலும் சாப்பிட முடியவில்லை. பாலும் கசந்ததடி. சகியே படுக்கை நொந்ததடின்ற மாதிரி ஆயிடுச்சு. என் கண்ணைப்பார். தூங்கி எத்தனை நாளாச்சு, தெரியுமா?"

"உங்களுக்குக் காய்ச்சல் என்று நினைக்கிறேன்," - என்றவளை முறைத்தான்.

"என்ன கிண்டலா? நான் என்ன பாடுபட்டு ஐடியா பண்ணி உன்னைப் பார்க்க வந்திருக்கேன். நீ என்னன்னா காய்ச்சல் தலைவலின்னு கருத்துச் சொல்றியா?"

"என்னைப் பார்க்க வந்தீங்களா, எதுக்கு?"

"ஓ. அப்போ போகட்டுமா? என்னைப் பார்க்காமல் உனக்கு வருத்தமே இல்லையா? நான்தான் பைத்தியக் காரன் மாதிரி உன் நினைவில் சுற்றுகிறேனா? இனி இங்கு எனக்கு என்ன வேலை? நான் போகிறேன்."

வாசலில் இறங்கியவனைக் கைநீட்டித் தடுத்தாள் செல்லம்மா. "வீட்டுக்கு வந்த விருந்தாளி சொல்லாமல் கொள்ளாமல் போகக் கூடாது. அப்பாவிடம் சொல்லி விட்டே போங்க."

"அடிப்பாவி! போ என்றா சொல்கிறாய். உன்னைப் பார்க்கவா இத்தனை தூரம் ஓடிவந்தேன். பாரு செல்வம். இத்தனை நாளில் ஒரு நாள்... ஒரே ஒருநாள் கூட என் நினைவு உனக்கு வரவில்லையா? இல்லை என்று சொல். உடனே போய்விடுவேன். சொல்லு. உண்மையைச் சொல்."

மௌனமாய் நின்றாள். எப்படிச் சொல்வாள்? இவனைப் பார்த்த நாள் முதலாய் இவன் நினைவிலேயே உழன்று கொண்டிருப்பதை எப்படிச் சொல்ல முடியும்?



உன்னைப் பார்க்கத்தான் ஓடி வந்திருக்கிறேன் என்று அவனே சொல்லும்போது தன் நிலையை ஏன் சொல்ல முடியாமல் தடுமாறுகிறோம்? எந்த உணர்வு தன்னை இப்படி ஆட்டிப் படைக்கிறது? இது சாத்தியமா? ஓரிரு முறையே பார்த்துப் பழகிய இவனை முழுமையாய் நம்ப முடியுமா? ஆயிரம் வசதிகளைக் கொண்ட இவன் தன்னை ஏன் தேடிவர வேண்டும்? அப்படி இவனை ஈர்த்தது எது?

"இந்தக் கண்ணும் இந்தக் குறும்புப் பேச்சும்தான்!" - என்று பிரதாப் சொன்னதும் விதிர்விதிர்த்துப் போனாள் செல்லம்மா.

"என்ன செல்லம்! நாம மனசில நினைச்சது இவனுக்கு எப்படித் தெரிந்தது என்றா? அதுதான் நேசம். எப்போ என் மனசில நீ நுழைஞ்சியோ அப்பவே உன் முகத்தை வைத்தே உன் மனதைக் கண்டுபிடித்துவிடுவேன்... ஃப்பார் எக்ஸாம்பிள்! ஒன்று சொல்லட்டுமா? நீ இவ்ளோ நேரமா என்னை நினைச்சுட்டுத்தான் இருந்தே. அதான் என்னைப் பார்த்ததும் ஷாக்காகி நின்னுட்டே இல்லையா? அப்படி உன் மனதில்... உன் நினைவில் நான் இல்லையென்றால் என் குரல் கேட்டதும், நான் வந்தது தெரிந்ததும் சாதாரணமாய் என்னை வரவேற்று நலம் விசாரித்திருப்பாயே.

"என்னிடம் பேச முடியாமல் என்னைப் பார்க்கத் தயங்கித்தானே இங்கே நின்று கொண்டிருந்தாய்? என்ன பார்க்கிறாய்? நான் வந்ததும், நீ இங்கு இல்லை, தோட்டத்திற்குப் போயிருக்கிறாய் என்று சக்தி சொன்னாள். அப்போதிருந்தே வாசலில் தான் என் பார்வை இருந்தது. அதில் உன் தாவணியும் தெரிந்தது. எப்படி வெளியே வருவது என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாய்... அந்தப் பிள்ளையார் வந்து உதவினார்!" - என்றான் கண்கள் மின்ன.

"யாரது பிள்ளையார்?" - விழித்தாள் செல்லம்மா.

"அதுதான் இப்போ ஒருத்தர் வந்தாரே. கொஞ்சம் பெரிய தொப்பையோடு... போன் கூடத் தந்தாரே..."

"அதுவா? அது கணேசன்..."

"நான் சொன்னதும் சரிதான்!" - அவசரமாய் அவன் சொன்னதும் புன்னகை பூத்தாள்.

"ஹப்பாடி! இப்பத்தான் தென்றல் வீசுது. இந்த மின்னல் சிரிப்பைப் பார்த்து எத்தனை நாளாயிற்று. இப்போதாவது இந்த ஏழையின் மேல் இரக்கம் வந்ததே. நன்றி தேவி." - தலைகுனிந்து நன்றி கூறினான்.

"பேச்சில் எல்லாம் குறைவில்லை. இத்தனை நாள் தவிக்கவிட்டீர்களே. எனக்குக் கோபம் வராதா?" - என்றாள் கோபமாய்.

"உண்மையை ஒத்துக்கொண்டதற்கு நன்றி. நானும் தான் தவித்துப் போனேன். வரவிடாமல் வேலை... வேலை. அதோடு அம்மாவின் உடல் நிலையும் மோசமாகி விட்டது. இப்போதுதான் கொஞ்சம் நடமாடுகிறார்கள். அதனால்தான் இன்று வரமுடிந்தது. எப்படி இருக்கிறாய் செல்லம்?"

"மாப்பிள்ளே, வெளியில் நின்று என்ன பேச்சு? உள்ளே வந்து காபி சாப்பிடுங்கள். செல்லா! இது என்ன புதுப் பழக்கம்?" - அப்பாவின் குரலில் பதறி, பிரதாப்பை உரசிக்கொண்டு உள்ளே ஓடினாள் செல்லம்மா.

சிரித்தவாறே உள்ளே நுழைந்து அமர்ந்தவனிடம் காபியை நீட்டினார் பெரியசாமி. காபியை வாங்கிக் கொண்டே கண்களைச் சுழற்றித் தேடினான். வேறு யாரும் கண்ணில் படவில்லை.



"செல்லம்மா! இப்படி வா!" - என்ற தந்தையின் அழைப்பில் மெல்ல வெளியே வந்தாள்.

"என்னப்பா?" - என்றாள் நிமிராமலே. அவள் கையில் ஒரு கவரைக் கொடுத்தார்.

"இந்தா! உனக்கு வந்த லெட்டரை மாப்பிள்ளை வாங்கிட்டு வந்திருக்கார். பிரிச்சுப் பாரு," - என்றார்.

செல்லம்மாவிற்கு உண்மையில் ஒன்றுமே புரிய வில்லை. என்ன நடக்கிறது இங்கே? பேசுவது யார், அப்பாதானா? இத்தனை மென்மையாய்க் கூட அப்பாவிற்குப் பேச வருமா? சரி. இதென்ன புதுப் பழக்கம். அந்நிய ஆடவர் இருக்கையில் தன்னை அழைத்திருக் கிறாரே.

புரியாமல் விழித்து நின்றவளைப் பார்த்துக் கண்களால் சிரித்தான் பிரதாப். தந்தையின் முன் முகம் மாறாமல் நிற்கப் பெரும்பாடு பட்டுப் போனாள்.

"இது.... இது என்னப்பா?" - என்றாள் தந்தையிடம் கவரை நீட்டி.

"பார்த்திங்களா மாப்பிள்ளை? என் பிள்ளைகள் எல்லாருமே இப்படித்தான். எந்தக் கடிதம் வந்தாலும் நான்தான் முதலில் படிக்க வேண்டும் என்று நினைப் பார்கள். இந்தக் கவரை நான் பிரிக்கவில்லை இல்லையா? அதனால் தான் அவள் தயங்குகிறாள்," - எனப் பிரதாப்பிடம் பெருமையாகக் கூறிவிட்டு மகளிடம் திரும்பினார் பெரியசாமி.

"அம்மா செல்லா! இது நீ டீச்சருக்குப் படிக்க வந்த அழைப்பும்மா." திடுக்கென நிமிர்ந்தாள். பார்வை தன்னையும் மீறிப் பிரதாப்பிடம் சென்றது. அவன்

இன்னும் அதே சிரிப்போடு இமைகளைச் சற்றே தூக்கி, 'எப்படி?' என்பது போல் நோக்க, வியப்பு மாறாமல் தந்தையை நோக்கினாள்.

"நான்... எதுவும் அப்ளிகேஷன் போடலப்பா!" - என்றாள் பயமாய்.

"அது எனக்குத் தெரியாதாம்மா. இது உன் திறமைக்குக் கிடைச்ச பரிசும்மா. நீ படிச்ச ஸ்கூல்லயே நீதானே பன்னிரண்டாவது முதல் மார்க். அதனால உங்க வாத்தியார் சொல்லி இந்த டீச்சர் ட்ரெயினிங் ஸ்கூல்ல இருந்து லட்டர் போட்டிருக்காங்க. ரெண்டு வருஷம் படிக்கணுமாம். ஒரு பைசா பீஸ் கட்ட வேண்டாமாம். படிப்பு முழுசும் இலவசமாம்.

"நீ நல்லா படிச்சு பாஸாகிட்டா அதே ஸ்கூல்ல உனக்கு வேலையும் கொடுத்திடுவாங்களாம். உங்க வாத்தியார் நம்ம மாப்பிள்ளை கூட வந்திட்டு இந்த விபரத்தை எல்லாம் சொல்லிட்டு இப்பத்தான் போனார். ஏதோ அவசர வேலையாம். நம்ம மாப்பிள்ளைக்கு ரொம்பத் தெரிஞ்சவராம்.

"இந்த ஸ்கூல் நம்ம தேனடை மெயின் ரோட்டுல இருக்குதாம். இங்கிருந்து நடைதூரம்தானே. போயிட்டு வரச் சிரமம் இருக்காது. இன்னும் ரெண்டு நாள்ல போய்ச் சேரணுமாம். வேற எதுவும் விபரம் வேணும்னா மாப்பிள்ளைகிட்டயே கேட்டுக்கச் சொன்னார். நீ என்னம்மா சொல்றே?" - என்றார் மகளிடம்.

செல்லம்மாவிற்கு மயக்கம் வராத குறைதான். எங்கே விழுந்து விடுவோமோ என்று அஞ்சிக் கதவைப் பற்றிக்



கொண்டாள். பேச்சு வரவில்லை. நான் இத்தனை ஆண்டாய்க் கண்ட கனவு பலிக்கப் போகிறதா? நான் படிக்கப் போகிறேனா? டீச்சராய்ப் பணிபுரியப் போகிறேனா? இதெல்லாம் கனவில்லையே. அப்பா... அப்பா எப்படிச் சம்மதித்தார். பெண் பிள்ளைகள் அதிகம் படிக்கக் கூடாது.

அவர்கள் படிப்பிற்கேற்ற மாப்பிள்ளையைத் தேடி அலைய முடியாது. வீட்டோடு இரு போதும் என அடக்கி வைத்த அப்பா தன்னைப் படிக்க எப்படி அனுமதித்தார்? அவ்வளவு எளிதில் அப்பாவைச் சம்மதிக்க வைக்க முடியாது என்று அவளுக்கும் தெரியும். பிறகெப்படி இது சாத்தியம்? நம்ப முடியாமல் நிமிர்ந்தவளின் பார்வையில் விழுந்தான் பிரதாப்.

"என்னால் முடியும்!" என்பது போல் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டிருந்தவனைக் கண்டதும் கண்களில் நீர் சுரக்கத் தள்ளாடினாள்.

"மாமா! அவர்களை உட்கார்ந்து பேசச் சொல்லுங்களேன்," - என்றான் அக்கறையாய்.

"அதான் மாப்பிள்ளை சொல்றாரில்ல, உட்காரும்மா," - என்றதும் மறுக்காமல் அமர்ந்து கொண்டாள். கைகள் நடுங்கத் தன் கையிலிருந்த கவரைப் பிரித்து வாசித்தாள். நன்றிப் பெருக்கில் நீர் நிறைந்து கன்னத்தில் வழிந்தது.

"லட்சுமி! சாப்பாடு ரெடியா?" - உள்நோக்கிக் குரல் கொடுத்தார் அப்பா.

"எல்லாம் ரெடியாச்சு. நீங்க ரெண்டு இலை அறுத்திட்டு வாங்க," - என்றாள் அம்மா.

விடலாம். ஆனால் ஷேவிங் பண்ணும்போது எப்படி? அப்போ நம் கல்யாணத்தின் போது நான் நீண்ட தாடியோடும் ஜடைமுடியோடும்தான் இருப்பேன். எல்லோரும் பார்த்துவிட்டு 'அடடா! 'இத்தனை அழகான பெண்ணுக்கு இந்த மாப்பிள்ளையா? உவ்வே!' என்பார்கள். அதுதான் உன் ஆசையா?" - என்றான் பரிதாபமாய் முகத்தை வைத்துக்கொண்டு.

"என்ன? என்ன சொன்னீர்கள்?" - வியப்பால் விழி விரியக் கேட்டவளை இமைக்காமல் பார்த்தான் பிரதாப்.

"ஆமாம் செல்வம். என் மனைவி ஆசிரியை என்று நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் இந்த ஏற்பாடு. உனக்குச் சம்மதம் தானே?"

படிப்பதற்குக் கேட்கிறானா இல்லை தன்னை மணப்பதற்குக் கேட்கிறானா என்று புரியாத போதும், இரண்டிற்குமே தனக்குச் சம்மதம் என்பதை அவன் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டவாறே தலையசைத்தாள்.

அப்பாவின் வருகை உணர்ந்து அவசரமாய் எழுந்து நகர்ந்து நின்று கொண்டாள். ஏதாவது பேச வேண்டுமே என்று நினைத்த போதுதான் அக்காவின் நினைவு வர, "அக்கா எப்படி இருக்கிறாள்? சந்தோஷமாக இருக்கிறாளா? அத்தான் அவளை நன்றாக வைத்திருக்கிறாரா? ஏன் எங்களுக்குக் கடிதமே போடவில்லை? நீங்கள் அக்காவைப் பார்த்தீர்களா?" - எனத் தொடர்ச்சியாய் அவள் கேட்ட கேள்விகளில் திணறிப் போனான் பிரதாப்.



## 15

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலம்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்!

**ம**ழை பூத்தூறலாய்த் தூவிக் கொண்டிருந்தது. தரையில் கால் வைக்க முடியாத அளவிற்குக் குளிர் தாக்கியது. மழையைக் காரணம் காட்டி மேரியம்மா இரண்டு நாள் விடுமுறை எடுத்துக் கொண்டாள். எடுத்துக் கொள்ளட்டுமே! இங்கு என்ன வேலை நெட்டி முறிக்கிறது. தான் ஒருத்தி சாப்பிட எதற்கு வேலையாள்? பேசாமல் நிறுத்திவிடலாம் என்றுகூடப் பாரதி நினைப்பதுண்டு.

ஆனால் மேரியம்மாவும் பகலில் வந்துபோகவில்லை யென்றால் வெறுமையே தன்னைக் கொன்றுவிடும். நல்லவேளை, மேரியம்மா காலை பத்து மணிக்கு வந்துவிட்டு மாலை இருட்டுமுன் போய் விடுகிறாள். இரவில் தங்கும் வேலையாளாக இருந்தால் அது இன்னும் அதிகச் சிரமம். தேவையின்றிப் பல பொய்களைப் பேச வேண்டியதிருக்கும். புதிதாய் மணமான கணவன் நடுச் சாமம் தாண்டி வருவதையும் விடியுமுன் வெளியேறு வதையும் கண்டால் சந்தேகம் வராதா? அவர்களைச் சமாளிக்கப் பொய் பேசியாக வேண்டுமே.

கேட்பது? பேசுவது? சரி, வேட்டாகும் நாட்களில் எஸ்டேட்டுக்கே போய் அவனைப் பார்க்கலாம் என்றால் வழியும் தெரியாது- இடமும் தெரியாது.

என்றாலும் மேரியம்மாவை அழைத்துக்கொண்டு சாப்பாடு கொண்டு போகலாம் என்ற காரணத்தோடு ஒருநாள் தேயிலைத் தோட்டத்திற்குச் சென்றவளை வறுத்து எடுத்துவிட்டான் பிரசாத்.

“இந்த வேலையெல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதே. நான் உன்னிடம் சாப்பாடு கேட்டேனா? எதற்காக இங்கு வந்தாய்? என்னை உளவு பார்க்க வந்தாயா? புத்தியைப் பார். போ. நிற்காதே. போய்விடு!” - என்று கத்தியே விரட்டினான்.

நல்ல வேளையாக மற்றவர்களின் முன்னா திட்டாமல் தனி அறையில் தான் திட்டினான் என்றாலு அடுத்த அறையில் ஏதோ கணக்கு எழுதிக்கொண்டு இருந் பெண் தன்னை வெகு ஏளனமாய்ப் பார்ப்பதை இன்று மறக்க முடியவில்லையே.

அன்றோடு கணவனுக்குச் சாப்பாடு செய் கொடுக்கும் எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டா அந்தக் கோபத்தில் அவன் மூன்று நாட்கள் வீட்டிற் வராமல் இருந்ததும் ஒரு காரணம். ஆனால் ஒன்று மட் புரியவில்லை பாரதிக்கு. என்னதான் வேலை டென்ஷ என்றாலும் அந்த வார்த்தையை ஏன் சொன்னார்? உள பார்க்க வந்தாயா? தப்புச் செய்கிறார் என்ற சந்தே வந்தால்தானே உளவு பார்க்கத் தோன்றும்.

அப்படியென்றால் இவர் தப்புச் செய்கிறாரோ வேண்டாத மனைவியாய் நான் வீட்டில் இருக்க என்னை



காணப் பிடிக்காமல் அல்லது இவருக்கு வேறு யாரையும் பிடித்துப் போய்த்தான் தன்னை விட்டு விலகியே நிற்கிறாரோ? பலவிதமாய்ச் சிந்திக்க நெற்றிப் பொட்டில் வலி தெறித்தது.

தலையை இறுகப் பற்றிக் கொண்டபோது அழைப்பு மணி ஒலித்தது. கடிகாரத்தைப் பார்த்தாள். வெளியே இருட்டிக் கொண்டிருந்த போதும் மாலை நான்கு மணி தான் ஆகியிருந்தது. ஒருவேளை சாப்பிட வந்திருப்பாரோ?

ஆவலாய் ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். அங்கே மழைக்கோட்டு அணிந்தபடி நின்றான் ஒருவன்.

“யார்? என்ன வேண்டும்?” - கேட்டவாறே வெளி வாயிலை நோக்கினாள். வாட்ச்மேன் தன் அறையில் அமர்ந்து இருப்பது தெரிந்தது. ஒரு நிம்மதி மூச்சுடன் வந்திருந்தவனை நோக்கினாள். அவனோ பாரதியைத் தலை முதல் கால்வரை அணுஅணுவாய் ரசித்துக் கொண் டிருந்தான்.

உடல் முழுக்க அருவருக்க, “யார் என்று கேட்டேன்,” என்றாள் குரலை உயர்த்தி. அவன் சற்றும் அசராமல், “அடேங்கப்பா! இப்படி அசத்துறியே. நானும் தான் எத்தனையோ பொண்ணுங்களைப் பார்த்திருக்கேன். அதில ஒண்ணுகூட உன்னை மாதிரி இல்லையே. இப்படி மொத்த அழகையும் குத்தகைக்கு எடுத்துட்டு வந்திருக் கியே. யப்பா! என்ன உடம்பு!” - கண்களில் காமம் வழிய அவன் இறங்கிப் போய் பேசப் பாரதி கூசிப்போனாள்.

கண்களில் கோபக்கனல் தெறிக்க, “யூ இடியட். யாருடா நீ. தெருப் பொறுக்கி நாயே. யார்கிட்ட பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசுறியா? செருப்பு பிஞ்சிடும். வெளியே போடா பொறுக்கி.” - சீறினாள்.

"நான் தெரிஞ்சுதாம்மா பேசுறேன். நீதான் நான் யார் என் பவர் என்னன்னு தெரியாம பேசுற. கொஞ்சம் மரியாதையா பேசு. உன் வீட்டுக்காரனுக்கு லெப்ட் ரைட் எல்லாமே நான்தான். நான் நினைச்சா இந்த நிமிஷமே உன் புருஷன் உன்னை வீட்டை விட்டு ஏன் இந்த ஊரைவிட்டே அனுப்பிவிடுவான். அது புரியாம சும்மா வார்த்தைய விட்டுடாத. அப்புறம் உனக்குத்தான் கஷ்டம்!" - என்றவாறு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு அவளைத் தாண்டி உள்ளே நுழைந்து உரிமையாய் ஹாலில் கிடந்த ஸோபாவில் அமர்ந்துகொண்டு புகையை விட ஆரம்பித்தான்.

அதிர்ந்து நின்றவள் தன்னைக் கடந்துபோகும்போது வேண்டுமென்றே உரசியவனை எரித்துவிடுவது போல் பார்த்தான். பழக்கமற்ற சிகரெட் நெடி நாசியை நெருட, தொண்டை கமறியது. அவள் இரும ஆரம்பித்ததும் பதறி சிகரெட்டைக் கீழே போட்டு மிதித்து அணைத்தான்.

"ஓ! ஸாரி டார்லிங். உனக்கு இந்த ஸ்மெல் பிடிக்காதுன்னு தெரியாது. நீ சிரமப்பட வேண்டாம். பார், நீ இருமியதும் சாதாரண ரோஜா மாதிரி இருந்த உன் முகம் ரெட்ரோஸா மாறிடுச்சு. ம். இதுவும் அழகாய்த்தான் இருக்கு. நீ எப்பவுமே இவ்ளோ கலரா? இல்ல, ஊட்டி கிளைமேட்ல கலர் கூடிப் போச்சா?"

"ச்சீ! வாயை மூடுடா. நீ யார்னு கேட்டேனே. திறந்த வீட்டுக்குள்ள எதுவோ நுழைஞ்ச மாதிரி நீ பாட்டுக்கு உள்ளே வர்ற. வெளியே போடா. வாட்ச்மேனைக் கூப்பிடட்டுமா?" - என்றாள் கோபமாய்.

"ம். கூப்பிடு. அவனுக்கு நான் யாருன்னு தெரியும். அதனாலதானே சலாம் போட்டு உள்ளே அனுப்பினான்.



கூப்பிட்டு என்ன சொல்லப்போற?" - அலட்சியமாய் அவன் கேட்ட விதம் பயமுறுத்தியது.

ஒருவேளை... இவர் நண்பனாக அல்லது உறவினராக இருக்குமோ? யாராக இருந்தால் என்ன? இவன் பேசுவதைக் கேட்டுவிட்டுச் சும்மாயிருக்க முடியுமா?

"முதலில் நீ யர்ர் என்று சொல். இப்போது அவர் வருகிற நேரம்தான்."

அவன் ஏதோ காமெடி பண்ணுவதுபோல் வாய் விட்டுச் சிரித்தான் அவன். தனிமையில் அவன் சிரிப்பு அறை முழுவதும் எதிரொலிக்க மிரண்டு போனாள் பாரதி.

"ம். பரவால்ல. நாட்டுப்புறம். ஏமாளியா இருப்பன்னு நினைச்சா ரொம்ப திறமைசாலியாத்தான் இருக்கே. அவர் வர்ற நேரமா இது? எங்கிட்டயேவா? அது எப்படி என்னை மீறி வந்துவிடுவார்!" - என்றபோது அவனது குரலில் தொனித்த கர்வம் பாரதியைக் கலங்கச் செய்தது.

"நீ... நீ என்ன சொல்ற? அவர் வீட்டிற்கு அவர் வர உன்னிடம் ஏன் கேட்க வேண்டும்? அவரை மிரட்டி வைத்திருக்கிறாயா? ஏய்... யார் நீ? உன்னை நான் இது வரை பார்த்ததில்லையே. அவர் இப்போது எங்கே இருக்கிறார்? முதலில் நீ யார்? அதைச் சொல்." - பதட்டமாய்ப் படபடத்தவளைக் கையமர்த்தினான்.

"பொறுமை, பொறுமை. உன் எல்லாக் கேள்விகளுக்கும் என்னிடம் பதில் இருக்கிறது. ஆனால் பதில் சொல்லத்தான் முடியாது. காலம் வரும். அது வரை பொறுமையாய் இரு. இப்போதைக்கு ஒரு கேள்விக்கு மட்டும் என்னால் பதில் கூறமுடியும். அவர் பத்திரமாய் சந்தோஷமாய் இருக்கிறார். அந்த சந்தோஷத்தைக்

கொண்டாட வீட்டிலிருந்து பணம் வாங்கி வரச் சொன்னார். தந்தால் வாங்கிவிட்டுப் போய்விடுவேன். இல்லையென்றால்... உன்னிடம் சொல்வதற்கென்ன!

"நான் பெண்கள் விஷயத்தில் ரொம்ப வீக். சுமாரா இருந்தாலே விடமாட்டேன். நீ வேறு இத்தனை அழகாய் இருக்கிறாய். வெளியில் மழை வேறு பெய்கிறது. ரொம்பக் குளிருது. என்னால் இப்படியே என்னை கட்டுப்படுத்திக் கொண்டு இருக்க முடியாது. புரியும் என்று நினைக்கிறேன்," - என்றான் கண்ணடித்தவாறே.

வெகுண்டு எழுந்தாள் பாரதி. "ச்சீ! வாயை மூடு. நீ யாராக இருந்தாலும் சரி. உன் மிரட்டலுக்கு நான் பயப்பட மாட்டேன். என்னை என்ன நீ பழகும் பெண்களைப் போல் நினைத்தாயா? நான் பாரதி. என்னை நெருங்க நினைத்தால் எரித்துவிடுவேன். கொலையும் செய்வாள் பத்தினி என்று நீ கேள்விப்பட்ட இல்லையா? அது என் போன்ற பெண்களை மனதில் நினைத்துச் சொன்ன வார்த்தைதான்.

"எங்கே, என்னைத் தொட்டுப்பார். தொட்ட கை உன் உடம்பில் இருக்காது. பெண்தானே என்று மிரட்டிப் பார்க்கிறாயா? இப்போதே உன் கண்ணைத் தோண்டி எடுக்க என்னால் முடியும். உன் உடம்பைத் துண்டு துண்டாய் வெட்டியெறிய முடியும். ஒரு பெண் தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள எதிராளியைக் கொன்றால் கூட அது குற்றமாகாது. தெரியுமா உனக்கு?

"சும்மா உதார்விடுவதை விட்டுவிட்டு வெளியே போ. போகிறவன் வருகிறவனை எல்லாம் நம்பிப் பணத்தைத் தரமுடியாது. பணம் தேவைப்படுகிறது என்றால் அவரே வரட்டும். உன்னிடம் ஒரு பைசா தரமாட்டேன். கிளம்பு



ம்?" - இடுப்பில் கைவைத்து அவள் மிரட்டிய தொனியில் மிரண்டு எழுந்தான் மனோகர்.

பூனைக்குட்டியாய் இருந்தவள் பெண்புலியாய்ச் சீறியதில் அரண்டு போனான். ஒரு மிரட்டலில் விழுந்து விடுவாள் என்று நினைத்தால் தன்னையே எரித்துவிடுவேன் என்கிறாளே.

"என்னடா பார்க்கிற. வெளியே போன்னு சொன்னேனே."

"ஏய், உனக்கு என்னைப் பத்தித் தெரியாது. நான் யார் தெரியுமா? நான் நினைத்தால் உன்னை இப்போதே உன் கணவனைவிட்டே விரட்டியடிக்க முடியும். என் பவர் தெரியாமல் பேசாதே."

"ஏய். என்னடா சும்மா பவர் பவர்ன்ற. என்னோட பவர் என்னன்னு காட்டவா. உன்னால தாங்க முடியாது. பொசுங்கிப் போயிடுவ. போ வெளியே." - பாரதியின் கண்களில் தெரிந்த கோபம் பயத்தை ஏற்படுத்தினாலும் அவன் இப்போது வந்த நோக்கம் நிறைவேறியாக வேண்டும். அங்கே யாமினியின் அணைப்பில் கட்டுண்டு கிடக்கும் பிரசாத்தின் கிறக்கம் தெளியும் முன் முழுதாய் ஒரு லட்சம் கறந்தாக வேண்டும். தெளிந்துவிட்டால் கணக்குக் கேட்பான். வந்த இடத்தில் இவனிடம் வழிந்தது பெரிய தவறு. காரியத்தை முடித்துவிட்டுச் சீண்டியிருக்க வேண்டும். எங்கே போய்விடப் போகிறான்? பிரசாத் தங்கள் பிடிக்குள் இருக்கும் வரை இவள் வேலியில்லாத் தோட்டம்தானே. பொறுமையாகப் பார்த்துக் கொள்ளலாம். இப்போது தணிந்துதான் போக வேண்டும் என்ற முடிவுடன் இறங்கி வந்தான் மனோகர்.

"இதோ பாரும்மா! சும்மா பேசி என் டயத்தை வீணாக்காதே. அங்கே உன் கணவர் நான் கொண்டு வரும் பணத்திற்காகக் காத்திருப்பார். சீக்கிரமாய் அவர் அறையிலிருந்து ஒரு லட்சம் எடுத்துக்கொடு. நான் போக வேண்டும்," - என்றவாறு எழுந்தான்.

"ஒரு லட்சமா... ஆ..." - வாயைப் பிளந்தாள் பாரதி.

"ஹூம். உன்னைப் போலச் சாப்பாட்டுக்கு வழியில்லாதவர்களுக்கு ஒரு லட்சம் பெரிய தொகையாகத் தான் தெரியும். ஆனால் எங்களுக்கு அது அன்றாடச் செலவு. அதனால் வாயைப் பிளக்காமல் எடுத்துக் கொடு." - வேண்டுமென்றே தன்னைத் தாழ்வாகப் பேசுகிறான் என்பது புரிந்ததும் கோபத்தோடு வருத்தமும் சேர்ந்து கொண்டது.

நான் கஷ்டப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்தவள் என்று எப்படி இவனுக்குத் தெரியும். அவர் சொன்னால் தானே தெரிந்திருக்கும். இதைக்கூடச் சொல்வதென்றால் இவன் யார் அவருக்கு? நிச்சயமாய் நண்பனாக இருக்க முடியாது.

படித்த கம்பீரமான தன் கணவனுக்கு எடுபிடியாகத் தான் இருக்க வேண்டும். கொஞ்சமும் ஒழுக்கமற்றவன் என்பதை இந்தக் கண்ணும் முகமும் சொல்கின்றனவே. என்னவோ பெரிய எஸ்டேட் ஓனர் என்பதுபோல் எவ்வளவு ஏளனமாகப் பேசிவிட்டான். நான் கஞ்சிக்கு வழியில்லாதவள்! இவன் பெரிய குபேரனா?

"ஊரை அடித்து உலையில் போடுபவன் எல்லாம் லட்ச ரூபாயை அன்றாடச் செலவாய் நினைப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. அந்த ஒரு லட்ச ரூபாய் எப்படிச் சம்பாதிக்கிறோம் என்பதுதான் பெரிய விஷயம்.



உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே, அடுத்தவரை ஒட்டி உறிஞ்சி வாழ்பவன் என்று. நீ என்னைச் சொல்கிறாயா? என்னைப் பற்றி என்ன தெரியும் உனக்கு?"

மனோகருக்குக் கோபம் ஏறியது. தன்னைப் பற்றிச் சரியாய்க் கணித்து விட்டாளே. இவளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சீக்கிரமாய் இவளை வெளியே அனுப்ப வேண்டும். இல்லையென்றால் காரியமே கெட்டுப் போய்விடும். இவளை அனுப்புமுன் ஒருவழி பண்ணி விட வேண்டும். என்னையா எள்ளி நகையாடுகிறாய்? இந்த மனோகர் யாரென்று உனக்குத் தெரியாது. கண்கள் சிவப்பேற,

"இதோ பார். என் பொறுமைக்கும் எல்லை உண்டு. என்னைச் சீண்டாதே. மரியாதையாய்ப் பணத்தைக் கொடு. நான் போய்விடுகிறேன்."

"உன்னை நம்பி ஒரு பைசா தரமாட்டேன். அவர் வந்து எடுத்துக் கொள்ளட்டும். நீ கிளம்பு." - பாரதி அலட்சியமாய்ச் சொல்ல மனோகர் கொதித்துப் போனான். ஆவேசமாய் அவளை நெருங்கித் தோளைப் பற்றித் தன்புறமாய் இழுத்தான்.

பாரதி காளி சொரூபமானாள். "யார் மீது உன் கை வைக்கிறாய் நாயே!" - என்றவாறு தன்னைத் தொட்ட அவனது வலக்கையைப் பற்றி ஒரு சுழற்றுச் சுழற்றித் திருப்பினாள்.

மழுக்கென்று அவனது எலும்பு முறிய மனோகர் வீறிட்டான். கை தொய்ந்து விழ வலி தாளாமல் அலறினான். அப்படியும் கோபம் தீராமல் அந்தக் கையைப் பற்றி திமிர்த்தினாள். வலியில் உயிர்போக, "வேண்டாம். விட்டுவிடு. என்னை விட்டுவிடு!" - என் அலறினான்.

"இனி ஒருமுறை இந்தக் கை எந்தப் பெண்ணையும் தீண்டக்கூடாது. போனால் போகிறதென்று விடுகிறேன். இல்லையென்றால் கையைத் தனியே கழற்றி இருப்பேன். போ... ஓடிப்போ!" - கர்ஜித்தாள்.

மனோகரின் அலறலில் வாட்ச்மேன் ஓடி வந்தான். அவன் காதுகளில் பாரதியின் கர்ஜனை விழ, "அம்மா! என்னாச்சு. இவன் எதுவும்..." - என்றவனை இடைமறித்து, "சோமு! இனி இந்த நாய் வந்தால் உள்ளே விடாதே. அடித்து விரட்டு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். முதலில் இவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு. இன்னும் ஒரு நொடி இவன் இங்கே இருக்கக்கூடாது!" - என உத்தரவிட்டாள்.

''சரிங்கம்மா'' - என்று பணிவாய்க் கூறியவன் மனோகரின் மேல் கைவைத்து நெட்டித் தள்ளிக்கொண்டு, "ஏதோ எஸ்டேட்ல வேலை செய்யுறவன்னு உள்ளார விட்டா நீ அம்மா மேலேயே கை வைக்கப் போனியா? பெரிய ஐயா வரட்டும். உன்னை ஊரைவிட்டே அனுப்பச் சொல்றேன்!" - என்றவாறு அவன் வெளியேறிவிட, கதவை அறைந்து சாத்தித் தாழிட்டாள் பாரதி.

உடல் முழுவதும் தடதடக்க, வியர்வை ஆறாய்ப் பெருக, அத்தனை நேரம் இருந்த துணிச்சல் மறைந்து போகத் தன் மீதே இரக்கம் வந்து கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. இனி இவன் போய்த் தன் கணவனிடம் சொன்னால் என்ன ஆகுமோ என்று நினைக்கையில் அழுகை அதிகரித்தது.

அவன் செய்தது தானே தவறு. அவன் எப்படி என் மீது கை வைக்கலாம். இவர் ஏன் அவனிடத்தில் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். இவனுக்கு என்னவெல்லாம் தெரியும். தன் குடும்பப் பின்னணி மட்டும்தானா? இல்லை, இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையும் தான் தெரிந்திருக்குமோ?



எப்படியும் போய்ச் சொல்வான். சொல்லட்டும். அதைக் கேட்டுவிட்டு அவர் வரட்டும். என்னிடம் எப்படியும் விசாரிப்பாரில்லையா? எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும். எதையும் மறைக்கக்கூடாது. அதோடு இவனை இனி வீட்டுப் பக்கம் அனுப்பாதீர்கள் என்றும் சொல்ல வேண்டும்.

என்னதான் பிடிக்காத மனைவி என்றாலும் தன் மனைவியின் மீது பிறர் கைபட விடுவாரா என்ன? அவரே அவனை அடித்துத் துவைத்து விரட்டிவிடுவார். அதன் பிறகாவது ஒழுங்காக வீட்டுக்கு வருவார் இல்லையா? அவர் இருந்தால் எவன் வருவான்? இனிப் பயமில்லை. எல்லாம் சரியாகிவிடும் எனத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு எழுந்து முகத்தை அழுந்தத் துடைத்தாள்.

ஒரு தப்பும் செய்யாத நான் ஏன் அழ வேண்டும் என்ற வைராக்கியத்தோடு எழுந்தாள். அவன் தொட்ட இடம் அருவருப்பாய் இருக்க முதலில் குளிக்கலாம் என்று குளியலறைக்குள் நுழைந்தபோது அழைப்பு மணி ஒலித்தது. திடுக்கிட்டுத் திரும்பினாள்.

மீண்டும் வந்துவிட்டானா? இல்லை, அதற்குள் தகவல் தெரிந்து கணவர் வந்துவிட்டாரா? ஆனால் கார் சத்தம் கேட்கவில்லையே. அப்படின்னா, அவன்தான் வந்துவிட்டானா? இப்போது கதவைத் திறக்கலாமா வேண்டாமா? யோசிக்கும் போதே மீண்டும் அழைப்பு மணி ஒலித்தது.

திறக்கலாம். அவனே வந்தாலும்தான் என்ன? மீண்டும் என்னிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள வருகிறானா? கோபமாய்ச் சென்று கதவைத் திறந்தாள்.

யாரிவன் புதிதாய்... ஒரு இளைஞன் ஜெர்கினோடு நின்று கொண்டிருக்க, அவன் பின்னால் வாட்ச்மேனும் நின்று கொண்டிருந்தான்.

## 16

பாதகம் செய்பவரைக்கண்டால் – நாம்
பயம் கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!

"சோமு! யார் இது?" - எனக் கேட்ட பாரதியிடம் பணிவாய், "அம்மா! நம்ம சின்ன ஐயா அனுப்பினாங்களாம். அதான் உள்ளார விட்டேன்," - என்றான் சோமு. சட்டென மலர்ந்தாள் பாரதி.

"யாரு? பிரதாப்பா அனுப்பினார்? என்ன சொன்னார்?"

"யெஸ் மேடம். நான் ஆகாஷ். பிரதாப்போட பிரெண்ட். இங்கதான் ஹில்ஸ் ரோட்ல இருக்கேன். பிரதாப் இப்பத்தான் போன் பண்ணினான். இம்மீடியட்டா ஒரு செல்போன் வாங்கி உங்ககிட்ட கொடுக்கச் சொன்னான். அதான் வாங்கிட்டு வந்தேன்," - என்றவாறு கையிலிருந்த சிறு அட்டைப்பெட்டியை நீட்டினான்.



"ஹய்யோ! முதல்ல உள்ளே வாங்க. காபி தர்றேன். வாங்க!" - என்றவாறு விலகி அவனை வீட்டினுள் அழைத்தாள்.

"இருக்கட்டும் மேடம். மழையில் நனைந்ததில் ஈரமாய் இருக்கிறேன். வீட்டிற்குள் வந்தால் ஈரமாகும். இன்னொரு நாள் பிரதாப்போடு வருகிறேன். இந்தாருங்கள் மேடம். போனில் கனெக்ஷன் கொடுத்தாச்சு. உள்ளே சார்ஜர் இருக்கு. கொஞ்ச நேரம் சார்ஜ் ஏத்துங்க. பிரதாப் இன்னும் கொஞ்ச நேரத்தில உங்களுக்கு போன் பண்ணுவான். நான் வரட்டுமா?" - என்றவாறு அவளிடம் பாக்ஸைக் கொடுத்தான்.

"ரொம்ப தேங்க்ஸ். காபி மட்டுமாவது சாப்பிட்டுப் போங்களேன்."

"இல்ல மேடம். பரவால்ல. மறக்காம சார்ஜ் போடுங்க. நான் வருகிறேன்," - என்று மென்மையான புன்னகையோடு அவன் வாசலை நோக்கிச் சென்று தன் பைக்கில் ஏறி வெளியேறினான்.

பாரதி உள்ளே சென்றுவிட, சோமு கேட்டை மூடுமுன் சரேலென வந்து நின்றது பிரசாத்தின் கார். காரைவிட்டு இறங்காமலே சோமுவை அழைத்தான்.

"எஸ் ஸார்!" - என ஓடிவந்து காருக்கருகில் குனிந்து கேட்டான்.

"நம்ம வீட்ல இருந்து ஒரு பைக் போகுதே. யாரது?" - கோபத்தை வெளியே காட்ட இயலாமல் இயல்பாகக் கேட்பது போலவே கேட்டாலும் அவன் கோபம் புரிந்தது.

"நம்ம சின்னய்யாவோட நண்பராம். அம்மாவைப் பார்த்து ஏதோ கொடுத்துட்டுப் போறாருய்யா."

"சரி, நீ. போ." - என்றவாறு காரை விட்டு இறங்கினான்.

"கவலைப்படாதீர்கள் அண்ணி. உங்களுக்கு ஒரு செல்போன் வாங்கித் தருகிறேன். அந்த நம்பரை உங்கள் வீட்டிற்குத் தெரியப்படுத்திவிடலாம். அவர்களுடன் எப்போது வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம்," என்று சொன்னவன் அதே போல் வாங்கித் தந்துவிட்டானே என நினைக்கையில் பாரதிக்கு ஆனந்தக் கண்ணீர் சுரந்தது.

இனி அம்மாவுடன் செல்லாவுடன் நினைத்த நேரம் பேசலாம். எத்தனை நாட்களாயிற்று அவர்களைப் பார்த்து... பேசி... ஒரு தபால் கூடப் போட முடியாமல் போய் விட்டதே. இந்த நம்பரை எப்படித் தெரிவிப்பது. யார் மூலம் தெரிவிப்பது. நம்பரைத் தெரிவித்தாலும் அவர்களாக எஸ்.டி.டி. பூத் வந்து பேசினால் தானே பேசமுடியும். கையில் போன் வந்தும் உடனே பேசமுடியவில்லையே என்ற ஏக்கம் வந்தது.

ஆசையாய் அந்தப் பெட்டியை வருடியவள் ஆவலாய் அதைப் பிரித்தாள். மெரூன் கலரில் விலையுயர்ந்த அந்தப் போனைத் தொடுகையில் மெய் சிலிர்த்தாள். இந்தச் சின்னஞ்சிறு கருவிதான் என் பிறந்த வீட்டினருக்கும் எனக்கும் பாலமாக உதவப் போகிறதா? பளபளப்பாக இருந்த அதை ஒரு குழந்தையைப் போல் அணைத்து அதற்கு லேசாய் முத்தமிட்டாள்.

பெட்டிக்குள் இருந்த சார்ஜரை எடுத்து பிளக் பாயிண்டில் செருகி மறுமுனையை போனில் செருகினாள். ஸ்விட்ச் போட்டதும் போன் நீலநிறமாய் ஒளிர்ந்து



அவனது இஷ்ட தெய்வமான பிள்ளையார் அட்டகாசமாய் செல்போன் திரையில் தோன்றினார். உணர்ச்சிப் பெருக்கில் அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். கோடு கோடாய் மின்சாரம் ஏறிக் கொண்டிருக்க அதனருகில் அமர்ந்து கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே பிரதாப்பின் போனுக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

அதுவரை வாசலில் சாய்ந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த பிரசாத் அவனது செய்கை ஆத்திரமூட்ட, கதவருகே அழகான பூக்களைச் சுமந்து நின்ற பூக்குவளையை எடுத்து "சிலீர்ர்..." எனப் போட்டு உடைத்தான்.

பதறித் துள்ளி எழுந்த பாரதி முகம் முழுக்க அனல் வீச நின்று கொண்டிருந்த கணவனைக் கண்டதும் வெலவெலத்துப் போனாள். பிரசாத்தின் கண்கள் கோவைப் பழமாய்ச் சிவந்திருக்க, உடல் முழுக்கப் பயத்தால் நடுங்க,

"வாங்க! எப்போ வந்தீங்க? கார்... கார் சத்தம் கேட்கலியே!" - என்றாள் மெல்ல. ஆத்திரமாய் வந்தான்.

"எப்படிக் கேட்கும்? நீதான் இந்த உலகில் இல்லையே. கனவுலகில் தானே வாழ்ந்து கொண்டிருக்கிறாய். யாருடி அவன்?"

"எவன்?" - புரியாமல் விழித்தாள்.

"ஓஹோ! ஒருவன் மட்டும் வரவில்லையோ? எத்தனை பேர் வந்தார்கள் என்று நான் கணக்கெடுக்கவில்லையே. இப்போது பைக்கில் வந்து காதல் பரிசு கொடுத்துவிட்டுப் போகிறானே. அவனைக் கேட்டேன். யாருடி அவன்? இங்குள்ளவனா? இல்லை, உங்கள் ஊரிலிருந்தே வந்துவிட்டானா?" - பிரசாத்தின் குரலில் துடித்துப் போனாள்.

"என்ன பேசுறீங்க? அவர் யாரென்று தெரியாமல்..."

"தெரியாமத்தான்டி கேட்கிறேன். யார் அவன்? உனக்கு ஏன் போன் வாங்கிக் கொடுத்தான்? வீட்ல நான் இல்லாத நேரம் அவனைக் கூப்பிடவா?"

பொங்கியெழுந்தாள் பாரதி. "வாயை மூடுங்கள்! முட்டாள்தனமாய் உளறாதீர்கள்." - சொல்லி வாய் மூடுமுன் பளாரென அறைந்தான்.

தலைசுற்றித் தூரயாய்ப் போய் விழுந்தாள் பாரதி. "நான் முட்டாளா? உளறுகிறேனா? எத்தனை திமிரடி உனக்கு- நேரிலே பார்த்தேனே உன் வண்டவாளத்தை. செய்வதையெல்லாம் செய்துவிட்டுப் பெரிய பத்தினி மாதிரிச் சீறுகிறாயா? கொன்றுவிடுவேன் உன்னை!" - விழிகளை உருட்டி அவன் மிரட்ட மெல்ல எழுந்து பின்வாங்கினாள்.

"பாருங்க... உண்மை எதுன்னு புரியாம பேசாதீங்க. அவர் யாருன்னே எனக்குத் தெரியாது. உங்க..."

"வாயை மூடுடி. பொய் பேசாதே. அவன் யாரென்று தெரியாமல்தான் அவன் வாங்கிக் கொடுத்த போனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தாயோ... இப்போ அவன் போனுக்குத்தானே வெயிட் பண்ணுகிறாய்."

"ஐயோ! நான் சொல்வதை முழுதாய்க் கேளுங்களேன். நீங்கள் நினைப்பது போல் எதுவும் இல்லை. அவர் உங்கள் தம்பியின் நண்பராம். உங்கள் தம்பிதான் இந்தப் போனை வாங்கிக் கொடுக்கச் சொன்னாராம். அவர் போனுக்குத் தான் காத்திருக்கிறேன். எங்கள் வீட்டு..." - மேலே பேசமுன் கை உயர்த்தித் தடுத்தான்.



"புரிஞ்சு போச்சு. எல்லாம் புரிஞ்சு போச்சு. இதற்குத் தான் அவன் என்னிடம் அப்படி எகிறிக் குதித்தானா? உன் அருமை பெருமை எல்லாம் பேசுவானே. கடைசியில் உன்னிடமே விழுந்துவிட்டானா? உனக்குத் துணிச்சல் அதிகம்தான். இல்லையென்றால் அவன் போனுக்காகக் காத்திருக்கிறேன் என்று என்னிடமே சொல்வாயா?" - அவன் பேச்சு மூளையில் பதிய, கொதித்துப் போனாள்.

"வாயைக் கழுவுங்கள்! என்ன பிதற்றுகிறீர்கள்? உங்கள் புத்தி ஏன் இப்படிப் போகிறது?"

மீண்டும் பளாரென அறை விழுந்தது. கண்களுக்குள் பொறி பறந்தாலும் இம்முறை விழாமல் சமாளித்து நின்றாள்.

"இப்போது ஏன் சும்மா அடிக்கிறீங்க. நான் என்ன தப்பு செய்தேன்?"

"இன்னும் என்னடி செய்ய வேண்டும்? சதிகாரி. என்ன சதி பண்ணி என்னை மணந்தாயோ? இப்போது நான் உனக்குக் கிடைக்கவில்லையென்றதும் என் தம்பியையே... சீ, சொல்லவே வாய் கூசுது!" - என்றவனின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றினாள் பாரதி.

"என்ன சொன்னாய்? என்னைப் பற்றி என்ன சொன்னாய்? பாவி! படுபாவி. என்னைப் பார்த்தா அந்த வார்த்தை சொன்னாய்! நீ தாலி கட்டிய நொடி முதல் உன்னை மட்டுமே எண்ணிக்கொண்டு இந்தச் சிறையில் காலைக் கடத்திக்கொண்டு இருக்கிறேனே. என்னைப் பார்த்தா அந்த வார்த்தை சொன்னாய். இதே வார்த்தையை வேறு யாரேனும் சொல்லியிருந்தால் கேட்ட நாக்கை அறுத்திருப்பேன்." - சட்டையைக் கழுத்தோடு நெரித்த வாறே அவள் கொந்தளிக்க ஒரு கணம் மிரண்டு போனான் பிரசாத்.

மறுகணமே மினியின் குரல் காதில் மோதியது. "என் அண்ணனின் கையை உடைத்தவள் இனியும் இங்கு இருக்கக் கூடாது. நீங்கள் என்ன செய்வீர்களோ? அடிப்பீர்களோ உதைப்பீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால் அவள் இன்றே உங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும்.

"அவளை அனுப்பிவிட்டுத்தான் இங்கு வரவேண்டும் நீங்கள். அதுவரை என் முகத்தில் முழிக்கக்கூடாது. நானா? அவளா? யார் வேண்டுமோ, நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். அவள் போன அடுத்த நிமிடமே உங்கள் தாலியை நான் ஏற்றுக் கொள்வேன். இல்லையென்றால் இந்த மினி இனி உங்களுக்கில்லை!" - என நன்றாகவே உரமேற்றி அனுப்பியிருந்தாள்.

மினியின் வார்த்தை நினைவில் வந்ததும் சட்டையைப் பற்றியிருந்த பாரதியின் கைகளை உதறித் தள்ளினான்.

"என்னடி. பெரிய பத்தினி வேஷம் போடுகிறாய். உன்னைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று நினைத்தாயா? ஊரில் உன் மாமனுடன் அடித்த கூத்து எனக்குத் தெரியாதா? படிக்க வைக்கிறேன் என்று அவனுடன் சேர்ந்து நீ ஊரைச் சுற்றவில்லை! அவன் அலுத்துப் போனவுடன் என் தலையில் கட்டிவிட்டார்கள்.

"இன்று நான் உன்னைத் தீண்டவில்லை என்றதும் என்னைவிட இளமையான என் தம்பி வேண்டும் உனக்கு!" - மேலும் மேலும் அவன் வாரித் தூற்ற, தொய்ந்து போய்த் தரையில் அமர்ந்தாள்.

"அடப்பாவி! என்னவெல்லாம் பேசுகிறாய்? உன் கையால் தாலி வாங்கிய பாவத்திற்கு எத்தனை பேருடன் என்னைச் சம்பந்தப்படுத்துவாய். என் மாமா எனக்குத்



தந்தையைப் போன்றவர். உன் தம்பியை என் உடன்பிறந்த சகோதரனாகத்தானே நினைத்துக் கொண்டிருக்கிறேன். உன்னை மட்டும்தான் என் கணவனாக நினைக்கிறேன். உன் நினைவை மட்டும்தான் சுமந்து வாழ்கிறேன். என்னைச் சந்தேகப்படுவது நீ உன் தாயைச் சந்தேகப்படுவது போல. உன் தாய் எத்தனை சுத்தமானவரோ நானும் அத்தனை சுத்தமானவள். என்னை நம்பு. வார்த்தைகளைக் கொட்டி விடாதே. அள்ள முடியாது!" - என்றவளைக் கூந்தலைப் பற்றி எழுப்பினான். தடுமாறி எழுந்தவளை மீண்டும் அறைந்தான்.

"நீ ஒரு கழிசடை... உன்னை என் தாயுடன் சம்பந்தப் படுத்திப் பார்க்கிறாயா? என் அம்மா சந்தனம். நீ ஒரு சாக்கடை. ச்சீ! உன்னைத் தொடவே அருவருப்பாக இருக்கிறது!" - என்று உதறினான்.

கால்களில் நிற்கக்கூடத் தெம்பில்லாமல் நின்றவள், அவன் உதறியதும் மீண்டும் கீழே விழுந்தாள். உடம்பை விட மனம் நொந்தது. தன்னையா தரம் கெட்டவள் என்கிறான்? அந்நிய ஆடவரின் முகத்தை நிமிர்ந்தும் பாராமல் பருவ வயதில் தோன்றும் எந்த ஆசைகளுக்கும் இடம் கொடாமல் கட்டுப்பாடாக வளர்ந்த வாழ்ந்த என்னையா அப்படிச் சொல்கிறான். மனம் கொதிக்க, மீண்டும் எழுந்தாள்.

"இதோ பாருங்கள். என்னை நம்புங்கள். நான் சுத்தமானவள். எனக்கு இந்த மாதிரித் தப்பு செய்யத் தெரியாது. என்னை என் பெற்றோர் அப்படி வளர்க்க வில்லை. என்னை நம்புங்கள்!" - மன்றாடினாள்.

"ஹூம். உன்னைப் பெற்றவரா? அவரைப் பற்றித் தெரியாதா எனக்கு. சும்மா கொடுப்பதென்றால் யாருக்கு வேண்டுமானாலும் பெண்களைக் கொடுத்துவிடுவார்.

இதுதான் உன் அப்பாவிற்குத் தொழிலோ" - தீயாய்ச் சுட்ட வார்த்தையில் சிலிர்த்து நிமிர்ந்தாள்.

"வேண்டாம். இதற்கு மேல் ஒரு வார்த்தை பேசி னாலும் நான் மனுஷியாக இருக்கமாட்டேன். ப்ளீஸ் போய்விடுங்கள். வெளியே போய்விடுங்கள்!" - என்றாள் விரலை நீட்டி எச்சரித்து.

"யார் யாரை வெளியே போகச் சொல்வது? இது என் வீடு. நான் சொல்லும் வார்த்தையை நீ சொல்கிறாயா? போடி வெளியே!" - கழுத்தில் கை வைத்தவளைத் தட்டி விட்டு ஆக்ரோஷமாய்த் திரும்பினாள்.

"நான் ஏன் போகவேண்டும்? இது என் வீடு. நான் வாழ வந்த வீடு. நான் ஏன் போக வேண்டும்?"

"வாழ வந்த வீடா? உன்னோடு வாழப் பிடிக்காமல் தானே நான் உன்னை வெளியே போகச் சொல்கிறேன். கண்டவனோடு பழகும் உன்னோடு என்னால் வாழ முடியாது. போடி வெளியே!" - என்றவனை உற்றுப் பார்த்தாள்.

"போகாவிட்டால்...?" - என்றாள் துணிவைத் திரட்டி. "போக வைப்பேன். கோர்ட்டில் கேஸ் போட்டு உன்னை நாறடிக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். நீயாகப் போய்விட்டால் மானமாவது மிஞ்சும்."

"ஹூம். மானமா? அதைத்தான் சற்றுமுன்னே காற்றில் பறக்க விட்டுவிட்டாயே! நாலு சுவருக்குள் போனாலும் நாலு பேர் முன்னிலையில் போனாலும் போன மானம் போனதுதான். அதனால் இனி நான் மானத்திற்கு பயப்படவில்லை. அதனால் தாராளமாய் கேஸ் போடு. என் மீது சுமத்திய பழியை நிரூபி. அப்படி நீ நிரூபித்துவிட்டால்



அடுத்த நிமிடம் நான் இங்கிருக்க மாட்டேன்." - உறுதி யாய்ச் சொன்னவளைக் கண்டு அயர்ந்து போனான் பிரசாத்.

மினி சொல்வது போல் இவளை அத்தனை சுலபமாய் வெளியேற்ற முடியாது போலிருக்கிறதே. எத்தனை முறை அறைந்தாலும் எத்தனை கொடுஞ் சொற்கள் பேசினாலும் அசராமல் நிமிர்ந்து நிற்கிறாளே. கிராமத்துப் பெண், இரண்டு வார்த்தை தவறாகப் பேசினால் அழுதுகொண்டு தாய் வீட்டிற்குக் கிளம்பி விடுவாள். அவளை அப்படியே அனுப்பிவிட்டு மினியைத் தாலிகட்டி அழைத்து வந்து விடலாம் என்று மனோகர் சொன்னது அனைத்தும் பொய்த்துப் போனது.

இந்த வீட்டை விட்டு வெளியேற மாட்டேன் என்பவளிடம் என்ன சொல்லி வெளியேற்ற முடியும்?

"இதோ பார்! நீ எத்தனை காலம் இங்கிருந்தாலும் உன்னை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. உன்னுடன் வாழவும் முடியாது. அதனால் இங்கிருந்து உன் வாழ்நாளை வீணாக்குவதை விடப் பேசாமல் போய்விடு. நான் உனக்கு மணவிலக்கு அளித்துவிடுகிறேன். அதன் பிறகு நீ யாரை வேண்டுமானாலும் கட்டிக்கொள். உன் மாமாவைக் கூடக் கட்டிக்கொள். எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. என்னை விட்டுப் போய்விடு!" - என்றான் மெதுவாய்.

"அதை எல்லோர் முன்னிலையிலும் சொல்ல முடியுமா?" - அழுத்தமாய்க் கேட்டாள்.

"யார் முன்னிலையில்?" - குழம்பினான்.

"என்னை யார் முன்னிலையில் திருமணம் முடித்தீர் களோ அவர்கள் முன்னிலையில். அவர்கள் அனைவரையும் அழைத்து உங்கள் முடிவைச் சொல்லுங்கள். ஊர் அறிய

உண்மையைச் சொன்னால்தான் நல்லது. எதற்காக நான் வீண் பழியைச் சுமக்க வேண்டும்?"

"என்ன?... என்ன உண்மை?"

"நீங்கள் ஆண்மையற்றவர் என்ற உண்மை. அது தெரிந்தால்தானே எனக்கு வேறு மாப்பிள்ளை கிடைப்பார்?"

"ஏய்! என்னடி சொன்னே? யாரைப் பார்த்து ஆண்மை யற்றவன் என்று சொன்னாய்" - சீறிக்கொண்டு வந்தவனை அலட்சியமாய் ஒதுக்கினாள்.

"ஷ்ஷ்... இப்படிக் கோபப்பட்டா உண்மையில்லைன்னு ஆகிடுமா? உங்க மேலே குறை இருப்பதால்தான் என்னை விட்டு விலகி ஓடுகிறீர்கள். இரவில் வீடு தங்குவதில்லை. என்னைப் பார்க்கவே பயந்து பதுங்குகிறீர்கள். அப்படி யென்றால் நான் சொல்வதுதானே உண்மை.

"உங்கள் மீதுள்ள குறையை மறைக்கத்தான் என்னைக் கண்ட ஆண்களோடு ஒப்பிட்டுக் கேவலப்படுத்தி வெளி யேற்றத் திட்டம் போடுகிறீர்கள். உங்கள் பிழைக்கு நான் ஏன் பலியாக வேண்டும். ஊரைக் கூட்டி உண்மையைச் சொல்லிவிட்டால் நான் சுத்தமாகத்தான் இருக்கிறேன் என்று தெரிந்த ஏதாவது ஒரு மாப்பிள்ளை என்னை மணக்க முன்வருவார் இல்லையா? அதனால்தான் சொல்கிறேன்," - என்றாள் மிடுக்காய்.

ஆவேசமாக அவள் தோளைப் பற்றித் திருப்பினான் பிரசாத். "என்ன சொன்னாய்? எனக்கா... நானா ஆண்மை யற்றவன்?"

"அதை என் வாயால் திரும்பவும் சொல்ல வேண்டுமா?"



"என்ன திமிர். என்னிடமே இத்தனை பேசுகிறாயா? உன்னை..." - பற்களைக் கடித்தான்.

"உண்மையைப் பேச எனக்கென்ன பயம்?" - இலகுவாய்ப் பாரதி கூற, பொங்கி எழுந்தான் பிரசாத்.

அந்தக் கணத்தில் மினி மறந்து போனாள். மனோகர் மறைந்து போனான். விரும்பாத மனைவி நினைவு அடியோடு அழிந்து போனது. பாரதி சுமத்திய குற்றம் மட்டுமே அவனை ஆட்டிப் படைத்தது. என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்? என்ன வார்த்தை சொல்லிவிட்டாள் என்ற கொதிப்பு தலைக்கேற, "நான் ஆம்பிள்ளை என்று காட்டுறேன்டி.. என் ஆண்மையை உனக்குக் காட்டுகிறேன். அதன்பிறகு சொல் நான் யார் என்று?" - என உறுமியவன் வேகமாய்ச் சென்று கதவைப் பூட்டினான்.

அவன் பலமாக அறைந்ததில், கொடும் மொழிகளைக் கேட்டதில், உடலும் உள்ளமும் மரத்துச் செயலற்றுப் போயிருந்த பாரதி என்ன பேசினோம், அவன் எதற்காக இத்தனை கோபமாய்க் கதவைப் பூட்டிவிட்டுத் தன்னை நோக்கி வருகிறான் என்று புரிந்து உணர்ந்து எழுவதற்கு முன் அப்படியே அவளைத் தூக்கினான் பிரசாத்.

இல்லை. இது தவறு. கணவன் மனைவி மனமொத்து வாழ்வது தானே தாம்பத்தியம். அதைவிடுத்து இது என்ன செயல் எனப் பலமாக மறுக்க எண்ணியவளின் தலைதான் அசைந்ததே தவிர, வார்த்தை வெளியே வர மறுத்தது. கை கால்களை அசைக்கவும் தெம்பின்றி அவன் பிடியில் துவண்டு சரிந்தாள்.

எந்த வேகத்தில் அவளைப் பற்றித் தூக்கினானோ அதே வேகத்தில் அறைக்குள் நுழைந்து படீரெனக் கதவை அறைந்து சாத்திவிட்டு அவளைப் படுக்கையில் போட்டான்.

அதுவரை லேசாய்த் தூறிக் கொண்டிருந்த மழை இடி மின்னலுடன் வலுக்கத் தொடங்கியது. ஹாலில் அமைதியாய் இருந்த போன் அடிக்க ஆரம்பித்தது. அடித்துக் கொண்டே இருந்தது. மீண்டும் மீண்டும் என வெகுநேரம் அடித்துவிட்டு மீண்டும் அமைதியாகிப் போனது.

# 17

பச்சைக் குழந்தையடி – கண்ணில்
பாவையடி சந்திரமதி
இச்சைக்கு இனிய மது – என்றன்
இருவிழிக்குத் தேநிலவு!

**மீ**ண்டும் மீண்டும் முயற்சித்து அலுத்துப் போனாள் செல்லம்மா. "என்ன போன் இது? அக்காவிற்குப் போகவே மாட்டேங்குது. நம்பர் சரிதானா?" - என்றாள் பிரதாப்பிடம்.

"நம்பர் சரிதான். இப்பத்தான் என் பிரெண்ட் கொடுத்தான். அங்கே மழை அதிகமாக இருக்கிறது என்றானே. நெட்வொர்க் ப்ராப்ளமாக இருக்கும். நீ இந்த நம்பரைப் பதிவு செய்து வைத்துக் கொள். எதற்கும் கொஞ்ச நேரம் கழித்து ஒருமுறை ட்ரை பண்ணிக்கோ. அப்பவும் கிடைக்கலைன்னா நாளைக்குப் பண்ணு. நான் இன்னும் ரெண்டு நாளில் ஊட்டிக்குப் போவேன். அங்கிருந்து போன் பண்ணுகிறேன். ஏதும் அவசரம் என்றால் என் நம்பருக்கு கால் பண்ணுங்க. இதில் என் நம்பரைப் பதிவு செய்து விடுகிறேன்," - என்றவாறு தனது



நம்பர் பாரதி நம்பர் அனைத்தையும் பதிவு செய்தவன் எதற்கும் இருக்கட்டும் என்று அண்ணனின் எண்ணையும் அப்பாவின் எண்ணையும் குறித்துக் கொடுத்தான்.

"சரி மாமா. அப்ப நான் கிளம்பட்டுமா? செல்லாவைப் படிக்க அனுப்புங்க. என்ன தேவை என்றாலும் தயங்காமல் எனக்கு போன் பண்ணுங்க. வரட்டுமா?" - என்றவாறு எழுந்தான்.

"சரி மாப்பிள்ளை! பத்திரமா போயிட்டுவாங்க. நேரம் கிடைக்கும் போது வாங்க!" - எனச் சிரித்து வழி யனுப்பினார் பெரியசாமி.

மௌனமாய் நின்ற செல்லம்மாவைப் பார்த்துக் கொண்டே, "சக்தி குட்டி! நல்லாப் படி. நிறைய மார்க் எடுக்கணும். மெஸேஜ் அனுப்பச் சொல்லிக் கொடுத்தேனே. நேரம் கிடைக்கும் போது எஸ்.எம்.எஸ் அனுப்பு. சரியா? வரட்டுமா?" - என்றான்.

பராசக்தி பலமான தலையாட்டலோடு விடைதர, "செல்லா! கவனமாப் படிக்கணும். நாளைக்கு போன் பண்றேன். வரட்டுமா?" - என்றான்.

அமைதியாய்த் தலையசைத்தாள். "ஓ.கே. கிளம்பறேன் அத்தே!" - என்றவாறு அவன் வெளியேற கிக்... கிக்... என்று போனில் சத்தம் கேட்டது.

"அட! மெஸேஜ் வந்திருக்கே. அக்காவா இருக்குமோ!" ஆவலாய் போனை உயிர்ப்பித்து வாசித்தாள். "பை செல்லம்! ஸ்மைல் ப்ளீஸ். உன் பிரதாப்!" - என்ற வாசகத்தைப் பார்த்ததும் உடல் முழுக்க மின்சாரம் பாயத் தன்னையும் மீறிப் புன்னகைத்தாள்.

வாசலில் நின்று அந்தப் புன்னகையை ரசித்துவிட்டு, சின்னத் தலையசைப்போடு புறப்பட்டான். அவன் சென்றதும் வீடே அமைதியாகியது. வெறுமையாய்த் தோன்றியது. அப்பாவும் சட்டையை மாட்டிக்கொண்டு வெளியேற, சக்தியும் லட்சுமியும் செல்லாவிடம் வந்தனர்.

"அடி ராஜாத்தி! டீச்சராகப் போறியாக்கும்!" - மகளைக் கட்டிக்கொண்டாள் அன்னை.

"ஆமாம்மா! என் கனவு பலிக்கப் போகுது. நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். இதை உடனே மாமாவுக்குச் சொல்லணும். அக்கா கேட்டா ரொம்ப சந்தோஷப்படுவா. போன் போட்டா எடுக்கமாட்டேங்குதே."

"இப்பப் போட்டுப்பாரேன். எனக்கு மனசுக்கு என்னவோ பண்ணுது. எம் பிள்ளைக்கு உடம்பு சரியில்லையோ என்னவோ. எனக்கு அடிவயிறு கலங்குது. இன்னொருவாட்டி போன் பண்ணிப் பாரும்மா. அவ குரலைக் கேட்டா கொஞ்சம் நிம்மதியா இருக்கும்!" - லட்சுமியின் தொண்டை அடைத்தது.

"இரும்மா, போடுறேன். முதல்ல நம்ம மாமாவுக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும். நாம கேட்காமலே போன் வாங்கித் தந்திட்டாரே!" - என்றவாறு எண்களைத் தட்டிவிட்டு போனைக் காதிற்குக் கொடுத்தாள் செல்லம்மா.

"அவன் பிறவி எடுத்ததே நமக்காகத்தான். அவன் மட்டும் இல்லை என்றால் உங்கள் மூவரையும் ஆளாக்கத் திணறிப் போயிருப்பேன். எனக்காகவே வாழ்ந்தவன் என் தம்பி. அவனுக்கு எப்போ விடியுமோ! அவனும் பொண்டாட்டி புள்ளைன்னு வாழ்ந்தாத்தானே எனக்கு நிம்மதி!" - பெருமூச்சு விட்டாள்.



"அம்மா! ஷ். பெல் அடிக்குது. யாரோ எடுக்கிறாங்க." - துள்ளினாள்.

"ஹலோ" - என்றது ஆண் குரல். சட்டெனக் குரல் புரிபடவில்லை. இரைச்சல் வேறு அதிகமாக இருந்தது. இரண்டுமுறை ஹலோ என்றதும் அத்தானாக இருக்குமோ என்ற எண்ணத்தில்,

"ஹலோ! யாரு? அத்தானா? நான் ஊர்ல இருந்து செல்லம்மா பேசுறேன். நல்லா இருக்கீங்களா?"

"யார்? செல்லம்மான்னா யாரு?" - என்ற பதிலில் மனம் சுருங்கியது. இத்தனை நாளில் அக்கா ஒருமுறைகூடத் தன்னைப் பற்றி அத்தானிடம் பேசவில்லையா? தன் பெயரைக்கூடத் தெரியாமல் இருக்கிறாரே.

"அத்தான்... நான் தான் பாரதியின் மூத்த தங்கை செல்லம்மா."

"ஓ! என்ன விஷயம்?" - அப்படிக் கேட்டதும் இன்னும் சுருக்குற்றாள். தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தாயும் தங்கையும் வருந்திவிடக் கூடாதே என்று பெரு முயற்சி செய்து சிரித்தவாறே பேசினாள்.

"அக்கா இல்லையா? அக்காகிட்ட பேசணும் போல இருக்கு. நாங்க இன்னிக்குத்தான் போன் வாங்கினோம். அதான் அக்காகிட்ட பேசலாம்னு..."

"உங்க அக்கா தூங்கிட்டு இருக்கா. அப்புறமா பண்ணு."

"என்ன? அக்கா தூங்குறாளா? இல்லையே! அவள் ஒரு நாளும் விளக்கு வைக்கும் நேரத்தில் தூங்க மாட்டாளே. அத்தான்! அவள் உடம்பிற்கு ஒன்றும் இல்லையே. சொல்லுங்கள் அத்தான்."

இந்தக் கேள்விக்குப் பதில் இல்லை. சற்று நேர அமைதிக்குப் பின் போன் ஆஃப் செய்துவிட்ட நற்கான ஓசை கேட்டதும் திடுக்கிட்டாள். ஏன் ஒன்றும் சொல்லாமல் வைத்துவிட்டார்? அக்கா ஏன் இந்த நேரம் படுத்திருக்கிறாள்? அவரின் குரல் கூடச் சரியில்லை. அங்கு ஏதோ நடந்திருக்கிறது. என்ன ஆயிற்று? இருவருக்கும் ஏதேனும் சண்டை சச்சரவு? சேச்சே! திருமணம் முடிந்து ஒரு மாதத்திற்குள் ஏன் சண்டை வரப்போகிறது?

ஆனால் ஏன் பதில் சொல்லாமல் போனைக் கட் பண்ணினார்? மனதிற்குள் ஏதோ நெருடியது.

இன்னும் தன் முகத்தையே ஆவலாய்ப் பார்த்துக் கொண்டிருந்த தாயின் முகம் பரிதாபமாய்த் தோன்ற, "அட! இதுதான் விஷயமா? நான் என்னவோ என்று பயந்துவிட்டேன். சரி அத்தான். அக்கா தூங்கட்டும். நீங்க எழுப்ப வேண்டாம். நாங்கள் காலையில் பேசுகிறோம். மழை இன்னும் நிற்கவில்லையா? சரி அத்தான். வைத்து விடவா?" - என்றவாறு போனைக் கட் பண்ணினாள்.

"என்னவாம்? ஏன் இப்போது தூங்குகிறாளாம்?, உடம்புக்கு ஒன்றுமில்லையே?" - பதட்டமாய்க் கேட்டாள் லட்சுமி.

"இல்லம்மா! நான் கூட ஒரு நிமிஷம் பதறிட்டேன். அங்கே ஒரே மழையாம். அத்தான் ரெண்டு நாளா வேலைக்குக்கூடப் போகாம வீட்லதான் இருக்காராம். டி.வி.யில. ஏதோ படம் பார்த்திட்டு குளிருக்கு இதமா போர்த்திகிட்டு தூங்குறாளாம். எழுப்பவான்னு கேட்டார். நான்தான் வேணாம்னுட்டேன்." துளியும் சந்தேகம் வராமல் சொன்னாள் மகள்.



"அட டா! மாப்பிள்ளை வீட்டில் இருந்தாரா? நாம் நேரம் கெட்ட நேரத்தில் போன் பண்ணிவிட்டோமா? இனி அடிக்கடி போன் பண்ணக் கூடாது. அலுவோ பண்ணினா பேசலாம். சரியா?"

"அதென்னம்மா நேரம் கெட்ட நேரம். எனக்குப் புரியவில்லையே!"

"இதெல்லாமா சொல்ல முடியும். போ. வேறு ஏதேனும் வேலை இருந்தால் பார்." - என்றவாறு வெட்கத்தோடு எழுந்து சென்ற அன்னையைப் பார்க்கையில் ஏதோ புரிவது போல் இருந்தது.

அப்படியும் இருக்குமோ? அதனால்தான் அத்தான் போனில் சரியாகப் பேசவில்லையோ. ச்சே! பேசாமல் நாளைக்கே பேசியிருக்கலாம். அதற்குள் என்ன அவசரம் எனக்கு. தன்னையே கடிந்து கொண்டாள் செல்வம்மா.

"அக்கா! சின்னத்தான் ரொம்ப நல்லவரு. இல்லக்கா?" எனக் கேட்ட சக்தியைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

"என்ன திடீர்னு அவரைப் பத்திப் பேச்சு?" - சாதாரணமாகக் கேட்டாலும் மனம் இன்பமாகவே அதை ஏற்றது.

"போக்கா! உனக்குக் கொஞ்சம் கூட நன்றி விசுவாசமே இல்ல. உனக்காக அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு டீச்சர் டிரெயினிங் சீட் வாங்கிட்டு வந்தார். நீ ஒரு நன்றியாவது சொன்னியா? முகம் கொடுத்துப் பேசுனியா? அந்த அத்தான் எவ்ளோ நல்லவங்க தெரியுமா? அப்பா முதல்ல பொட்டப் புள்ளைய படிக்க வைக்க எனக்கு விருப்பம் கிடையாது. மூத்தவளையே அவ மாமன்காரனும் அம்மாவுமா சேர்ந்து என் பேச்சைக் கேட்காமத்தான் படிக்க

வெச்சாங்க. எவ்ளோ பணம் செலவழிச்சோம். அவ்வளவும் வீணாப் போச்சு. இன்னொரு வீட்டுக்கு வாழப் போற பொண்ணுக்குப் பெரிய பெரிய படிப்பெல்லாம் எதுக்குன்னு சொல்லிட்டாங்க.

"ஆனா அந்த அத்தான்தான் விடாம நிறையப் பேசி நம்ம அப்பா மனசையே மாத்திட்டாரு தெரியுமா? நீ படிச்சு முடிச்சதும் அவரே பெரிய இடத்து மாப்பிள்ளையா பார்ப்பாராம். அப்படின்னா நீயும் கண்ணம்மாக்கா மாதிரி பங்களாவில போய் வாழ்வியா? கார் எல்லாம் இருக்குமா உன் வீட்ல?" - எனக் கேட்ட தங்கையைப் பரிவாய் அணைத்துக் கொண்டாள் செல்லம்மா.

"கார் பங்களா மட்டும் பெரிய வாழ்க்கை இல்ல கண்ணு. மனசுக்குப் பிடிச்ச மாப்பிள்ளை கிடைச்சாப் போதும். அதைவிடப் பெரிய வாழ்க்கை எதுவும் இல்லை. அதுல கிடைக்கிற நிறைவு வேறு எதிலும் கிடைக்காது."

"அப்போ! நம்ம அக்கா நிறைவான வாழ்க்கை வாழலில்லையா?"

"ஏன்? ஏன் அப்படிக் கேட்கிற?"

"கல்யாணமே வேண்டாம்னு அழுதாங்களே. அப்போ மாப்பிள்ளைய அவங்க மனசுக்குப் பிடிக்கலையா?" - என்றவளை அதட்டினாள் செல்லா.

"பெரிய மனுஷியாட்டம் பேசக்கூடாது. அக்கா மாப்பிள்ளையைப் பிடிக்கலன்னு சொல்லலில்லையே. படிக்க வேண்டும் என்றுதானே அழுதாள். அதனால அக்கா சந்தோஷமாகத்தான் இருப்பா. அம்மாகிட்ட போய் இப்படி எதையும் கேட்டு வைக்காதே. பாவம் அம்மா நீ சொல்வதை வைத்துக்கொண்டு பயந்து போவார்கள்.



புரியுதா? போ. போய்ப்படி.. உன் சின்னத்தான் போகும் போது என்ன சொன்னார்?"

"நல்லாப் படிக்கச் சொன்னார்."

"போ. முதலில் அதைச் செய். மற்றப் பேச்சுக்களில் மூளையை வீணாக்கி விடாதே. போ. படி," - என அவளை அனுப்பிவிட்ட பிறகும் மனதிற்குள் ஏனோ பிசைந்தது.

"சக்தி சொல்வதும் சரிதான். திருமணம் வேண்டாம் என்றவளை மிரட்டிப் பணிய வைத்துத்தான் அப்பா திருமணத்தை நடத்தினார். உடனே அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். நடுவில் ஒரு தபாலோ போனோ இல்லை. அக்கா உண்மையாகவே சந்தோஷமாக வாழ்கிறாளா? ஒருமுறை பேசினால் தெரிந்துவிடும். ஆனால் அத்தான் வீட்டில் இருக்கிறாரே. எப்படிப் பேசுவது? நாளை விடிந்ததும் முதல் வேலையாய் அக்காவிடம் பேச வேண்டும்," என முடிவு செய்த நேரம் போன் அடித்தது.

ஆர்வமாய் எடுத்தாள். பிரதாப்பின் பெயர் வந்ததும் உள்ளம் துள்ள, போனை ஆன் செய்து காதிற்குக் கொடுத்தாள். "ஹலோ! என்ன உடனே பண்ணிட்டீங்க. எங்கே இருக்கீங்க?" - என்றாள் மெதுவாய்.

"திருச்சிக்குப் போயிட்டு இருக்கேன் செல்லம். போகவே மனமில்லை. மனம் தஞ்சாவூரைத்தான் விரும்புது. அதான் ரெண்டு வார்த்தை பேசலாம்னு கூப்பிட்டேன்."

மனதிற்குள் உற்சாகம் பூவாய் மலர, "ம். பரவாயில்லை. இனிமே வரும்போதுதான் என் நினைவு வரும்னு நினைச்சேன்!" - என்றாள்.

"செல்வத்தை நினைக்காமல் இருப்பதா? நடக்கிற காரியமா அது?"

"போதும். ரொம்ப ஐஸ் வைக்க வேண்டாம்!" - சொல்லும் போதே கன்னம் சூடானது.

"உண்மையைச் சொன்னால் அதற்குப் பெயர் ஐஸா? சரி. அண்ணிக்கு லைன் கிடைத்ததா? பேசினாயா? எப்படி இருக்கிறார்களாம்?"

"போன் பண்ணினேன். எடுத்தது உங்கள் அண்ணன்."

"என்ன அண்ணனா? வீட்டிலா இருந்தான்?" - பிரதாப் வியந்தான்.

"இதிலென்ன அவ்வளவு வியப்பு. வீட்டில் இருப்பது பெரிய விஷயமா?"

"பெரிய விஷயம்தான். வேலை வேலை என்று எஸ்டேட்டில் தவமாய்க் கிடப்பவன் மாலை நேரம் வீட்டில் இருப்பது பெரிய விஷயம்தான். அண்ணன் நிறைய மாறியிருக்கிறான் என்று நினைக்கிறேன்."

"திருமணம் என்றால் சும்மாவா? அது எத்தனை மாற்றங்களை நிகழ்த்தி விடுகிறது. உங்கள் அண்ணன் மட்டும் என்ன விதிவிலக்கா?"

"எப்படியோ! நல்ல மாற்றங்கள் நடந்தால் சந்தோஷம் தான். அண்ணி பேசினார்களா? நன்றாக இருக்கிறார் களாமா?"

"இல்லப்பா! உங்க அண்ணனே என்னிடம் சரியாகப் பேசவில்லை. அக்கா தூங்குவதாகச் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். நாளைக் காலையில் தான் அக்காவிடம் பேச வேண்டும். பிரதாப்! எதற்கும் நீங்கள் சீக்கிரமாக ஊட்டிக்குப் போங்களேன். போய் அக்கா எப்படி



இருக்கிறாள் என்று பார்த்துவிட்டு எனக்கு போன் செய் வீர்களா? என்னவோ என் உள் மனம் பதறிக் கொண்டே இருக்கிறது."

"தங்கள் பேச்சுக்கு மறுபேச்சு ஏது? நான் நாளையே போகிறேன். போனதும் போன் பண்ணுகிறேன். இங்கே டிராபிக் ஹெவியா இருக்கு. அப்புறம் பேசுறேன். வெச்சுடவா?"

"ம். பத்திரமா பார்த்துப் போங்க. வெச்சிடுங்க," என்றவாறு போனை வைத்தாலும் மனம் அமைதியானது.

ஊட்டியில் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாய்ச் சினத்தோடு உலவிக் கொண்டிருந்தான் பிரசாத். மனம் உலைக்களமாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

"போச்சு! எல்லாம் போச்சு! இத்தனை ஆண்டாய்க் கட்டிக் காத்த கண்ணியம், ஒழுக்கம் அனைத்தும் வீணாகிப் போனது. ச்சே! போயும் போயும் ஒரு பெண்ணிடம், அதுவும் பலகீனமான பெண்ணிடம் அவள் விருப்பமின்றி... ச்சே! தன் மீதே வெறுப்புத் தோன்றியது.

மினியை அணைத்த இந்தக் கரங்களால் இன்னொரு பெண்ணைத் தீண்டி மாபாவி ஆகிவிட்டேனே. இது மட்டும் மினிக்குத் தெரிந்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? காறி உமிழ மாட்டாளா? இத்தனை ஆண்டாய் இருந்த கட்டுப்பாடு எப்படித் தறிகெட்டுப் போயிற்று? இனி என் மினியின் முகத்தில் எப்படி விழிப்பது? தன் கனவு அனைத்தும் பாழாகிப் போனதே. வேதனைக்கையில் நெஞ்சம் கசந்தது.

மழையும் விட்டபாடில்லை. குளிர் உடலை வாட்டியது. இந்தக் குளிரில் வெளியே செல்லவும் முடியாது. சென்றாலும் இந்த மனநிலையோடு மினியைப் பார்க்கவும்

முடியாது. அவசரப்பட்டு விட்டேன். நிதானமாய் கையாண்டிருக்க வேண்டும். முட்டாள்தனமாய்ப் பே முடிவில் நானே ஏமாந்து போனேன்.

தவளை தான் வாயால் கெடுவதைப் போல் எ வாயால் கெட்டேன். பெண் என்றும் பாராமல் அவளை வாரித் தூற்றினேனே. இப்போது என் நிலை இப் ஆகிவிட்டதே.

பாவம் சிறு பெண். கொஞ்சம் பொறுமையாய் பேசியிருக்கலாம். எத்தனை முறை அடித்துவிட்டே கடவுளே! எத்தகைய கொடிய செயலைச் செய் விட்டேன். நான் எப்போது மிருகமானேன்? நா கட்டியதை தவிர இந்தப் பெண்ணின் கணவனாக ந நடந்து கொள்ளவில்லையே.

எந்த உரிமையில் அவளை அடித்தேன்? கணவனாக இருந்தாலும் அவளை அடிக்க எனக்கு என்ன உரி அடித்ததில் கன்னம் வீங்கி இருக்குமோ? ரொம்ப வலித்திருக்குமோ? ஏற்கெனவே மெலிதானவள். இ அவளை அப்படி மிருகத்தனமாக... ச்சே! மீண் மீண்டும் தன் மீதே வெறுப்பு வர, அறைக் கதவைத் தி கொண்டு வெளியில் வந்தான்.

குளிர்காற்று ஊசியாய் மாறி உடலில் இறங்கி வீட்டினுள் அரவமே இல்லை. எங்கு போய்விட்டா சமைக்கிறாளோ? மெதுவாய் கிச்சன் உள்ளே சென்ற அங்கும் அவள் இல்லை. கடந்த ஒரு மாத காலம் வீட் நிற்கவே இல்லை. இப்போது நின்று நிதானமா பார்க்கையில் வீடு நிறையவே மாறியிருந்தது.

பொருள்கள் அனைத்தும் நேர்த்தியாய் அழ அந்தந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்க, வீடு செ



சுத்தமாய் இருந்தது. ஜன்னல் விரிப்பு தரை விரிப்புகள் கூட அழகாய் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் புதிதாய்ப் புதிய பூக்கள் பூக்குவளையில் அடுக்கப்பட்டு அழகாக வீற்றிருந்தன.

நிச்சயமாய் இது மேரியம்மாவின் வேலையாய் இருக்காது.

இந்தப் பெண்ணின் வேலையாகத்தான் இருக்கும். பேரென்ன? பாரதியா? பொருத்தமான பெயர்தான். கொஞ்சமும் பயப்படாமல் நேருக்கு நேர் நின்று பேசினாளே.

அந்தச் சம்பவம் நினைவு வந்ததும் முகம் கடுத்தது. என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்? நானும் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. ரொம்பவும் இழிவாகப் பேசிவிட்டேனா? பசி வயிற்றைக் கிள்ளியது. சாப்பிட ஏதேனும் இருக்கிறதா என ஆராய்ந்தான். சமைத்ததற்கான அடையாளமே இன்றி அனைத்துப் பாத்திரங்களும் கழுவிக் கவிழ்க்கப்பட்டு இருந்தன.

இன்று இவள் சமைக்கவே இல்லையா? மதியம் என்ன சாப்பிட்டாள்? ஒருவேளை சாப்பிட்டிருக்க மாட்டாளோ? ச்சே! இன்று வீட்டிற்கு வந்திருக்கவே கூடாது. அந்த பிள்ளைகளின் பேச்சைக் கேட்டு வீட்டிற்கு வந்தது தப்பு. அதனால் தான் இப்படி எல்லாமே மாறிப் போனது. இருநாள் வீட்டில் இருப்பதற்குள் இவளைப் பற்றித்தான் நினைப்பு வருகிறது. இவள் மீது தன்னையும் மீறி அக்கறை வருகிறதே.

இதற்காகத்தான் அப்பா வீடு வந்து சேர், வீட்டிற்கு வந்துவிடு என்றாரோ. கடவுளே! இந்த இக்கட்டில் இருந்து எப்படி மீள்வது? முதலில் ஒரு காபி குடித்தால்

பரவாயில்லை என்று தோன்ற, பிரிட்ஜைத் திறந்து பா கவரை எடுத்து பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து பற்ற வைத்தான். பால் பொங்கியதும் தேவையான அள காபியைக் கலந்து ஹாலிற்கு வந்து தொலைக்காட்சியை உயிர்ப்பித்து அதைப் பார்த்துக்கொண்டே காபியை அருந்தத் தொடங்கினான்.

இப்போதும் அவள் வெளியே வரவில்லை. உள்ளே சென்று அவளைப் பார்க்க மனமின்றித் தொலை காட்சியின் சத்தத்தை அதிகரித்தான். ம்ஹூம். இப்போது அறைக்குள் அசைவே இல்லை. தூங்கிவிட்டாளா இத்தனை சத்தம் கேட்டுமா எழ முடியவில்லை. எதற்கு உள்ளே சென்று பார்ப்போமா? காலிக் கோப்பையை மேஜை மீது வைத்துவிட்டு எழுந்து அறைக்கதவில் வைத்தபோது செல்போன் அழைத்தது.

எடுத்துப் பார்த்தான். மினி. இவளிடம் இப்போ என்ன பேசுவது? தயக்கமாய் கட் பண்ணினான். அடு கணமே மீண்டும் கூப்பிட்டது. எடுத்துப் பேசினான். மு வார்த்தையே, "என்னங்க அவ போயிட்டாளா? நீங்க ஏ வரல்ல? போனும் பண்ணல்ல. நான் பயந்துபோயிட்டே சரி, அவளை என்ன சொல்லி விரட்டினீர்கள்? வெறு மிரட்டலில் ஓடிவிட்டாளா? இல்லை, அடித்தீர்களா?" என்றுதான் கேட்டாள் யாமினி.

தொண்டையைச் செருமிக்கொண்டு, "இல் மினி, அவள் இன்னும் போகவில்லை!" - என்றா மொட்டையாய்.

மறுமுனையில் ஆத்திரமானாள் யாமினி. "என்ன இன்னும் போகவில்லையா? பின்னே புதுப் பொ டாட்டியைக் கொஞ்சிக் கொண்டு இருக்கிறீர்களா? நா உங்களிடம் என்ன சொல்லி அனுப்பினேன்?"



"நீ சொல்வது புரிகிறது மினி. ஆனால் அவள் அழுத்தக்காரியாய் இருக்கிறாளே. என்ன சொல்லியும் அசைய மறுக்கிறாள். அடித்தும் பார்த்துவிட்டேன். உன் பேச்சைக் கேட்டு முதன் முறையாய்க் கைநீட்டி அடித்திருக்கிறேன். அதுவும் ஒரு பெண்ணை..."

"அவள் மட்டும் என் அண்ணனை அடிக்கலாமா? அதுவும் ஒரு கையை உடைத்தே விட்டிருக்கிறாள்! டாக்டரிடம் போய்க் கட்டுப் போட்டும் அவன் வலியால் துடித்துக் கொண்டிருக்கிறான். அதைப் பார்த்து நான் கண்ணீர் வடிக்கிறேன். நீங்க என்னவென்றால் அந்த நாயை அடித்ததற்கு வருத்தப்பட்டுக் கொண்டிருக் கிறீர்கள். ஏன், அவள் காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்பதுதானே!"

"மினி!" - பிரசாத்தின் குரல் உயர்ந்தது.

"ஆமாம்! என்னிடம் காட்டுங்கள் உங்கள் வீரத்தை. ஒரு பொட்டச்சியை அடித்துவிரட்ட முடியவில்லை. பேச வந்துட்டீங்க பெரிசா!"

"மினி! ஸ்டாப் இட். சும்மா அடித்து விரட்டு என்கிறீர்களே! அவள் என்ன தப்புச் செய்தாளென்று விரட்டுவது? என்ன சொல்லி அனுப்புவது?"

"என்ன தப்பு செய்தாளா? என் அண்ணன் கையை உடைத்து இருக்கிறாள். நான் வாழவேண்டிய வீட்டில் சட்டமாய் உட்கார்ந்துகொண்டு அதிகாரம் பண்ணுகிறாள். என்னை உங்களுடன் சேர விடாமல் தடையாக இருக் கிறாள். இது போதாதா அவளை விரட்ட?"

"இதில் அவள் தப்பு எதுவுமே இல்லையே மினி. உன் அண்ணனைப் பற்றி உனக்கே தெரியும். பணம் கேட்ட தற்கு மட்டுமே அடித்திருக்க மாட்டாள். இவன் அவளிடம்

ஏதோ சில்மிஷம் செய்திருப்பான். அதனால் தான் அவள் கை நீட்டியிருக்கிறாள். நான் விசாரிக்கிறேன்."

"விசாரிப்பதா? அப்போ என் அண்ணன் சொன்னதை நம்பவில்லையா? இனிப் பணம் கேட்டு வருவாயா என்று கேட்டுக் கையை உடைத்து இருக்கிறாள். இதை அவளிடம் விசாரிக்க என்ன அவசியம்? வீட்டிற்குப் போய் முழுதாய் இரண்டு மணி நேரம் ஆகவில்லை. அதற்குள் அவளிடம் மயங்கி விட்டீர்களா?" - மினியின் குரலில் குரோதம் தெறித்தது.

"மினி! என் நிலை புரியாமல் பேசாதே. இங்கே நடந்ததே வேறு. அதை யெல்லாம் போனில் பேச முடியாது. நாளை வந்து சொல்கிறேன்."

"ஏன் இப்போது வந்தால் என்னவாம்?"

"இல்லை மினி. மழை வலுவாக இருக்கிறது. இந்நிலையில் காரை ஓட்ட முடியாது. அதோடு..."

"காரை ஓட்ட முடியாதா? அவளை விட்டு வர முடியாதா?"

ஆயாசமாக இருந்தது. ஏற்கெனவே அதிகமான கோபத்தில் உடல் ஆட்டம் கண்டிருந்தது. இதில் தன் மிருகத்தனமான செயலால் மனதளவில் ஓய்ந்து போயிருந்தான். உடல் முழுக்க அசாத்தியக் களைப்பில் இருந்தது. இதில் மினியின் ஏடாகூடமான பேச்சு அலுப்பையே ஏற்படுத்தியது.

மினியும் இப்படிப் பேசி அவன் அறிந்ததில்லை. மென்மையாகத்தான் பேசுவாள். அதிர்ந்து ஒருவார்த்தை சொல்லமாட்டாள். பிரசாத் எது சொன்னாலும் அப்படியே ஏற்றுக் கொள்வாள். மறுத்தோ எதிர்த்தோ இன்று வரை



அவன் பேசிப் பார்த்ததில்லை. அண்ணன் கை ஒடிந்து கிடப்பதால் இப்படிப் பேசுகிறாளோ என்னவோ? ஆனால் இப்படிக் குதர்க்கமாகவே பேசிக் கொண்டிருந்தால் எரிச்சல் வராதா? தன்னைச் சமாளித்தவாறே,

"சரி மினி! நீ போனை வை. நான் நாளைக் காலையில் வந்து பேசுகிறேன்," - என்றான். அப்போதும் அவள் விடுவதாக இல்லை.

"ஏன்? ஏன் வைக்க வேண்டும்? என்னிடம் பேசுவதை விட வேறென்ன பெரிய வேலை உங்களுக்கு?"

சுள்ளெனக் கோபம் ஏற, "இருக்கிறது, என் மனைவி சாப்பிடாமல் படுத்திருக்கிறாள். அவளுக்குச் சாப்பிட ஏதேனும் கொடுக்க வேண்டும். போனை வை," - என்றான்.

இந்த வார்த்தையில் அதிர்ந்து அவள் பேச்சற்றுப் போய்விட, போனை ஆப் பண்ணி சோபாவில் எறிந்தான். மெல்ல நடந்து பாரதி படுத்திருந்த அறைக்குள் நுழைந்தான். அறை இருட்டாக இருந்தது. விளக்கை உயிர்ப்பித்துக் கட்டிலுக்குப் பார்வையைக் கொண்டு சென்றவன் அதிர்ந்தான்.

கட்டிலில் அலங்கோலமாய்க் கிடந்தாள் பாரதி. அவசரமாய் ஓடி அவளது ஆடைகளைச் சரிசெய்து குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தவளைக் கம்பளியால் கழுத்துவரை மூடினான். கன்னங்கள் சிவந்து உப்பிப் போயிருக்க, அவன் கைவிரல்கள் அப்படியே பதிந்து போயிருந்தன. தலை கலைந்து பரந்து விரிந்திருக்க முகத்தில் ஆங்காங்கே நகக் கீறல்கள்.

கடவுளே! என்ன காரியம் செய்துவிட்டேன். நானா? நானா இப்படி நடந்து கொண்டேன். காமக் கொடூரனை விடவும் கேவலமாகிப் போனேனே. முகத்தில் படார்

படாரென அறைந்து கொண்டான். பாரதியிடம் ஏதோ அசைவு தெரிய ஆவலாய் நோக்கினான்.

அது அசைவு அல்ல. அவளது உடல் உதறிக் கொண்டது. என்னவென்று புரிவதற்குள் கையும் கால்களும் வெட்டிக் கொள்ள ஆரம்பித்தன. "என்ன ஆயிற்று? பாரதி உனக்கு என்ன ஆயிற்று?" - என அவளை அள்ளி எடுத்தான்.

அவனையும் மீறி உடல் வெட்டிக்கொண்டு கீழே சரிய, "சோமூமூ!" - என அலறினான் பிரசாத்.

# 18

சுட்டும் விழிச்சுடர் தான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி - கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ?

**கா**திலிருந்து போனை எடுக்கவும் தோன்றாமல் சிலையாய் நின்று கொண்டிருந்த தங்கையிடம் படுக்கையில் வலியால் முனகிக் கொண்டிருந்த மனோகர், "என்னம்மா! ஒண்ணுமே பேசாம காதில் போனை வெச்சிட்டே நிக்கிற! என்னதான் சொல்றாரு அவர்?" - என்று கேட்டான்.

முகத்திலிருந்த அதிர்ச்சி மாறாமல், "போனை வெச்சிட்டாரு!" - என்றவாறு போனை ஆஃப் பண்ணினாள் யாமினி.



"என்ன போனை வெச்சிட்டாரா? ஓ! இங்க வரப் போகிறாரா? நீ இப்படிக் காலம் நேரம் பார்க்காம அவரைக் கூப்பிடாதம்மா. இப்பவே அக்கம் பக்கம் இருக்கிறவங்க என் காதுபடவே அசிங்கமா பேசுறாங்க. பேசாம தாலி கட்டியிருந்தா இந்தப் பேச்சு வருமா? நான் சொல்றதைக் கேட்கிறியா நீ"

"ஆமாண்ணா. கேட்டிருக்க வேண்டும். நீ சொன்னதை நான் முழுதும் கேட்டிருக்க வேண்டும்." - பிரமை பிடித்தவள் போல் கட்டிலில் அமர்ந்தாள்.

"என்னம்மா ஒரு மாதிரிப் பேசுற. என்ன ஆச்சு?"

"அண்ணா! அவர் என்னை விட்டுப் போயிடுவாரோன்னு பயம்மா இருக்குண்ணா. என்னை மறந்திடுவாரோ? பெண்டாட்டியோட சேர்ந்திடுவாரோ?" - யாமினியின் குரலில் பயம் அப்பட்டமாய்த் தெரிந்தது.

"அட என்னம்மா நீ! உன்னை விட்டுப் போயிடுவாரா அவர். நீதான் உலகம்னு உன்னையே சுத்திட்டு இருக்கிறவரப் போய் சந்தேகப்படுறியே. சரி, போன்ல என்ன சொன்னார்? அவளை அனுப்பிட்டாராமா?"

"இல்ல. அவ போகலியாம்."

"அதானே! எப்படிப் போவா? அம்மாடி! பொண்ணா அவ. பத்ரகாளி. கோபப்படும்போது அவ முகத்தைப் பார்க்கணுமே. அப்படியே நீ கொழுந்துவிட்டு எரியுது மினி. ஒரு துளியாவது பயம் வரலியே அவளுக்கு. என்னையே வந்துபார்னு நின்னாளே. பிரசாத் ஒரு பிள்ளைப் பூச்சி. அவர் கோபத்துக்குப் பயப்படுவாளா? இவளையெல்லாம் பேசி விரட்ட முடியாதும்மா. தந்திரமா திட்டம் போட்டுத்தான் விரட்டணும். அவளுக்கு இருக்கு... எத்தனை முறை என்னைத் தெருநாய் என்றாள்.

அவளைத் தெருவில் நிறுத்த வைக்கிறேன் பார்." கறுவினான் மனோகர்.

"கிழிச்சே! நீ திட்டம் தீட்டி அதை நிறைவேற்றுவ தற்குள் அவள் பிள்ளையே பெற்றுவிடுவாள். எல்லாம் உன்னால்தான். பணம் தானே வாங்க அனுப்பினேன். போன இடத்தில் உன் எச்சில் புத்தியை ஏன் காட்டினாய்? இப்ப எல்லாம் நாசமாப் போச்சு."

"அட என்னம்மா, சும்மா என்னையே குற்றம் சொல்கிறாய். நீதான் அவளைப் பார்த்தாயே. என்ன ஒரு அழகு... என்ன கலர்... ஆச்சர்யம்தான். உன் பிரதாப் இன்னும் அவளிடம் நெருங்காமல் இருப்பது!"

"ச்சி! வாயை மூடு. ஒரு தங்கையிடம் பேசுவது போலவா பேசுகிறாய். அவள் ரம்பையாகவே இருந்தாலும் இவர் திரும்பியும் பார்க்க மாட்டார்!"

"பிறகேன் உனக்குப் பயம் வருகிறது?" - என்றான் அலட்சியமாய்.

"இல்லை. இன்று அவரது பேச்சு சரியில்லை. அங்கு ஏதோ நடந்திருக்கிறது. ரொம்பவும் அக்கறையுடன் என் மனைவியைச் சாப்பிட வைக்க வேண்டும் என்று என்னிடமே சொல்கிறார் அண்ணா. அப்படின்னா... அப்படின்னா... அங்க ஏதோ நடந்திருக்கிறது என்றுதானே அர்த்தம். அவள் ஏதோ நாடகமாடி இவரை வீழ்த்தி விட்டாள் என்று நினைக்கிறேன். நான் கூப்பிட்டும் அவர் வர மறுக்கிறாரே. இதிலேயே தெரிய வேண்டாமா?" - சட்டென எழுந்து அமர்ந்தான் மனோகர்.

"அப்படியா சொன்னார்? அய்யோ! அப்படின்னா அவள் என்னைப் பற்றி எல்லாம் சொல்லியிருப்பாளா? போச்சா! எல்லாம் போச்சா! ஐயோ! நான் எத்தனை கனவு



கண்டுட்டு இருக்கேன். எல்லாம் பாழாப் போச்சா?" - லபோதிபோ என அரற்றியவனை அதட்டினாள் யாமினி.

"ஷ். முதல்ல கத்துறத நிறுத்து. இந்தப் புத்தி அவகிட்ட போய்ப் பல்லைக் காட்டும்போது இருந்திருக்கணும். இப்போ போனதைப் பத்திப் பேசிப் பயனில்லை. இனி நடக்கப் போறதப் பத்தி முடிவெடுப்போம்."

"எந்த முடிவா இருந்தாலும் நீயே எடும்மா. கை வலி தாங்காம கொஞ்சம் ஊத்திக்கிட்டேன். மூளை வேலை செய்ய மாட்டேங்குது. தூக்கம் வேற வருது!" - என்றவாறு கொட்டாவி விட்டான்.

"தின்னுட்டு தூங்கத்தான் நீ லாயக்கு. உன்னை நம்பி இத்தனை நாளை வீணாக்கியது என் தப்பு. அவர் என் பின்னால் சுற்ற ஆரம்பித்த போதே திருமணத்தை முடித்திருக்க வேண்டும். உனக்குத் தேவையான அளவு பணம் வரட்டும் என்று விட்டது தப்பு. நீ பணத்திற்காக மட்டுமே அவரை மடக்கினாய். எனக்கு அப்படியில்லை. எனக்கு அவர் வேண்டும். என்னைவிட்டு அவர் விலகிவிட முடியாது. விடவும் மாட்டேன். நாளை வரட்டும். தாலி கட்டியே ஆகவேண்டும் என்று ஒரே பிடியாய் நின்று சாதித்தும் விடுவேன்!" - உறுதியாய்ச் சொன்னவளை வியப்பாய்ப் பார்த்தான்.

"ஏம்மா! இதே மேட்டரை அன்னிக்கு நான் சொன்னப்போ என்னவோ கோர்ட் ஜெயில்னு சொன்னியே. இப்ப அதெல்லாம் நினைவில்லையா?"

"ஏன் இல்லாம? அதுக்கும் வழி வெச்சிருக்கேன். அவதான் நேத்து வந்தவ. நான் கிட்டத்தட்ட ரெண்டு வருஷமா அவரை விரும்புறேன். இங்க உள்ள எல்லாருக்கும் அது தெரியும். அதனால பிரச்சனை இல்ல.

நாளைக்கு அவருக்கும் எனக்கும் கல்யாணம் முடிஞ்சதும் வெளியே தெரிந்துபோய்ப் பிரச்சனை என்று வந்தால் என்னைத் தான் முதலில் திருமணம் செய்தார். என் கணவரை மிரட்டி இன்னொரு கல்யாணம் செய்தது என் மாமனார்தான் என்று சுலபமாய்ப் பெரியவரைக் கைகாட்டிவிடுவேன். நான் விரும்புவது தெரிந்தும் என் பிரசாத்தை என்னிடம் இருந்து பிரித்து இன்னொருத்திக்குக் கொடுத்துவிட்டாரில்ல. அந்தப் பெரிசையே உள்ளே தள்ளிவிடுவேன். என்னைத் தவிக்க விட்டவனை நான் பழிவாங்க வேண்டாம்?" - இரத்தமெனச் சிவந்த தங்கையின் முகத்தைப் பார்த்து அசந்து போனான் மனோகர்.

"யம்மா! என் தங்கையா இது. இவ்வளவு அழகா மாஸ்டர் பிளான் எல்லாம் போடுறியேம்மா. உனக்குள்ள இவ்வளவு திறமை இருக்குன்னு தெரியாமப் போச்சே. தெரிந்திருந்தால் எப்போதோ இந்த மொத்தச் சொத்துக்கும் அதிபதியா ஆகியிருப்பேனே. இத்தனை நாளை வீணாக்கி விட்டேனே. மனோகரின் தங்கை என்பதை நிரூபித்து விட்டாயம்மா." - தங்கையை மெச்சினான்.

"போதும் அண்ணா. மிச்சத்தை நாளைக்கு வெச்சுக்க. நாளை விடிந்ததும் நீ போய் ரெண்டு மாலையும் ஒரு தாலியும் வாங்கிட்டு வந்திடு. போன வாரம் அவர் வாங்கித் தந்த பட்டுப்புடவை புதுசாவே இருக்கு. நான் அதைக் கட்டிக்கிறேன். நீதான் எனக்குக் கடவுள். உன் முன்னிலையில் எங்கள் திருமணம் நடக்கும். மறக்காமல் நீ போட்டோ மட்டும் எடுத்துவிடு. அதுதான் நமக்குப் பாதுகாப்பு. சரியா?"

"சரிம்மா. நான் அசந்து தூங்கிட்டாலும் எழுப்பிவிடு. நீயும் படும்மா. எனக்கு ரொம்பத் தூக்கம் வருது. ஏதும் தூக்க மாத்திரை தந்திருப்பாரோ டாக்டர்!" -



சொல்லிக்கொண்டே படுத்தவன் அடுத்த் நிமிடம் தூங்கி விட்டான்.

யாமினி எழுந்து மெல்ல நடைபோட்டாள். நாளைய நிகழ்ச்சியில் என்னென்ன திருத்தங்கள் செய்ய வேண்டும். எப்படிப் பிரசாத்திடம் பேச வேண்டும் எனத் தனக்குள்ளே ஒத்திகை பார்த்துக் கொண்டாள்.

இந்த ஒருநாள் விட்டதே பெரிய தப்பு. அவளிடம் பேசக்கூட விரும்பாதவரை நான்தானே அனுப்பினேன். என் தலையில் நானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டேனோ! இனி அவரை எங்கும் விடக்கூடாது. நாளை திருமணம் முடிந்ததும் என்னை மொத்தமாய் அவருக்குக் கொடுக்க வேண்டும்.

அதன் பிறகு என்னைவிட்டுப் போவாரா என்ன? லேசான அணைப்பு கொஞ்சல் ஓரிரு முத்தத்திற்கே மயங்கிக் கிடப்பவர் என்னையே கொடுத்த பின் மனைவியை ஏன் பார்க்கப் போகிறார்? நம் வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டும். சீக்கிரமே குழந்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். பிறகெப்படியும் சிவராமன் என்னை மருமகளாய் ஏற்றுக் கொண்டுதானே ஆக வேண்டும். அப்போது காட்டுகிறேன் நான் யாரென்று.

விடிந்தால் திருமணம் என்ற நினைப்பில் தூக்கம் தூரமாய்ப் போனது. நாளை முதல் பிரசாத்! நீங்கள் உனக்கே எனக்கு என்ற இறுமாப்புடன் விடிவதற்காகக் காத்திருந்தாள் யாமினி.

பங்களா முழுவதும் விளக்கு எரிந்தது. வாசலில் டாக்டரின் கார் நிற்க, சோமு நொடிக்கொரு தரம் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான். நல்ல

வேளையாய்... இந்த மழை யிலும் டாக்டர் வீட்டிற்கு வந்து விட்டார். இல்லையென்றால் சின்னம்மா என்ன ஆகி யிருப்பார்களோ என்ற தவிப்பு அவனுக்கு. உள்ளே பெண் மருத்துவரின் முன்னே தலை கவிழ்ந்து நின்றிருந்தான் பிரசாத். மருத்துவர் ராஜலக்ஷ்மி அவனைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள்.

''படித்தவர்தானே நீங்கள்! இப்படியா காட்டு மிராண்டித்தனமாய் நடந்து கொள்வது. ஆண் என்ற ஆணவமா? உங்கள் வெறித்தனத்தால் இந்தப் பெண் உயிரையே இழந்திருப்பாள் தெரியுமா?"

பதறினான் பிரசாத். "ஐயோ டாக்டர்! அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள். ஏதோ தவறுதலாய்..."

''என்ன மிஸ்டர் தவறுதலாய்? இவள் உங்கள் மனைவிதானே. இளம் மனைவியை இப்படியா நாசமாக்குவது. அவள் உடம்பிற்குச் சுகமில்லையோ என்னவோ. வேண்டாம் என்றால் விடுவதுதானே. இப்படியா வக்கிரமாய் நடந்துகொள்வது. 'ஸாடிஸ்ட்'."

"டாக்டர்! நீங்கள் நினைப்பது போல் இல்லை. இது வேறு. சிறு வாக்குவாதம். அது முற்றியதால் இப்படி ஆகி விட்டது."

''நான் நம்ப மாட்டேன். அவள் கன்னத்தைப் பார்த்தீர்களா? எப்படி உங்கள் விரல் பதிந்து இருக்கிறது. உங்களுக்கு ஒத்துழைக்க மறுத்ததால் அவளை அடித்துத் துன்புறுத்தி உங்கள் வெறியைத் தீர்த்துக் கொண்டீர்கள். நீங்கள் எல்லாம் ஒரு மனிதனா? ஒரு பெண் வயிற்றில் தானே பிறந்தீர்கள்?" - மண்டியிட்டு அமர்ந்து கண்ணீர் விட்டான்.



''டாக்டர். ப்ளீஸ், வார்த்தையால் என்னைக் கொல்லாதீர்கள். எங்களுக்குள் நடந்த பிரச்சனை வேறு. அதை என்னால் சொல்லவும் முடியாது. அவளை அடித்தது உண்மைதான். அதற்காக நான் எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிப்புக் கேட்கிறேன். தயவு செய்து இப்படிப் பேசி என்னை அசிங்கப்படுத்தாதீர்கள்.

"நான் ஒன்றும் அத்தனை மோசமானவன் இல்லை டாக்டர். நான் பிறந்தது முதல் பார்க்கிறீர்களே. என்னைப் பற்றித் தெரியாதா உங்களுக்கு? சத்தியமாய்ச் சொல்கிறேன் டாக்டர். நான் அவளைக் கட்டாயப்படுத்தி அடிக்கவில்லை. கொஞ்சம் பிரச்சனை. வார்த்தை தடித்ததால் கைநீட்டி விட்டேன்."

"இதைச் சொல்ல வெட்கமாக இல்லை. திருமணமாகி முழுதாய் இரண்டு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் குடும்பத் தகராறு. அடித்தீர்களா? ஏன்? அதற்குள் புது மனைவி கசந்துவிட்டாளா?" - சீறினாள் ராஜலக்ஷ்மி.

''நோ டாக்டர். நோ. என்னை அப்புறமாய்த் திட்டுங்கள். முதலில் என் மனைவிக்கு என்னவென்று சொல்லுங்கள். உடம்பு அப்படி வெட்டியதே. அவள் உடம்பிற்கு என்ன? ப்ளீஸ் அதைச் சொல்லுங்கள்."

''என்னவென்று சொல்வது? உங்கள் மனைவி சாப்பிட்டு எத்தனை நாட்களாயிற்று? உடம்பில் நீர்ச் சத்து முற்றிலுமாய்க் குறைந்துவிட்டது. பட்டினி கிடந்து தன்னையே வருத்தியிருக்கிறாள். போதாததற்கு உங்களிடம் அடி வாங்கி நொந்து கடைசியில் உங்கள் செயலால் மூர்ச்சை யாகிவிட்டாள். உடம்பில் ஜுரம் கண்டு அதைக் கவனிக்காமல் விட்டதால் குளிரில் ஜன்னி வந்திருக்கிறது. இப்படியே விட்டிருந்தால் இந்நேரம் போய்ச் சேர்ந்திருப்பாள்."

"டாக்டர்!" - வீறிட்டான் பிரசாத்.

"உண்மையைத்தான் சொல்கிறேன் மிஸ்டர் பிரசாத்.

"உண்மையைத்தான் சொல்கிறேன் மிஸ்டர் பிரசாத். யார் வீட்டில் தான் பிரச்சனை இல்லை. அதற்காகக் கைநீட்டி விடுவதா? அது என்ன அநாகரிகமான செயல். உங்கள் அம்மாவை நீங்கள் பிறக்கு முன்பே எனக்குத் தெரியும். உங்கள் அப்பா என்றாவது மனைவியை ஒரு அடித்திருப்பாரா? இன்றுவரை தன் மனைவியை ஒரு தாயாய்ப் பாதுகாக்கிறாரே. அதுதான் உண்மையான தாம்பத்தியம் பிரசாத்.

"ஒரு குறிப்பிட்ட வயது வரைதான் உங்கள் ஆட்டம் எல்லாம். ஆடி ஓயும்போது நீங்கள் சாயும் இடம் மனைவியின் மடிதான். வாழ்க்கை முழுவதும் உங்களுக் காக... உங்கள் நலனை மட்டுமே எண்ணி வாழ்பவள் மனைவி. அவளை அடித்துத் துன்புறுத்தலாமா?"

"ஸாரி டாக்டர். இனிமேல் இப்படி நடக்காது."

"இனியாவது புரிந்துகொண்டால் சரி. இது உங்கள் அப்பாவிற்குத் தெரிய வேண்டாம். பாவம்! மனம் உடைந்துவிடுவார். பிள்ளைகள் மீது அவருக்கு நிறைய நம்பிக்கை உண்டு. அதைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்."

"தேங்க்யூ டாக்டர். பாரதிக்கு ஒண்ணும் பயப்படும் மாதிரி இல்லையே!"

"அதை உறுதியாகச் சொல்ல முடியாது. காற்றும் மழையுமாய் இருக்கு. குளிர் காற்றுப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த மாத்திரையை மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை கொடுங்கள். இது பவர் டோஸ். அதனால ஏதாவது சாப்பிட வைச்சிட்டு மாத்திரை போடுங்க.



"ஒன் அவர்க்கு ஒரு முறை டெம்பரேச்சர் பார்த்துக் குறிச்சி வையுங்க. ஜுரம் அதிகமானா உடனே எனக்கு போன் பண்ணுங்க. நான் நாளைக்கு வர்றேன்," - என்றவாறு மருந்து மாத்திரை கொடுத்துவிட்டு எழுந்தாள் ராஜலக்ஷ்மி.

"இப்போ ஊசி போட்டிருக்கேன். நல்லா தூங்கட்டும். மாத்திரை கொடுக்க மறந்திட வேண்டாம். வேணும்னா ஒரு நர்ஸை அனுப்பட்டுமா?"

"நோ டாக்டர். ஐ வில் டேக் கேர். ரொம்ப தேங்க்ஸ் டாக்டர். இந்த மழையும் பார்க்காமல் வீட்டிற்கே வந்து ஹெல்ப் பண்ணியிருக்கீங்க. ரொம்ப தேங்க்ஸ்."

"அதெல்லாம் இருக்கட்டும். உங்க மனைவியைப் பத்திரமா பார்த்துக் கொள்ளுங்கள். இப்போதைக்கு அவங்களுக்குத் தேவை சத்தான உணவும், உங்க அன்பான கவனிப்பும் தான். அதைக் குறைவில்லாம செய்யுங்க. நல்லா ரெஸ்ட் எடுக்கணும் அவங்க. நீங்க உங்க வேலை எல்லாம் ஒதுக்கி வெச்சிட்டு மனைவியை மட்டும் பொறுப்பா கவனிங்க. இதுதான் முக்கியம். புரியுதா?" - கண்ணாடி வழியே கண்களை உருட்டி மிரட்டிய [illegible] சற்றே வயதான பெண் மருத்துவரைப் பார்த்துப் [illegible]கைத்தான் பிரசாத்.

"புரியுது டாக்டர். நீங்க சொன்னபடியே செய்றேன்."

"ம். குட். நான் காலையில் ஒரு பத்து மணிக்கு வர்றேன். வரட்டுமா?" - என்றவாறு தன் பேகை எடுத்துக்கொண்டு கிளம்பினாள். வாசல் வரை வந்து வழியனுப்பினான்.

[illegible]மூவை அழைத்து, "அம்மாவிற்குக் காய்ச்சல். அப்படி பயப்படும்படி ஒன்றுமில்லை. நீ போய்

கேட்டைப் பூட்டிவிட்டுப் படுத்துக்கொள்." - என்று
சொல்லிவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு மனைவியின்
அருகில் வந்து அமர்ந்து கொண்டான். மணிக்கட்டை
திருப்பி மணியைப் பார்த்துக் கொண்டான்.

மனைவியின் முகத்தைப் பார்த்தவாறே அவள்
கண்விழிக்கக் காத்திருந்தான். சின்னஞ்சிறு பூ முகம்
அறைந்ததில் சிவந்து தடித்திருந்த கன்னத்தை மெல்ல
வருடினான். இவ்வளோ பலமாக அடித்திருக்கிறேனே. அ
தாளாமல் தடுமாறி விழுந்தாளே.

மணமுடித்த நாள் முதல் ஒருநாள்... ஒரு நிமிடம் கூ
நின்று அவள் முகத்தைப் பார்த்ததில்லை. அவளிட
பேசியதில்லை. ஆனால் இன்று மொத்தமாய்ப் பேசி
தீர்த்துவிட்டேன். வாழ்நாள் முழுக்க அவள் மறக்
முடியாத வார்த்தைகளைப் பேசிவிட்டேன். எ
தம்பியுடன் கூட இணைத்துப் பேசினேனே.

எப்படித் துடித்துப் போனாள்? பிரதாப் எப்படி
பட்ட உத்தமன். அவன் என்னைப் போலில்லையே
நான்கூட வயதுக் கோளாறில் மினியிடம் விழுந்தே
ஆனால் அவன் எந்தப் பெண்ணையும் நிமிர்ந்தும் பார்
மாட்டானே. எத்தனை அறிவாளி... புத்திசாலி! ஒழு
மான உத்தமமான பிள்ளை அவன்.

என் சுயநலத்திற்காக அவன் மீதும் சேற்றை வா
யிறைத்து விட்டேனே. என் தவறை மறைக்கத் துளியு
களங்கமில்லாத என் மனைவியை எத்தனை நபரோ
இணைத்துப் பேசி மனதளவில் அவளைச் சாகடித்
விட்டேனே. இந்தப் பாவத்தை எந்தக் கங்கை
கொண்டு கரைப்பது?



பாரதி! என்னை மன்னிப்பாயா? நானும் நல்லவன் தான். என் மனதில் மினி இருக்கிறாள் என்று தெரிந்தும் என் அப்பா செய்த தவறுக்கு நீ பலியாகிவிட்டாய். இப்படி எதுவும் நடந்துவிடக்கூடாது என்றுதான் நான் வீட்டிற்கு வருவதையே தவிர்த்து வந்தேன். ஆனால் இன்று எல்லாம் கைமீறிப் போய்விட்டது. என்னை நேசித்த மினிக்கும் என்னை மணந்த உனக்குமாய்ச் சேர்த்து இரட்டைத் துரோகம் செய்துவிட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாது.

எனக்காகவே வாழும் மினி இதை எப்படித் தாங்குவாள்? அவன் பேச்சைக் கேட்டுத்தான் உன்னைத் துன்புறுத்தினேன் என்று உனக்குத் தெரிந்தால் நீ என்னை ஒரு மனிதனாகக்கூட மதிப்பாயா? உன்னை மணந்தது தவறு. எப்படியாவது திருமணத்தைத் தடுத்திருக்க வேண்டும். இப்போது நான் பாவி ஆகிவிட்டேனே. இதிலிருந்து எப்படி மீள்வேன் - முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தான்.

விடிய விடிய விழித்திருந்து சரியாய் மணிக்கு ஒரு முறை ஜுரம் பார்த்து நோட்டில் குறித்து வைத்தான். பாலைச் சூடாக்கி ஹார்லிக்ஸ் கலந்து அவளை எழுப்பிக் குடிக்க வைத்து மாத்திரைகளை விழுங்க வைத்தான். ஒரு கணமும் கண்மூடாமல் கவனமாய் விழித்திருந்தான். ஜன்னல் கதவுகளை இறுகச் சாத்திக் குளிர் தாக்காமல் இருக்கக் கணப்பை மூட்டினான். அதன் கதகதப்பில் மாத்திரையின் துணையால் தன்னை மறந்து உறங்கிய பாரதியை இமைக்காமல் பார்த்துக் கொண்டே அவளருகில் அமர்ந்திருந்தான்.

காய்ச்சல் வெகுவாய்க் குறைந்துவிட விடியும் வேளையில் கண்கள் செருக நாற்காலியில் உட்கார்ந்த

நிலையில் உறங்க ஆரம்பித்தான். அவன் உறங்க ஆர பித்ததும் பாரதி கண்விழித்தாள். கண்களைத் திறக் முடியாமல் இமைகள் கனத்தன.

சிரமமாய்க் கண்களைத் திறந்தவளின் பார்வையி முதலில் தெரிந்தது உட்கார்ந்த நிலையில் தூங்கி கொண்டிருந்த கணவனின் உருவம்தான். அவனருகி இருந்த குறுமேசையில் மருந்து, பிரித்த மாத்திரை கவர்க காலி டம்ளர் எல்லாம் அப்படியே இருந்தன. இரவி கனவில் யாரோ வாயைப் பிளந்து ஊற்றியது போல் இரு ததே. அது கனவில்லை. நிஜம். என்ன ஆயிற்று எனக்கு?

கையின் இரண்டு புஜங்களிலும் வலித்தது. ஊ போட்டார்களா? ஏன்? வாயெல்லாம் கசந்து உடம்ப அசைக்க முடியாமல் வலித்தது. தலை விண்விண் தெறித்தது. கண்கள் தீப்பற்றியது போல் எரிந்த காய்ச்சலாக இருந்திருக்குமோ? காய்ச்சல் என்றால் கன் இப்படி வலிக்குமா?

யோசனையாய்க் கன்னத்தைத் தடவியபோதுதா நேற்று நடந்த நிகழ்ச்சிகள் வரிசையாய்க் கண்முன் தோன்றின. உடம்பின் வலி ஏனென்று புரிய ம நொந்துபோனாள். என்னவெல்லாம் பேசிவிட்டார்? எ அப்படிப் பேசினார்? உண்மையில் உள்ளத்தில் இரு வந்த வார்த்தைகள் தானா? அவர் சந்தேகிக்கும்படி நான் நடந்து கொண்டேன். இல்லையே... இவரை மட் தானே மனதளவில் நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தே

நான் பேசியதும் தவறோ? அதனால்தான் கோபத் அப்படி நடந்து கொண்டாரா? மனமுவந்து என் ஏற்றுக் கொள்ளவில்லையா? என்னைப் பிடிக்கவில்லை இவருக்கு? பிடிக்காமல் ஏன் மணந்துகொண்டா



பலவிதக் கேள்விகள் தலைக்குள் குடைய மீண்டும் உடம்பில் அனல் தகித்தது. மாத்திரையின் வேகத்தால் வயிறு கபகபவென எரிந்தது. ஏதாவது சூடாகக் குடிக்க வேண்டும். பெருமுயற்சி செய்தும் காலை அசைக்க முடியவில்லை. முதுகை நிமிர்த்த முடியவில்லை.

உதவிக்கு ஆளில்லாமல் எழ முடியாது போலிருக் கிறதே! இயலாமையால் கண்களில் நீர் சுரந்தது. கை கால்கள் தொய்ந்தன. கணவரையாவது எழுப்பலாம் என முயற்சித்தபோது போன் வீறிட்டது. திடுக்கிட்டு விழித்தான் பிரசாத்.

விழித்தவன் படுக்கையில் தடுமாறிக் கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் பதறி எழுந்து வந்தான். "பாரதி! என்ன வேண்டும். காய்ச்சல் இல்லையே. உடல் சுடுகிறதே. ஐயோ! மாத்திரை தராமல் கண் அயர்ந்து விட்டேனே. ஒன் செகண்ட். ஒன் செகண்ட். ஹார்லிக்ஸ் கலந்து எடுத்துட்டு வர்றேன். மாத்திரை போடலாம்," - என்றவாறு அவசரமாய் வெளியேறினான்.

"போன் அடிப்பது கூட அவருக்குக் கேட்கவில் லையா? இல்லை, என் உடல்நிலைதான் முக்கியம் என்று ஓடுகிறாரா? எவ்வளவு அக்கறை என்று நினைக்கையில் பாரதியின் முகம் வலியையும் மீறிப் புன்னகைத்தது.

இரவு முழுவதும் விழித்தே இருந்தாரா என்று நினைக்கையில் மனம் பூரித்தது. கோபத்தில் கண்டபடி பேசினாலும் எனக்கு ஒன்று என்றதும் ஓடி விடவில் லையே. அருகிலேயே இருந்து கவனித்திருக்கிறாரே. ஏன்தான் அவரைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறேன். அவளது எண்ண அலைகளைக் கலைத்து மீண்டும் போன் சிணுங்கியது.

"ம்ப்ச்! யார் இந்தக் காலை வேளையில்... நன்றாக விடியக்கூட இல்லையே. ஒருவேளை மாமா அத்தை யாராவது போன் செய்கிறார்களோ? நேற்றே போன் பண்ணித் தனது உடல் நிலையைப் பற்றிச் சொல்லியிருப்பாரோ. அதனால்தான் போன் செய்கிறார்களோ?" - கட்டிலில் லேசாய் நகர்ந்து கை எட்டும் தூரத்தில் இருந்த போனை எடுக்க முயற்சிக்கும் போது ஆவி பறக்கக் கப்பில் சூடான பானத்தோடு வந்தான் பிரசாத்.

"போன் அடிச்சிட்டே இருக்குதுங்க. முதல்ல அதை எடுத்துப் பேசுங்க."

"ம். இதோ. நீ இதைக் குடி. பிறகு பிரெட் சாப்பிட்டு விட்டு மாத்திரை போடலாம்," - என்றவாறு அவளிடம் ஹார்லிக்ஸ் கோப்பையைக் கொடுத்துவிட்டு இன்னும் வீறிட்டுக் கொண்டிருந்த போனை எடுத்துப் பார்த்தவன் திடுக்கிட்டான்.

மினி அழைக்கிறாள் எனத் தெரிந்ததும் தவிப்பாய் மனைவியை ஏறிட்டான். அவள் நிதானமாய் துளிதுளியாய்ப் பானத்தை அருந்திக் கொண்டிருக்க, போனைக் காதிற்குக் கொடுத்து, "ஸாரி! இன்னிக்கு எஸ்டேட்டுக்கு வரமுடியாது. நான் வீட்டில் இருந்தாக வேண்டும். மனைவிக்கு உடல் நலமில்லை. நான்தான் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொள்ள வேண்டும். என்ன வேலையென்றாலும் மானேஜரிடம் சொல்லுங்கள். போன் பண்ணித் தொந்தரவு பண்ண வேண்டாம். பிறகு நேரில் பேசிக் கொள்ளலாம்," - என்று போனை வைத்தான்.

மீண்டும் அது அடிக்கத் தொடங்க, "இது உன்னை ஓய்வெடுக்க விடாது!" - என்றவாறு ஸ்விட்ச் ஆஃப் பண்ணினான்.



"இனிப்பு சரியாக இருக்கிறதா?" - கேட்டவனின் புன்னகையில் பாரதியின் உடல் வலிகள் எல்லாம் பறந்தே போயின.

## 19

சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!

"என்ன மிசஸ் பிரசாத்? எப்படி இருக்கீங்க? உடம்பு பரவாயில்லையா?" - என்றவாறு வந்த மருத்துவரைக் கண்டதும் எழ முயற்சித்தாள் பாரதி.

"நோ... நோ... ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க. படுங்க... இப்ப எப்படி இருக்கு?"

"ம்... பரவாயில்லை டாக்டர். உடம்புதான் ரொம்ப வலி. அசைய முடியலை..."

பிரசாத்தை முறைத்துக்கொண்டே இரத்த அழுத்தம் காய்ச்சலின் அளவு எல்லாம் பார்த்தார் ராஜலக்ஷ்மி. "ம். ஓகே. காய்ச்சல் நல்லா குறைஞ்சிருக்கு. பிட்ஸ் வந்ததால உடம்பு வலி ரெண்டு நாளைக்கு இப்படித்தான் இருக்கும். சாப்பிட்டு கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடுங்க. எல்லாம் சரியாகிடும். ரெண்டு நாளைக்கு மாத்திரை தர்றேன். ஒரு இன்ஜெக்ஷன் போடுறேன். சரியா?"

"ம்" - எனத் தலையசைத்தாள். "என்ன மிஸ்டர் பிரசாத் நைட் நல்லா கவனிச்சிகிட்டீங்களா? தூங்கிட்டீங்களா?"

"ஐயோ! இல்ல மேடம். விடிய விடிய அவர் தூங்கவே இல்லை. அப்பப்ப குடிக்க ஏதாவது தந்திட்டே இருந்தார். இப்போகூட பிரெட், பால் எல்லாம் தந்தார்," - என்றாள் பாரதி அவசரமாய்.

"அடேயப்பா! புருஷனை எதுவும் சொல்லிடுவே னோன்னு பயமா? வெரிகுட். இப்படித்தான் இருக்கணும். உங்களுக்குள் அடிச்சாலும் பிடிச்சாலும் வெளியே யார்கிட்டயும் விட்டுக் கொடுக்கக்கூடாது. குட் கேர்ள். உன் பேரென்னம்மா? " - என்றாள் கன்னத்தைச் செல்லமாய்த் தட்டியபடி.

"பாரதி... பாரதி கண்ணம்மா."

"வாவ். வெரி நைஸ் நேம். எனக்கும் பாரதியை ரொம்பப் பிடிக்கும். அவரது கவிதைகள்னா உயிர். காற்று வெளியிடைக் கண்ணம்மா - பாட்டு எத்தனைமுறை கேட்டாலும் சலிக்காது இல்ல!" - பேசிக்கொண்டே ஊசியைச் செருகினாள்.

"நன்றாகத் தேய்த்துவிட்டுக் கொள்ளம்மா..."

முகத்தைச் சுருக்கியவாறே கையை அழுத்தித் தேய்த்தாள் பாரதி.

"என்ன பிரசாத் ஒண்ணுமே பேசாம நிக்கிறீங்க..."

"டாக்டர்... இனிமே பயப்படுற மாதிரி ஒண்ணு மில்லையே... சரியாகிடுமில்ல..."

"சரியாகிடும்... ஆனா நேத்து நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும். உங்க அன்பான கவனிப்புலதான் அவங்க எழுந்து நடமாட முடியும்... புரியுதா?"



"புரியுது மேடம்... நான் பார்த்துக்கிறேன்..."

"உங்க அம்மாவை வேண்டுமானால் வரச் சொல்லுங் களேன். ரெண்டு நாள் இருந்து பார்த்துக் கொள்ளட்டும். வாய்க்கு ருசியாய்ச் சமைத்துப் போடுவார்களே..."

"இல்ல மேடம். இங்கே கிளைமேட் ரொம்ப குளிரா இருக்கு. அம்மாவுக்கு ஏற்கெனவே வீசிங் பிராப்ளம் இருக்கு. ரொம்ப சிரமப்படுவாங்க. அதோடு இந்த நிலையில அவங்க வரவும் வேண்டாம்!" - என்றான் பாரதியின் கன்னத்தைப் பார்த்தவாறே.

"இந்தப் பயம் கையை நீட்டும் முன்பே இருந்திருக்க வேண்டும். இதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும். இனிமேல் இப்படி எதுவும் நடந்தால் நானே உன் அப்பாவிற்கு போன் பண்ணிச் சொல்லிவிடுவேன். ஜாக்கிரதை!" - மிரட்டினார் ராஜலக்ஷ்மி.

"இல்லை... இனி இப்படி நடக்காது. கண்டிப்பாய் நடக்காது!" - உறுதியாய்ச் சொன்னான்.

"சரிம்மா... நான் கிளம்புறேன். இவன் ஏதாவது ஏடாகூடம் பண்ணினால் என்னிடம் சொல். மருந்துச் சீட்டில் என் ஹாஸ்பிடல் போன் நம்பர், என் செல் நம்பர் எல்லாம் இருக்கு. ஒரு போன் பண்ணு. நான் வந்து விடுவேன். வரட்டுமா...?"

"தேங்க்யூ டாக்டர்!" - என்றாள் பாரதி.

"பிரசாத்! இந்த மாத்திரையைக் கொடுங்கள். காய்ச்சல் திரும்பாது. எதற்கும் ரெண்டு நாள் கழிச்சு வந்து பார்க்கிறேன். தெம்பாய் இருந்தால் கிளினிக்குக் கூப்பிட்டு வாங்க. வரட்டுமா...?" - என்றவாறு புறப்பட்ட ராஜ லக்ஷ்மியின் பின்னால் கணவனும் செல்ல, மெதுவாய்ப் படுத்துக் கண்களை மூடிக்கொண்டாள் பாரதி.

கடந்த ஒரு மாதகாலமாய் துன்பக்கடலில் மூழ்கிக் கொண்டிருந்த மனம் இன்று அமைதியாய் இருந்தது. வீட்டில் ஒரு கணமும் நில்லாத கணவன் தன்னைவிட்டு அகலாமல் உடனிருந்து கவனித்துக் கொண்டது மனதோடு உடம்பிற்கும் தெம்பூட்டியது. உடம்பின் அசதியில் சற்று முன் போடப்பட்ட ஊசி மருந்தும் செயல்படக் கண்கள் செருகின.

"தூக்கம் வந்தால் தூங்கு பாரதி. சாப்பிட எதுவும் வேண்டுமானால் கூப்பிடு. நான் குளித்துவிட்டு வரட்டுமா?" - எனத் தன்முன் வந்து நின்ற கணவனைக் கண்டதும் தூக்கம் விலகியது.

"சரிங்க. எனக்கு இப்போ எதுவும் வேண்டாம்," என்றாள் மெல்ல.

நகர மனமின்றி நின்றான் பிரசாத். "ஸாரி பாரதி. வெரி ஸாரி. நான் அப்படி நடந்திருக்கக்கூடாது. என்னை மன்னித்துவிடு. இனி இப்படி நடக்காது."

'எப்படி' என்பது போல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"நான் பேசியது நிச்சயம் உன் மனதைப் புண்ணாக்கி யிருக்கும். ஏதோ மூளை குழம்பிப் போய்க் கிறுக்குத் தனமாய்ப் பேசிவிட்டேன். எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதே. மன்னிச்சிடு!" - என்றான் மீண்டும்.

பாரதிக்கும் பேச்சு எழவில்லை. அவன் பேசியது பெரிய தப்புதான். நானும் பதிலுக்கு அப்படிப் பேசி யிருக்கக் கூடாதே! மனம் வருந்த.

"ஸாரி! நானும் அப்படிப் பேசியிருக்கக்கூடாது!" - என்றாள் பாரதி.



நேற்றைய நினைவில் உடலும் மனமும் கூசிவிடச் சட்டெனப் பேச்சை மாற்றினான். "நேற்று மாலை உனக்கு உன் வீட்டிலிருந்து போன் வந்தது. உன் தங்கை பேசினாள்," - என்றதும் உற்சாகமாய் எழுந்து நிமிர்ந்தாள்.

"போன் பண்ணினாளா? என்ன சொன்னாள்? ஏன் என்னிடம் தரவில்லை? நன்றாகப் பேசினீர்களா? உங்கள் கோபத்தை அவளிடம் காட்டவில்லையே?"

"அடேங்கப்பா... இந்தப் பெண்களுக்குப் பிறந்த வீட்டினர் என்றதும் எவ்வளவு சக்தி வந்துவிடுகிறது. உடனே எழுந்து அமர்ந்துவிட்டாயே!" - சிரித்தான்.

"எத்தனை நாளாயிற்று தெரியுமா, அவர்களைப் பார்த்து. அவர்களின் குரலையாவது கேட்டுவிட மாட்டோமா என்ற ஏக்கத்தில்தான் அந்தப் போனிற்கு முத்த மிட்டேன். அந்தப் போனிற்குத்தான் காத்திருந்தேன். அதற்குள் நீங்கள் ஏதேதோ பேசிவிட்டீர்களே!" - மீண்டும் கண்கள் பொங்கின பாரதிக்கு.

"ஸாரிம்மா! கொஞ்சம் ஆத்திரப்பட்டு விட்டேன். ஸாரி. அதையே நினைத்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. இந்தா உன் போன். இன்று காலையில் போன் பண்ணச் சொன்னேன். அநேகமாய் இப்போது போன் வந்தாலும் வரும்." - அவன் சொல்லி வாய்மூடுமுன் போன் சிணுங்கியது.

"ம். உனக்குத்தான். பேசு. நான் குளிச்சிட்டு வர்றேன்," - என்றவாறு விலகிச் சென்றவன் குளித்துவிட்டு வரும்வரை பாரதி பேசிக்கொண்டே இருந்தாள்.

மாமா போன் வாங்கித் தந்தது, அடுத்த வாரம் பொங்கல்சீர் கொண்டு வருவது பற்றி, பிரதாப் நேரில் வந்து தன் படிப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்தது, போன் நம்பர்

தந்தது என்று ஒன்றுவிடாமல் செல்லம்மா சொல்ல, அவளிடமிருந்து போனைப் பறித்து சக்தி, "ஊட்டியில் குளிர் எப்படியிருக்கு? ஊரைச் சுற்றிப் பார்த்தாயா?" என்று விசாரிக்க, கடைசியில் போன் அம்மாவின் கைக்கு மாறியது.

அம்மாவின் குரல் கேட்டதுமே கண்களில் நீர் கரந்தது.

"ராஜாத்தி! எப்படிம்மா இருக்க? அந்த ஊரு குளிரு உன் உடம்புக்கு ஒத்துக்கிச்சா? சளி பிடிக்காம பார்த்துக்கம்மா... மாப்பிள்ளை எப்படி இருக்கிறார்? உன்னை சந்தோஷமா வெச்சுருக்காரா?" - அன்னை கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் 'ம்' கொட்டினாள்.

அவர்களது பேச்சை நின்று கேட்க மனமின்றிக் கதவைத் திறந்து வெளியே வந்தான். சோமுவை நெருங்கி, "சோமு! மேரியம்மாவை இன்னும் காணோம். நீ போய் ஹோட்டல்ல ஏதாவது சாப்பிட்டுட்டு எங்களுக்கும் டிபன் வாங்கிட்டு வந்திடுறியா? அம்மாவுக்கு மாத்திரை கொடுக்கணும்... கொஞ்சம் சீக்கிரம் வா," என்றான்.

"இதோ ஸார்!" - அவன் நீட்டிய பணத்தை வாங்கிக் கொண்டு, "அம்மாவுக்குக் காய்ச்சலா இருக்கிறதால இட்லி வாங்கிட்டு வர்றேன் ஸார். உங்களுக்கு வேற எதுவும் வாங்கிவரவா?" - எனக் கேட்டான்.

"இல்ல... இட்லியே போதும்."

சரியென்று சோமு விலகிச் சென்றதும், வீட்டினுள் நுழைய முற்பட்டபோது வேகமாய் வந்து நின்றது ஒரு பைக்.

சட்டெனத் திரும்பியவன் குழப்பமானான். பைக்கை ஒருவன் ஓட்டி வந்திருக்க, பின்னால் இருந்து இறங்கினான்



மனோகர். ஒடிந்த வலதுகை கழுத்தோடு ஊஞ்சலாய் ஆடிக் கொண்டிருந்தது.

பிரசாத் அவசரமாய் வீட்டினுள் பார்த்தான். பாரதி இன்னும் போனில் பேசிக்கொண்டிருக்க, அவசரமாய்க் கதவை மூடிவிட்டு கேட் அருகே சென்றான். "என்ன மனோகர் வீட்டிற்கே வந்திட்டே... உன்னை இங்கு வர வேண்டாம் என்று நேற்றே சொன்னேனே..."

"நீங்கள் அங்கே வந்திருந்தால் நான் ஏன் இங்கு வரப்போகிறேன்?" - அலட்சியமாகவே பதில் சொன்னான்.

"அதுதான் போனிலே சொன்னேனே... இன்னும் ரெண்டு நான் வர முடியாது என்று..."

"அதுதான் ஏன் என்று மினி கேட்டுவிட்டு வரச் சொன்னாள். நீங்க ஏன் போனை ஆஃப் பண்ணி வைத்தீர்கள்?"

"மனோகர்! என் மனைவி கடுமையான ஜுரத்தில் படுத்திருக்கிறாள். நேற்று இரவு பிட்ஸ் வந்து பெரிய பிரச்சனையாகிவிட்டது. நான் வந்து தாறுமாறாய் அடித்ததால்தான் அவள் இப்படிக் கிடக்கிறாள். இங்கு வேறு யார் இருக்கிறார்கள். அப்படியே விட்டுவிட்டு வரமுடியுமா? ஏற்கெனவே டாக்டரம்மா என்னைக் கடுமையாய்த் திட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். அதுதான் உடனிருந்து பார்த்துக்கொள்கிறேன்."

"இதை மினியிடம் பொறுமையாய்ச் சொல்லியிருக்கலாமே. நீங்கள் போனைக் கட் பண்ணியதில் இருந்து அழுது கொண்டே இருக்கிறாள். பச்சைத் தண்ணீர்கூடக் குடிக்கவில்லை."

"ஓ காட்! அவள் ஏன் இப்படிச் செய்கிறாள். இங்கே உள்ள நிலைமை தெரியாமல் அவளும் என்னை வதைக்க வேண்டுமா?"

"உடனே உங்களைப் பார்க்க வேண்டும் என்று அழுகிறாள். நீங்கள் வந்தால்தான் சாப்பிடுவாளாம். நேரிலே வர வேண்டும் என்றாள். நான்தான் அவளைச் சமாதானம் செய்துவிட்டு வந்தேன். நீங்க உடனே வாருங்கள் ஸார்."

"பைத்தியம் மாதிரிப் பேசாதே மனோகர். கட்டிலை விட்டு இறங்க முடியாமல் இருப்பவளை அப்படியே விட்டுவிட்டு எப்படி வரமுடியும்? ஒரு மனிதாபிமானம் வேண்டாம்."

"இது வெறும் மனிதாபிமானம் மட்டும்தானே?"

"வேறு என்ன?" - கோபமானான் பிரசாத்.

"அதோடு நின்றால் சந்தோஷம்தான். எதற்கும் முதலில் மினியோடு பேசிவிடுங்கள். அவளை முதலில் சமாதானம் செய்துவிட்டு உங்கள் சேவையைக் கவனியுங்க. உங்களுக்கு எப்படியோ? எனக்கு என் தங்கைதான் முக்கியம்."

"சரி மனோகர். சத்தமா பேசாதே! நான் மினிகிட்ட பேசுறேன். இப்ப மேரியம்மா வந்ததும் முடிஞ்சா வந்து பார்க்கிறேன். நான் வர்றேன்னு சொல்லி மினியை சாப்பிடச் சொல்லு..."

"நான் சொன்னா கேட்கவா போறா... முதல்ல நீங்க பேசுங்க. உங்க வாட்ச்மேன் வர்றான். நான் கிளம்பறேன். மறக்காம போன் பண்ணுங்க. இல்லன்னா அவளே கிளம்பி வந்தாலும் வந்திடுவா. பிறகு எங்களைக் கோபிச்சுக்க கூடாது நீங்க. வரட்டுமா... டேய் வண்டியை எடுடா."



என்றவாறு பைக்கில் ஏறி அமர பைக் சீறிக்கொண்டு பறந்தது.

பிரசாத் அப்படியே நின்றான். இது எதுவோ வித்தியாசப்படுகிறதே! என்ன அது? யெஸ். எப்போதும் முதலாளி என்றே அழைக்கும் மனோகர் கைகட்டிக் குனிந்து நெளிந்து பவ்யமாய்ப் பேசும் மனோகரின் பேச்சு மாறியிருக்கிறதே. துளியும் பயமின்றி மரியாதையின்றி தான் அவனிடம் வேலை செய்வது போல் அல்லவா பேசிக்கொண்டு போகிறான்.

இதை முதலிலே தட்டிவைக்க வேண்டும். எனக்கே உத்தரவு போட்டுவிட்டுப் போகிறானா? மினியிடம் சொல்லி இவனை அடங்கியிருக்கச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் என்னை அடிமையாக்கிவிட்டு என் தலையில் ஏறி அமர்ந்துகொள்வான். இவனுக்கு இனி அதிக உரிமை கொடுக்கக்கூடாது என்ற முடிவுடன் தன்னை நெருங்கிய சோமுவிடம் சாப்பாடு பார்சல்களை வாங்கிக்கொண்டு வீட்டினுள் சென்றபோது பாரதி வயிற்றைப் பற்றிக் கொண்டு அவஸ்தையாய் உட்கார்ந்திருந்தாள்.

வேகமாய் அவளை நெருங்கி, "என்ன ஆச்சு பாரதி? வயிறு வலிக்கிறதா? ஏன்?" - என்றான் பதட்டமாய்.

"வலிக்கலைங்க. ரொம்ப பசிக்குது. தீயாக் காந்துது!" என்றாள் கண்களில் துளி கண்ணீர் மின்ன.

"ஓ ஸாரி... ஸாரி... பவர் டோஸ் மாத்திரை. அப்பப்போ சாப்பிட ஏதாவது கொடுங்கன்னு டாக்டர் சொன்னாங்க. நீ இன்னும் டிபன் சாப்பிடலியே... அதான் அப்படி இருக்கு. இதோ ஒன் செகண்ட்!" - என்றவாறு மளமளவென பார்சலைப் பிரித்து இட்லிகளை எடுத்துத்

தட்டில் வைத்து, கொஞ்சமாய்ச் சாம்பார் ஊற்றி அவளிடம் நீட்டினான்.

வேகமாகச் சாப்பிட ஆரம்பித்தாள் பாரதி. ஓட்டமும் நடையுமாக ஓடிவந்தாள் அந்த ஐம்பது வயது மேரியம்மா.

''ஐயா! வணக்கமுங்க. அம்மா! என்னங்கம்மா ஆச்சு? மழையில நனைஞ்சீங்களா? இப்பத்தான் சோறு சொல்லிச்சு. உடம்பு இப்ப தேவலையா?'' - என்றாள் பதட்டமாய்.

"மேரிம்மா! அவள் சாப்பிடட்டும். நீங்க கொஞ்சம் பால் எடுத்திட்டு வாங்க. மாத்திரை போடணும்,'' - என்றான் பிரசாத்.

"இதோய்யா! ஒரே நிமிஷம்,'' - என்றவாறு அவள் கிச்சனுக்குள் போக, "பாரதி, நீ மெதுவா சாப்பிடு! நான் மானேஜருக்கு ஒரு போன் பண்ணிட்டு வந்திடுறேன். சாப்பிடு,'' - என்றவாறு தன் போனை எடுத்துக்கொண்டு பால்கனிக்குச் சென்றான்.

மழை சுத்தமாய் நின்று போயிருக்க, இதமான காற்று வீசியது. போனை எடுத்து மினியின் எண்களை அழுத்தி விட்டுப் பார்வையைக் கீழே வீசினான். வீட்டின் முன் சுவரோரமாய் வரிசையாய் நின்ற செடிகள் இப்போதுதான் கண்ணில் பட்டன.

வரிசையாய் அழகாய் இருந்த செடிகள் அனைத்தும் மொட்டும் பூவுமாய்க் கண்ணைப் பறித்தன. மஞ்சள் ரோஜாக்களே அதிகமாக இருக்க, பாரதிக்கு மஞ்சள் நிறம்தான் பிடிக்குமோ என்ற எண்ணம் ஓடியபோதே,

"எங்கே இருக்கீங்க?'' - எனக் கோபமாய்க் கேட்டாள் மினி.



"வீட்லதான்!'' - என்ற பதிலில் இன்னும் ஆத்திரமானாள்.

''ஓஹோ! என் அண்ணன் வந்து சொல்லியும் நீங்க கிளம்பலையா? அப்போ என்னை விட அவதான் உங்களுக்கு முக்கியமாப் போயிட்டா. ஒரே ராத்திரியிலே அவகிட்ட விழுந்திட்டீங்க இல்ல...''

''அசிங்கமாப் பேசாதே மினி. எல்லாம் உன்னால் வந்ததுதான். பேசாமல் கெஸ்ட் ஹவுஸ் ரூமில் இருந்தவளை அழைத்து என் அண்ணனின் கையை உன் ...ணவி உடைத்து விட்டாள். இன்றே அவளை வீட்டை ...டு வெளியேற்ற வேண்டும் அது இதென்று உசுப்பேற்றி ...க அனுப்பினாய். ஆனால் நாம் நினைத்தது எதுவும் ...க்கவில்லை. என்னென்ன வெல்லாமோ நடந்து ...டது.''

"என்னவெல்லாமோ என்றால்... என்ன நடந்தது?''

என்ன நடந்தது என்று முழுதாய்ச் சொல்ல மனம் ...ாமல், "உன் பேச்சைக் கேட்டு அவளைத் தாறுமாறாய் ...த்ததில் குளிர்காய்ச்சல் வந்து ஜன்னி வந்துவிட்டது. ...ாற்றுமுன் பெரும்பாடாகி விட்டது,'' - என்றான்.

''ஏன் காப்பாற்றினீர்கள்? விட்டது சனியென்று ...படியே விட வேண்டியதுதானே. இரவெல்லாம் ...டி இந்நேரம் உயிரை விட்டிருப்பாள். நமக்கிருந்த ... விலகிவிட்டது என்று நிம்மதியாய் மூச்சு விட்டிருக் ...ம்.''

மினி கடுப்பாய்ப் பேச, பிரசாத்தின் உடல் சில்லிட்டது. ... உயிர் போவதை எத்தனை சுலபமாகச் சொல்லி ...ாள். அந்த உயிர் பிரியக் காரணம் நான் என்றால் நான் ...லைகாரன்தானே. இவள் என்ன இப்படிக் கொஞ்சமும்

நயவின்றிப் பேசுகிறாள். யாராக இருந்தாலும் ஒருவ உயிருக்குப் போராடும்போது சும்மா பார்த்துக்கொண் நின்றால் அது வக்கிரபுத்தி அல்லவா?

அப்படியென்றால் மென்மையான அமைதியா மினியின் மனதில் வக்கிரபுத்தியா குடிகொண்டுள்ளது நான்தான் இத்தனை நாள் கண் மூடித்தனமாக இருந் விட்டேனோ?

இல்லை. அப்படி இருக்காது. என் மீதுள்ள அள கடந்த அன்பினால்தான் அப்படிப் பேசுகிறாள். அப்படி தான் இருக்க வேண்டும்.

"என்ன பேச்சையே காணோம். தூங்கிட்டீங்களா?" அதட்டலாய் ஒலித்த குரலில் கலைந்து, "என்ன மி இப்படிப் பேசுகிறாய்?" என்றான்.

"பிறகெப்படிப் பேசுவதாம். நான் என்னவெல்லா நினைத்து வைத்திருந்தேன் தெரியுமா? எல்லாமே வீணா விட்டது. ச்சே!"

"அப்படி என்ன நினைத்து வைத்திருந்தாய்?"

"அதையெல்லாம் போனில் சொல்லமுடியாது. ந உடனே உங்களைப் பார்க்க வேண்டும். உட வாருங்கள்."

"இல்லை மினி! இப்போது வரமுடியாது. அவளு மருந்து மாத்திரை எல்லாம் கொடுக்க வேண்டும்."

"அப்போ அவளையே கட்டிட்டு அழுங்க. ந போறேன்."

"ஸ்டுப்பிட் மாதிரிப் பேசாதே. இந்த நிலை அவளை விட்டு எப்படி வர முடியும்?"



"எனக்கு உங்கள்மீது நம்பிக்கை இல்லை. அங்கே இருந்தால் எனக்குத்தான் ஆபத்து."

"என்ன உளறுகிறாய்? என்ன ஆபத்து?"

"ஆமாம். அழகான மனைவி அருகில் இருக்கும்போது சும்மா இருப்பீர்களா? எல்லை மீறிவிட மாட்டீர்களா?"

"ஏய்! ச்சீ, என்ன பேசுகிறாய்? யாரோ ஒரு பெண் ணுடன் இருப்பது போல் பேசுகிறாய். பாரதி என் மனைவி."

"எப்போ இருந்து இந்த உரிமை வந்தது?" - அகங்கார மாய்க் கேட்டாள் யாமினி.

"நேற்றிலிருந்து!" - அவனும் எடுப்பாகவே சொல்ல ஆவேசமானாள் யாமினி.

"அப்படின்னா நீங்க... அவளை... அவளை...."

"யெஸ். அவள் என் மனைவி. அவளுடன் நான் வாழ யாரைக் கேட்க வேண்டும்? அதைக் கேட்க யாருக்கும் உரிமையில்லை."

"அப்போ! நான்... நான் உங்கள் மனதில் இல்லையா?"

"மினி! நான் உன்னை விரும்பினேன். உன்னுடன் திருமணம் நடந்தால் நன்றாக இருக்கும் என்று உன்னை மணக்கக் கேட்டேன். நீ ஆசைப்பட்டுக் கேட்ட எல்லா வற்றையும் வாங்கிக் குவித்தேன். அது தவிர என்றேனும் உன்னிடம் எல்லை மீறியிருக்கிறேனா? நீயாக வந்த போதும் நான் மறுத்திருக்கிறேனே தவிர நெருங்கிய தில்லையே!"

"அப்போ! நான் மோசமானவள். நீங்கள் உத்தமர். அப்படித்தானே."

"இல்லை. அப்படிச் சொல்லவில்லை. என்மீது எந் தவறும் இல்லை என்றேன். நான் உன்னை மணக்க கேட்டபோதே நீ சம்மதித்திருந்தால் நாம் எப்போதோ திருமணம் செய்திருக்கலாம். நீதான் மறுத்தாய். என் அப்பாவுடைய சம்மதம் இல்லாமல் திருமணம் செய் கொண்டால் தெருவில்தானே நிற்க வேண்டும். அதனா பொறுமையாக இரு என்றாய்.

"உன் பேச்சை அப்படியே ஏற்றுப் பொறுமையா இருந்தேன். அப்பாவின் கட்டாயத்தால் இந்தப் பெண்ணை மணந்த பின்னும் உனக்குத் தாலி கட்டத் தயாரா இருந்தேன். நீதான் சம்மதிக்கவில்லை. உன் பேச்சை கேட்டு இவளை வீட்டை விட்டு அனுப்பும்போது இவ எப்படி வந்தாளோ அப்படியே அனுப்பவேண்டு என்றுதான் என் நிழல்கூட அவள்மீது படாமல் நட கொண்டேன்.

"நேற்று நான் எத்தனை மறுத்தும் நீதான் என்னை வற்புறுத்தி அனுப்பினாய். தகராறு முற்றிக் க எப்படியோ போயிற்று. தவறெல்லாம் நீ செய்துவிட் இப்போது என்மீது கோபப்பட்டால் நான் என்ன செ முடியும்?"

"இதைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை மனதில் என்னை வைத்துக் கொண்டு அவளுடன் குடும் நடத்த முடிந்ததா உங்களால்? உங்கள் மனதில் நா இல்லையா? மெய்யாகவே நீங்கள் என்னை விரு வில்லையா?"

"நீ என்னை விரும்பினாயா மினி?" - எதிர்க்கே கேட்டான்.

"இது என்ன கேள்வி? உங்களை விரும்பாமலா உயிரைவிடத் துணிந்தேன்."



"இல்லை! நீ என்னை மட்டும் விரும்பவில்லை. என்னை மட்டும் விரும்பியிருந்தால் நான் அழைத்ததும் என்னை மணக்க ஓடிவந்திருப்பாய். நீ ஏன் வரவில்லை?"

முடிவில் பேச்சு திசை மாறுவதை உணர்ந்து உஷாரானாள் யாமினி. "இப்போது என்ன சொல்கிறீர்கள்? இங்கு வரமுடியுமா முடியாதா?"

"ஸாரி! என்னால்தான் அவள் படுக்கையில் இருக்கிறாள். நான் இருந்து பார்த்துக் கொள்ள வேண்டும். வர இரண்டு நாளாகும்."

"வேண்டாம். வரவேண்டாம். இரண்டு நாள் கழித்து நீங்கள் வரும்போது என் உடல் சாம்பலாகி இருக்கும். வைத்துவிடுகிறேன்." - போனைக் கட் பண்ணினாள்.

"மினி! சொல்வதைக் கேள்! ஷிட்! வைத்து விட்டாளே..." - கோபமாய் செல்லை ஆஃப் செய்துவிட்டு அறைக்குள் திரும்பினான்.

"என்னங்க! ரொம்ப வேலை இருக்கா? ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கீங்க. நீங்க வேணா கிளம்புங்க. அதான் மேரிம்மா வந்திட்டாங்களே... என்னைப் பார்த்துப்பாங்க." என்ற பாரதியை நன்றியாய்ப் பார்த்தான்.

"ஷ்யூர். அட்ஜெஸ்ட் பண்ணிப்பியா. நான் அவசரமாப் போகணும். ஒரு ஒன் அவர்ல வந்திடுவேன். போகட்டுமா?"

"போங்கப்பா. நான் மாத்திரை சாப்பிட்டேன். தூக்கம் வருது. நான் தூங்கப் போறேன். நீங்க போயிட்டு வாங்க."

"ஓ. தேங்க்யூ. மேரிம்மா, பார்த்துக்கோங்க. நான் சீக்கிரமா வந்திடுறேன். பாரதி! டேக் கேர். வரட்டுமா."

அவள் தலையசைத்ததும் கார் சாவியை எடுத்துக் கொண்டு பாய்ந்து புறப்பட்டான்.

# 20

யாதுமாகி நின்றாய் – நீ காளி
எங்கும் நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் – நின்றன்
செயல்கள் அன்றி இல்லை.

அந்த இடம் வெகு அமைதியாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமை... பசுமை... ஆழ்ந்த அமைதி. தூரம் தூரமாய் ஒரு சில குடிசைகள். ஆள் நடமாட்டமே இல்லாத இடமாக இருந்தது.

"இது என்ன இடம் மினி. இங்கே ஏன் என்னை அழைத்து வந்தாய்? ரொம்ப தூரம் வந்துவிட்டோமா?" சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே கேட்டான் பிரசாத்.

"ஆமா! ரொம்ப தூரம்தான் வந்திருக்கிறோம். நமக்கு இதுதான் சொர்க்கலோகம்!" - கண்களில் கிறக்கத்துடன் சொன்னாள் யாமினி.

"மனசு சரியில்லை. கோவிலுக்குப் போகவேண்டும் என்றுதானே சொன்னாய். இதென்ன அடர்ந்த காடாய் இருக்கிறதே..."

"காடுதான். ஆனால் இதுதான் நாம வாழப்போகும் இடம். புரியலியா? இனிமே நான் வெறும் மினி இல்லை மிசஸ் யாமினி பிரசாத்தா மாறப்போகும் இடம். இங்கே



ஒரு காளி கோவில் இருக்கு. அதில வெச்சு எனக்குத் தாலி கட்டுங்க."

"மினி! என்ன திடீர்னு.... கல்யாணம்ற..." - மேலே நடக்காமல் நின்றான் பிரசாத்.

அவன் கைகளைத் தன்னோடு கோத்துக்கொண்டு, "ஆமாங்க... காலையிலே நீங்க கேட்டதை யோசித்துப் பார்த்தேன். எனக்குச் சொத்து எதுவும் வேண்டாம். நீங்க மட்டும் போதும். எப்பவுமே நான் சொத்துக்கு ஆசைப்படலங்க. உங்க அப்பா சம்மதமில்லாம என்னை நீங்க கட்டிக்கிட்டா உங்களை வீட்டை விட்டு அனுப்பிடுவாரேன்னுதான் பயந்தேன். எனக்காக நீங்க கஷ்டப்படுவதை என்னால தாங்க முடியாது. அதனாலதான் மறுத்தேன்," - என்றவாறே அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

மற்ற நாட்களாக இருந்தால் தோளில் சாய்ந்தவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டு உடனே தாலியைக் கட்டியிருப்பான். இன்று ஏனோ அது முடியாமல் தடுமாறினான்.

தன் கைகளை விடுவித்துக்கொண்டு, "இல்லை மினி. இப்போ எதுவும் வேண்டாம். வா. வீட்டுக்குப் போகலாம்," என்றவாறு திரும்பி நடந்தான்.

"நில்லுங்க! ஏன் வேண்டாம்?" - என்றாள் அவனை மறித்து.

"இல்லை. எனக்கு மனம் ஒப்பவில்லை."

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன். இப்பவே நம் திருமணம் இந்த வனதேவதையின் முன் நடந்தாக வேண்டும்!" - என அவன் கையைப் பற்றி இழுத்து அந்தக் காளிதேவியின் முன் நிறுத்தினாள்.

தன் கையோடு கொண்டு வந்திருந்த தாலியை அவனிடம் நீட்டினாள். உள்ளம் பதற, அதை வாங்காமல் காளிதேவியை நோக்கினான்.

சுற்றிலும் பசுங்காடு சூழ்ந்திருக்க அந்த வனத்தில் காளி விசுவரூபமாய் நின்றுகொண்டிருந்தாள். பெரிய கண்களை உருட்டி, இரத்தமெனச் சிவந்த நாவை நீட்டிக் கழுத்தில் மண்டை ஓட்டு மாலையோடு நின்ற கோலம் பயமுறுத்தியது.

ஆறு கரங்களிலும் சூலம், வெட்டுக்கத்தி, அரக்கனின் தலை என்று நின்றதில் இன்னும் மிரண்டான் பிரசாத். யாமினியிடம் திரும்பினான்.

"மினி! எனக்கு இந்த இடம் பிடிக்கவில்லை. முதலில் போகலாம் வா. வீட்டில் போய்ப் பேசலாம்."

அசையாமல் நின்றாள் அவள்.

"மாட்டேன். இதுதான் எனக்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பம். இப்போது விட்டால் நீங்கள் எனக்குக் கிடைக்கமாட்டீர்கள். உங்களை விடவும் மாட்டேன்.

"இப்போது நம் திருமணம் நடந்தே ஆகவேண்டும். அதோ அந்தக் குடிசையில்தான் நம் தேன்நிலவு. நமக்கு எந்த இடையூறும் இருக்காது. ஒரு மாதம் கழித்து நாம் திரும்பினால் போதும்."

"என்ன? ஒரு மாதமா! என்னால் ஒரு நிமிடம்கூட இங்கு இருக்க முடியாது. நீ வேண்டுமானால் இரு. நான் போகிறேன்." - வேகமாக நடக்க ஆரம்பித்தான் பிரசாத்.

"எப்படிப் போவீர்கள்?" - நின்ற இடத்தில் நின்றபடியே கேட்டாள்.



"ஏன்? காரில்தான். கார் கீழே நிற்கிறதே."

"அதை என் அண்ணன் அப்போதே கொண்டு போயிருப்பான். நமக்குப் பின்னால் என் அண்ணனும் அவன் நண்பன் கிருஷ்ணாவும் வந்ததை நீங்கள் பார்க்கவில்லையோ? கார் எந்தத் திசையில் எவ்வளவு தொலைவு வந்தது என்றுகூட உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லையே!"

'உண்மைதான். ஒவ்வொரு வழியாக கைகாட்டினாளே. நான் எப்படிச் சிந்திக்காமல் இவ்வளவு தொலைவு வந்தேன். இப்போது எப்படித் திரும்பிப் போவது? எப்படியும் மலையைவிட்டு இறங்கினால் வழி தெரியாதா? எதற்கும் பிரதாப்பிற்கு ஒரு போன் போட்டால் அவன் காரை எடுத்துட்டு வரமாட்டானா?' என்ற எண்ணத்துடன் போனை எடுத்தான்.

"நோ யூஸ். இங்கே போன் வேலை செய்யாது. டவரே இல்லாத இடம் இது. என்ன பிரசாத் இவ்வளவு முட்டாளாக இருக்கிறீர்கள்?" - என்றாள் சிரித்து.

"ஏய்! இதென்ன வேலை. இங்கே ஏன் அழைத்து வந்தாய்?"

"அதைத்தானே முதலிலே சொன்னேன். நம் திருமணம், தேனிலவு எல்லாம் இங்கேதான் நடக்கும். இங்கிருந்து போகும்போது உங்கள் பிள்ளை என் வயிற்றில் இருக்கவேண்டும்."

"நான்சென்ஸ். என்ன உளறுகிறாய்? அதெல்லாம் நடக்காது!" - சீறினான்.

"உன்னைப்பத்தி எனக்குத் தெரியும் பிரசாத். உன் மனைவியைத் தொட்டபிறகு என்னை மணக்கமாட்டாய்

என்று தெரியும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு உன்னைத் தடுக்கும். ஏன்னா நீ வளர்ந்த விதம் அப்படி. ஆனா நான் அப்படி வளரவில்லை.

"எனக்கு நீ வேண்டும். உன் சொத்துபத்தோடு நீ வேண்டும். எத்தனை நாள்களாய் நான் திட்டம் போட்டு உன்னை என் வலையில் வீழ்த்தினேன்.

"இப்போ அவ்ளோ சீக்கிரமா இன்னொருத்திகிட்ட கொடுத்திடுவேனா? என்னை என்ன உன்னை மாதிரி ஏமாளி என்று நினைத்தாயா?" - அகங்காரமாகச் சிரித்தாள் யாமினி.

அந்த மலைப்பிரதேசம் முழுக்க அது எதிரொலித்துப் பயமுறுத்தியது. எப்போதுமே பிரதாப்பைவிட பிரசாத் சற்றுப் பயந்தவன்தான். அதுவும் தனிமை, அடர்ந்த காடு என்றால் இன்னும் பயம்.

பிரதாப் தைரியமாகக் காடு முழுவதும் அலைந்து திரிந்து தனது ஆராய்ச்சியை முடித்தவன். ஆனால் பிரசாத் வீடு... வீடு விட்டால் எஸ்டேட் என்றே வாழ்ந்தவன். அந்த வெகுளித்தனம்தான் மனோகருக்குச் சுலபமாய்ப் போனது.

"மினி! ப்ளீஸ் சிரிக்காதே. பயம்மா இருக்கு. இருட்டப் போகுது மினி. வா வீட்டுக்குப் போகலாம். நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன்."

"இந்தக் கதையெல்லாம் வேண்டாம். முதலில் தாலி கட்டு."

"நோ... நோ மினி. தப்பு. வீட்டில் எனக்காகப் பாரதி இருக்கிறாள். இது அவளுக்குச் செய்யும் துரோகம்."

"போடா புண்ணாக்கு. அவளைப் பற்றி நீ கவலைப் படாதே. அவளை என் அண்ணன் பார்த்துக் கொள்வான்.



பெரிய இவளாட்டம் என் அண்ணன் கையை உடைத் தாளே. அவளைச் சும்மா விடமுடியுமா?"

"ஏய். அவளை என்ன செய்யப்போகிறாய்? பாவம் அவள். அவளை ஒன்றும் செய்துவிடாதீர்கள். அவள் ஒன்றும் அறியாதவள்."

"ஆமா. குழந்தை. அந்த ஒன்றும் அறியாத குழந்தைக்கு எல்லாத்தையும் அறிய வைக்கப் போகிறான் என் அண்ணன். புரியலை! நாம் இருவரும் ஊரைவிட்டு ஓடிவந்தோமே, அது எதற்கு? எனக்கும் உனக்கும் என்ன தொடர்பு என்பதை எல்லாம் சொல்லப்போகிறான்.

"நாம் ஊர் திரும்பும்போது அவள் ஊரைப்பார்த்து ஓடியிருப்பாள். அவள்தான் துணிச்சல்காரி ஆயிற்றே. நீ கட்டிய தாலியைக் கழற்றி வீசிவிட்டு வேறு ஒருவன் தாலியைக்கூட வாங்கியிருப்பாள். அதனால் அவளைப் பற்றிக் கவலைப்படாமல் நம் வாழ்க்கையை ஆரம்பிக்கலாம் வா," - என அவனை நெருங்கினாள்.

இத்தனை காலம் தேவதையாய்த் தோன்றியவள் இன்று அவன் கண்ணிற்குப் பேயாய்த் தோன்றினாள். இந்தப் பேயுடன் குடும்பம் நடத்துவதா? தன்னைமீறி எதுவும் நடந்துவிடாது என்ற நம்பிக்கையில் நிமிர்ந்தான்.

"இதோ பார் மினி. என் விருப்பம் இல்லாமல் எதுவும் நடக்காது. பேசாமல் உன் அண்ணனை என் காரைக் கொண்டு வரச்சொல். இந்நேரம் என்னைத் தேடத் தொடங்கியிருப்பார்கள். என் வேலையெல்லாம் அப்படியே கிடக்கிறது. விளையாடுகிற நேரமில்லை. நான் போக வேண்டும்."

"என் மனம் கவர்ந்தவளுடன் வாழப்போகிறேன். இந்தச் சொத்து, கார் எதுவும் வேண்டாம். விருப்பம்

இல்லாத பெண்ணுடன் என்னால் வாழமுடியாது' என்று எழுதி வைத்துவிட்டு வந்த உங்களை யாரும் தேடமாட்டார்கள். கவலைப்பட வேண்டாம்."

"நானா? நான் எப்போது எழுதிக்கொடுத்தேன்."

"நாம் புறப்படும்போது முக்கியமான பேப்பர், கையெழுத்துப் போடுங்கள் என்று என் அண்ணன் கையெழுத்து வாங்கினானே... நினைவில்லை. அது இப்போது உங்கள் மனைவியின் கைக்குப் போயிருக்கும்." - எக்காளமாய்ச் சிரித்தாள்.

பிரசாத் தலையைப் பற்றிக்கொண்டு அங்கிருந்த சிறுபாறையின் மேல் அமர்ந்தான். 'என்னைச் சுற்றி என்ன சதி நடந்திருக்கிறது என்றே அறியாமல் வந்து மாட்டிக்கொண்டேனே. தப்புப் பண்ணிவிட்டேன். நான் பெரிய தப்புப் பண்ணிவிட்டேன்.

அன்றே அப்பாவின் சொல்லைக் கேட்டிருக்க வேண்டும். வயதில் இளையவன் என்றாலும் என்னைவிடப் புத்திசாலியான தம்பியின் பேச்சைக் கேட்டிருக்க வேண்டும். மாயவலையில் சிக்குண்டு மதிமயங்கி இதோ புதைகுழியில் மாட்டிக் கொண்டேனே. எப்படி மீளப் போகிறேன். யார் வந்து மீட்பார்கள்?' கண்களில் இருந்து நீர் சுரந்தது.

'இந்த வயதில் பார்ப்பது எல்லாம் அழகாய்த்தான் தோன்றும். பால் எது, விஷம் எது என்று எங்களுக்குத்தான் தெரியும்.

'பெற்றவர்களுக்குத் தெரியாதா பிள்ளைகளுக்கு எது நல்லது என்று!' - அப்பாவின் குரல் காதில் மோதியது.



'அண்ணா! ஜாக்கிரதையாக இரு. எதிலும் கையெழுத்துப் போட்டுவிடாதே. விட்டில்பூச்சியாகி விளக்கில் விழுந்து மடியாதே!' - என்ற தம்பியின் வார்த்தை எதிரொலித்தது.

'எதையுமே கேளாமல் தான்தோன்றித்தனமாய் வாழ்ந்தேனே. அவர்களுக்குத் தெரிந்த உண்மை எனக்குத் தோன்றாமல் போயிற்றே. இந்தப் பளிங்குத் தோலையும் குழந்தைத்தனமான முகத்தையும் நம்பி ஏமாந்து போனேனே.

நஞ்சைக் கக்கும் நாகம்கூடப் பளபளப்பாக அழகாக இருக்கும் என்று உணரவில்லையே. பூவிற்குள்ளும் நாகம் உண்டு என்றாயே பிரதாப். அண்ணியோடு வாழ வீட்டிற்கு வா என்றாயே! இதோ உன் அண்ணன் அண்ணியின் முகத்தை முழுதாய்ப் பார்க்கும் முன்பே அவளது அன்பை உணரும்முன்பே வாழ்க்கையைத் தொலைத்துவிட்டேனே.

இனி அவளை என்று காண்பேன்? இது எந்த இடம் என்றுகூடத் தெரியவில்லையே. இதிலிருந்து எப்படித் தப்பி வீடு வருவேன். வீடு வந்து சேர்ந்தாலும் பாரதி என்னை எப்படி ஏற்றுக்கொள்வாள்? இன்னொருத்தியை அழைத்துக் கொண்டு ஓடியவனை எந்தப் பெண் ஏற்றுக்கொள்வாள்? எல்லோருடைய அருமையையும் உணராமல் இப்படி வந்து மாட்டிக்கொண்டேனே...'

கண்களில் நீர் வழிய அசையாமல் அமர்ந்திருப்பவனைப் பற்றி எழுப்பினாள்.

"இதோ பாருங்க. இப்படியே நேரத்தை வீணாக்க வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் முழுக்க இருட்டிடும். அப்புறம் காட்டு மிருகங்கள் உலவ ஆரம்பிச்சிடும். எழுந்திருங்க. முதலில் தாலியைக் கட்டுங்கள்.

அந்தக் குடிசைக்குள்ள போயிட்டாப் பாதுகாப்பா இருக்கும். எழுந்திருங்க."

"மினி. உனக்கு நான் என்ன பாவம் செய்தேன். என்னை விட்டுவிடு. என் அப்பா, அம்மா, தம்பி யாருடைய முகத்திலும் விழிக்கவிடாமல் பண்ணி விடாதே. உனக்கு எவ்வளவு சொத்து வேண்டுமோ, கேள். தந்துவிடுகிறேன். தயவுசெய்து என்னை அனுப்பிவிடு. உன் அண்ணனை வரச் சொல். அவன் கேட்பதைக் கொடுத்து விடுகிறேன்!"

"அது உங்களால் முடியாது பிரசாத். அன்று உன் தம்பி சொன்னது மறந்துவிட்டதா? சொத்து எதுவும் உன் பெயரில் இல்லை என்றானே. பிறகெப்படித் தருவாய்?"

"இது தெரிந்தும் ஏன் என்னை அழைத்து வந்தாய்?"

"சொத்து தன்னால் வரும். உங்களைக் கட்டிக்கொண்டு உங்கள் வாரிசைச் சுமக்கும்போது சொத்து தன்னால் நமக்கு வந்துசேரும். உங்கள் அப்பாவிற்கு என்ன அந்தளவு கல் நெஞ்சமா?"

"உனக்கு என் அப்பாவைப் பற்றித் தெரியாது. என்னைத் தன் பிள்ளையே இல்லை என்று சொல்வாரே தவிர ஒரு பைசா தர மாட்டார். முதலில் அதைத் தெரிந்து கொள்."

"நியாயமாய்க் கிடைக்குதா என்று பார்ப்போம். தந்தால் உங்க அப்பாவிற்கு நல்லது. இல்லையென்றால் என் அண்ணன் வழியில் இறங்கவேண்டியதுதான். அதெல்லாம் பிறகு. இப்போ நம் கல்யாணம்... ம்... இதைக் கட்டுங்கள்." - அவன் கையில் தாலியை வைத்தாள்.



கைகள் நடுங்கின. அக்னிசாட்சியாக ஒருத்தியின் கழுத்தில் தாலி கட்டி அதன் மெருகு குறையும் முன் அடுத்த தாலியா? அதுவும் இவளது குணம் தெரிந்த பின்னுமா? பிரசாத் ஏமாளியாக இருக்கலாம். ஆனால் முட்டாள் இல்லை. இந்தப் பிறவியில் மனைவி என்றால் பாரதி மட்டும்தான். அவள் ஏற்றுக்கொண்டாலும் சரி, வெறுத்தாலும் சரி.

அவளைத்தவிர இன்னொருத்தியை ஏற்றுக்கொள்ள முடியாது. முழுமனதோடு இல்லாமல் நிர்பந்தமாகவே அவளுடன் வாழ ஆரம்பித்தபின் இன்னொரு பெண்ணைத் தீண்டமாட்டேன். என் சம்மதம் இல்லாமல் இவளால் என்ன செய்ய முடியும்!

செய்யக் கூடாத தவறைச் செய்து வந்து மாட்டிக் கொண்டேன். இனி நடப்பதைத் துணிவோடு எதிர் கொள்ள வேண்டுமே தவிர இவள் ஆசைக்குப் பலியாகக் கூடாது. உறுதியான முடிவோடு கையிலிருந்த தாலியைத் தூரமாய்த் தூக்கி வீசினான். அது எங்கோ போய்விழுந்தது.

யாமினி வெறிவந்தாற்போல் அவனைப் பிடித்து உலுக்கினாள். "பைத்தியக்காரப்பயலே! அதை ஏன் தூக்கி எறிந்தாய். இருட்டிவிட்டதே. இனி எப்படித் தேடுவேன்? என்ன திமிர் உனக்கு. எங்கிருந்து வந்தது இத்தனை தைரியம்?" - அலறியவளை அலட்சியமாய் ஒதுக்கினான் பிரசாத்.

"எப்போதும் ஏமாளியாக இருக்க முடியுமா யா...மினி. நானும் துணிந்துவிட்டேன். உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள். இந்த ஜென்மத்தில் உனக்குத் தாலி கட்ட மாட்டேன். என் விரல் நுனிகூட உன்மேல் படாது. எத்தனை நாள் என்னை அடைத்து வைத்தாலும் உன் எண்ணம் ஈடேறாது."

"தொடைநடுங்கிப்பய! உனக்கே இத்தனை துணிவு என்றால் நான் எதற்கும் அஞ்சாதவள். என்னால் எதையும் செய்ய முடியும்!" - என்றவள் பரபரவெனச் சில இலைகளைப் பறித்து வந்து உள்ளங்கையில் வைத்துக் கசக்கினாள்.

புரியாமல் விழித்தவனைப் பார்த்துச் சிரித்தாள் யாமினி. "என்ன பாக்கிற? இது என்ன தெரியுமா? இதுவும் ஒருவகை மயக்க மருந்துதான். இதை இப்போ உன் மீது பூசப்போகிறேன். அதன்பிறகு பூனைக்குட்டி போல் என் காலடியில் கிடப்பாய். நான் சொல்வதை எல்லாம் செய்வாய். சுயநினைவோடு தாலி கட்டுவாய் என்று பார்த்தேன். நீ சுய உணர்வின்றித்தான் கட்டுவேன் என்கிறாய்.

"எப்படியோ என் கழுத்தில் தாலி ஏறினால் போதும்!" - என வெற்றிச் சிரிப்போடு நன்றாய்ச் சாறு வரும்படி கசக்கினாள்.

"ஏய்! இதெல்லாம் சும்மா. என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். இந்தக் கதையெல்லாம் என்னிடம் விடாதே"

"அப்படியா? அதையும்தான் பார்த்துவிடுவோமே!" - என்றவாறு அவன் சுதாரிப்பதற்குள் தலை, முகம், கை என எல்லாப் பகுதியிலும் கையிலிருந்த சாறைப் பூசினாள். பதறி அதைத் துடைக்க முயன்ற பிரசாத்தின் நாசியில் அந்தப் பச்சிலையின் மணம் நுழைந்து மூளையை செயலிழக்கச் செய்தது.

எத்தனை முயற்சித்தும் நிற்கமுடியாமல் தள்ளாடி அவள்மீதே சரிந்தான். தன்மீது சரிந்தவனைத் தாங்கிக் கொண்டே, "அண்ணா! சீக்கிரம் வா. இவரைப் பிடி" - எனக் குரல் கொடுத்தாள்.



அந்தப் பெரிய பாறைக்குப் பின்னால் நின்றிருந்த மனோகரும் அவன் நண்பனும் ஓடிவந்து பிரசாத்தைப் பிடித்துக் கொள்ள, மூவருமாய்ச் சேர்ந்து அவனைத் தூக்கிக்கொண்டு குடிசையை நோக்கிச் சென்றனர்.

தன்னைத் தூக்கிச் செல்வது புரிந்தும் மறுக்கவோ உடலை அசைக்கவோ முடியாமல் துவண்டு சரிந்த பிரசாத்தின் கண்களில் அந்தக் காளியின் உருவம் தென்பட்டது. மனம் அவசரமாய் அதனிடம் வேண்டியது.

"காளி! நீயும் ஒரு பெண். என் மனைவியும் ஒரு பெண். இந்தக் கயவர்களால் என் மனைவிக்கு நான் தெரிந்தோ என் மூளைக்குத் தெரியாமலோ எந்தத் துரோகமும் செய்துவிடக்கூடாது. என் அனுமதியின்றி எந்தத் தீங்கும் செய்துவிடாதிருக்க நீ என்னைக் காக்க வேண்டும். நீ என்னைக் காக்க வேண்டும்!" - சுயநினைவு முற்றிலும் அகன்றுவிட மயக்கமானான்.

சுற்றுப்புறம் முழுவதும் வேகமாய் இருள் பரவ அவசரமாய் அவனைக் கொண்டு சென்று குடிசையினுள் படுக்க வைத்தனர். குடிசையின் கதவை அடைத்துவிட்டு, தீப்பந்தம் ஒன்றை ஏற்றிச் செருகிவிட்டு மூச்சுவாங்க அமர்ந்தான் மனோகர்.

"என்னம்மா நீ! ஏன் அவசரப்பட்டாய். ரெண்டு தட்டு தட்டினாலே பயந்து தாலியைக் கட்டியிருப்பான். நீ இவ்வளவு மூலிகையைப் பூசிவிட்டாயே. மயக்கம் தெளிய இரண்டு, மூன்று நாளாகுமே. அதுவரை என்ன செய்வது?"

"இங்கேயே இருக்கட்டும் அண்ணா! நான் பார்த்துக் கொள்கிறேன். இது எனக்குப் பழகிய இடம்தானே. நீ எப்பவும்போல வேலைக்குப் போ. கோபத்தோடு என்னைத் தேடு. அந்த வட்டரை அவன் பெண்டாட்டிக்கு

அனுப்பிடு. காரைக் கொண்டுபோய் எஸ்டேட்டுல விடு.

"முதலில் இவன் அப்பனுக்கு போன் போடு. கிழவன் திணறட்டும். தினமும் இரவு இங்கு வந்து அங்கே நட பதைச் சொல். கிருஷ்ணா இங்கே இருக்கட்டும். சாப்பாடு வாங்கிவர, ஒரு அவசரத் தேவைக்கு இவன் தேவை.

"நான் நிஜமாகவே ஓடிப்போனதுபோல் தத்ரூபமாக நடி. கோட்டைவிட்டு விடாதே. ஆளோடு ஆளாகச் சேர்ந்து தேடு. எல்லோரும் நம்பவேண்டும். முதலில் அவன் நம்பவேண்டும். இவன் உறவே வேண்டாம் என்று ஊரைவிட்டே ஓடவேண்டும். அதன்பிறகுதான் நாங்கள் அங்கு வருவோம்," - என்றாள் தீவிரமாக.

"யப்பா! மனோகர். நீ எட்டடி என்றால் உன் தங்கை எண்பதடி பாய்கிறாளே. இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு இவ்வளவு கிரிமினல் வேலை செய்கிறாளே. எனக்குக் கூட இவ்ளோ துணிச்சல் கிடையாதுப்பா!" - என்றான் கிருஷ்ணா.

"அவ என் தங்கைடா. எல்லாம் நம்ம பயிற்சிதான். இல்லைன்னா ஊட்டி எஸ்டேட்டுக்கு ஓனராக முடியுமா போகபோகப் பார்," - என்றான் மனோகர்.

"நீங்க என்ன வேணா பண்ணிக்கோங்க. நமக்கு தேவை துட்டும் பாட்டிலும்தான். பொழுதானா கா சுளையா இரண்டாயிரம் கைக்கு வந்துடணும். பாட்டிலு வந்திடணும். இல்லன்னா இந்தக் காட்லே எப்படி தூங்க முடியும்?"

"சரிடா. நான் கரெக்டா தந்திடுவேன். நீ உஷாரா இரு யார்கிட்டயும் உளறி வெச்சுடாதே. மாட்டிக்கிட்



வெளியே வரமுடியாது. மோதுற இடம் பெரிசு. அது நினைவிருக்கட்டும்."

"சரிம்மா! நீ கதவைச் சாத்திக்க. இவன் என்னைக் கொண்டுபோய் விட்டுட்டு வந்திடுவான். சண்டாளி! கையை உடைச்சுப்புட்டா. ஆசையா வாங்கின வண்டியைக்கூட ஓட்டமுடியல்ல. அவ ஊரைவிட்டுப் போறதுக்குள்ள எங்கிட்ட இதுக்கான கூலியை வாங்கிட்டுத்தான் போகணும்." - புலம்பிக்கொண்டே அவன் புறப்பட, பின்னே கிருஷ்ணா செல்ல, கதவை அழுத்திப் பூட்டினாள் யாமினி.

ஆழ்ந்த மயக்கத்தில் இருந்த பிரசாத்தின் அருகே வந்தாள். வெற்றிச் சிரிப்போடு அவனை அணைத்துக் கொண்டாள்.

## 21

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்!

மேசையின் மீதிருந்த கடிதம் மின்விசிறியால் படபடத்துக்கொண்டிருந்தது. அதையே கண்இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் பாரதி. ஒருமுறை படித்த கடிதம்தான். ஆனால் ஒரு வரிகூட மறக்கவில்லை.

'அன்புள்ள அப்பா, நான் எவ்வளவோ மறுத்தும் நான் விரும்பாத ஒரு பெண்ணை எனக்கு மணம் செய்து வைத்தீர்கள். என்னால் அவளுடன் வாழமுடியாது. என் மனம் முழுவதும் மினிதான் நிறைந்திருக்கிறாள்.

மினி இருந்த இடத்தில் இனி யாருக்கும் இடமில்லை. அதனால் நான் என் மினியுடன் செல்கிறேன். யாரும் என்னைத் தேட வேண்டாம். தேடினாலும் கிடைக்க மாட்டேன். கிடைத்தாலும் வரமாட்டேன். வந்தாலும் பாரதியோடு வாழமாட்டேன்.

அதனால என்னைத் தேடி உங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம். அவளுக்கு நஷ்ட ஈடாக ஏதேனும் பணத்தைக் கொடுத்து அனுப்பி விடவும். இல்லை யென்றால் உங்கள் இளைய மகனுக்கே கட்டிவைத்தாலும் சரி. நான் மறுப்போ எதிர்ப்போ தெரிவிக்க மாட்டேன்.

யார் முகத்திலும் விழிக்க மாட்டேன். இந்த சொத்தைக் காட்டித்தானே என்னை மிரட்டித் திருமணம் செய்துவைத்தீர்கள். இந்தச் சொத்தும் வேண்டாம். உங்கள் சொந்தமும் வேண்டாம். காரைக்கூட விட்டு விட்டுத்தான் போயிருக்கிறேன்.

மறுபடியும் சொல்கிறேன். யாரும் என்னைத் தேடக் கூடாது. இந்தக் கடிதம் தங்கள் கையில் கிடைக்கும் போது மினியின் கணவனாகி இருப்பேன். யாரும் எங்களைப் பிரிக்க முடியாது.

பாரதி! ஸாரி. பெரியவர்கள் செய்த தவறால் நீ என்னிடம் மாட்டிக் கொண்டாய். உனக்கு விருப்பம் என்றால் யாரை வேண்டுமானாலும் மணந்துகொள்ளலாம்.



என் தந்தையிடம் உனக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்.

இனி என் மனைவி மினிதான். மினி மட்டும்தான்!

இப்படிக்கு
எஸ்.பிரசாத்'

என்று ஒரு முழுநீளத் தாளில் எழுதிக் கையெழுத்திட்டு அனுப்பியிருந்தான் அவளது கணவன். இல்லையில்லை தற்போது மினியின் கணவன்.

கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வரவில்லை. துளி நீர் அருந்தாமல் அசையாமல் அழுத்தமாய் அமர்ந்திருந்தான்.

தகவல் தெரிந்து வந்த மாமனார் வாயடைத்துப் போய்விட, மாமியாரும் லட்சுமியும் அழுது தீர்த்தனர். அப்போதும் பாரதி அசையவில்லை. வீடு முழுக்க அனைவரும் சோகத்தில் மூழ்கியிருக்க பெரியசாமி விம்மிப் போய் அமர்ந்திருந்தார்.

'படித்த மகள் திரும்பத் திரும்பச் சொன்னாளே, மாப்பிள்ளையைப் பற்றி விசாரித்தீர்களா என்று! பாவி! நான்தானே பணக்காரச் சம்பந்தம் என்று பேராசைப்பட்டு என் மகளைப் பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டேன். என் பிள்ளை இப்படி ஒரு வார்த்தையும் பேசாமல் இடிந்துபோய் இருக்கிறாளே. அதிர்ச்சியில் ஊமையாகி விட்டாளா? மூளை பிசகிப் போயிற்றா? என் அவசரத்தால் என் பிள்ளை வாழ்க்கை வீணாகிப் போயிற்றே.

படித்துப் பட்டம் பெற வேண்டிய பெண்ணை இப்படிப் பட்ட மரம் ஆக்கிவிட்டேனே. படுபாவி! எனக்குக் கண் இல்லாமலா போயிற்று. இந்தத்

தங்கத்தை உதறிவிட்டு எந்தத் தறுதலையோடு ஓடிப் போனான்? இனி என் பிள்ளையின் நிலை என்ன?'

மனம் குமுற மனைவி மகள்களின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் முடியாமல் கூனிக்குறுகி அமர்ந்திருந்தார். லட்சுமி அழுது அழுது அவ்வப்போது மயங்கி விழுந்தாள். சக்தி அன்னையைக் கட்டிக்கொண்டு கதற, செல்லம்மா மட்டும் எரிமலையாய்ச் சீறிக்கொண்டிருந்தாள்.

"என்ன ஸார் மனுஷங்க நீங்க. உங்க பிள்ளை ஏற்கெனவே ஒரு பொண்ணை விரும்பினது தெரிஞ்சும் எப்படி எங்க வீட்டுக்கு வந்து பொண்ணு கேட்கலாம். வசதியான இடத்து மாப்பிள்ளை, வரதட்சிணை ஒன்றுமே வேண்டாம், பெண்ணை மட்டும் கொடுத்தால் போதும் என்று சொன்னபோதே என் அக்கா சந்தேகப்பட்டாள். அது சரியாப் போச்சு.

"எவ்வளவு கிரிமினல் மூளை ஸார் உங்களுக்கு. வசதியில்லாத இடம் என்றால் கேள்வி கேட்கமாட்டார்கள் என்ற எண்ணமா? விடமாட்டேன். உங்களைச் சும்மாவிட மாட்டேன். எங்கள் மாமாவிற்குத் தெரிந்தால் போதும். உங்கள் ஒருவரையும் உயிரோடு விடமாட்டார். வரட்டும் அவர் வரட்டும்." - பொருமினாள்.

"இப்படி நடக்கும் என்று நான் நினைக்க வில்லையம்மா!" - சிவராமன் வாயைத் திறக்க,

"பேசாதிர்கள். நீங்கள் பேசாதிர்கள். தலைக்குமேல் வளர்ந்த பிள்ளையை மிரட்டிப் பணிய வைத்தவர்தானே மிரட்டித் தாலிகட்ட வைத்தீர்களே. மகன் என்ன அழகில் குடும்பம் நடத்துகிறான் என்று பார்த்தீர்களா? ஏதோ கடமை முடிந்தது. எவன் வீட்டுப் பெண்ணோ என்னவாகிப் பட்டால் நமக்கென்ன என்று ஒதுங்கிக் கொண்டீர்கள். அப்படித்தானே..."



"ப்ளீஸ் செல்லம்! அப்பா ஏற்கனவே உடைந்து போயிருக்கிறார். நீ வேறு மேலும் பேசிக் கொல்லாதே!" - என்ற பிரதாப்பைக் கொன்றுவிடுவதைப் போல் பாய்ந்தாள்.

"வாயை மூடுங்கள். உங்கள் அப்பாவைச் சொன்னதும் பொத்துக் கொண்டு வருகிறதோ. இதோ என் அக்கா இரண்டு நாளாய்ச் சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் உயிரற்ற சடலமாய் உட்கார்ந்திருக்கிறாளே. அதைப் பார்த்து என் தாய் இரத்தக் கண்ணீர் வடிப்பது உங்களுக்குத் தெரியவில்லை. எங்கள் நெஞ்சம் கொதிப்பது உங்களுக்குப் பெரிதில்லை.

"இது அத்தனைக்கும் காரணமான உங்கள் அருமைத் தந்தையை ஒன்றும் சொல்லக்கூடாதா? பாவிகளா? படித்துக் கொண்டிருந்த பெண்ணை இப்படிப் படுகுழியில் தள்ளி அவளை உயிரோடு சமாதி கட்டி விட்டீர்களே. எங்கள் வயிற்றெரிச்சல் உங்களைச் சும்மா விடுமா? உங்கள் குடும்பம் தழைக்குமா?"

அம்பிகை பெருங்குரலெடுத்து அழுதாள். "அப்படிச் சொல்லாதேம்மா. கன்னிப்பெண் சாபம் பலித்துவிடும். உன் வாயால் அப்படிச் சொல்லாதே. ஒரு பிள்ளைதான் அப்படிப் போய்விட்டான். நான் அடுத்த பிள்ளை வாழ்வதையாவது பார்க்க வேண்டுமே..."

"ஹூம். பணக்காரர்கள் என்று காண்பித்து விட்டீர்களே. நாங்கள் வாழ்க்கையை இழந்து நிர்கதியாய் நிற்பவளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் உங்கள் அடுத்த பிள்ளையின் வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்படுகிறீர்கள். என்ன சுயநலம் உங்களுக்கு!"

"செல்லம் ப்ளீஸ். ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்? அவன் இப்படிச் செய்வான் என்று யார் எதிர்பார்த்தது? நன்றாகத்தான் இருந்தான்."

"வாயை மூடுங்கள் பிரதாப். என் அக்காவின் முகத்தைப் பார்த்தீர்களா? எப்படி அடித்திருக்கிறார் என்று தெரிகிறதா? இன்றோடு நான்கு நாட்கள் ஆகிறது. இன்னும் கைவிரல் தடம் மறையவில்லையே. அப்படியென்றால் எத்தனை கொடூரமாய் அடித்திருப்பார். நன்றாக இருக்கும் கணவன் இப்படித்தான் மனைவியை அடிப்பானா?

"அவர் போட்டு அடித்ததில் ஜன்னி வந்து பிழைத் திருக்கிறாள். இவன் எங்களிடம் ஒரு வார்த்தை சொல் வில்லையே. அன்றே சொல்லியிருந்தால் என் மாமா உங்கள் அண்ணனின் கைகால்களை உடைத்து விட்டே போட்டிருப்பார்.

"இப்படிக் கண்டவனோடு ஓடியிருக்க முடியாது அவரைப்பற்றித் தெரிந்தும் எத்தனை அழகாய் அதை மூ மறைத்துக் கட்டிவைத்து இருக்கிறீர்கள். நீங்கள் எல்லா மனுஷ ஜென்மங்கள்தானா?" - கோபத்தில் மூச்சிரைக்க நிறுத்தினாள்.

"சத்தியமா எனக்குத் தெரியாதும்மா. தெரிந்தால் அவ எப்படிப்பட்ட பெண்ணாக இருந்தாலும் அவனை கட்டிவைத்திருப்பேன். என் மகன் என்னிடம் ஒ வார்த்தைகூடச் சொல்லவில்லையே!" - அரற்றினா அம்பிகை.

"பொய் பேசாதீர்கள். அதான் உங்க மகன் எல்லா தெளிவா எழுதி வெச்சுட்டுப் போயிருக்காரே. இன்னு ஏன் பொய் பேசுறீங்க?"



"இல்லம்மா... அவ அப்பாவி. அவளுக்கு எதுவும் தெரியாது. இது... இது எனக்கு மட்டும்தான் தெரியும். என் மனைவிகிட்ட நானும் சொல்லலை. அவனையும் சொல்லவிடல்ல," - என்றார் சிவராமன்.

அதுவரை அசையாமல் அமர்ந்திருந்த பாரதி மெல்லத் திரும்பினாள். "அப்போ உங்களுக்கு எல்லாமே தெரியுமா? தெரிஞ்சுமா...?"

வெட்கித் தலை குனிந்தார் சிவராமன். "இந்த அளவிற்குப் போவான் என்று தெரியாதம்மா. ஒரு நல்ல பெண் மனைவியாய் வந்தால் என் மகன் மாறிவிடுவான் என்று நினைத்துத்தான்..."

"இல்லே.... இது உண்மையான காரணம் இல்லை. உங்கள் மகனின் விருப்பத்தை ஏற்கமுடியாமல் தடுத்தது உங்க அந்தஸ்து. நீங்க பணக்காரர். அவ உங்கிட்ட வேலை பார்க்கிறவ. அதான் உங்க கௌரவத்தைக் காப்பாத்திக்க என் வாழ்க்கையைப் பணயம் வெச்சீங்க இல்லையா?" - கண்கள் இரண்டும் தீப்பிழம்பாக ஜ்வலிக்கக் கேட்டவளைப் பார்த்துக் கைகூப்பினார்.

"இல்லம்மா! அப்படியில்ல. அவன் அறியாத பிள்ளை. அவனுக்கு நல்லது எது, கெட்டது எது என்று தெரியாமல் அம்மாவின் பிடியிலே வளர்ந்து விட்டான். அதனால் அந்தப் பெண்ணிடம் ஏமாந்து நிறையப் பணத்தை வாரியிறைத்தான். அதைத் தடுக்கத்தான் குடும்பப் பாங்கான தைரியசாலியான உன்னை என் மருமகளாகத் தேர்ந்தெடுத்தேன்.

அன்று திருமண வீட்டில் மாப்பிள்ளை வீட்டார் கூறிய பெறு குற்றங்களுக்குக்கூடச் சூடாய் நேருக்குநேர் நின்று பதிலடி கொடுத்தாயே. அப்போதுதான் எனக்கு இந்த

முடிவு தோன்றியது. என் மகனிடம் சொன்னால் அவன் என்னை மீறி எதையும் செய்து விடுவான் என்ற பயத்தில்தான் அவசரமாய்த் திருமணத்தை முடித்தேன்.

"நீ உன் அன்பால், திறமையால் எப்படியும் மாற்றி விடுவாய் என்ற நம்பிக்கையில்தான் இப்படிச் செய்தேன். அது இப்படியாகும் என்று கனவிலும் நினைக்க வில்லையே!" - கண்ணீர் சிந்தினார்.

"ஏன் மாமா? என்மீது வைத்த நம்பிக்கையை ஏன் அந்தப் பெண்மீது வைக்கவில்லை. அவளை நம்பி உங்கள் மருமகளாக ஏற்றுக்கொண்டிருந்தால்கூட உங்கள் பிள்ளை பொறுப்புள்ளவராக மாறியிருப்பாரே. அதை ஏன் நீங்கள் செய்யவில்லை?"

"அதற்கும் முயற்சி செய்தேனம்மா. என் மகன் அந்தப் பெண்ணை விரும்புகிறான் என்று தெரிந்ததுமே அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தேன். அது அத்தனை நல்லவிதமாய்த் தெரியவில்லை. ஏற்கெனவே இருந்த இடத்தில் யாருடனோ பழகிக் கெட்டுப்போய் அது பெரிய பிரச்சனையாகி இங்கு வந்து சேர்ந்திருக்கிறாள்.

"இதைத் தெரிந்த பிறகு எப்படியம்மா என் மகன் வாழ்வைப் பாழாக்க முடியும். அப்படியும் அவனிடம் மேலோட்டமாகச் சொல்லிப் பார்த்தேன். நான் சொன்ன எதையும் அவன் கேட்கவில்லை. கேட்கும் பொறுமை அவனுக்கு இல்லை." - பெருமூச்சுவிட்டார்.

அம்பிகை கோபமாய்க் கணவரை ஏறிட்டார். "அடப் பாவி மனுஷா! இத்தனை நடந்திருக்கிறது. என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் மறைத்துவிட்டீர்களே. என்னிடம் சொல்லியிருந்தால் என் மகனைப் பக்குவ மாய்ப் பேசி மாற்றியிருப்பேனே.



"என்னை யாரும் ஒரு பொருட்டாகவே மதிக்க வில்லை. அப்படித்தானே... நோயாளி என்று என்னை ஒதுக்கி வைத்து விட்டீர்கள் இல்லையா? இன்று என் மகனை இழந்து ஒரு பாவமும் அறியாத இந்தப் பெண்ணின் வாழ்க்கையையும் அழித்துப் பெரிய பாவத்தில் தள்ளிவிட்டீர்களே!" - எனத் தலையில் அடித்துக்கொண்டு அழுதாள்.

"அம்மா, ப்ளீஸ். அழாதீர்கள் அம்மா. எனக்கு அண்ணனைப் பற்றித் தெரியும். அவன் அப்படிச் செய்பவன் இல்லை. அதற்கு அவனுக்குத் துணிவும் கிடையாது. ஏதோ சதியில் மாட்டியிருக்கிறான் என்று நினைக்கிறேன்," - என்ற பிரதாப்பைப் பிடிபிடியென்று பிடித்துவிட்டாள் செல்லம்மா.

"ஆமாம் ஆமாம்! உங்கள் அண்ணனைப் பற்றித் தெரியாமல் இருக்குமா உங்களுக்கு? தெரிந்துதானே ஏமாற்றினீர்கள். அண்ணன் தந்து அனுப்பினான், அண்ணன் சொன்னான் என்றுதானே வீட்டிற்கு வந்தீர்கள். அத்தனையும் பொய். பித்தலாட்டம். என்ன குடும்பம் இது?"

"செல்லா!" - கோபமானான் பிரதாப்.

"ஷ்ஷ்"ஷ்". இந்த மிரட்டல் எல்லாம் வேறு யாரிடமாவது வைத்துக்கொள்ளுங்கள். உண்மையைச் சொன்னால் கோபம் வருகிறதோ? கட்டிய மனைவியை வீட்டில் தவிக்கவிட்டு விரும்பியவளோடு கூத்தடிக்கத் துணிச்சல் இருக்கிறது. கட்டியவளைத் தாறுமாறாய்ப் போட்டு உதைக்கத் துணிச்சல் இருக்கிறது. ஆசைப் பட்டவளோடு ஓட மட்டும் துணிச்சல் இல்லையோ?

"எவளாவது காதில் பூ வைத்துக்கொண்டு தெருவில் இருப்பாள். அவளிடம் போய் இந்தக் கதையைச் சொல்லுங்கள்.

நம்புவாள். இதையெல்லாம் நம்ப நாங்கள் ஒன்றும் முட்டாளில்லை." - கோபாவேசமாய் நின்ற மகளை நெருங்கினார் பெரியசாமி.

"செல்லம்மா. அப்படியெல்லாம் மட்டுமருவாதை இல்லாம பேசாத தாயீ. எல்லாம் நம்ம விதி. இதுல அவங்களைக் குற்றம் சொல்லி என்ன ஆவப்போவுது. அமைதியா இரும்மா."

"வாயை மூடுங்கப்பா. செய்வதை எல்லாம் நீங்கள் செய்துவிட்டு விதியின் மேல் ஏன் பழியைப் போடுறீங்க. மனுஷனா நீங்க. அவ என்ன உங்ககிட்ட வந்து எனக்குக் கல்யாணம் பண்ணிவையுங்கன்னு கேட்டாளா? உங்க பேராசைக்கும் சோம்பேறித்தனத்திற்கும் உங்களுக்குப் பிறந்த பாவத்திற்கு அவளைப் பலியாக்கிவிட்டீர்களே.

"ஒரே ஒரு வருஷம் படிப்பை முடிச்சுடுறேன்னு சொன்னவளை என்னவெல்லாம் கேட்டுக் காயப்படுத்தி சம்மதிக்க வைத்தீர்கள். இன்று அதே கேள்வியை அதை விடக் கூடக்கொஞ்சம் சேர்த்து உங்கள் மாப்பிள்ளை கேட்டிருக்கான்.

"மொத்த ஆண் வர்க்கமே இப்படித்தான் இருப்பீங்களா? பெற்ற மகள்மீது கட்டிய மனைவிமீது எப்போதய்யா நம்பிக்கை வைப்பீர்கள்? அன்று நீங்கள் நம்பிக்கை வைத்திருந்தால் அக்கா இப்போ இப்படி நிற்பாளா? உங்களுக்குப் பெண்களாய்ப் பிறந்ததற்கு வெட்கப்படுகிறோம். வேதனைப்படுகிறோம்!" - பேச்சின் முடிவில் கண்கள் கலங்கின.

"செல்வா!" - அதட்டினாள் பாரதி.

"அழக்கூடாது. ஒரு சொட்டுக் கண்ணீர் விடக்கூடாது. நாம எதற்காக அழ வேண்டும்? நாமென்ன தவறு



செய்தோம்? தவறு செய்தவர் அழட்டும். நீங்க கிளம்புங்க!" - என்றவளை அனைவரும் அதிர்ச்சியாய்ப் பார்த்தனர்.

"அக்கா! நீ என்ன சொல்கிறாய்? நாங்கள் கிளம்புவதா? அப்போ நீ... நீ எங்களோடு வரவில்லையா?"

"இல்லை. நான் வரவில்லை. இதுதானே என் வீடு. நான் இங்குதானே இருக்க வேண்டும். அதுதானே முறை."

"அக்கா! இது என்ன பேச்சு? நீ மட்டும் இங்கே இருந்து என்ன செய்யப் போகிறாய்?"

"படிக்கப் போகிறேன்!" - என்றவளைப் பார்த்து அனைவருமே பிரமித்துப் போயினர்.

"என்ன? படிக்கப் போகிறாயா? அதையேன் தனியாய் இங்கு இருந்து படிக்கவேண்டும்? வா. நம் வீட்டிற்குப் போய்விடலாம்."

"இல்லை செல்வா. இதுதான் எனக்கு நிரந்தரம். இப்போது நான் அங்கு வந்தால் வாழாவெட்டி என்பார்கள். ஆளுக்கொரு கதை பேசி என் நடத்தையையே விமர்சிப்பார்கள். அது வாழவேண்டிய உங்களைப் பாதிக்கும்.

"அடுத்ததாய் இரண்டு பெண்கள் இருக்கும் வீட்டில் மூத்தவள் இப்படி வந்து உட்கார்ந்தால் யார் உங்களைப் பெண்கேட்டு வருவார்? அதோடு நம் அப்பாவின் மீதும் எனக்கு நம்பிக்கை இல்லை!" - என நிறுத்தினாள் பாரதி.

"ஏம்மா! ஏம்மா எம்மேல நம்பிக்கை இல்ல?" - கண்கள் பொங்கக் கேட்டவரை ஏறெடுத்தும் பாராமல், "பாரமாக இருக்கிறேன் என்று எவனிடமாவது என்னை விற்று விடுவீர்கள்!" - என்றதும் அதிர்ந்து காதை மூடிக் கொண்டார்.

"பார்த்தீங்களா? நம்ம புள்ள பேசுறதைக் கேட்டீங்களா? அது மனசு எவ்வளவு ரணப்பட்டுப் போயிருந்தா

இப்படிப் பேசும். எம்புள்ள மனசைக் குத்திக் கிளறிப் புண்ணாக்கிட்டீங்களே!" - லட்சுமி கதறினாள்.

"அம்மா ப்ளீஸ்! ஆளாளுக்கு அழுது என்னை இளக வச்சுடாதீங்க. நடந்ததைப்பத்திப் பேசறதால எதையும் மாத்தமுடியாது. நான் இனிமே அங்கே வரமாட்டேன். என் தங்கைகளுக்காவது பொறுமையாய் நிதானமாய் குறிப்பா ஒரு நல்லவனாய் மாப்பிள்ளை பாருங்க. கிளம்புங்க..."

"முடியாது அக்கா. உன்னை இப்படித் தனியே விட்டுட்டுப் போக முடியாது. சொன்னால் கேளுக்கா. நம் வீட்டிற்கு வா." - அழுதாள் சக்தி.

"தனிமை எனக்குப் பழகிப்போச்சும்மா. இங்கே வந்ததில் இருந்தே தனிமை மட்டும்தானே எனக்குத் துணையா இருந்தது."

பிரதாப் வேதனையாய்க் கண்களை மூடிக் கொண்டான். பேச நா எழவில்லை. அண்ணியின் இந்த நிலைக்கு மறைமுகமாய்த் தானும் ஒரு காரணம் என்ற நினைப்பே அவனது நெஞ்சை அறுத்தது.

அம்பிகை அருகில் வந்தாள். "அம்மாடி! புருஷன் வீடுதான் நிரந்தரம் என்றாயே. எங்களுடன் வந்து விடம்மா. என் மகளாய் நான் உன்னைப் பார்த்துக் கொள்கிறேன். வாம்மா!" - என்றாள் கனிவாய்.

"வேண்டாம் அத்தை. உங்கள் பிள்ளை என்னை விரும்பி ஏற்றாரோ இல்லையோ. ஆனால் நான் அவரை முழுதாய் விரும்பித்தான் மணந்தேன். அவருடன் வாழும் எண்ணத்தில்தான் இந்த வீட்டிற்குள் நுழைந்தேன்.

"என் கணவனோடு மனமொத்துதான் வாழ்ந்தேன். இந்த இடம் போதும். இதிலே என் வாழ்நாளைக் கழித்து



விடுகிறேன். மாமா! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்!" - என்றாள் பணிவாய்.

"எதற்கம்மா? நான் ஏன் உன்னை மன்னிக்க வேண்டும்?"

"இது உங்கள் வீடு. உங்கள் அனுமதி கேட்காமல் நான் இங்கேதான் இருப்பேன் என்று சொல்லிவிட்டேன். இங்கே ஒரே ஒரு அறை மட்டும்கூடப் போதும். நான் இங்கே இருக்கலாமா?"

"இது உன் வீடும்மா. உனக்கில்லாத உரிமையா? என்று உன்னை என் மருமகளாக இங்கு அழைத்து வந்தோமோ அப்போதே இந்த வீடு, இங்குள்ள சொத்து அனைத்தையும் உன் பெயரில் மாற்றிவிட்டேனம்மா. உன் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் செய்யம்மா."

"எனக்கு அதெல்லாம் எதுவும் வேண்டாம் மாமா. இந்த வீட்டில் ஓர் ஓரம் மட்டும் போதும்."

"அப்படிச் சொல்லாதே அம்மா. உன்னை என் மருமகளாய் நினைத்து அழைத்து வந்தேன். இன்று என் மகளாக ஏற்றுக்கொள்கிறேன். இந்தக் கிழவனை மன்னித்து உன் தந்தையாக ஏற்றுக்கொள்ளம்மா.

"எந்த நிலையிலும் உனக்குக் காவலாய் இருப்பேன். என்னை நம்பும்மா. தெரியாமல் செய்த பிழையை மன்னித்துவிடம்மா. இனி எனக்கு ஒரே பிள்ளை. ஒரு பெண் மட்டும்தான். தொலைந்து போனவன் இறந்து போனதாகவே இருக்கட்டும். என்னை ஒதுக்கிவிடாதம்மா..." - என்றார் கண்ணீர் மல்க.

"உங்கள் பிள்ளை சொன்ன நஷ்டஈடு இதுதானா?" - எனக் கேட்ட நங்கையைப் பார்வையால் அடக்கினாள் பாரதி.

"மாமா! உங்கள் விருப்பத்தை நீங்கள் சொன்னீர்கள். நான் என் விருப்பத்தைச் சொல்லிவிடுகிறேன். எனக்கு இந்தச் சொத்தெல்லாம் வேண்டாம். எனக்கு ஏதேனும் உதவி செய்வதாக இருந்தால் எனக்கு இன்னும் ஒரு வருடப் படிப்பு இருக்கிறது. அதற்கு மட்டும் ஏற்பாடு செய்ய முடியுமா?"

"நிச்சயமாய் அம்மா! நீ எவ்வளவு படிக்க வேண்டுமோ படி. நான் ஏற்பாடு செய்கிறேன். பிரதாப் பார்த்துக் கொள்வான்."

"படித்து முடித்து வேலையில் சேர்ந்ததும் நீங்கள் செலவழித்த பணத்தை அடைத்துவிடுகிறேன். அதற்கும் நீங்கள் சம்மதிக்கவேண்டும்." - உறுதியாய்ச் சொன்னவளை வேதனையோடு பார்த்தார்.

"ஏம்மா! நான் இவ்ளோ சொல்லியும் பிடிவாதமாய் நிற்கிறாயே."

"இல்லை மாமா! நீங்கள் சொன்னதை ஏற்றுக் கொண்டால் இந்தப் பணத்திற்காக நான் இங்கே இருப்பது போலாகிவிடுமே. உங்கள் மகன் எழுதியது உண்மையாகி விடுமே. அதனால் என் நிலையைப் புரிந்துகொண்டு வற்புறுத்தாதீர்கள் மாமா."

ஒரு பெருமூச்சுடன், "சரிம்மா! உன் விருப்பம் போல் செய்," என்று விட்டார்.

"சரி! நான் சமைக்கிறேன். எல்லாரும் சாப்பிட்டு விட்டுப் போகலாம்," - என்றவாறு ஒன்றுமே நடவாதது



போல் சென்றவளை அனைவரும் கலக்கமாய்ப் பார்த்துக் கொண்டிருக்க,

வந்த நேரம் முதல் இதுவரை தன் மகள் தன்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை... பேசவில்லையே என்ற வேதனையில் பெரியசாமி கொஞ்சம் கொஞ்சமாய் நொறுங்கிக் கொண்டிருந்தார்.

## 22

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள்
செய்வதும் பாரினில் பெண்கள்
நடத்த வந்தோம் - எட்டும் அறிவினில்
ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை.

வீடு அமைதியாக இருந்தது. மழைமேகங்கள் [illegible]மாய் விலகி விட்டிருக்க, லேசான வெயில் அடிக்கத் தொடங்கியிருந்தது. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப [illegible]ம் மாறியிருந்தது. அனைத்து ஜன்னல்களையும் திறந்து விட்டிருந்தாள் பாரதி. இதமான காற்றும் கூடவே மலர்களின் நறுமணமும் பரவின. பூஜையறையில் அணையா விளக்காய்க் காமாட்சி அம்மன் விளக்கு பிரகாசித்தது. மெல்லியதாய்ப் பக்திப் பாடல் ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

ஜன்னலோரமாய்ப் போடப்பட்டிருந்த மேஜையின் முன் [illegible] நாற்காலியில் அமர்ந்திருந்தாள் பாரதி. பெரிய புத்தகத்தை வைத்துக் கொண்டு குறிப்பெடுத்துக்

கொண்டிருந்தாள். படிப்பில் ஆழ்ந்து விட்டால் சுற்றுப் புறத்தையே மறந்துவிடுவது அவளது இயல்பு. இன்றும் அப்படி இருந்தபோதுதான் ஏலக்காய் மணம்கமழ சூடான பால் பாயசத்தை அவள் முன் நீட்டினாள் செல்வம்மா.

புத்தகத்தை விட்டுப் பார்வையை விலக்கியவள், "என்னது இது?" - என்றாள் தங்கையை நோக்கி.

"பால்பாயசம். ஜவ்வரிசி சேமியா எல்லாம் போட்டுச் செய்வோமே..."

"அது தெரியுது. இப்ப என்ன விசேஷம் என்று பாயசம் வைத்தாய்?"

"இன்னிக்கு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி அக்கா."

"அதென்ன டிசம்பர் 11... ஓ! இன்று பாரதியின் பிறந்த நாள். பரவாயில்லை செல்லா! நீதான் அவன் நினைவில் வைத்து பால்பாயசமெல்லாம் செய்து அவன் பிறந்த நாளைக் கொண்டாடுகிறாய். பாரதி ஆத்மா சந்தோஷப்படும்!" - என்றவாறே டம்ளரை வாங்கிக் கொண்டாள்.

"இந்தப் பாயசம் உனக்கும் சேர்த்தே செய்தது அக்கா. நீயும் இன்றுதான் பிறந்தாய். மறந்துவிட்டாயா?"

வாயருகே கொண்டு போன டம்ளர் அப்படியே நின்றது. திக்கென நிமிர்ந்து தங்கையைப் பார்த்தாள்.

"இன்று என் பிறந்தநாளா? மறந்தே விட்டது பார்" என இயல்பாய்ச் சிரித்தவளைப் பார்க்கையில் மனம் குமுறியது.

'பிறந்த நாளைக்கூட நினைவில் வைத்துக்கொள்ள முடியாத அளவிற்கு உன்னை இறுகிப்போக வைத்தவன் மட்டும் என் கையில் கிடைக்க வேண்டும் அக்கா.



அப்படியே அவன் கழுத்தைத் திருகி நான் கொல்ல வேண்டும். இப்போது அவன் எங்கிருக்கிறான்? எப்படியும் என் கண்ணில் படாமலா போவான்?' நறநறவெனப் பற்களைக் கடித்தாள்.

"இன்னும் எத்தனை நாள் இப்படியே இருப்பாய் செல்லா. உன் படிப்பு என்ன ஆவது?"

"படிப்பு என்ன பெரிய படிப்பு? உன்னைத் தனியாக விட்டுட்டு என்னால் போகமுடியாது. நீ இப்படியே இருக்கும்வரை நானும் இப்படித்தான் இருப்பேன்!" என்றவாறு காலியான டம்ளரை வாங்கிக்கொண்டாள்.

"குழந்தை மாதிரிப் பேசாதே. என் வாழ்க்கை முடிந்து போன கதை. உன் வாழ்க்கை இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. படிக்க வாய்ப்புக் கிடைத்தும் இப்படிக் கரண்டியைப் பிடித்துக்கொண்டு சமையலறையில் அடங்கிக்கொள்கிறாயே. எனக்குக் கஷ்டமா இருக்குடி."

"எனக்கும்தான் கஷ்டமா இருக்கு. நீ இப்படித் தனிமரமாய் நிற்பதை எண்ணி... பேசாமல் ஊருக்கு வா என்றால் வர மாட்டேன் என்கிறாய். இந்த ஊரில் உன்னைத் தனியே விட்டுப் போகமாட்டேன் அக்கா."

"அப்படி இல்லடி... உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமைச்சுக்க வேண்டாமா? இப்படி என்கூடவே இருந்தா..."

"வேண்டாம்மா தாயே... நீ வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்த பிறகு எனக்குத் திருமண ஆசை வரும் என்றா நினைக்கிறாய்? வேண்டாம். காலம்பூரா இப்படியே இருந்துவிடுகிறேன். நீ என்னைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு நன்றாகப் படி. சீக்கிரம் நான் உன்னைக் கறுப்புக் கோட்டோடு பார்க்கணும்..."

"நான் உள்ளே வரலாமா?" - என்ற குரல் கேட்டது விருட்டென நகர்ந்து கிச்சனுக்குள் நுழைந்து கொண்ட செல்லம்மா.

"வாங்க பிரதாப்!" - இயல்பாய் வரவேற்ற பாபதி "செல்லா! பிரதாப்புக்கு ஒரு கிளாஸ் பாயசம் கொண்டு வா!" - என உள்நோக்கிக் குரல் கொடுத்தாள்.

"என்னங்க அண்ணி. எதுவும் விசேஷமா?" - என்ற வாறு உள்ளே நுழைந்து அமர்ந்தான் பிரதாப்.

"இன்னிக்குப் பாரதியார் பிறந்த நாள் பிரதாப்."

"அடடே! புரட்சிக் கவியை நினைவு வைத்து இனிப்போடு கொண்டாடுகிறீர்களே. கிரேட் அண்ணி இந்தாங்க அண்ணி நீங்க கேட்ட புக்ஸ்!" - எனக் கையோடு கொண்டு வந்திருந்த பார்சலைக் கொடுத்தான்.

"தேங்க்யூ பிரதாப். உங்களுக்குச் சிரமம் கொடுத் திட்டேன்."

"என்ன அண்ணி! இது என் கடமை. இதுக்கு எது நன்றி. படிப்பெல்லாம் எப்படி இருக்கு அண்ணி?"

"ம். ஈஸியா இருக்கு. நாலஞ்சு ஃபிரண்ட்ஸ் கிடைச்சாச்சு. நான் காலேஜுக்குப் போயிட்டப்பு செல்லாதான் வீட்ல தனியா இருக்கா. படிக்கப் போன கேட்க மாட்டேங்கிறா."

"அது விஷயமா பேசத்தான் வந்தேன் அண்ணி ஊட்டியிலேயே படிக்கிற மாதிரி ஏற்பாடு பண்ணி யிருக்கேன். செல்லாவுக்கு ஓ.கே.ன்னா நாளைக்கு சேர்த்துடலாம்."

"யாரோட தயவாலும் நான் படிக்க விரும்பல அவரவர் வேலையைப் பார்த்தால் போதும். எனக்க



யாரும் மெனக்கெட வேண்டாம்!" - என்றவாறு பாயச டம்ளரை 'டங்' என்ற சத்தத்தோடு பிரதாப்பின் அருகிலிருந்த மேசைமீது வைத்துவிட்டுப் போனாள். அவள் வைத்த வேகத்தில் ஒரு சில துளிகள் பிரதாப்பின் மீது தெறித்தன.

"செல்லா! இது என்ன பழக்கம்? கொஞ்சமும் மரியாதை இல்லாமல்..."

"விடுங்க அண்ணி. வேண்டும் என்றா ஊற்றினாள். தெரியாமல்தானே பட்டுவிட்டது. இட்ஸ் ஓ.கே." - என்றவாறு கைக்குட்டையை எடுத்துத் துடைத்துக் கொண்டான்.

"ஸாரி பிரதாப். அவளுக்கு உங்கள் மீதுள்ள கோபம் இன்னும் குறையவில்லை!" - என்றாள் வருத்தமாய்.

"பரவாயில்லை அண்ணி. உரிமை உள்ள இடத்தில் தானே கோபம் வரும். செல்லாவின் கோபமும் நியாய மானதுதானே. நான் செய்ததும் தப்புதானே. ஆனால் ஒன்று அண்ணி. உங்கள் திருமணம் முடிவதற்கு முன் இதெல்லாம் எனக்குச் சத்தியமா தெரியாது அண்ணி."

"தெரிந்தால் மட்டும் என்ன கிழித்திருப்பாராம்!" வெளியே வராமல் அறைக்குள் இருந்தே குரல் கொடுத் தாள் செல்லம்மா.

"நிச்சயமாய்த் திருமணத்தை நடக்க விட்டிருக்க மாட்டேன். அவள் நல்லவளோ கெட்டவளோ! அப்பா விடம் வாதாடி அந்தப் பெண்ணையே அண்ணனுக்கு மணம் பேசி முடித்திருப்பேன். நான் எத்தனை முறை கேட்டும் அவன் சொல்லவில்லையே. சொல்லியிருந்தால் இத்தனை வேதனை யாருக்கும் இருந்திருக்காது.

"உண்மையில் அண்ணன் கூச்ச சுபாவம் கொண்டவன். அதிகத் துணிச்சலும் கிடையாது. ஒரு சிறு கஷ்டம் என்றாலும் அம்மாவிடம் தான் போய் ஒண்டிக் கொள்வான். அவனால் இவ்வளவு பெரிய காரியமெல்லாம் செய்யமுடியாது அண்ணி. இதில் ஏதோ தப்பு நடந்திருக்கிறது."

"வேண்டாம் பிரதாப்! நான் மறக்க நினைப்பதைத் தயவுசெய்து நினைவு படுத்தாதீர்கள்."

"உங்கள் மனதைக் காயப்படுத்த வேண்டும் என்று பேசவில்லை. ஆனால் உண்மையிலே அண்ணன் அப்படிப் போகாமலிருந்தால்... யாராவது மிரட்டியோ கடத்தியோ சென்றிருந்தால்..."

"உங்கள் அண்ணன் ஒன்றும் குழந்தை அல்ல பிரதாப்..."

"குழந்தைதான் அண்ணி. வளர்ந்த குழந்தை. கோபமாய் ஒரு வார்த்தை பேசினாலும் அதற்குப் பலமுறை மன்னிப்புக் கேட்பான். தப்பான காரியத்தை அவன் ஒருநாளும் செய்யமாட்டான்."

"விரும்பியவளை விட்டுட்டு எங்க அக்கா கழுத்தில் தாலி கட்டினாரே, அது நல்ல காரியமா? எந்தத் தவறும் செய்யாதவளைக் கண்மூடித்தனமாய் அடித்திருக்கிறாரே அது நல்ல விசயமா?" - கோபாவேசமாக வந்து நின்றாள் செல்வம்மா.

"விரும்பியவளை மறந்து இன்னொரு பெண்ணை மணப்பது எத்தனை வேதனையான விஷயம் என்று எனக்கும் தெரியும். ஆனால் நீங்களே சிந்தியுங்கள் அண்ணி. ஓடிப்போவதாக இருந்தால் எப்போதோ போயிருப்பானே...



"திருமணத்திற்கு முன்பே போயிருக்கலாம். இல்லை இங்கு வந்தவுடனே போயிருக்கலாம். எதற்காக இத்தனை நாள் கழித்துத் திடீரென மறையவேண்டும்? அவன் அப்படிப் போகமாட்டான் அண்ணி. மான அவமானத்திற்குப் பயப்படுகிறவன் அவன்."

"என்ன பிரதாப் இது. கட்டாயத்திற்காக என்னை மணந்தாலும் அவர் என்னுடன் வாழவில்லையே. வீட்டிற்கே பல நாட்கள் வராமல் இருந்திருக்கிறார். என் முகத்தைப் பார்க்கவே விரும்பமாட்டார். இப்படி உதாசீனப்படுத்தினால் நான் நானாக வீட்டைவிட்டுப் போய்விடுவேன் என்று எதிர்பார்த்திருப்பார்.

அது நடக்கவில்லை. அதன் பிறகுதான் வன்முறையைக் கையிலெடுத்தார் உன் அண்ணன். அவர் வாயாலேயே வெளியே போகச் சொன்னார். நான் மறுத்துவிட்டேன். இனி என்னுடன் வாழ்ந்தால் காதலிக்குத் துரோகம் செய்தது போலாகிவிடுமே. அதனால்தான் போய்விட்டார்.

இதைக்கூட உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா? இல்லை, புரிந்து கொள்ள மறுக்கிறீர்களா?" - என்றாள் பாரதி வேதனையாய்.

"இது எல்லாமே யூகம்தானே அண்ணி. உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாதே... இதையே இப்படி யோசித்துப் பாருங்கள். அண்ணன் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது அடிக்கடி போன் வந்தது. புறப்பட்டுச் சென்றான் என்றுதானே சொன்னீர்கள்."

"ஆமாம். அவர் டென்ஷனாக இருந்ததால் நான்தான் போயிட்டு வாங்க என்று அனுப்பினேன்."

"அனுப்பினீர்கள் இல்லையா? அண்ணன் போகும் போது என்ன சொல்லிவிட்டுப் போனான்?"

"ம்..." - ஒரு கண யோசிப்பிற்குப் பிறகு சொன்னாள் "அவசர வேலை. ஒரு மணி நேரத்தில் வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டுப் போனார்."

"வேறு எதுவும் லக்கேஜ் எடுத்துப் போனானா?"

"இல்லை. கார் சாவி மட்டும்தான் எடுத்திட்டுப் போனார்."

"பார்த்தீர்களா? ஊரைவிட்டு ஓடுபவன் மாற்றுத் துணியோ பணமோ எடுக்காமலா ஓடுவான். அதுவும் ஒரு மணிநேரத்தில் வந்துவிடுகிறேன் என்றா சொல்லிவிட்டுப் போவான்?"

பிரதாப்பின் கேள்வியில் பாரதி வாயடைத்துப் போனாள். செல்வா இடையில் புகுந்தாள்.

"முட்டாள் மாதிரிப் பேசாதீர்கள். பெட்டியைத் தூக்கிக்கொண்டு போனால் சந்தேகம் வராதா! அதுதான் கையில் கிரெடிட் கார்டு அது இதென்று இருக்கிறதே. அதை வைத்துக் கொண்டு வாங்க முடியாதா? அவளைப் பார்க்கத்தான் கிளம்பியிருப்பார். அவளோடு சேர்ந்து பேசி இந்த முடிவை எடுத்திருப்பார். போவதற்கு முன் தெளிவாய்க் கடிதம் தந்துவிட்டுத்தானே போயிருக்கார்."

"என் சந்தேகமே அந்தக் கடிதத்தில்தான் தொடங்கியது செல்லம். ஊரைவிட்டுப் போகிறவன் நாலு வார்த்தை எழுதிவைத்துவிட்டுப் போனால் சாத்தியம். ஆனால் இவன் உட்கார்ந்து டைப் பண்ணியா வைத்து விட்டுப் போவான். அதோடு எங்களிடம் டைப்ரைட்டிங் மிஷினும் கிடையாது.

"அப்புறம் கையெழுத்துப் பார்த்தாயா? ஆபீஸ் ஸ்டாம்பை ஒட்டி அதன் மேல் கையெழுத்திட்டு இருக்கிறான். ஏற்றுமதி சம்பந்தமான கடிதங்களுக்கு



மட்டும்தானே இந்த முத்திரையை அச்சடிப்போம். தன் தந்தைக்கு எழுதும் கடிதத்திற்கெல்லாமா இப்படிப் போடுவான்."

இம்முறை செல்லம்மாவும் பேச்சற்றுப் போனாள்.

"இப்ப என்ன சொல்ல வர்றீங்க பிரதாப்?" - சலிப்பாய்க் கேட்டாள் பாரதி.

"அண்ணி, நான் சொல்வதைக் கொஞ்சம் கோபப் படாமல் கேளுங்கண்ணி. அண்ணனை உங்களிடம் நெருங்காமல் வைத்திருந்த மினி, தன்னையும் மீறி உங்களை ஏற்றுக் கொள்வானோ என்ற அச்சத்தில் அண்ணனை மிரட்டியிருக்கலாம். திருமணம் செய்ய வற்புறுத்தி இருக்கலாம்.

அண்ணன் மறுத்திருந்தால் அவனைக் கடத்தியிருக் கலாம் என்பதுதான் என் சந்தேகம். சம்பவம் நடந்த அன்று காலையில் மனோகர் இன்னொருவனுடன் பைக்கில் நம் வீட்டிற்கு வந்து போனதைச் சோமு பார்த்திருக்கிறான்.

"ஆனால், மனோகரை நான் விசாரித்தபோது கை உடைந்த பிறகு என்னால் வண்டி ஓட்ட முடியவில்லை. அதனால் நான் வீட்டிற்குப் போகாமல் எஸ்டேட்டில் தங்கிவிட்டேன். அந்த நேரம்தான் என் தங்கையை உன் அண்ணன் கூட்டிட்டுப் போயிருக்கார் என்று நாடக மாடுகிறான்.

"அவர்கள் போவதாக இருந்தால் நிச்சயம் மனோகரும் போயிருப்பான். இவன் இங்கிருப்பதுதான் எனக்கு இன்னும் சந்தேகம். இவன்தான் அவர்களை எங்கோ மறைத்து வைத்திருக்கிறான்.

"விடியுமுன்னே போய்விட்டார்கள் என்கிறான் மனோகர். ஆனால் கார் மாலைதான் எஸ்டேட்டிற்குள்

நுழைந்தது என்கிறான் எஸ்டேட் வாட்ச்மேன். முதலாளி கார் என்பதால் யார் ஓட்டியது என்று உற்றுப் பார்க்கவில்லை. வண்டியைப் பார்த்ததும் கேட்டைத் திறந்து விட்டேன் என்கிறான்.

"இதையெல்லாம் விசாரித்து இந்தப் பத்து நாட்களில் நான் கண்ட விடை இதுதான் அண்ணி. அண்ணன் நிச்சயமாய் உங்களை ஏமாற்றிவிட்டு ஓடவில்லை. எங்கேயோ மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்," - என்ற பிரதாப்பை அக்காவும் தங்கையும் அதிர்ந்து நோக்கினர்.

"பிரதாப்! நீங்கள் என்ன சொல்றீங்க? அதெப்படி ஒரு ஆணை அதுவும் தன் முதலாளியை எப்படிக் கடத்திக்கொண்டு போவார்கள்?"

"முடியும் அண்ணி. வாசலில் சோமு இருப்பது தெரிந்தும் மனோகர் வீட்டினுள் வந்து உங்களிடம் வாலாட்டவில்லையா? அவ்வளவு ஏன்? இதைச் சொல்ல எனக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது.

"என் அப்பாவே அண்ணனை மிரட்டி ஒரு வாரம் தஞ்சாவூர் ஹோட்டலில் அடைத்து உங்கள் கழுத்தில் தாலிகட்ட வைக்கவில்லையா? அதுபோல் இதுவும் ஏன் நடந்திருக்கக் கூடாது."

"அப்படின்னா... அவரைக் கொண்டுபோய் மிரட்டி அவரிடம் தாலி வாங்கியிருப்பாளா?" - என்று சொல்லும் போதே பாரதியின் முகம் இறுகியது.

"கட்டிவிட்டுப் போகட்டுமே. அவர் மனதில் அவள் தானே இருக்கிறாள் பிரதாப். பிறகேன் மிரட்ட வேண்டும். ஆசையோடே தாலியைக் கட்டியிருப்பார். இந்நேரம் தேனிலவு கொண்டாடிக் கொண்டு இருப்பார்கள்!" - என்றாள் கசப்பாய்.



பிரதாப் பதறி மறுத்தான். "இல்லை அண்ணி. நான் சொல்ல வந்த விஷயமே வேறு!" - என்றவனை இடை மறித்தான் பாரதி.

"வேண்டாம் பிரதாப். அசிங்கத்தை மேலும் மேலும் கிளற வேண்டாம். அந்தக் கடிதத்தின் மீது உங்களுக்கு வேண்டுமானால் சந்தேகம் இருக்கலாம். எனக்கு இல்லை. ஏன்னா, அதில உள்ள வார்த்தைகள் எல்லாமே அவர் வாயால் நான் கேட்டு விட்டேன். அவர் கேட்ட வார்த்தைகள் என் ஆயுளுக்கும் என் நெஞ்சை விட்டு நீங்காது. அதை நான் மறக்கவும் மாட்டேன்."

"அண்ணி! ப்ளீஸ். நான் சொல்வதைக் கொஞ்சம்..."

"நோ பிரதாப். வேண்டாம். எதுவும் சொல்ல வேண்டாம். நீங்கள் எந்த எண்ணத்தோடு பேசுகிறீர்கள் என்று புரிகிறது. அவர் விரும்பிப் போனாரோ, இல்லை மிரட்டிப் போனாரோ, மொத்தத்தில் மனதார விரும்பியவளோடு வாழப் போய்விட்டார். இனி அவர் எனக்குத் தேவையில்லை.

"நான் அவரை மட்டும்தான் என் கணவராக எண்ணினேன். எப்போதும் இப்படித்தான் எண்ணுவேன். அதற்காக இன்னொருத்தியோடு குடும்பம் நடத்திவிட்டு வருபவரை ஒருவேளை நீங்கள் நினைப்பதுபோல் வந்தால் நிச்சயம் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

"கட்டிய மனைவியைக் கைகழுவிவிட்டு இன்னொருத்தியுடன் வாழப் போனவனை ஏற்றுக்கொள்ள நானொன்றும் கண்ணகியோ நளாயினியோ இல்லை. நான் பாரதி. நானும் கற்புக்கரசிதான். கற்பு என்பது ஆண் பெண் இருவருக்கும் பொதுவானது.

"நான் கற்பு நெறி தவறாமல் வாழ்பவள். அதனால் நான் கற்புக்கரசிதான். அதனால் நெறி தவறிய உன் அண்ணன் மனம் திருந்தி வந்தாலும் அவரை ஏற்றுக் கொள்ள மாட் டேன்." - உறுதியாய்க் கூறினாள்.

"சரி அண்ணி! நீங்கள் நினைப்பது போல் நடந் திருந்தால் சத்தியமாய் நானே அவனை ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஒருவேளை... என் அண்ணன் உங்கள் நினைவோடு கற்பின் நெறி தவறாமல் ஒரு உத்தமனாகவே திரும்பி வந்தால்... அப்போது ஏற்றுக் கொள்வீர்களா? பதில் சொல்லுங்கள் அண்ணி." - விடாப்பிடியாய்க் கேட்டவனைப் பார்த்து விரக்தியாய்ச் சிரித்தாள் பாரதி.

"தப்புக் கணக்குப் போடுகிறீர்கள் பிரதாப். கடல்நீர் சர்க்கரையாக மாறாது. அடைமழையில் சூரிய ஒளியைப் பார்க்க முடியாது. வானத்து விண்மீன்களை எண்ண முடியாது. காக்கை கொக்காக மாற முடியாது. தலைகீழாக நின்றாலும் ஆண்களால் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாது. அதேபோலத்தான் நீங்கள் நினைப்பதும் நடக்காது."

"நடந்துவிட்டால்..." - உறுதியாகக் கேட்டான்.

"அப்படி நடக்கும்போது பார்க்கலாம். ஆனால் நடக்காத ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் முட்டாள் நானில்லை. எனக்கு வேலை இருக்கிறது!" - என்று வீட்டினுள் சென்றுவிட்டாள் பாரதி.

சில கணங்கள் அமைதியாய் அமர்ந்துவிட்டுச் சோர்வாய் எழுந்த பிரதாப்பின் அருகில் வந்தாள் செல்லம்மா.

"நான் நம்புகிறேன் பிரதாப்!" - என்றதும் கண்கள் மின்ன ஆர்வமாய் நிமிர்ந்தான்.



"செல்லம்! நிஜமாகவா? நீ என் அண்ணனை நம்பு கிறாயா?"

மறுப்பாய்த் தலையசைத்தாள். "இல்லை. அவரை நம்பவில்லை. ஆனால் உங்களை... உங்கள் நம்பிக்கையை நம்புகிறேன். நீங்கள் சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது. அது அக்காவிற்குப் புரிந்தாலும் அவளால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன்னா அவள் காயம்பட்டவள். அதன் வலி அதிகம். அந்த வலியின் தாக்கத்தால் அவளால் அதைச் சிந்திக்க முடியவில்லை.

"ஆனால் நீங்கள் சொல்லும் சாத்தியக் கூறுகள் சரியாகவும் இருக்கலாம். என்னால் எதுவும் உதவ முடியும் என்றால் நிச்சயம் உதவுவேன். எனக்கு என் அக்காவின் வாழ்க்கை ரொம்ப முக்கியம். அதற்காக எதுவும் செய் வேன்!" - என்றவளின் கைகளைப் பற்றிக் கொண்டான் பிரதாப்.

"தேங்க்யூ செல்லம். எங்கே நீ கூட என்னைப் புரிந்துகொள்ள மாட்டாயோ என்று பயந்து போனேன். நீ எனக்கு சப்போர்ட்டாய் இருப்பதே நான் ஜெயித்தது போல இருக்கிறது. நிச்சயம் ஜெயிப்போம்."

"சரி. இப்ப நாம என்ன செய்யணும்? இதைப் பற்றிப் பேச வேண்டும் என்றால் அக்கா வீட்டில் இல்லாத போது பேசலாம்."

"நிச்சயமாய். ஆனா இப்ப அதைவிட முக்கியமாய் ஒன்று நீ செய்ய வேண்டும்."

"நானா?"

"ஆமாம்! முதலில் ஊருக்குப் போன் செய்து உன் மாமா இருக்கிறாரே. அவரை உடனே புறப்பட்டு வரச்சொல். இப்ப அவர் நமக்குத் தேவை."

"அவர் எதற்கு பிரதாப்? ஏற்கெனவே அவர் வருவதை அக்கா தான் வேண்டாம். இங்கு வந்தால் மாமா கோபத்தில் ஏதாவது செய்துவிடுவார் என்று பயந்து அவரை வர வேண்டாம் என்று சொல்லிவிட்டாள்.

"அக்கா எது சொன்னாலும் மாமா மறுத்துப் பேச மாட்டார். அக்காவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத் தான் மாமா வரவில்லை. இப்போது அவரை ஏன் வரச் சொல்ல வேண்டும்? ஏற்கெனவே உங்கள் குடும்பத்தார் மீது மாமா ஏகப்பட்ட கடுப்பில் இருக்கிறார்."

"முதலில் வெளியே வா," - என அவளை கார்டனுக்கு அழைத்து வந்தான்.

"இதோ பார்! இப்போ அவரும் அவர் கோபமும் நமக்குத் தேவை. மனோகரை டப்பா வாட்ச் பண்ணித் தான் நாம அடுத்த ஸ்டெப் எடுக்க முடியும். நான், நீ, உன் மாமா, என் பிரெண்ட் ஆகாஷ், அப்புறம் தேவைப்பட்டா என்னோட அப்பா நாம எல்லாருமா சேர்ந்துதான் அண்ணனைக் கண்டுபிடிக்கப் போறோம்."

"எப்படி?" - விழிகளை விரித்துக் கேட்டாள்.

"சொல்றேன். ஆனா அதுக்கு முன்னால ஒரு ரிக்வெஸ்ட். இனிமே முக்கியமான விஷயம் பேசும் போது இப்படிக் கண்களை விரிக்காதே. நான் மத்ததை மறந்திடுவேன்."

நறுக்கென அவன் தலையில் குட்டினாள். "விளை யாடுற நேரமா இது? விஷயத்தைச் சொல்லுங்க."

"ம். சொல்றேன். இந்தா போன் போடு. உன் மாமாவை உடனே ஒரு கார் பிடித்துக்கொண்டு வரச்சொல். அவர் வந்தபிறகு நாம எஸ்டேட்டுக்குப் போறோம். அங்க என்



பிரெண்ட் ஆகாஷ் இருப்பான். நாம எல்லாருமா சேர்ந்து போன் பண்ணனும். ம். போன் பண்ணு," - எனத் தன் செல்போனை அவளிடம் நீட்டினான் பிரதாப்.

"நம்பர். எனக்கு நம்பர் நினைவில்லையே."

"அதில் பதிவாகி இருக்கும் பாரு," என பட்டனை அழுத்தி அவளிடம் நீட்ட, அதை வாங்கிப் பார்த்த செல்லாவின் முகம் அந்திவானமாய்ச் சிவந்தது.

"மை ஸ்வீட் ஹார்ட் காலிங்" - என அழைப்புச் சென்றது.

# 23

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
துச்சமாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதிலும் - அச்சமில்லை
அச்சமில்லை அச்சம் என்பதில்லையே!

சுற்றிலும் கும்மிருட்டு சூழ்ந்திருக்க குடிசைக்குள் மட்டும் ஒரு அரிக்கேன் விளக்கு சோகையாய் எரிந்து கொண்டிருந்தது. காட்டுப் பூச்சிகளின் இரைச்சலும் தூரத்தில் எங்கோ பிளிறிய யானையின் சத்தமும் தவிர ஒரே அமைதி.

பூச்சி பாம்பு எதுவும் உள்ளே நுழைய முடியாத அளவிற்கு இறுகச் சாத்தியிருந்தது கதவு. தரையில் பிரசாத்

படுத்திருந்தான். இந்தக் காட்டிற்கு வந்து முழுதாய் பதினைந்து நாட்கள் கடந்து போயிருக்க உடல் பாதியாய் இளைத்துப் போயிருந்தது. கை கால்கள் நீர்ச்சத்து இன்றி சோர்ந்து போயிருக்க, அரைவற்றுக் கிடந்தவனை எரிச்சலோடு பார்த்தாள் யாமினி.

கிருஷ்ணா சாப்பிடுவது ஒன்றே குறிக்கோளாக மனோகர் வாங்கி வந்திருந்த பிரியாணி பொட்டலத்தை வெட்டிக் கொண்டிருக்க, மனோகர் தங்கையிடம் மெல்லிய குரலில் எச்சரித்துக் கொண்டிருந்தான்.

"மினி, பைத்தியக்காரத்தனம் செய்து மாட்டிக் கொள்ளாதே. இங்கு வந்த அன்றே சொன்னேனே இவனுக்கு அந்த மூலிகை எல்லாம் வேண்டாம் என்று மீண்டும் ஏன் கொடுத்தாய்?"

"நினைவு வந்தால் கத்துகிறான் அண்ணா. பூனைபோல இருந்தவன் நேற்று என்னையே அறைந்து விட்டான் தெரியுமா? தாலி கட்டு. வீட்டுக்குப் போகலாம் என்றேன் அதற்கு அவனுக்கு எவ்ளோ கோபம் வருகிறது தெரியுமா இங்கேயே கிடந்து செத்தாலும் சாவானாம். என் கழுத்தில் தாலி கட்ட மாட்டானாம். அவனுக்கு என்னைப் பற்றி இன்னும் சரியாகத் தெரியவில்லை. அதனால்தான் மீண்டும் மூலிகை வைத்தியம் செய்தேன்." - என்றாள் கோபமாக.

"இதோ பார். இது ஒன்றும் சாதாரண மூலிகை இல்லை விஷப்பூச்சிகளோ பாம்போ கடித்துவிட்டால் வலியில் துடிப்பவர்களுக்கு வலி தெரியாமல் இருக்க நுகர… செய்வது. அதுவும் இரண்டு இலைகள் மட்டும். நீயானால் உன் விருப்பத்திற்குக் கை நிறையப் பறித்து அவன் உடல் முழுக்கப் பூசுகிறாய்."



"எனக்கே பாடம் எடுக்கிறாயா? எனக்கு இது தெரியாதா?"

"தெரிந்தும் ஏன் இப்படி மடத்தனம் பண்ணுகிறாய்? உன் ஆத்திரத்தால் அவனுக்கு மூளை மழுங்கிவிட்டால், இல்லை, பார்வை பறிபோய் விட்டால் என்ன செய்வாய்?"

"செத்துத் தொலையட்டும் என்று விட வேண்டியது தான். வேறென்ன செய்ய முடியும்?" - வெறுப்பைக் கக்கினாள் யாமினி.

மயக்க நிலையில் கிடப்பதுபோல் கண்களை மூடிச் சோர்ந்து கிடந்த போதும் பிரசாத்தின் காதுகள் கூர்மையாய் இருந்தன. இரண்டு முறை ஏமாளியாய் மூலிகையை நுகர்ந்தவன், இந்த முறை முன்னெச்சரிக்கையாய் அவள் பூச ஆரம்பித்ததும் மூச்சை அடக்கிக் கொண்டான். சில நொடிகளில் காய்ந்து விடும் சாற்றோடு அதன் வாசனையும் போய்விட மயக்கம் தெளியாததுபோல் துவண்டு கிடந்தான்.

அப்படிக் கிடந்தால்தான் மினியிடமிருந்து தப்பவும் முடிகிறது என்றே இந்த வழியைத் தேர்ந்தெடுத்தான். மயக்கம் தெளிந்து எழுந்தால் தன்னை அடைய அவள் என்னென்ன முறைகளைக் கையாள்கிறாள் என்று இந்தச் சில நாட்களில் அறிந்து வைத்திருந்தான்.

ஒழுக்கமும், மனக்கட்டுப்பாடும் இல்லாமல் இருந்ததால் வந்த இரண்டே நாட்களில் அவளிடம் …திருப்பான். நீராடவென்று சிறிதாய் ஓடிய ஓடைக்கு அழைத்துச் சென்று... மூச்சுத் திணறிவிட்டான் பிரசாத். தன் கண் முன்னே ஆடைகளைக் களைந்து... ச்சே, குடும்பப் பெண் என்றால் இப்படி நடந்து கொள்வாளா?

எந்த பினியைப் பார்க்க ஏங்கித் தவித்தானோ இன்று அவளைப் பார்த்தாலே குமட்டியது. அவள் அருகில் வந்தாலே உடல் கூசியது. அவளை நெருங்க விடக்கூடாது என்று அவளைக் கேவலமாகப் பேசி அவள் கோபத்தைத் தூண்டி மயக்கமடையச் செய்ய வைத்தான்.

அடுத்த முறை மிகவும் கெஞ்சியவளைப் பளாரென அறைந்தான்.

"ச்சீ... நீயெல்லாம் ஒரு பெண்ணா, உன்னைப் போய் விரும்பினேனே. என் அப்பா சொன்னாரே நீயொரு விஷ என்று. பிடிவாதமாய் அவர் பேச்சை ஏற்க மறுத்தேனே நல்லவேளை உன் கழுத்தில் தாலி கட்டாமல் விட்டேன் ஆண்டவனாய்ப் பார்த்து எனக்களித்த வரம்தான் பாரதி அவளைத் தீண்டிய கரத்தால் உன்னைத் தொட மாட்டேன்.

நீ என்ன ஜாலம் செய்தாலும் மசிய மாட்டேன். இ ஜென்மத்தில் நான் உனக்கு இல்லை. இனி எத்தனை பி எடுத்தாலும் கிடைக்க மாட்டேன். வீணான ஆசைகளை குழி தோண்டிப் புதைத்து விடு.

என் உடல் உயிர் முழுவதும் என் மனைவி பாரதி மட்டுமே சொந்தம். வேறெந்தக் கழிசடைக்கும் அ கிடைக்காது. நீ என்னை மயக்கப்படுத்தினாலும் பட் போட்டுக் கொன்றாலும் உன்னிடம் பணிய மாட்டே இது சத்தியம்!" - எனச் சூளுரைத்தான் பிரசாத்.

பதிலுக்கு காடே அதிரும்படியாகச் சிரித்தான் யா "முட்டாள்... நீ என்ன நினைத்துக் கொண்டு இப் பிதற்றுகிறாய். நானே இந்தத் தாலியைக் கட்டிக்கொ நீதான் கட்டினாய் என்று சொல்ல முடியும். இதோ இ கிருஷ்ணா மூலம் குழந்தையைப் பெற்று நீதான் தகப்



என்று என்னால் சொல்ல முடியும்!" - எனவும் அருவருப்பு தாளாமல் உண்மையாகவே வாந்தி எடுத்தான்.

"என்ன? என்னை நினைச்சா வாமிட் வருதா? எனக்கு இதெல்லாம் பெரிய விஷயமில்ல. அப்படியும் ஏன் உங்கிட்ட கெஞ்சறேன்னா உன் பரந்த சொத்துதான்டா காரணம். எத்தனை தலைமுறையா உட்கார்ந்து சாப்பிட்டாலும் குறையாத சொத்து. அதை எவளோ ஒருத்திக்கு விட்டுக் கொடுத்திடுவேனா?

ஆமா... உனக்கென்ன பெரிய ஹீரோன்னு நினைப்பா? பெரிய டயலாக் விடுற. பாரதி பாரதின்னு அளக்கிறியே. இப்ப அவள் யார்கூட இருக்கான்னு தெரியுமா? உன் அருமைத் தம்பிகூட. எல்லாரையும் விரட்டி விட்டுட்டு உன் தம்பியை மட்டும் வீட்டோடு வைத்திருக்கிறாளாம். இதுக்கு என்ன அர்த்தம்? ம்...?"

"ச்சி... வாயை மூடு. என் மனைவியைப் பற்றி எனக்குத் தெரியும். அதைவிட என் தம்பியைப் பற்றித் தெரியும். அவன் இராமாயண லட்சுமணன் மாதிரி. அவனைப் பற்றி பேச உனக்கு எந்த அருகதையும் இல்லை. சந்தனத்தைப் பற்றி சாக்கடை நீ பேசக்கூடாது."

"ஏய், யாரைச் சாக்கடை என்கிறாய். இந்தச் சாக்கடையில்தான் நீ மூழ்கிக் கிடக்கிறாய். அது தெரியுமா? நீ என்னுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்று எனக்கே தெரியும். பெரிய உத்தமன் மாதிரி பேசுகிறாயே. என்னை விட்டு வீட்டுக்குப் போய்ப் பாரு. உன் பொண்டாட்டி உன்னை நாய் மாதிரி விரட்டிவிடுவாள்.

"எங்கு போனாலும் கடைசியில் நீ என்னிடம்தான் வந்து சேர்வாய். அதனால இந்த வீர வசனமெல்லாம் விட்டுட்டு என்கூடக் குடும்பம் நடத்துற வேலையைப் பாரு," என்றாள் மூடிவாய்.

"அதற்குப் பதிலாக நான் உயிரையே விட்டுவிடுவேன். உன்னுடன் வாழ்வதைவிட அதுமேல். பெண்ணா நீ... மோசக்காரி. ச்சீ... என் கண் முன்னே நிற்காதே. உன்னைப் பார்த்தாலே குமட்டுகிறது!" - என்றான் முகத்தைச் சுழித்த வாறே.

ஆங்காரமான யாமினி அவன் கழுத்தைப் பற்றி நெரித்தாள். கிருஷ்ணா மட்டும் இடையில் புகாவிட்டால் நிச்சயம் பிரசாத்தைக் கொன்றிருப்பாள். என்றாலும் ஆத்திரம் தீராமல் கைநிறைய மூலிகையைப் பறித்துக் கசக்கினாள்.

"நீ பேசினால் நான் கொலைகாரியாகிடுவேன். நீ செத்துத் தொலைந்தால் பிறகு என் ஆசை என்னாவது! அதனால் நீ மயக்கமாகவே இரு. அதுதான் எனக்குப் பாதுகாப்பு!" - என்றவாறு அவள் அருகே வர மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

அவன் மயங்கிய நிலையில் இருக்கிறான் என்ற எண்ணத்தில்தான் அவனை வைத்துக் கொண்டே பேச ஆரம்பித்திருந்தனர்.

"என்னம்மா, அப்படிச் சொல்லிட்ட. அவன் நமக்கு எவ்வளவு முக்கியம் தெரியுமா?"

"ஹும்... அதெல்லாம் அப்போ. இப்ப இவனைப் பார்த்தாலே வெறிதான் வருது. என்னை எவ்வளவு கேவலமா பேசுறான் தெரியுமா? இன்று மட்டும் கிருஷ்ணா வரவில்லையென்றால் கொன்றே போட்டிருப்பேன்!" - என்றாள் ஆவேசமாக.

"தப்பும்மா... ரொம்பத் தப்பு. அன்பைக் காட்டிப் பணிய வைப்பேன்னு பார்த்தா இப்படி அவன்கிட்ட வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்கிறாயே. பிறகெப்படி அவன் உன்னை மணப்பான்?"



"அதெல்லாம் நடக்காது மனோகர். பணக்கார வீட்டுப் புள்ள ஒரு வாட்டி பட்டினி போட்டாலே பயந்து போய்ச் சம்மதிச்சிடுவான்னு சொன்னே. அவனைப் பார். சாப்பிடாமலே உண்ணாவிரதம் இருக்கிறான். விட்டால் இப்படியே செத்துடுவான்பா. மர்டர் கேஸாகிடும். பேசாம அவனை அனுப்பிடுறதுதான் நல்லது!" - என்றான் கிருஷ்ணா கைகழுவியவாறே.

"என்ன விட்டுர்றதா? அதுக்கா இவ்வளவு கஷ்டப்பட்டு இங்கே கொண்டு வந்தேன். சும்மா இல்லடா... கோடிக்கணக்கான சொத்து."

"அதெல்வாம் சரிதாம்பா. ஆனா இவனே போயிட்டான்னா அந்தச் சொத்து எப்படி இவன் கைக்கு வரும். அதை யோசிக்க மாட்டியா?"

"மினி, குளுக்கோஸ் இருக்கில்ல. கலந்து அப்பப்ப அவன் வாயில ஊத்து. அவன் உயிர் நமக்கு ரொம்ப முக்கியம். இனிமே இப்படி அவனை மயக்கப்படுத்தாதே. மயக்கம் தெளியட்டும். இனிக் கெஞ்சிப் பயனில்ல. மிரட்ட வேண்டியதுதான்."

"என்ன அண்ணா சொல்லி மிரட்டுவே. என் மிரட்டலுக்கே பயப்பட மாட்டேங்கிறான். இங்க வந்து அவன் ரொம்பத் துணிஞ்சிட்டான்."

"என் மிரட்டலே தனிம்மா. இவன் வீட்ல அழகுப் பெட்டகம் இருக்கில்ல. இப்ப அதுதான் நமக்குப் பயன்படப் போகுது!" - என்றான் மர்மமாய்.

பிரசாத்தின் இரத்தம் சூடானது. தன்னைக் கட்டுப்படுத்தப் பெரும் முயற்சி செய்தான்.

"யாரைச் சொல்கிறாய் அண்ணா நீ..."

"அதுதான். என் கையை உடைத்தாளே பாரதி கண்ட புதுமைப்பெண். அவளைத்தான் சொல்கிறேன். அவள் இப்போ தனியாத்தானே இருக்கா...."

"அப்போ இவன் தம்பி..."

"அவன் நம்மள மாதிரி இல்லம்மா. சுத்தத் தங்கம் அண்ணன் இல்லாத வீட்ல தங்கினா அண்ணியோட பேர் கெட்டுப் போயிடும்னு வீட்டுக்குப் பின்னால இருக்கிற வாட்ச்மேன் வீட்ல அவன்கூடத் தங்குறானாம். நேரத்தைப் பார்த்தியா கோடீஸ்வர வீட்டுப்புள்ள ஒட்டு வீட்ல வேலைக்காரப் பயகூடத் தங்குது. அவனுக்கென்ன தலையெழுத்தா?"

"அண்ணி மேல அவ்ளோ அக்கறை துரைக்கு. அவதான் குத்து விளக்காச்சே."

"அந்தக் குத்துவிளக்கைத் தெருவிளக்கா ஆக்குறேன். ராத்திரி மட்டும்தான் இவன் வீட்டுக்குப் போவான். நான் பகல்ல போயி அவளைத் தூக்கிட்டுப் போயிடுறேன்."

"தூக்கிட்டு எங்க போவ? மாட்டிக்கப் போற!" பதறினாள் யாமினி.

"நம்ம வீட்ல போய் அடைச்சு வெச்சிட வேண்டியது தான். அவளைத் தூக்கிட்டா இவன் தன்னால வழிக்கு வந்திடுவான். உங்களைச் சேர்த்து வெச்சிட்டு அவளுக்கு மங்களம் பாடிட வேண்டியதுதான். புருஷன் தன்னை விட்டு ஓடிப் போயிட்டதால மனமுடைந்து தற்கொலை பண்ணிக் கொண்டாள் என்று சுலபமாக அனைவரும் நம்பிவிடுவார்கள். நம்ப வைப்பேன்."



"சூப்பர் அண்ணா. இது நல்ல ஐடியா. எனக்குத் தோன்றாமல் போயிற்றே இது. நீ நாளைக்கே இதைச் செயல்படுத்து. இதற்கு மேலும் இந்தக் காட்டில் இருக்க முடியாது. ஒழுங்காய்ச் சாப்பிட முடியவில்லை. நிம்மதியாய்த் தூங்க முடியவில்லை."

"ஆமாம்மா... எனக்கும் தினமும் ராத்திரி யார் கண்ணுக்கும் தெரியாம ஒளிஞ்சு வர்றது கஷ்டமாத்தான் இருக்கு. பாம்பு நடமாட்டமும் அதிகமா இருக்கு. பயமாத்தான் இருக்கு. நாளைக்கே வேலையைத் தொடங்கிடுறேன். நீ இவனைப் பத்திரமா பார்த்துக்க..."

"சரிண்ணா..."

"திரும்பவும் எதையும் பண்ணிடாதே. மயக்கம் தெளிஞ்சதும் எதையாவது சாப்பிட வை. கிருஷ்ணா! இந்தா பணம். நாளைக்குக் காலையில சாப்பாடு வாங்கிக் கொடு. நேரமாச்சு. படுப்போமா?" - என்றவாறு தரையில் நீட்டிப் படுத்துக் கொண்டான் மனோகர்.

"ஒரு வழியா இந்தக் காட்ல இருந்து விடுதலை ஆகப் போறோம்!" - நிம்மதி மூச்சோடு பிரசாத்தின் அருகே படுத்துக் கொண்டாள் யாமினி.

"அது மட்டுமில்லம்மா. ஊட்டி எஸ்டேட்டுக்கே ராணியாகப் போற. சந்தோஷமா தூங்கு. நாளைக்கு நல்லதா புடவை கட்டிட்டு ரெடியா இரு. நான் காலையிலேயே வேலையை முடிச்சுவிட்டு வந்திடுறேன்."

"அந்த வாட்ச்மேன் இருப்பானே, பிறகெப்படிப் போவாய் அண்ணா?"

"நான் என்ன சும்மாவா காசு வாங்குறேன். நான் பூரா இந்த அத்துவான காட்டுல காவல் காத்துக் கிடக்கறேன். இரண்டு முறை கீழே இறங்கிப் போறேன், சாப்பாடு வாங்க. அதெல்லாம்கூட சமாளிச்சுக்கலாம் மனோகர். ஆனா உன் தங்கையோடுதான் இருக்க முடியவில்லை."

"ஏன்டா... அவ என்ன பண்ணினா உன்னை..."

"என்னை ஒண்ணும் பண்ணலை. பாவம்டா இந்த ஆள். இவரை வீழ்த்த உன் தங்கை எல்லா எல்லைகளையும் கடந்து பார்த்துவிட்டாள். ஆனால் எதுவும் பலிக்கவில்லை. நிஜமாவே இவர் ஒரு ஜென்டில்மேன்தான்."

"கிருஷ்ணா, வாயை மூடப்போறியா இல்லையா?" என்ற யாமினியை அலட்சியம் செய்தவாறே பேசினான் கிருஷ்ணா.

"நீ ஏன் கோபப்படுகிறாய் யாமி? உண்மையாகத்தான் சொல்கிறேன். நீ இவரைக் கவிழ்க்கச் செய்த முயற்சியில் ஒன்றை என்னிடம் முயன்றிருந்தாலும் அந்த நொடியே விழுந்திருப்பேன். இவர் கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லையே. ஆச்சர்யம்தான். அந்தப் பெண்... அதான் இவர் மனைவி உண்மையில் கொடுத்து வைத்தவள்தான்."

"போதும் உன் புராணம். இப்போ எதுக்கு இவ்வளவு பெரிய பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறாய். அதைக் கேட்டு இவன் கழுத்தில் உள்ள முத்துமாலையைப் பரிசா கழட்டிக் கொடுத்திடுவான்னு பார்க்கிறியா. பேசாமல் தூங்கு."

"என்னவோ என் மனதில் பட்டதைச் சொன்னேன். பிடிக்கவில்லை என்றால் விட்டுவிடு. அதற்காக இந்த இரவில் இப்படிச் சத்தம் போடாதே. அடங்காத ஆவிகள் உலவும் நேரம் இது. உன் குரலைக் கேட்டு நம் ஆள்தான் உள்ளே இருக்கிறது என்று கதவைத் தட்டப் போகிறது."



"உன்னைச் சும்மா உட்கார வைத்து தினமும் பிரியாணி வாங்கிப் போடுகிறோமில்லையா? அந்தக் கொழுப்பு. இதுவும் பேசுவாய். இன்னமும் பேசுவாய். அண்ணா, நாளை நம் வேலை முடிந்ததும் முதல் வேலையாய் இவனை ஊருக்கு அனுப்பிடு. இல்லையென்றால் பேசியே கொன்றுவிடுவான். என்ன அண்ணா, நான் சொல்வது காதில் விழுகிறதா?"

மனோகரிடம் இருந்து குறட்டை ஒலிதான் பதிலாக வந்தது. சிரித்தான் கிருஷ்ணா.

"அவன் அப்பவே இரண்டாம் சாமத்திற்குப் போயிட்டான். பேசுறதா இருந்தா நீ எங்கிட்டதான் பேசியாகணும்!" - என்றவாறு வாசலருகே படுத்துக் கொண்டான்.

"இதற்கு மேலும் நீ பேசினால் இவருக்குச் செய்த வைத்தியத்தை உனக்கும் செய்ய வேண்டியதிருக்கும்!" என்றாள் மிரட்டலாய்.

"செய்துவிட்டு? காலையில் சாப்பாட்டிற்கு என்ன செய்வாயாம்? இங்குள்ள இலை தழைகளைப் பறித்துச் சாப்பிடுவாயா?"

"கிருஷ்ணா... ஆ... ஆ..."

"கத்தாதே. கத்தாதே. நான் பேசவில்லை. நீயும் அமைதியாய் இரு. யப்பா. என்ன சத்தம் இது. காடே அதிருது!" என முனகிக் கொண்டே திரும்பிப் படுத்துக் கொண்டான். சற்று நேரத்தில் உறங்கியும் விட்டான்.

"ச்சே, இவனைப்போய்க் கூட வைத்திருக்கிறோமே. கட்டுச் சோற்றில் பெருச்சாளியை வைத்துக் கட்டியது போல். எல்லாம் இந்தச் சொத்தைப் பயலால் வந்தது. இவனை விரும்பியதற்கு ஒரு கல்லை விரும்பியிருக்கலாம்.

ஜடம்... ஜடம்!" - மயங்கிக் கிடக்கிறான் என்ற எண்ணத்தில் பிரசாத்தைக் காலால் உதைத்தாள்.

இடுப்பெலும்பில் அவள் மிதித்ததில் வலி உயிர் போயிற்று. என்றாலும் அசையாமல் படுத்திருந்தான். இது கோபமோ ஆத்திரமோ படும் நேரமல்ல. சிந்திக்க வேண்டிய நேரம். சிந்தித்துச் செயல்பட வேண்டிய நேரம். சற்றும் அசைவற்றுப் படுத்திருந்தான்.

சற்று நேரம் தனக்குள்ளே புலம்பிக் கொண்டிருந்த யாமினி கை கால்களைப் பரப்பிக் கொண்டு ஒருவாறாகத் தூங்கிவிட, குடிசைக்குள் ஆழ்ந்த அமைதி நிலவியது. மனோகரின் குறட்டை மட்டும் சிங்கத்தின் கர்ஜனைபோல் மிரட்டியது. அனைவருமே உறங்கிவிட்டனர் என்பதை அறிந்து கொண்டு மெல்ல எழுந்து அமர்ந்தான் பிரசாத்.

விளக்கின் மெலிதான ஒளியில் அனைவரும் வாய் பிளந்து உறங்க, மெல்ல எழுந்து நின்று கை கால்களை மடக்கி நீட்டினான். படுத்தே இருந்ததில் கை கால்கள் உணர்வற்றுப் போயிருந்தன. சாப்பிடாத வயிறு ஒட்டிப் போயிருந்தது. பசியின் வேகத்தையும் உடலின் களைப்பையும் மீறி மனம் தெம்பாகவே இருந்தது.

மரத்துப் போன கால்களுக்குத் தெம்பூட்டும் விதமாக ஓசையின்றி மெல்ல நடைபயிட்டான். சற்றுமுன் அவர்கள் பேசிய அனைத்தையும் மனதிற்குள் ஓட்டிப் பார்த்தான். தான் ஓடிப்போய் விட்டோம் என்று தெரிந்து பாரதியும் தாய் வீட்டிற்குப் போயிருப்பாள் என்ற வேதனை மறைந்து போயிருந்தது.

பாரதி போகவில்லை. நம் வீட்டில்தான் இருக்கிறாள். என் தம்பி அவளுக்கு உறுதுணையாய் நின்று காவல் காக்கிறான்.



கூடவே இன்னொரு பெண்ணைத் துணைக்கு அமர்த்தியிருக்கிறான். என் பாரதியின் மீது அவனுக்கு இருந்த அன்பும் அக்கறையும் எனக்கில்லாமல் போயிற்றே. பிரதாப், நீ என்னிடம் எத்தனை முறை எச்சரித்தாய். உன் பேச்சைத் துச்சமாய் எண்ணியதால் இன்று குப்பையை விட மோசமாகிப் போனேனே.

சத்தியமாய் நான் தப்பு செய்யவில்லை. கடைசி நொடியில் விழித்துக் கொண்டேன். இப்போது இங்கிருந்து மீள வழியின்றித் தவிக்கிறேன். மீள்வேனோ? மடிவேனோ? ஆனால் இவளிடம் இரையாக மாட்டேன். தம்பி, காலையில் சீக்கிரம் விழித்துக் கொள். உன் அண்ணியைக் களவாட மனோகர் என்ற ஓநாய் வரப்போகிறது. என் பாரதியைக் காப்பாற்று.

மனோகர் கொடியவன். என்ன வேண்டுமானாலும் செய்துவிடுவான். நான்தான் கோழையாகி அடிமையாய்த் தப்ப வழியின்றிக் கிடக்கிறேன். நீயாவது எப்படியும் கவனமாய் இருந்து என் கண்மணியைக் காத்துக் கொள். நான் விரைவில் வருவேன். வந்து என் நிலையை விளக்குகிறேன். என்னை ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு வருவேன். எப்படியும் வந்து விடுவேன்.

எப்படி? எப்படித் தப்ப முடியும்? நாளை விடிந்தால் மனோகர் சொன்னதுபோல் செய்துவிட்டால்... கூடாது. விடக்கூடாது. அப்புறம் நான் இருந்தும் பயனில்லாமல் போய்விடுமே. என்ன செய்யலாம்? மண்டையைத் தட்டி யோசித்தான்.

சட்டென நிமிர்ந்தான். பேசாமல் இப்போதே தப்பி விட்டால் என்ன? - என்ற எண்ணம் தோன்றியபோதே கால்கள் வாசலருகே சென்றன. வாசலை மறித்துப் படுத்திருந்த கிருஷ்ணாவைத் தாண்டிக் கதவைத் திறக்க

முடியாது என்பது தெளிவாய்ப் புரிந்தும் ஏனோ தப்பிவிடலாம் என்றே தோன்றியது.

வெளியேறி எங்கே செல்வது? இது எந்த இடம் என்றுகூடத் தெரியவில்லையே. ஏதோ மலைமேட்டின் மீது இருக்கிறோம் என்பது மட்டுமே புரிந்தது. சோர்ந்த மனதைத் தட்டி எழுப்பிச் சிந்தித்தான்.

கூரையின் மேற்பரப்பிலிருந்து நிலவொளி வீசியது. இரவு என்றாலும் நிலவு துணையாய் இருக்கிறது. இந்த வெளிச்சத்தில் நிச்சயம் பாதை தெரியும். பாதையில் இறங்கி ஓடிவிட்டால் விடிந்தபிறகு தென்படும் ஆட்களி... வழியை விசாரித்துக் கொண்டு ஓடி விடலாம். எப்படியும் முதலில் இங்கிருந்து வெளியேற வேண்டும்.

இவர்களின் கண்களில் இருந்து தப்ப வேணும் வெளியேற வேண்டும். விடியும்போது என்னைத்தான் தேடுவார்களே தவிர, பாரதியைக் கடத்த என்று இ... மாட்டான் மனோகர். அந்த அவகாசம் போதும் எப்படியும் வீடு போய்ச் சேர்ந்து விடலாம். வீடு வ... போகாவிட்டாலும் போக்குவரத்து உள்ள இடத்திற்கு போய்விட்டால்கூடப் போதும். பிரதாப்பிற்கு போ... செய்து விஷயத்தைச் சொல்லிவிடலாம். மற்றதை அவ... பார்த்துக் கொள்வான். ஓடு... பிரசாத் ஓடு... என மூ... கட்டளையிட ஒரு மூலையில் கிடந்த தன் சட்டை... எடுத்துப் போட்டுக் கொண்டான்.

மெல்ல அடியெடுத்துக் கதவருகே போவதற்கு... கால்கள் துவண்டன. மயக்கம் வந்தது. கடவுளே, இத்த... பலகீனமான உடம்போடு என்னால் ஓட முடியும... சாப்பிடாமல் கிடந்தது தவறென்று உறைத்தது. சட்டெ... மனோகரின் பேச்சு நினைவு வர, விளக்கை லேசா...



...தூண்டிவிட்டு அதன் வெளிச்சத்தில் குளுகோஸைத் தேடினான்.

பிரித்த நிலையில் இருந்த குளுகோஸ் டப்பாவை எடுத்தான். கிருஷ்ணாவின் அருகிலிருந்த வாட்டர் பாட்டிலைத் திறந்து அதனுள் குளுகோஸைக் கொட்டிச் சத்தம் வராமல் லேசாய்க் குலுக்கினான். குளுகோஸ் கரைந்ததும் அதை ஒரே மூச்சில் குடித்தான். காய்ந்த தொண்டையில் வேகமாக இறங்க மறுத்து அடைத்தது. ...ர்வை நீவி விட்டுக் கொண்டான்.

இப்போது உடலில் கொஞ்சம் தெம்பு பிறக்க மெல்ல ...ந்து கிருஷ்ணாவை அடைந்தான். கதவை உற்றுப் பார்த்தான். கதவிற்குப் பூட்டு இல்லை. தாழ்ப்பாள் ...டும்தான் இருந்தது. மூச்சும் விடாமல் மெதுவாய்ப் ...ப்போல் திறந்தான். அது சுலபமாகத் திறந்து கொள்ள, ...று குபீரென நுழைந்தது.

கிருஷ்ணாவை நகர்த்தினால்தான் கதவை விரிக்க முடியும். கதவைத் திறக்காமல் வெளியேற முடியாது. ...ட்டால் விழித்துக் கொள்வானே, பிறகு எல்லாத் ...டமும் பாழாகி விடுமே. கதவிடுக்கின் வழியே ...வையை வெளியே வீசினான். நிலவொளியில் உயர்ந்த ...ளியின் திருஉருவம் லேசாய்த் தெரிந்தது.

தாயே, காளி... உன்னால்தான் நான் களங்கப்படாமல் ...னவனாக நிற்கிறேன். இதுவரை காத்த நீதான் நான் ... வழிகாட்ட வேண்டும். தாயே! காப்பாற்று - இரு ...களையும் கூப்பி வணங்கினான்.

...ஜிலுவெனக் குளிர் காற்று வேகமாய் நுழைய, ...ருகே படுத்திருந்த கிருஷ்ணா குளிர் தாளாமல் ...டைக் குறுக்கிக் கொண்டு மறுபுறமாய்த் திரும்பிப்

படுக்க இம்முறை ஒரு ஆள் நுழையும் அளவிற்குக் கதவைத் திறக்க முடிந்தது.

இதுபோதும்... என்ற முடிவுடன் அவன் மீது படாத வாறு கதவைத் திறந்து தன் உடலைப் பக்கவாட்டில் திருப்பி மெல்ல வெளியே வந்து முதல் வேலையாய்க் கதவை வெளியே தாழிட்டான். நன்றி தாயே... என வணங்கியவாறே அந்தச் சிலையைக் குறி வைத்து அந்த ஒற்றையடிப் பாதையில் நடக்க ஆரம்பித்தான் பிரசாத்.

கோவிலின் அருகே சென்றுவிட்டால் அதன் பிறகு சரிவாய் இறங்கும் பாதையில் இறங்கிவிடலாம். கடவுளே, வழியில் எதுவும் மிருகத்திடமோ விஷ ஜந்துவிடமோ மாட்டிக் கொள்ளக் கூடாது என்ற வேண்டுதலுடன் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

## 24

எண்ணி எண்ணிப் பார்த்திடில் - ஓர்
எண்ணம் இலைநின் சுவைக்கே
கண்ணினின் மணி போன்றவனே
கட்டி அமுதே கண்ணம்மா!

**"க**ண்ணம்மா" - என வீறிட்டவாறே எழுந்தான் நடராஜன்.



"என்ன அண்ணா, என்ன ஆச்சு? என்ன?" - என ...னுடனே பதறி எழுந்தான் பிரதாப்.

"பிரதாப், கண்ணம்மாவுக்கு ஏதோ ஆபத்து. சீக்கிரமாய் ... நாம் வீட்டிற்குப் போவோம்." - குரலோடு சேர்ந்து ...ஆம் வெடவெடக்க உடல் முழுதும் வியர்த்து ...றியது நடராஜனுக்கு.

"என்ன சொல்றீங்கண்ணா, அண்ணிக்கு ஆபத்தா? ...ஏதும் கெட்ட கனவு கண்டீர்களா?"

பிரதாப் கேட்டதும் நிமிர்ந்து சுவரில் உள்ள ...காரத்தைப் பார்த்தான். நள்ளிரவு மூன்று மணி. ...னும் சற்று நேரத்தில் விடிந்து விடும். அப்படியென்றால் ... அதிகாலை. அதிகாலையில் காணும் கனவு பலித்து ... என்பார்களே. ஐயோ, கனவா அது? கண்ணம்மாவை ...வர் துரத்தி விரட்டி அவளைச் சீரழிக்கிறார்கள். ...யில் அவளைக் கொன்று ஒருவன் மலை மீதிருந்து ...யெறிகிறான். அய்யோ, கண்ணம்மா!

"இல்லை பிரதாப். நான் உடனே கண்ணம்மாவைப் ... வேண்டும். வா," என எழுந்து சுவரில் மாட்டியிருந்த ...டையை எடுத்துப் போட்டுக் கொண்டே வாசலை ...க்கி நடக்க ஆரம்பித்தான்.

...மாகவே அவன் புறப்பட்டதும், ஒரு நிமிஷமண்ணா, ...வாறு அவசரமாய் உடைகளை மாற்றிவிட்டு ...ப் பூட்டிவிட்டு காரில் ஏறினான். நடராஜன் ...ததும் கார் புறப்பட்டது.

...னி உடலை நடுங்கச் செய்தது. போக்குவரத்து அற்ற ...யில் நிதானமாய் காரைச் செலுத்தியவாறே, "என்ன ...அண்ணா. இப்பவாவது சொல்லுங்கண்ணா," - எனக் ...ன் பிரதாப்.

"கனவுதான் பிரதாப். ஆனா பயங்கரமான கனவு. நான் அதைப் பார்த்துப் பயப்படல. நான் இங்க வந்து மூனு நாளாச்சு. இன்னும் கண்ணம்மாவைப் பார்க்கவேயில்லை. உன் பேச்சைக் கேட்டு உங்கள் ஹோட்டலிலே தங்கி விட்டேன். என்னோடு நீயும் தங்கிவிட்டாய். இப்போது கண்ணம்மாவும் செல்லாவும் தனியே இருப்பார்களே."

"அதற்காக இப்படியா நடு இரவில் போவது விடிந்தபிறகு போயிருக்கலாமே. என்ன அவசரம்?"

"இல்லை பிரதாப். உனக்குப் புரியுமோ என்னவோ என் குடும்பத்தாருக்கு ஏதேனும் விபத்தோ மரணமோ ஏற்படப் போகிறதென்றால் அதை என் மனமே உணர்த்திவிடும். என் உள்ளுணர்வு சொல்லிவிடும் இன்றும் ஏதோ சொல்கிறது. கண்ணம்மாவிற்கு ஏதோ ஆபத்து நேரப் போகிறது. அது எனக்குத் தெரிகிறது பிறகெப்படித் தூங்க மனம் வரும். அதனால்தான் அவசரப்பட்டேன்."

"அது சரி அண்ணா. ஆனால் இப்போது தூங்கி கொண்டிருப்பார்களே, எப்படி எழுப்புவது? அவர் தூக்கம் கெடாதா?"

"வேண்டாம். எழுப்ப வேண்டாம்." - அவசரமா மறுத்தான்.

"பின்னே?"

"அவங்க தூங்கட்டும். நாம வெளியே வெ பண்ணுவோம். விடிந்தபிறகு கண்ணம்மா எழுந்து கத திறந்தபிறகு வீட்டிற்குள் போகலாம்."

"ஆஹா, சரியான வேலைதான். கூர்க்கா வே இந்தக் குளிர் உங்களை ஒன்றும் செய்யவில்லை அண்ணா?"



"தம்பி, இது வைரம் பாய்ந்த கட்டை. இந்தக் குளிரெல்லாம் என்னை ஒன்றும் செய்யாது."

"பார்த்தாலே தெரிகிறது. எனக்குத்தான் பற்கள் தந்தியடிக்கிறது. ஸ்வெட்டர் கூடப் போட்டுட்டு வரல்ல."

"தம்பி, நீங்க பாலும் பாதாமும் சாப்பிட்டு வளர்ந்திருப்பீங்க. நான் கம்பஞ்சோறும் கேப்பைக் கூழும் சாப்பிட்டு வளர்ந்தவன். இந்த உடம்பு எதையும் தாங்கும்!" - என்றான் பெருமையாய்.

அதற்குள் கார் வீட்டை நெருங்கிவிட, "பிரதாப், காரை ஓரமாய் நிறுத்து. உனக்குத் தூக்கம் வந்தால் தூங்கு. நான் வீட்டைக் கவனித்துக் கொள்கிறேன்," - என்றான்.

"இனிமே எப்படித் தூக்கம் வரும். நானும் காவல் காக்கிறேன். ஒருவேளை நீங்கள் சொல்வதுபோல் எதுவும் நேர்ந்தால் விழிப்போடு இருக்க வேண்டாமா? சரி அண்ணா, இன்று நீங்கள் போன விஷயம் என்ன ஆச்சு? நீங்க வரும்போது நான் தூங்கிவிட்டேனே."

"நானே உன்னை எழுப்ப வேண்டும் என்றுதான் நினைத்தேன். நீ அசந்து தூங்கிவிட்டாய். அதனால் எழுப்ப மனம் வரவில்லை."

"சரி அண்ணா, மனோகர் வேலை முடிந்து நேராக வீட்டிற்குப் போனானா? வேறு எங்காவது போகிறானா? யாருக்காவது போன் பண்ணினானா?"

"யாருக்கும் போன் பண்ணல்ல. ஆனா வீட்டுக்கும் போகல்ல. பைக்க வீட்ல நிறுத்திட்டு மெயின் ரோட்டுக்குப் போயி வாடகைக் கார்ல எங்கேயோ போறான்."

"அண்ணே, நீங்களும் பாலோ பண்ண வேண்டியது தானே."

"போனேம்பா. கார் ரொம்ப வேகமா போயிடுச்சு எனக்கு இங்க உள்ள நெரிசல்ல பைக்கை வேகமா விரட்ட முடியல்ல. திணறிட்டேன். அதுக்குள்ள கார் போயிடுச்சு"

"ச்சே. மிஸ்ஸாயிடிச்சே. இப்படித் தெரிஞ்சா உங்களைக் கார்லயே அனுப்பியிருப்பேனே. தப்பித் விட்டானே. சரிண்ணா, நாளைக்குக் கார்ல போங்க சரியா?"

"எனக்குக் காரெல்லாம் ஓட்டத் தெரியாதேப்பா."

"அப்படியா! சரி. ஆகாஷ் காரை ஓட்டுவான். நீங்க ஆகாஷோட போயிட்டு வாங்க. பார்த்து நிதானமா போங்க. அங்கே அண்ணன் இருந்தா எப்படி இருக்கான் குடும்பமா சந்தோஷமா இருக்கானான்னு பாருங்க. இல் தனியா எங்காவது அடைச்சி வெச்ச மாதிரி தெரிஞ்சா உடனே எனக்குப் போன் பண்ணுங்க. நான் போலீஸோட வந்திடுறேன். அண்ணனை மீட்டு அந்த நாய்களை உள்ள தள்ளிடலாம்!" - என்றவனைத் தயக்கமாய் ஏறிட்டான் நடராஜன்.

"பிரதாப், நான் கேட்கிறேன்னு தப்பா நினைக்காதே. இது... இதெல்லாம் சரியா வருமா?

ஏண்ணா உங்களுக்கு இந்தச் சந்தேகம்?"

"இல்ல, உன் அண்ணன் ஏற்கெனவே அந்த பொண்ணை விரும்பினவர். அவளுக்காக எ கண்ணம்மாவையே ஒதுக்கி வெச்சவரு. நீ சொன் மாதிரி அந்தக் கடிதம் பொய்யாவே இருந்தாலும் அவ இத்தனை நாள் சும்மா இருப்பாரா? நான் என் சொல்கிறேன் என்று புரிகிறதா?"

"புரியாமல் இல்லை அண்ணா. ஆனால் என் அண்ண மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது."



"அதான் எப்படி என்கிறேன்?"

"அண்ணி மீது கோபப்பட்டு அடித்தாலும் அந்தத் தவறை உணர்ந்து அண்ணியிடம் பலமுறை மன்னிப்புக் கேட்டிருக்கிறான். அண்ணியின் அருகிலேயே இருந்து கவனித்திருக்கிறான். அண்ணியை விட்டு விலக மனமில் லாமல் அண்ணி சொன்ன பிறகே போயிருக்கிறான்."

"அதெல்லாம் தன் மீதுள்ள குற்ற உணர்வினால்கூடச் செய்திருக்கலாமே."

"இருக்கலாம். ஆனால் அவனைப் பற்றி எனக்குத் தெரியும். ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்பவன். அதோடு மனைவியை வைத்துக் கொண்டு இன்னொரு பெண்ணுடன் வாழத் துணியவும் மாட்டான். அதுவும் பெண்கள் விஷயத்தில் அவன் உத்தமன்."

"பிறகெப்படி அந்தப் பெண்ணிடம்..."

"அது அவனது விருப்பம் அண்ணா, இந்தப் பெண் மனைவியாய்க் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியதால் எடுத்த முடிவு. ஆனால் இப்போது புரிந்து கொண்டிருப்பான் - தன் நினைவு தவறானது என்று."

"என்னவோ எனக்கு நம்பிக்கை இல்லை." - பெருமூச்சு விட்டான்.

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையில் தான் துணிந்து இந்த முயற்சியை எடுத்திருக்கிறேன். பார்க்கலாம். ஒருவேளை நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் அவனை அப்படியே தலை முழுகிவிட வேண் டியதுதான்.

"அதேசமயம் நான் நினைப்பதுபோல் ஆபத்தில் மாட்டிக்கொண்டு இருந்தால் காப்பற்ற வேண்டியது என்

கடமை அல்லவா? அதற்காகத்தான் போராடுகிறேன். முடிந்தால் உதவி செய்யுங்கள். நம்பிக்கை இல்லை யென்றால் நீங்கள் தாராளமாக ஊருக்குக் கிளம்பலாம்."

"ஏய், என்னப்பா இப்படிச் சொல்லிட்ட. என் மனசில இருந்த குழப்பத்தை உங்கிட்ட சொன்னேன். எனக்கு மட்டும் கண்ணம்மாவின் வாழ்க்கை மேல அக்கறை இல்லையா? அவளுக்காகத்தானே இங்கு ஓடி வந்தேன். இப்பக்கூட உங்க அண்ணனைத் தேடிக் கண்டுபிடித்து அவனை வெட்டிப் போட்டுவிட்டு உன் அண்ணனை இழுத்துவர என்னால் முடியும். ஆனால் என் கண்ணம்மா மானஸ்தி.

"எச்சில இலையை வீட்டினுள் சேர்க்க மாட்டாள். அதனால்தான் என் கோபத்தை எல்லாம் அடக்கிக் கொண்டு உன்னுடன் இருக்கிறேன். இதோ பார் பிரதாப், இப்பவும் சொல்றேன். உன் அண்ணனை அவளோடு பார்த்தால் நிச்சயம் நான் கொலைகாரனாகி விடுவேன்.

"என் கண்ணம்மாவை விட்டுவிட்டு ஓடியவனைக் கண்டதுண்டமாய் வெட்டியெறிந்தால்தான் என் ஆத்திரம் அடங்கும். அதனால் என்னிடம் எதையும் மறைக்காதே. கடத்தப்பட்டிருப்பார் என்று நினைக்கிறாயா? இல்லை என்னைத் திசை திருப்ப முயற்சிக்கிறாயா?" - நடராஜனின் கண்கள் சிவந்தன.

தலையில் அடித்துக் கொண்டான் பிரதாப். "சரியாப் போச்சு போ. இரண்டு நாளாய் எத்தனை தெளிவாய் பேசிப் புரிய வைத்தேன். இன்னுமா என்மீது நம்பிக்கை வரவில்லை. சரி, என் வார்த்தையில் தான் நம்பிக்கை இல்லை, செல்லம்மா... செல்லம்மா வார்த்தையிலுமா நம்பிக்கை இல்லையா?"



"இருக்கு. அதனாலதானே நீ சொல்கிறபடியெல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். பேசாமல் அந்த மனோகர் பயலைப் பிடித்து நாலு தட்டுத் தட்டினால் அவனே உண்மையைச் சொல்லிவிடுவான் என்று நினைக்கிறேன். நீ ஏன் அதைச் செய்யவில்லை?"

"அது பெரிய விஷயமில்லை அண்ணா. ஆனா நம்ம சந்தேகப்படுவது யாருக்கும் தெரியக்கூடாது என்றுதான் உங்களை அழைத்தேன். நமக்குள்ள இருக்கும் சந்தேகம் மற்றவர்களுக்குத் தெரிந்தால் உஷாராகி விடுவான் மனோகர். அதனால்தான் இந்த ரகசிய ஏற்பாடு."

சட்டெனக் கூர்மையானான் நடராஜன். "பிரதாப், அதோ பார். யாரோ ஒருவன் கேட் அருகில் போகிறான்," - என்றதும் பிரதாப் திரும்பிப் பார்த்தான்.

தலையில் பனிக்குல்லாவோடு சைக்கிளில் வந்தவன் பாரதியின் வீட்டின் முன்னால் சைக்கிளை நிறுத்திவிட்டு வாசலை நெருங்க, காரிலிருந்து இறங்கி இருவரும் ஓடிச்சென்று அவனை அமுக்க, அவன் பதறி அலறினான்.

"யார்? யார் ஸார் நீங்க? விடுங்க என்னை!" - என அவன் கூச்சலிட, "யாருடா நீ? இந்த நேரம் இங்கென்ன வேலை உனக்கு?" - அவன் கழுத்தைப் பிடித்துக் கொண்டு நடராஜன் மிரட்டினான்.

"விடுங்க ஸார், நான் இந்த வீட்டுக்கு ரெகுலரா பால் போடுறவன். என்னைப் போய்ப் பிடிச்சிக்கிட்டு. ஆமா, நீங்க யாரு? இந்த இருட்டு வேளையில இந்த வீட்டை நோட்டம் விடுறீங்களா?" - அவன் அப்படியே திருப்பிக் கேட்க, இருவரும் அசடு வழிய நின்றனர்.

"பால் போடுகிறவனா? ஸாரிப்பா!" - அசட்டுச் சிரிப்போடு சொன்னான் பிரதாப்.

"பார்த்து ஸார், இங்கெல்லாம் நிற்காதீங்க. இந்த வீட்டில பிரதாப், பிரசாத்து ரெண்டு பேர் இருக்காங்க. மாட்டினா அப்புறம் நடக்க கால் இல்லாம பண்ணிடுவாங்க. அதிலயும் சின்னவர் ரொம்ப கோபக்காரர்னு சொல்லுவாங்க. ஒழுங்கா போயிடுங்க ஸார். வழிய விடுங்க," - என அவன் தன் பங்குக்கு மிரட்டிவிட்டுச் செல்ல, நடராஜனின் முகம் சுண்டிப் போனது.

அதற்குள் வீட்டிற்குள் விளக்கெரிய கதவை லேசாய்த் திறந்து எட்டிப் பார்த்த கண்ணம்மா, "யாரது?" - என்றாள் மிரட்டும் தொனியில்.

"அண்ணி, நாங்கதான். கதவு பூட்டியிருக்குதேன்னு தயங்கி நின்னுட்டு இருந்தோம்."

"பிரதாப், என்ன இது? காலிங் பெல் அடிச்சிருக்கலாமே. இப்படியா கொட்டுற பனியில நிற்பீங்க!" என்றவாறே சாவியை எடுத்துக் கொண்டு ஓடிவந்து கேட்டைத் திறந்தாள்.

"நீங்க தூங்கும்போது டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு பார்த்தோம் அண்ணி."

"தூக்கமா? நாலு மணிக்கே எழுந்து படிச்சிட்டு இருந்தேன். காபி குடிக்கலாம்னு பால் பாக்கெட் வந்திருக்கான்னு வெளியே எட்டிப் பார்த்தா நீங்க நிக்கறீங்க."

"அப்போ பால் வந்திருச்சான்னு பார்க்கத்தான் எட்டிப் பார்த்தியா? வேற எதுவும் சத்தம் கேட்டு வரலியே!" - என்றவாறு பிரதாப்பின் பின்னால் இருந்து எட்டிப் பார்த்தான் நடராஜன்.

ஆச்சர்யமாய் விழிகளை விரித்தாள் பாரதி. "மாமா மாமா நீங்களா? நீங்க எப்படி இங்கே? எப்போ வந்தீங்க உள்ளே வாங்க முதல்ல..." - சந்தோஷமாக வரவேற்றாள்



பிரதாப் முந்திக் கொண்டான். "நேற்று இரவே வந்து விட்டார் அண்ணி. நான்தான் நம் ஹோட்டலில் தங்க வைத்தேன். ஆனால் விடியுமுன்னே எழுந்து உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஒரே அடம். அதனாலதான் கூட்டி வந்தேன்."

"என்ன மாமா திடீர்னு வந்து நிக்கறீங்க?"

"அண்ணி ப்ளீஸ். எது கேட்பதாக இருந்தாலும் உள்ளே அழைத்துச் சென்று கேளுங்கள். இன்னும் கொஞ்ச நேரம் நான் இங்கு நின்றாலும் எனக்கு ஜன்னி வந்திடும்." - குளிரில் நடுங்கியவாறே பிரதாப் சொல்ல, சிரித்தவாறே அவர்களை உள்ளே அழைத்துக் கதவைச் சாத்தினாள். பால் கவரை எடுத்துக் கொண்டு ஐந்தே நிமிடத்தில் அனைவருக்கும் காபி கொடுக்க,

அமைதியாய் அருந்தினர். சத்தம் கேட்டுச் செல்வம்மாவும் எழுந்து வர, அவள் எதுவும் உளறிவிட வேண்டாம் என்று பார்வையால் ஜாடை செய்தாள்.

கலபமாய்ப் புரிந்துகொண்டு, "ஹாய் மாமா, எப்போ வந்தே மாமா. என்ன திடீர்னு சொல்லாம கொள்ளாம வந்து நிக்கிற?" - என்றாள்.

"அதையேதான் நானும் கேட்கிறேன். இன்னும் பதில்தான் வரல்ல."

"ஏன் கண்ணம்மா, உன்னைப் பார்க்க நான் வரக் கூடாதா?"

"அய்யோ, நான் அப்படிச் சொல்லவில்லை மாமா. உங்கள் வேலையைப் போட்டுவிட்டு இப்படி வந்ததும் கொஞ்சம் பதறிவிட்டேன். வீட்டில் எல்லோரும் எப்படி இருக்காங்க மாமா. அப்பா எப்படி இருக்காங்க?" - ஆவலாக விசாரித்தாள்.

"ம்... இருக்காங்க. வேறென்ன சொல்ல?"

"ஏன் மாமா என்னாச்சு? அம்மாவுக்கு உடம்புக்கு சரியில்லையா?"

"உன்னால எப்படி எதுவுமே நடக்காத மாதிரிப் பேச முடிகிறது கண்ணம்மா... எனக்கு... எனக்கு மனசெல்லாம் பதறுதே. நீ எப்படி இப்படிச் சாதாரணமாய் இருக்கிறாய்?"

"எப்படி மாமா இருக்க வேண்டும்? கண்ணீர் விட்டுக் கொண்டா? கண்ணீர் விட்டால் நடந்தது எல்லாம் மாறிவிடுமா மாமா?"

"கண்ணம்மா..." - நடராஜனின் கண்கள் கலங்கின.

"வேண்டாம் மாமா. அதைப்பற்றி எதையும் பேச வேண்டாம். கொஞ்சம் ஓய்வு எடுங்கள். பிறகு எழுந்து சாப்பிட்டுவிட்டுப் பேசலாம். பிரதாப், நீங்களும்தான், உங்கள் அண்ணன் அறையில் படுத்துக் கொள்ளுங்கள்."

இருவரும் அசையாமல் அமர்ந்திருந்தனர். "கண்ணம்மா, ஒருவேளை மாப்பிள்ளை மீது தவறில்லாமல் இருக்குமோ? அவரைக் கடத்தியிருப்பார்களோ? அவரைத் தேடுவோமா?" - நடராஜன் தயக்கமாய்க் கேட்க, பாரதி மைத்துனனை நோக்கினாள்.

"ம்... இப்போது தெரிகிறது... உங்கள் வருகையின் நோக்கம். இது எல்லாம் பிரதாப் ஏற்பாடுதானே?"

"அய்யய்யோ, எனக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. எனக்கு ஏற்பட்ட அதே சந்தேகம் உங்கள் மாமாவிற்கும் ஏற்பட்டிருக்கிறது. தேடிப் புறப்பட்டு வந்துவிட்டார். செல்வத்திற்கும் கூட இதே சந்தேகம்தான். சொன்னால் உங்களுக்குக் கோபம் வருமே என்றுதான்



மௌனமாய் இருக்கிறாள். என்ன செல்வம்... நான் சொல்வது சரிதானே?"

பாரதி வியப்பாய்த் தங்கையைத் திரும்பிப் பார்த்தாள். மாட்டி விட்டாயே என்பது போல் பிரதாப்பை முறைத்துவிட்டு, -"ஆமாம் அக்கா, என் மனதிற்கும் அப்படித்தான் தோன்றுகிறது. அத்தான் மீது தப்பிருக்காது என்றுதான் நினைக்கிறேன்," என்றாள்.

"ஏன் அப்படி?" - என்றாள் சற்றே கோபமாய்.

"நீதான் அக்கா. உன்னை விட்டு இன்னொருத்தியை அத்தானால் தேடி ஓட முடியாது. உனக்குத் துரோகம் செய்ய மனம் வராது. உன் முகமும் மனமும் அப்படி. நிச்சயமாய் அத்தான் உன்னை விட்டு அவராகவே போயிருக்க மாட்டார்."

"ஹூம்... பிரதாப்போடு சேர்ந்து உனக்கும் புத்தி மழுங்கித்தான் போய்விட்டது. எப்படியோ என்னைத் தனியே பிரித்து நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து விட்டீர்கள்."

"அய்யோ, அண்ணி, தயவு செய்து அப்படிப் பேசாதீர்கள். எல்லோருமாய்ச் சேர்ந்து உங்கள் நல்வாழ்விற்காகத்தான் போராடுகிறோம். உங்கள் மீதுள்ள அக்கறையால்தான் இதைச் செய்கிறோம்."

"பிரதாப், முடிந்து போனதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். முதலில் உங்கள் வாழ்க்கையைப் பற்றி யோசியுங்கள்."

"அதற்கு அவசியமில்லை அண்ணி, உங்கள் வாழ்க்கையைச் சீரமைக்காமல் எங்களுக்குள் எதுவும் நடக்காது."

"பைத்தியக்காரத்தனமாய்ப் பேசாதீர்கள். நான் ஏற்கெனவே உங்களிடம் சொன்னேனே...."

"நானும் மறக்கவில்லை அண்ணி. நாங்கள் நினைப்பதுபோல் அண்ணனின் சம்மதமின்றி இந்தக் கடத்தல் நடந்திருந்தால்... என் அண்ணன் உத்தமனாகவே திரும்பி வந்தால் நிச்சயம் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதையும் நீங்கள் மறக்க வேண்டாம்."

"நடக்காத காரியத்தைப் பற்றிப் பேசுவதே உங்கள் வேலையாப் போச்சு. எப்படியோ போங்க. ஆனால் துப்பறியும் வேலை செய்கிறேன் என்று நீங்கள் யாரும் போய் ஆபத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள். அவ்வளவு தான் சொல்வேன்," - என்றவாறு தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

"ஹேய்... அக்கா இறங்கி வந்துட்டா. இனிமே நாம தைரியமா களத்தில் இறங்கலாம். நீங்க ஜெயிச்சிட்டீங்க பிரதாப்!" - என்றாள் செல்வா.

"ம்ஹூம். நாம ஜெயிச்சிட்டோம். எனக்கு இப்போ முழு நம்பிக்கை வந்திடுச்சு செல்லம். அண்ணன் நமக்குச் சீக்கிரமே கிடைச்சிடுவார். நம்ம நம்பிக்கை அவரைக் கண்டிப்பாய் அழைத்து வந்துவிடும் பாரேன்." - பிரதாப்பின் குரலில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

அறைக்குள் அமர்ந்திருந்த பாரதியை அது அசைத்தது. தன் அண்ணனின் மீது பிரதாப்பிற்கு இருந்த அக்கறை ஏன் தனக்கில்லாமல் போனது. மாமா கூட நம்புகிறாரே. ஒருமுறைதான் பார்த்த மாமாவிற்கே இந்த நம்பிக்கை என்றால் இத்தனை நாள் ஒரே வீட்டில் அவர் கட்டிய தாலியோடு வாழ்ந்த எனக்கு ஏன் நம்பிக்கை இல்லாமல் போனது?



இத்தனை நாளில் ஒருமுறைகூடத் தான் இன்னொருத்தியை விரும்புவதாக அவர் என்னிடம் தெரிவிக்கவே இல்லையே. விலகித்தானே போனார். விரும்பியவளை விட்டு என்னை மணந்ததில் ஏற்பட்ட வருத்தம், ஏமாற்றம் இருக்கலாம். ஆனால் வீட்டில் கண்ணுக்கு இனிமையான பெண்ணை வைத்துக் கொண்டு ஒருவனால் ஐம்புலன்களையும் அடக்கிக் கொண்டு இருக்க முடியுமா?

இருந்தாரே, என் மீது அவரது நிழல்கூடப் படாமல் இருந்தாரே. அதேபோல் இன்றும் இருப்பாரோ? அவர் சம்மதமின்றிக் கடத்தியிருந்தால் அவள் மீது வெறுப்புத்தானே வரும். அந்த வெறுப்போடு எப்படி அவளை மணம் முடித்திருப்பார் என்ற சந்தேகம் வரும்போதே அவள் அவரின் காதலி என்ற நினைவும் வந்து மனதை அறுத்தது.

பிரதாப் நினைப்பது போல் நடக்க வாய்ப்பு மிகக் குறைவு. ஒருவேளை அப்படியே இருந்துவிட்டால்... நல்லதுதான். இருக்க வேண்டுமே.

அன்று சம்பவம் நடந்த நாளில்கூட அந்தப் பொறுக்கியின் கையை உடைத்த கோபத்தில்தான் சண்டை போட்டாரே தவிர அவராக வந்து என்னைத் தொடவில்லையே. வாக்குவாதம் அதிகரித்து நான் பேசிய வார்த்தைதான் அவரைத் தூண்டிவிட்டது.

அப்படியும் வெறி தீர்ந்ததும் ஓடிப்போய் விடவில்லையே. வீட்டோடு இருந்து கவனித்துக் கொண்டு மனம் வருந்தி மன்னிப்பும் கேட்டாரே. போனில்கூட அவள்தான் பேசியிருக்க வேண்டும். உடனே ஓடிப் போகவில்லையே. கோபத்தோடு போனை கட் பண்ணினாரே.

அப்படியென்றால் தன் மீது ஒரு துளிப் பாசமோ இரக்கமோ ஏற்பட்டு இருந்திருக்கும்.

அதை அதிகரிக்க விடக்கூடாது என்றுதான் கடத்திச் சென்று விட்டாளா? அப்படியும் இருக்குமோ என்று நினைத்ததில் மனதின் ஓரமாய் ஒரு சிறிய நம்பிக்கைக் கீற்று ஒளிர்ந்தது. ஒருவேளை என்னை மனைவியாய் ஏற்றுக் கொண்டிருந்தால்... நிச்சயம் அவளிடம் மசிய மாட்டார்.

ஆனால் அவர் மனதில் நான் எப்படி இருப்பேன்? இருப்பேன். அன்று சொன்னாரே. என் மனைவிக்கு உடல் நலமில்லை. நான்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று சொன்னாரே.

'அப்படியென்றால் என்னை மனைவியாக ஏற்றுக் கொண்டார் என்றுதானே அர்த்தம். அப்படி ஏற்றுக் கொண்டபிறகு நிச்சயம் என்னைவிட்டு இன்னொரு பெண்ணை நாடிச் செல்ல மாட்டார்!' என்ற முடிவுடன் எழுந்து பூஜையறைக்குள் நுழைந்தாள்.

'தாயே பராசக்தி. உண்மையில் என் கணவர் உத்தமராய், என்னை எண்ணிக் கொண்டு துன்பத்தில் தவித்தால் நீதான் அவருக்கு உதவ வேண்டும். அவரைக் காப்பாற்றிப் பத்திரமாய் என்னிடம் கொண்டு வந்து சேர்த்துவிடு. நீ அவருக்குத் துணை நில். வழிகாட்டு. என்னிடம் அழைத்து வா. ஓம்சக்தி, பராசக்தி!' - கைகூப்பி கண்களை மூடி மனமுருகி வேண்டிக் கொண்டாள் பாரதி.



## 25

நின்னைச் சிலவரங்கள் கேட்டேன் - அவை
நேரே இன்று எனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளாது அழிந்திடுதல் வேண்டும்.

**கா**ளி சிலையை நெருங்கும்போதே பிரசாத்தின் மூளை விரைவாய்ச் செயல்பட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிய ஆரம்பித்துவிடும். மனோகர் சீக்கிரமாய்க் கிளம்பி விடுவான். அப்படியென்றால் இன்னும் சற்று நேரத்தில் விழித்து விடுவான். அப்படி எழும்போது என்னைக் காணாவிட்டால் உடனே மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு தேட ஆரம்பித்து விடுவானே.

அவர்களுக்கு இது பழகிய இடம். ஆனால் எனக்கு எது தலை எது வால் என்றே தெரியாதே. எங்கேனும் புதரில் மறைந்து கொண்டாலும் என்னைக் காணாத ஆத்திரத்தில் நேரே வீட்டிற்குப் போய்ப் பாரதியை என்ன வேண்டுமானாலும் செய்து விடுவானே. இது எந்த இடம் என்றே தெரியாமல் அவனுக்கு முன் என்னால் போக முடியாதே. இந்த எண்ணம் தோன்றியவுடன் நின்றான்.

இந்தப் பத்து நிமிட நடையையே தாங்காமல் உடல் வெடவெடவென நடுங்கியது. கடவுளே, இப்போது என்ன செய்வது? இங்கிருந்து பாதையைக் கண்டுபிடித்துக் கீழே

இறங்க யாரிடமாவது வழி கேட்டுத் தேடி... எப்படியும் இன்று ஒருநாளாகிவிடும்போல் இருக்கிறதே. வீட்டை விட்டு வெளியேறிய என்னால் காட்டைவிட்டு வெளியேற முடியாது போலிருக்கிறதே.

மினிக்கு இருக்கும் ஆத்திரத்தில் நான் தப்ப முயன்றேன் என்று தெரிந்தால் போதும், அவளே என்னைக் கொன்று விடுவாளே. எப்படித் தப்பிக்கப் போறேன். என் மனைவியை... தம்பியைப் பார்த்து எப்படி மன்னிப்புக் கேட்கப் போகிறேன். பசி, மயக்கம் வேறு கண்களை இருட்டுகிறதே.

கட்டிய மனைவியை விட்டுவிட்டு இன்னொருத்தியோடு ஓடியவன் என்ற அவப்பெயரோடுதான் சாகப் போகிறேனா? மீளாத பழியை என் குடும்பத்திற்கு அளித்து விட்டு மண்ணோடு மண்ணாகிப் போய் விடுவேனா? கண்களில் நீர் சுரந்தது. கலங்கிய கண்களோடு காளி தேவியை ஏறிட்டான்.

நிலவொளியில் கம்பீரமாய் நின்றாள் காளி. அவளது காலைப் பற்றிக் கொண்டான். "என்னைக் காப்பாற்று. என் மனைவியை நான் காண வேண்டும். அவளுடன் வாழ வேண்டும். என் மீதுள்ள அவப்பெயரைத் துடைக்க வேண்டும். நான் உத்தமனாய் வாழ வேண்டும். தாயே என்னைக் காப்பாற்று. துஷ்டர்களிடம் இருந்து என்னைக் காப்பாற்று. இங்கிருந்து நான் வெளியேற எனக்கு வழிகாட்டு. எனக்கு வழிகாட்டு!" - அவளது காலடியில் மண்டியிட்டுக் கதறினான் பிரசாத்.

அவனது முழங்கால்பட்டு அங்கிருந்த பச்சிலை நசுங்கி அவனது உடையை நனைத்தது. அதன் மணம் காற்றில்



கலந்து நாசியை நெருட, சுப்பென மூக்கைப் பொத்திக் கொண்டு எழுந்து நகர்ந்தான்.

இது... இது யாமினி தன்னைச் செயலிழக்க வைத்த மூலிகையின் மணம். அப்படியென்றால் இது எல்லாமே அந்தச் செடிகள்தானா? கூர்ந்து பார்த்தான். நெருக்கமாய் நின்ற அனைத்துச் செடிகளுமே வட்ட வடிவ இலைகளோடு மஞ்சள் நிறப் பூக்களோடு ஒரே விதமாகவே நின்றன. காற்றில் கூட லேசாய் அவற்றின் மணம் வீசின.

சட்டென மூளைக்குள் மின்னல் வெட்டியது. இதுதான் இத்தனை நாளாய் மினியிடம் இருந்து என்னைக் காப்பாற்றியது. இப்போதும் இதுதான் காப்பாற்றப் போகிறது. காளியின் காலடியைத் தொட்டு வணங்கிவிட்டு மளமளவெனக் கைநிறைய அந்த இலைகளைப் பறித்துக் கொண்டு குடிசையை நோக்கி ஓடினான்.

வழியில் ஏதோ மின்னச் சட்டென உஷாராகி அப்படியே நின்றான். ஆறடிக்கும் அதிகமான நீளமான பாம்பு வெகு நிதானமாக இரையைத் தேடி வழியில் நெளிந்து வந்தது. பிரசாத்தின் உடல் மொத்தமும் உதறல் எடுக்க மூச்சு விடாமல் அசைவின்றி நின்றான். கையிலிருந்த மூலிகைகளைச் சிதற விடாமல் நின்றவனின் கால்களுக்கிடையில் நுழைந்து அது சென்றுவிட, சில்லிட்டுப் போனான் பிரசாத்.

பிரசாத் வியந்தான். "கிருஷ்ணா, நீ ரொம்ப புத்திசாலி. எத்தனை அழகாய் யோசித்துச் செயல்படுகிறாய்."

"ஸார், என்னைப் பாராட்டும் நேரமா இது? உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா?"

"ஆமாம். ஆமாம். இரு. இதோ வருகிறேன்" என்றவாறு கீழே கிடந்த இரண்டு இலைகளை எடுத்துக் கசக்கினான்.

"ஒரு நிமிஷம் ஸார்..." என்றவாறு தன் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தான் கிருஷ்ணா.

"பஸ் செலவுக்கு வெச்சுக்குங்க ஸார். பசிக்கும். வழியில் ஏதாவது சாப்பிட்டுக்கங்க. அப்பத்தான் வீட்லபோய் இங்க நடந்ததையெல்லாம் சொல்லத் தெம்பு இருக்கும். வாசல்ல என் செருப்பு கிடக்கும். அதைப் போட்டுட்டுப் போங்க. தேள், விஷ வண்டு எல்லாம் வழியில் கிடக்கும். மிதித்து விட்டால் உயிரே போய்விடும்.

அதோடு விஷ முட்களும் உண்டு. துளித் துளியாய் விஷம் ஏறிக் கடைசியில் உயிரைக் குடித்துவிடும். செருப்பில்லாமல் போனால் ஆபத்து. என் செருப்பைப் போட்டுக் கொண்டு போங்க. ம்... இப்பப் பூசுங்க." - என்றவாறு படுத்துக் கொண்டான்.

"தேங்க்யு கிருஷ்ணா. எத்தனை முறை சொன்னாலும் என் நன்றிக்கடன் தீராது." - கண்கள் கசியச் சொல்லிவிட்டு அந்த இலைகளைக் கிருஷ்ணாவின் நாசியருகே கொண்டு போக, லேசாய்ச் சிரித்த நிலையிலேயே மயக்கமானான் அவன்.

ஒருகணம் அவன் அருகில் அமர்ந்து அவன் கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். நெஞ்சம் விம்ம, மெல்ல எழுந்து கதவைப் பழைய மாதிரியே சாத்தி வெளியே தாழிட்டுவிட்டு வாசலில் இருந்த அந்தக் கெட்டியான செருப்பைப் போட்டுக் கொண்டு கா[illegible] சிலையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.



இதயம் பல மடங்கு வேகமாய்த் துடிக்க, நின்று தன்னைச் சமாளித்துக் கொண்டு குடிசையை நெருங்கினான். தரையில் கால் வைக்கவே பயமாக இருந்தது. கவனமாய் நடந்து குடிசையை அடைந்து மெதுவாய்க் காதை வைத்துக் கேட்டான். குறட்டை ஒலி மட்டுமே கேட்க, நிம்மதிப் பெருமூச்சோடு தாழ்ப்பாளை மெல்ல விலக்கினான்.

கிருஷ்ணா அதே நிலையில் படுத்திருக்க, மெதுவாய் உள்ளே சென்று கதவை மூடினான். ஒரு கணம் நின்று நிதானித்துவிட்டு மனோகரின் அருகே சென்று மண்டியிட்டு அமர்ந்து கையிலிருந்து மூலிகையைக் கசக்க ஆரம்பித்தான். உடனே நீர் கசிய மூச்சை அடக்கிக் கொண்டு, அதை மனோகரின் நாசியருகே கொண்டு சென்றான்.

ஓரிரு விநாடியிலேயே மனோகரின் குறட்டை நின்று விட்டது. அவன் முகத்தில் லேசாய்ப் பூசிவிட்டு மெல்ல நகர்ந்து யாமினியை நெருங்கினான். வாய் பிளந்து உறங்கிக் கொண்டிருந்தவளைப் பார்க்கும்போது உடல் முழுக்கப் பற்றி எரிந்தது. மீதமிருந்த எல்லா இலைகளையும் பிழிந்து அவள் முகமெங்கும் பூசினான்.

கை கால்களை அசைத்துவிட்டு மரக்கட்டையாகிப் போனாள். இதை வைத்து என்னை எப்படியெல்லாம் இம்சை செய்தாய். குறைந்தது நான்கு நாட்களாவது எழுந்திருக்கக் கூடாது. ஆத்திரமாய்க் கைகளில் இருந்த சக்கையை அவள் உச்சந்தலையில் கொட்டி அப்பி வைத்தான். ஆத்திரம் கொஞ்சம் அடங்கிவிட, இனி கிருஷ்ணா என்றவாறு திரும்பியவன் குப்பென வியர்த்தான்.

கிருஷ்ணா எழுந்து கதவில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான். அவன் கையில் எதுவோ இருந்தது பிரசாத் பதட்டத்தில் உடல் நடுங்க எழுந்தான்.

"கிருஷ்ணா, என்னை ஒன்றும் செய்துவிடாதே என்னை விட்டுவிடு. நான் இவளிடம் இருந்து தப்பிக்க வேண்டும் என்றுதான் இப்படிச் செய்தேன். உன்மேல் எனக்கு எந்தக் கோபமும் பகையும் கிடையாது. என்ன வழியை விட்டுவிடு கிருஷ்ணா. நான் போக வேண்டும் ப்ளீஸ் கிருஷ்ணா!" - கெஞ்சினான்.

கிருஷ்ணா அசைவின்றி நிற்கவும், "கிருஷ்ணா உனக்கு என்ன வேண்டும், கேள், தருகிறேன். என் சொத்து முழுவதையும்கூடத் தந்து விடுகிறேன். என்னை விட்டு விடு. நான் என் மனைவியைக் காப்பாற்ற வேண்டும். அவள் ஒரு பாவமும் அறியாதவள். எனக்கு மனைவியாக வந்ததற்காக இவர்கள் அவளைக் கொன்று விடுவார்கள் கிருஷ்ணா, என்னை விட்டுவிடு. என்னால் அவள் சாகக்கூடாது. அவள் வாழ வேண்டிய பெண். நான் செய்த தவறுக்கு அவள் பலியாகக் கூடாது. ப்ளீஸ்... இத்தனை கெஞ்சுகிறேனே. உனக்கு இரக்கம் வரவில்லையா? வழியை விடு கிருஷ்ணா!" - எனக் கண்ணீர் விட்டான்.

கிருஷ்ணா சற்று முன்னே வந்து தன் கையிலிருந்ததை பிரசாத்தின் கையில் கொடுத்தான். "இந்தாங்க ஸார். இ பவர்ஃபுல்லான டார்ச். இந்த வெளிச்சத்தில பூச்சி எது குறுக்கே வராது. போங்க ஸார்..." என்றான்.

துல்லியமாய் அதிர்ந்து போனான் பிரசாத். நம் முடியாமல் பார்த்தான்.

"என்ன ஸார் பாக்குறீங்க. நான் வேலையில்லாதவன் தான். ஆனா அடியாள் இல்ல. ஊர்ல வேலை இல்ல



சுத்திட்டிருந்தேன். மனோகர்தான் போன் பண்ணி ஒ முக்கியமான வேலை இருக்கு வான்னான். வந்து பார்த் இது கடத்தல் சமாச்சாரம். உங்களுக்கும் சம்மதம் நினைச்சுத்தான் ஒத்துக்கிட்டேன். அதற்கப்புறம் வி முடியாமப் போச்சு.

"யாமி... அளவு கடந்து போன போதே உங்களை தப்பிக்க விட்டுடலாம் என்றுதான் நினைத்தேன். ஆனா சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இது நல்ல சந்தர்ப்பம். போ விடுங்கள். மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன் - என்றான்.

கண்களில் நீரோடு கிருஷ்ணாவைக் கட்டி கொண்டான். "நன்றி கிருஷ்ணா, இந்த உதவியை எ வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டேன். நீயும் எனக்கு ஒ தம்பிதான். வேலையில்லை என்று கவலைப்படாதே. எ எஸ்டேட்டில் நான் உனக்கு வேலை தருகிறேன் வேண்டாம் என்றால் நீ என்ன கேட்டாலும் தருவேன்."

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் ஸார். முதலி இங்கிருந்து போங்க. காளி சிலையின் வலப்பக்கம் ஒ பாதை பிரியும். அந்தப் பாதையில் இறங்கிச் சென்றா மலையடிவாரம் வந்துவிடும். அங்கே பெரிய ஆறு ஓடி கொண்டிருக்கும். அதைக் கடந்து போனால் ஊர் வந் விடும். ஊருக்குள் டவுன் பஸ் வரும். அதில் ஏறிக் கொடை ரோடு போய்விடலாம்.

"அதன் பிறகு பஸ்ஸோ காரோ பிடித்துப் போய் விடலாம். சீக்கிரம் கிளம்புங்கள். விடிய ஆரம்பித்துவிடும் சீக்கிரம்..." - அவசரப்படுத்தினான்.

"இது... இது என்ன இடம் கிருஷ்ணா?"

"இது வள்ளிமலை ஸார். ஏன் கேட்கறீங்க?"

வெள்ளம். அதனால்தான் நீரோட்டம் அதிகமாக இருக்கிறது. இனி எப்படி இதைக் கடப்பது? இந்த ஆறு எதில் போய்ச் சேருகிறது?

சும்மா நின்று நேரத்தை வீணாக்குவதைவிட இதோடு சேர்ந்து நடக்கலாம் என்ற முடிவோடு நடக்க ஆரம்பித்தான். வெகு தூரம் நடந்து களைத்தபோது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஒருவர் கண்ணில் பட, வேகமாய் அவரிடம் சென்றான்.

"ஐயா, இந்த ஆற்றைக் கடக்க வேண்டுமே. எப்படிப் போவது?" - எனக் கேட்டான்.

அந்த முதியவர் அவனை விழி இடுங்கப் பார்த்துவிட்டு, "நீ வந்த பாதைக்கே போனா ஒரு மரப்பாலம் வரும். கொஞ்சம் ரிப்பேரா கிடக்கும். இருந்தாலும் நீ ஒத்தை ஆளா இருக்கிறதால போயிடலாம். பார்த்துப் போப்பா தண்ணியில விழுந்தா உடம்புகூட மிஞ்சாது. நேத்து வரை இந்த ஓட்டம் இல்லை. காலையிலதான் மதகு திறந்து விட்டாங்க போலிருக்கு!" - என்று கூறிவிட்டு தன் வேலையில் கவனத்தைச் செலுத்தினார்.

வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தான். கண்ணுக் கெட்டிய தூரம் வரை அந்த மரப்பாலம் தெரியவில்லை. உடல் சோர்ந்து கண்களை இருட்டியது. சில்லிட்ட தண்ணீரை அள்ளி முகத்தைக் கழுவிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

தந்தையின் நினைவு வந்தது. அன்றே தந்தையின் சொல்லைக் கேட்டு நடந்திருந்தால் இன்று இத்தனை துன்பங்களைச் சந்திக்க நேரிடுமா? மின்னியதெல்லாம் பொன் என்று நம்பி ஏமாந்து போனேனே. தாலி கட்டிய



மனைவியை ஒதுக்கி வைத்த பாவத்திற்கு, அவளை அடித்துத் துன்புறுத்திய பாவத்திற்கு இந்தத் தண்டனை தேவைதான்.

ஆனால், தண்டனை முடிந்து நான் மனம் திருந்தி வாழ முடியாமல் பசியிலே உயிர் போய்விடும் போலிருக்கிறதே. என்ன திடீரென இருட்டாகி விட்டதே. பாதை தெரிய வில்லையே. பூமி தலைகீழாய்ச் சுற்றுவது போலிருக்கிறதே. என்ன ஆயிற்று. நான் கீழே விழப் போகிறேன். நினைவு விலகி ஓட, பிரசாத் அப்படியே மடங்கி ஆற்றின் கரையில் விழுந்தான். ஆழ்ந்த மயக்கத்திற்குப் போனான்.

நீரோட்டம் அதிகரித்து மெல்ல மெல்ல அவன் உடலைத் தீண்டிப் புரட்டியது. தன்னுடன் இழுத்துக் கொள்ள முனைந்தது.

"மனோகர் இன்னும் வரவில்லையா? நாம் அவனைப் பின்தொடர்ந்தது தெரிந்து போயிற்றா? வேறெங்கும் போய்ப் பதுங்கிக் கொண்டானா? வீட்டில் போய் பார்த்தியா பிரதாப். வீடு பூட்டிக் கிடக்கிறதா? இப்போது என்ன செய்யலாம்?" - நடராஜன் போனில் பேசும்போதே பாரதிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. செல்லம்மாவும் பதட்டத்தோடு நிற்க,

"சரி, போனை வெச்சுடு. நானும் உடனே வர்றேன். நீயே வந்து கூட்டிட்டுப் போறியா? சரி, உடனே வா," - என்றவாறு போனை வைத்தான்.

"என்ன ஆச்சு மாமா?" - இருவரும் ஒரே குரலில் கேட்க நடராஜனின் முகம் இருண்டது.

"என்னன்னு தெரியல்லம்மா. நேத்துப் போன மனோகர் இன்னும் வரலையாம். வீட்டுக்குப்போய்ப்

பார்த்தால் வண்டி நிற்கிறதாம். வீடு பூட்டியிருக்காம். அவன் எங்கோ தலைமறைவாகி விட்டான் என்று நினைக்கிறேன். பிரதாப் சொன்னதும் அவன் சந்தேகம் உண்மைதான் என்று தோன்றுகிறதே."

"மாமா, இப்போ என்ன பண்ணப் போறீங்க?" - செல்லம்மாதான் கேட்டாள். பாரதி வாயைத் திறக்க முடியாமல் நின்றாள்.

"இப்போ பிரதாப் வர்றானாம். அவனுடன் போய்த் தேடிப் பார்க்க வேண்டும்."

"மாமா, பேசாமல் போலீசில் சொல்லிவிடலாமா! குடும்பம் கௌரவம் என்று பார்த்தால் அத்தானின் உயிருக்கு ஏதேனும் ஆகிவிட்டால்..."

"செல்லா, வேண்டாம். அப்படிச் சொல்லாதே. அவருக்கு ஒன்றும் ஆகாது. எனக்கு நம்பிக்கை இருக்கு. அவர் வந்துவிடுவார். என்னைத் தேடி வந்துவிடுவார்!" என்ற பாரதியின் உறுதியான குரலில் நடராஜன் செல்லா மட்டுமல்ல, வாசலில் வந்து நின்ற பிரதாப்பும் கூட மகிழ்ந்து போனான்.

"இதுபோதும் அண்ணி. நான் அண்ணனை அழைத்துக் கொண்டு வருகிறேன். செல்லம், அண்ணியைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள். இனி அண்ணனோடுதான் வருவேன். அண்ணா, வாருங்கள்," - எனப் புயலாய் வெளியேற, நடராஜன் பின்னேயே ஓடினான்.

இருவரும் ஏறியதும் ஆகாஷ் காரை எடுத்துச் சீறவிட்டான். "நடராஜண்ணா, நான் ஏற்கெனவே போலீசில் சொல்லிவிட்டேன். அப்பாவையும் வரச்சொல்லிவிட்டேன். போலீஸார் ஒருபுறம் தேடட்டும். அப்பாவும்



தன் ஆட்களோடு ஒருபுறம் தேடட்டும். இப்போ நாம நேற்று நீங்க பார்த்த, மனோகர் போன வாடகைக் காரைத் தேடிப் போகிறோம்."

"உங்களுக்கு அந்தக் காரை அடையாளம் சொல்ல முடியுமா? குறிப்பான அடையாளங்கள் ஏதேனும் நினைவிருக்கிறதா? அது என்ன கார்?" - எனப் படபடப்பாய்க் கேட்டான் பிரதாப்.

"தம்பி, அது நீலநிற மாருதி ஆம்னி. பதட்டத்தில் நம்பரைக் கவனிக்கவில்லை. அதோ அந்தக் கோவில் பக்கத்தில் உள்ள ஸ்டாண்டில்தான் அந்தக் கார் நின்றது. மனோகர் எதையும் பேரம் பேசவில்லை. உரிமையாய் ஏறி அமர்ந்ததும் கார் கிளம்பிவிட்டது."

"அப்போ தினமும் அந்தக் காரில்தான் போயிருக்கிறான் பிரதாப். அந்த டிரைவருக்கு நிச்சயம் அந்த இடம் தெரிந்திருக்கும்," - என்றான் ஆகாஷ்.

"யெஸ், ஆகாஷ், அந்த கார் ஸ்டாண்ட் பக்கத்தில் இருக்கு. அண்ணா, டிரைவரின் முகத்தைப் பார்த்தீர்களா?"

"இல்லப்பா, முகம் தெரியல்ல. காரின் பின்னால்தானே தொடர்ந்தேன். கலர் மட்டும் நல்லா நினைவிருக்கு."

கார் நின்றுவிட, வரிசையாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாடகைக் கார்களைப் பார்த்தவர்கள் ஏமாந்து போனார்கள். இருபது கார்களில் நான்கு ஆம்னி வேன்கள் நீல நிறத்தில் இருந்தன. கோபமாய் சீட்டில் குத்தினான் பிரதாப். "போற திசையெல்லாம் தோல்விதான் கிடைக்கிறது. ஷிட்."

"வெயிட் பிரதாப். நடராஜன் ஸார், பின்னால் தொடர்ந்து போனீர்களே, அந்தக் காரில் பின்னால் எதுவும்

எழுதியிருந்ததா? ஏதாவது பெயர் அல்லது படம், வசனம் இந்த மாதிரி ஏதாவது இருந்ததா? கொஞ்சம் யோசித்துப் பாருங்களேன். ப்ளீஸ்..." - என்றான் ஆகாஷ்.

"அட, ஆமாம். பிரதாப், அந்தக் காரின் பின்னால் ஒரு நாய்க்குட்டி பெட்ஷீட்டை தூக்கிவிட்டுத் தன் முகத்தை மட்டும் காட்டுவதுபோல் ஒரு படம் இருந்தது. அப்புறம் சிவரஞ்சனி கேப்ஸ் என எழுதியிருந்தது. ம்... அப்புறம் ஒரு ஓரமாய் 'உள்ளம் அழுதாலும் உதடுகள் சிரிக்கட்டும்' என்று எழுதியிருந்தது!" - என்றவளை சந்தோஷமாய் அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான் பிரதாப்.

"தேங்க்ஸ் அண்ணா, ஒன்று கேட்டால் ஒன்பது சொல்லி விட்டீர்களே. ஆகாஷ், சிவரஞ்சனி கேப்ஸ் என்றால் நமக்குத் தெரிந்த நபர்தான். வா, எதற்கும் போய்ப் பார்ப்போம்," - என்றவாறு இறங்கி மூவருமாய் கார் வரிசையின் பின்புறமாய்ச் சென்றனர்.

முதல் காரின் பின்புறத்திலே நடராஜன் சொன்ன அனைத்துத் தடயங்களும் இருக்க, துள்ளலோடு அதன் டிரைவரைத் தேடினான். காருக்குள் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த அந்த டிரைவர் பிரதாப்பைக் கண்டதும் மலர்ந்து, "அடடே! பிரதாப் ஸார், என்ன இவ்ளோ தூரம்?" - என்றவாறு இறங்கினார்.

"புருஷோத்தமன், நேற்று இந்தக் காரை நீங்கள்தான் ஓட்டினீர்களா?" - பிரதாப் நேரிடையாக விஷயத்திற்கு வந்தான்.

"ஆமாம் சார், என்ன மனோகர் எதையும் விட்டு விட்டானா? இல்லையே, காலையில் காரைச் சுத்தம் செய்யும்போது எதுவும் இல்லையே!" - அவர் சாதாரணமாகச் சொல்ல, பரபரப்பானான் பிரதாப்.



"என்ன? மனோகர் வந்தானா? எங்கே இறக்கி விட்டீர்கள்?"

"என்ன ஸார், தெரியாத மாதிரிக் கேட்கறீங்க. வன்னி மலை பக்கம் ஏதோ எஸ்டேட் வாங்கியிருக்கீங்களாமே. பிரஸாத் சார்கூட அங்கேதான் தங்கியிருந்து வேலை பார்த்திட்டு இருக்காங்களாம். மனோகர் தினமும் என் கார்லதான் வருவான். போகிற வழியில சாருக்குச் சாப்பாடு வாங்கிட்டு வருவான். நேற்றும் வந்தானே."

"வன்னிமலையா? அது எங்கே இருக்கு?

"அது கொஞ்சம் தொலைவு போகணும் சார். கொடை ரோடு தாண்டிக் கிளையில பிரிஞ்சி காட்டு வழியா போகணும். ஏன் ஸார், உங்களுக்குத் தெரியாதா?

"இல்ல, அண்ணன் போன் பண்ணினான். எஸ்டேட்டை விரிவுபடுத்த என்றுதான் இவரையும் அழைத்து வரச் சொன்னான். வழி கேட்க மறந்துவிட்டேன். மனோகரை அழைத்து வா என்றான். மனோகர் இன்று வேலைக்கு வரவில்லை. அதான்..."

"வேலைக்கே வரலியா? தினமும் சாயங்காலம் அவனை விட்டுட்டு காலையில நான்தான் ஸார் போய்க் கூட்டிட்டு வருவேன். காலை ஆறு மணிக்கு கரெக்டா ரோட்ல நிற்பான். இன்னிக்கு ஏழு மணிவரை காத்திருந்துவிட்டு சும்மாவே திரும்பி வந்துட்டேன். ஒருவேளை வேலை அதிகம்னு அங்கேயே இருந்துட்டான்னு நினைச்சேன்."

"ஆமாம், அப்படித்தான் இருக்கும். புருஷோத்தமன், எனக்கு அந்த இடத்தைக் காட்ட வேண்டும். வருகிறீர்களா? வாடகை தந்து விடுகிறேன்."

"ஏறுங்கள் ஸார்," - எனக் கதவைத் திறந்து விட்டார்.

"இல்லை, நீங்க உங்க கார்ல முன்னால போங்க. நான் என் கார்ல ஃபாலோ பண்றேன்."

"ஓ.கே. ஸார்!" - என்றவாறு அந்தப் புருஷோத்தமன் காரை எடுத்து முன்னால் செலுத்த, பிரதாப்பின் கார் அதைப் பின்தொடர்ந்தது.

பிரதாப் போனை எடுத்து, "இன்ஸ்பெக்டர் ஸார், நான் பிரதாப். அண்ணன் வன்னிமலைப் பகுதியில் இருப்பதாக க்ளூ கிடைத்திருக்கிறது. நாங்கள் போய்க் கொண்டிருக் கிறோம். உங்களிடம் தகவல் தெரிவிக்கத்தான் போன் பண்ணினேன்," - என்றான்.

மறுமுனையில், "ஓ.கே. சார். நீங்க போங்க. நான் கொடை ரோடு ஸ்டேஷனுக்கு இன்ஃபார்ம் பண்ணிடுறேன். அவங்க ஹெல்ப் பண்ணுவாங்க. எதுவும் அவசரம் என்றால் உடனே எனக்கு கால் பண்ணுங்க." - என்றார் அதிகாரி.

"ஷ்யூஷர் ஸார், தேங்க்யூ ஸார்!" - என்றவாறு போனை அணைத்துவிட்டு மீண்டும் உயிர்ப்பித்துத் தந்தையைத் தொடர்பு கொண்டான்.

"அப்பா, அண்ணன் வன்னிமலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. மனோகர் தினமும் நம்ம புருஷோத்தமன் கார்லதான் போயிருக்கான். சாப்பாடு வாங்கிட்டுப் போவானாம். எனக்கென்னமோ அங்குதான் அண்ணன் இருக்கிறான் என்று தோன்றுகிறது. நாங்கள் அங்குதான் போய்க் கொண்டிருக்கிறோம். வந்து விடுகிறீர்களா? சீக்கிரம் வாருங்கள். வழி தெரியுமா?



"சரி, அப்போ கொடை ரோட்டில் நில்லுங்கள். நான் என் காரில்தான் வருகிறேன். காரைப் பார்த்ததும் பின்தொடருங்கள். வன்னிமலையில் போய்ப் பேசிக் கொள்ளலாம். நமக்கு ஒவ்வொரு நொடியும் முக்கியம். சீக்கிரம் வாருங்கள். எதற்கும் நல்ல பலசாலியாய் ஒரு நான்கு பேரை அழைத்துக் கொண்டு வாருங்கள்.

"எதற்கும் தயாராய் இருக்க வேண்டுமே. மனோகர் மட்டும் இருக்க மாட்டான். எப்படியும் இரண்டு மூன்று பேர் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். நாம் முன்னேற்பாடோடு போனால்தான் சமாளிக்க முடியும். ஓ.கே. டாடி, சீக்கிரம் வந்துவிடுங்கள். நேரில் பேசலாம்," - என்றவாறு வைத்தான்.

மனம் திக்திக்கென அடித்துக் கொண்டது. தூரமாய்த் தெரிந்த மிக உயரமான மலையைப் பார்த்தான். ஒருவேளை இதுதான் வன்னி மலையோ? தன் உடல் முழுவதும் பசுமையைப் போர்த்தியிருந்த அந்த மலை ஆபத்தை உள்ளே மறைத்து, பச்சை நிற ஆடையை உடுத்தியதுபோல் தோன்றியது பிரதாப்பிற்கு.

மெல்ல மெல்ல அந்த மலை அருகே நெருங்க பிரதாப்பின் இதயம் வேகமாக இயங்கத் தொடங்கியது. கொடை ரோடு மூன்று கி.மீ. எனத் தங்களைக் கடந்து போன மைல் கல்லைப் பார்த்ததும் சீட்டின் நுனிக்கே வந்தமர்ந்தான். அருகிலிருந்த நடராஜன், "பதட்டப் படாதே பிரதாப். அதான் நாங்கள்லாம் இருக்கோமில்ல. தைரியமாய் இரு!" - என ஆதரவோடு அணைத்துக் கொண்டான்.

கார் கொடை ரோட்டில் நுழைய, தந்தையின் கார் கண்ணில் பட்டது.

# 26

நன்மையிலே உடல் வன்மையிலே - செல்வப்
பன்மையிலே மறத்தன்மையிலே
பொன்மயில் ஒத்திடும் மாதர்தம் கற்பின்
புகழினிலே உயர்நாடு - இந்தப் பாருக்குள்ளே
நல்லநாடு எங்கள் பாரத நாடு!

குளிர்ந்த நீரில் உடல் மொத்தமும் நனைந்துவி மயக்கம் தெளிந்த பிரசாத் பதறி எழுந்தான். ஆனால் நீரோட்டம் தன் போக்கில் அவனை இழுத்துச் செல்ல ஆரம்பித்தது. பதறித் துடித்துப் புரண்டு அரற்றினான் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மனித நடமாட்டம் இன்றி தனிமையாகத் தோன்றிய இடம் மரண பயத்தை உண்டு பண்ணியது.

ஆற்றுப்படுகையில் கிடந்த கற்கள் அவன் உடம்பை பதம் பார்த்தன. இப்போது அந்த ஆடு மேய்க்கும் முதியவ கண்ணிற்குப் பட, கை, கால்களை உயர்த்தி அவ அழைக்க முயன்றான். திறந்த வாய்க்குள் நீர் பா மூச்சுக்குப் போராடி இறுதியில் கிடைத்த ஒரு பாறையை கட்டிக் கொண்டான். தலையைத் தூக்கி வாய் வழி மூச்சை விட்டான்.

பாறை அசையாமல் நின்றதால் தப்பித்தோம் இல்லையென்றால் என்று திரும்பி நீரோட்டத்தை பார்த்தவன் உறைந்து போனான். இதுவரை ஓடி வந்த



சில அடி தூரத்தில் ஹோவென்ற இரைச்சலோடு நீர் வீழ்ச்சியாய் இறங்கிக் கொண்டிருந்தது. நீரின் தபதப வென ஓசை அது வேறு சில பாறைகளில் மோதிக் கீழ் இறங்குவதை உணர்த்த உடல் மொத்தமும் அதிர்ந்து குலுங்கியது.

ஹெல்ப், ஹெல்ப், யாராவது வாங்களேன்... - அவனது குரலை அந்த நீர்வீழ்ச்சி தன் ஓசையால் வென்றது.

உடல் நொந்து குரல் வற்றிப் போய்ப் பேசவும் தெம்பின்றி அந்தப் பாறையைத் தன் அன்னை மடியாய் எண்ணி அழுதவாறே அணைத்துக் கொண்டு அதன் மீது சாய்ந்து கண்களை மூடியபோது காதில் தேனாய்ப் பாய்ந்தது ஒரு பெண்ணின் குரல்.

"சாமி, யாரு சாமி அது? ஆத்துல வெள்ளோட்டம் அதிகமா இருக்கு. இங்க குளிக்காதீங்க சாமி. வெள்ளம் அடிச்சிட்டுப் போயிடப் போவுது. வெளியே வந்துடுங்க சாமி. சாமி உங்களைத்தான்!" - என்றாள் ஒரு பெண்.

தெய்வமே நேரில் வந்தது போல் பரவசமாய்க் கண்களைத் திறந்து குரல் வந்த திசையை நோக்கினான் பிரசாத்.

தலையில் ஒரு மண் குவளையை வைத்துக் கொண்டு, வித்தியாசமான ஆடையோடு தலைக்கு முக்காடிட்டு நின்றாள் ஒரு இளம்பெண். தன் கண் முன்னே அன்னையே வந்ததுபோல், "அம்மா தாயே, நீ யாரோ எவரோ தெரியாது. ஆனால் என் கண்ணிற்கு நீ அந்தக் கடவுளாகத் தான் தெரிகிறாய். நீரில் தெரியாமல் மாட்டிக் கொண்டேன். என்னைக் காப்பாற்று தாயே. என்னால் தனியாக் கரையேற முடியவில்லை. உடம்பில் தெம்பும் இல்லை. என்னைக் காப்பாற்று தாயே. உனக்குப் புண்ணியமாய்ப் போகும்!" - என்றான்.

"சாமி, என்ன சொல்லுது. குளிக்கப் போகலியா?"

"இல்லம்மா, பசி மயக்கத்தில விழுந்திட்டேன். தண்ணி அடிச்சிட்டு வந்திட்டது. ப்ளீஸ்... உதவி செய்யும்மா..."

அவள் மளமளவெனச் செயல்பட்டாள். தன் தலையில் இருந்த மண் குடுவையை இறக்கிக் கீழே வைத்துவிட்டு மூக்காடிட்ட துணியை எடுத்து அவனை நோக்கி வீசினாள். அது அவன்வரை செல்லவில்லை. சட்டெனத் தன் மேலாடை மீதிருந்த துணியை எடுத்து இரண்டையும் முடிச்சிட்டு நீளமாக்கி ஒரு முனையைப் பற்றிக் கொண்டு மறுமுனையை வீசினாள்.

இரண்டு முறை தவறி மூன்றாவது முறை அவன் மீது விழ, கப்பெனப் பற்றிக் கொண்டான். சாமி, துணியை உங்க இரண்டு கையாலும் பிடிச்சிக்குங்க. பாறையை விட்டுடுங்க. ம்... பிடிச்சிட்டு மெதுவா வாங்க என இறுகப் பற்றிக் கொண்டு இழுக்க ஆரம்பித்தாள்.

நீரின் வேகத்தோடு போகாமல் சமாளித்து அவளது துணியைப் பற்றிக் கொண்டு மெல்ல மெல்லக் கரை யேறினான். உடல் முழுக்கக் கற்களும் முட்களும் கிழிக்க இரத்தம் வடிந்த உடலோடு வந்தவனை இரு கைகளையும் பற்றித் தள்ளிக்கொண்டு மணல் வெளியில் படுக்க வைத்தாள்.

உயிரோடுதான் இருக்கிறோம் என்ற உணர்வு வந்தது கண்களை விழித்து அவளைப் பார்த்துக் கைகூப்பினான் "ரொம்ப நன்றிம்மா."

"அது போகட்டும் சாமி. நீங்க எங்கே போகணும்?"

"நான்... நான் ஊட்டிக்குப் போகணும். இங்கே ஆடத்தில் மாட்டிக் கொண்டேன்."



"ஐயோ சாமி, அது போகணுமே தூரம். சாமி எப்படிப் போகும்? சாமி கூழ் குடிக்கிறீயளா?" - என்றாள் பரிவோடு.

"நீதாம்மா சாமி. உன் பேர் என்ன?" - என்றவாறு எழுந்து அமர்ந்தான் பிரசாத்.

"உமையாள் சாமி. உமை உமான்னு பலவிதமாகக் கூப்பிடுவாங்க."

"ஆம்... நீ அந்த அம்பிகையேதான்."

"அதாரு சாமி அம்பிகை?" - எனக் கேட்டுக் கொண்டே மண் குவளையில் இருந்த கூழை ஒரு கிண்ணத்தில் ஊற்றினாள். இரண்டு மோர் மிளகாயை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"அம்பிகை என் அம்மா..." - என்றான் பெருமையாய்.

"சாமி, பெரிய ஊட்டுப் புள்ளையோ, கம்பங்கூழ் சாப்பிடுமா?"

"உமையாள், நான் சாப்பிட்டுப் பல நாட்களாகின்றன. இப்ப நீ எது கொடுத்தாலும் அது எனக்குத் தேவாமிர்தம்தான்!" - என்றவாறு வாங்கி மூச்சு விடாமல் குடித்தான்.

பசித்த வயிறு குளிர்ந்தது. "சாமி, இன்னும் கொஞ்சம் போடவா?" - ஈன்றவளிடம் நன்றியோடு மறுத்தான்.

"வேண்டாம்மா, போதும். இது உன் சாப்பாடு. இதை எனக்குக் கொடுத்ததே போதும். ஆமாம், நீ எங்கே போகிறாய்?"

"அதோ அங்கன ஆடு மேய்க்கிறது எங்க ஐயன்தான். அது வயத்துக்குக் கஞ்சி கொண்டு போறேனுங்க. அய்யன் பசி தாங்காதுங்க."

"போம்மா, போய் உன் தந்தையின் பசியாற்று. ஒரு நிமிஷம்மா..." - என்றவாறு தன் கழுத்தில் கிடந்த செயினைக் கழற்றி அவள் கையில் கொடுத்தான்.

பதறி மறுத்தாள்.

"வேண்டாம்னு சொல்லாதம்மா. என் உயிரைக் காப்பாத்தின உனக்கு என்னோட அன்புக் காணிக்கை. உன் திருமணத்திற்கு உதவும். என்னை உன் சகோதரனா நினைத்து மறுக்காமல் வாங்கிக் கொள்," - என்றான்.

"அப்படி யாரும் எனக்குக் கிடையாது சாமி, எம்புள்ளைக்கு இது தாய்மாமன் சீரா இருக்கட்டும். நான் வர்றேன் சாமி. பார்த்துப் பதமா போங்க சாமி..." என்ற வாறு ஈரத்துணியைப் பிழிந்து முக்காடிட்டுக் கொண்டு குவளையைத் தூக்கித் தலையில் வைத்தவாறு அவள் செல்ல, பிரமித்துப் போனான் பிரசாத்.

பெண்கள் என்றாலே இந்தத் தாய்மைக் குணம் வந்திடுமா? நான் யாரென்றுகூடத் தெரியாது. ஆளரவமற்ற இடத்தில் என்னைக் காப்பாற்றி வயிற்றுக்கு உணவளித்து எத்தனை பரிவு! பெண்களிடம் மட்டுமே இது சாத்தியம். பயிரின் நடுவே சில களை முளைப்பதுபோல் யாமினியைப் போன்ற சிலர் பிறந்து விடுவார்கள் போலும்.

அவள் சென்ற பாதையை நோக்கிக் கும்பிட்டான். பிறகு மெல்ல எழுந்து நடக்க ஆரம்பித்தான். அவள் தந்த கூழ் வயிறைக் குளிர வைத்துத் தெம்பூட்டியது. அந்தத் தெம்பில் நடையை எட்டிப் போட்டான்.

"இதுதான் ஸார், அவன் இறங்கின இடம்!" என்றவாறு காரை நிறுத்தினான் புருஷோத்தமன். பிரதாப்பும் மற்றவர்களும் இறங்கிவிட,



"இதுவா? காடு போல இருக்கிறதே. ஒரு வீடுகூட இல்லையே!" - என்றான் பிரதாப்.

"இன்னும் மேலே போவானாம். கார் போகாது. அவன் நடந்துதான் போவான். நான் இப்படியே திரும்பிடுவேன். மறுநாள் இதே இடத்தில்தான் நிற்பான்," - என்றான் புருஷோத்தமன்.

அதற்குள் சிவராமன், "பிரதாப், இதுதான் அந்த மலை. இதன் மீது ஒரு காளி கோவில்கூட இருக்கிறது. ஒருமுறை நான் போயிருக்கிறேன்," - என்றார்.

"சரிப்பா, நீங்கள் போங்க. நான் காரை ஓரமாய் நிறுத்தி பூட்டிவிட்டுப் புருஷோத்தமனை அனுப்பிவிட்டு வருகிறேன்," - என்றவாறு அவர்களை அனுப்பினான். புருஷோத்தமனுக்குப் பணத்தை எண்ணி நீட்டும்போது அந்தச் சத்தம் கேட்டது.

"புருஷோத்தமன், இங்கே அருவி விழுகிறதா என்ன? இரைச்சலா இருக்கே..."

"மழை நேரம் இல்லையா சார். காட்டாற்று வெள்ளமாய் இருக்கும். வரட்டுமா ஸார்..." - அவன் விடை பெற்றுச் சென்றதும், காரை ஓரங்கட்டிவிட்டு அந்தப் பாதையில் ஏறி நடக்க ஆரம்பித்தான்.

மரப்பாலம் கண்ணில் பட்டதும் உள்ளம் துள்ளியது. நடையில் வேகத்தைக் கூட்டினான் பிரசாத். அந்த பெரியவர் சொன்ன பாலம் இதோ வந்துவிட்டது. இதில் ஏறி ஆற்றைக் கடந்துவிட்டால் போதும்; தப்பிவிடலாம் என்ற நினைவோடு வேகமாய் நடந்தவனின் கண்களில் பாலத்தின் மீது யாரோ ஒருவர் நடந்துவருவது தெரிந்ததும் பார்வையைக் கூர்மையாக்கினான்.

'இது... இது பிரதாப்தானே. ஆமாம் என் தம்பிதான்...' மனதில் உற்சாகம் பிறந்துவிட, பிரதாப், பிரதாப், நான் இங்கே இருக்கிறேன் எனக் கத்திக் கொண்டே ஓடினான். கால் இடறி விழுந்து புரண்டு மீண்டும் எழுந்து ஓடினான்.

ஆற்றின் இரைச்சலில் பிரசாத்தின் குரல் பிரதாப்பைச் சென்றடையவில்லை. அவனது கவனம் முழுவதும் அந்தப் பாலத்தின் மீதுதான் இருந்தது. இதை மரப்பாலம் என்று சொல்ல முடியாது. நாலைந்து சவுக்குக் கட்டைகளும் சில பலகைகளும் மட்டுமே எஞ்சியிருந்தன. அதுவும் எந்த நேரத்திலும் விழுந்து விடுவேன் என மிரட்டியது. அதனால்தான் மற்றவர்களை நிறுத்திவிட்டு முதலில் நான் சென்று பார்க்கிறேன். மொத்தமாய்ச் சென்றால் பாலம் உடைந்து விடும் என்று முன்னால் வந்தான். ஓரிடத்தில் வந்ததும் முழுதாய் இரண்டு பலகைகள் காணாமல் போயிருக்க, கீழே ஆற்றின் வேகததில் உடம்பில் நடுக்கம் பரவியது. இதில் தாவிக் குதித்துச் செல்ல முடியுமா? நாம் போய்விட்டாலும் அப்பாவால் முடியுமா? அண்ணன் எங்குதான் இருக்கிறான் என்றே சரியாகத் தெரியாமல் இந்த ரிஸ்க் எடுக்கலாமா எனத் தயங்கி நின்றான்.

மறு ஓரத்தில் நின்ற சிவராமன் குரல் கொடுத்தார். "என்னப்பா, நின்னுட்டே. போக முடியலியா... நான் வரட்டுமா?"

"இல்லப்பா. இங்க பெரிய இடைவெளி இருக்கு. இதை எப்படித் தாண்டிப் போவது என்று யோசிக்கிறேன். ஜம்ப் பண்ணிக் குதித்தாலும் இந்தப் பலகை தாங்காது. இப்ப என்னப்பா பண்ணலாம்?"

தம்பி எங்கே திரும்பிப் போய்விடுவானோ என்று அச்சத்தில் தன் சட்டையைக் கழற்றிக் கையால் சுழற்றி அசைத்துக் காட்டினான் பிரசாத்.



"பிரதாப், என்னை விட்டுவிட்டுப் போய்விடாதே. என்னால் ஓட முடியவில்லை. தம்பி, தம்பி, என்னைத் திரும்பிப் பாரேன்," - எனக் கூக்குரலிட்டுக் கொண்டே ஓடி வந்தான்.

சிவராமன் திடுக்கென நிமிர்ந்தார். மனம் அடித்துக் கொண்டது. "என் பிள்ளை... என் பிள்ளை இங்குதான் எங்கோ இருக்கிறான். எனக்கு அவன் குரல் கேட்கிறது. பிரதாப், சுற்றிலும் தேடிப்பார். உன் அண்ணனின் குரல் கேட்கிறது. தேடிப் பார்," - என்றார் சிவராமன்.

அனைவரும் ஆளுக்கொரு புறமாய்ப் பார்வையை வீசித் தேட, முதலில் பிரசாத்தைப் பார்த்தது நடராஜன் தான். "சார், அதோ அந்தக் கரையில் இருந்து ஓடி வருகிறார் ஒருவர். ஏதோ துணியைப் பிடித்துக் கொண்டே வருகிறார் பாருங்கள்," - என்றான் உற்சாகமாய்.

அனைவரும் ஆவலாய் அவன் காட்டிய திசையை நோக்க, புயலால் அடித்து வீசப்பட்ட தூசுபோல் பாய்ந்து வந்து கொண்டிருந்தான் பிரசாத்.

"ஐயோ, என் பிள்ளை... ராஜா... கிடைத்து விட்டாயா... வாப்பா... மெதுவாய் ஏறி வா..." - உரக்கக் குரல் கொடுத்தார் சிவராமன்.

மரப்பாலத்தை அடைந்து தடுமாறி ஏறி வந்தான். அதற்குள் நடராஜன் அங்கிருந்த மரத்தில் கெட்டியான கிளையை முறித்து அதன் கடினத்தை உறுதி செய்து கொண்டு வேகமாக ஏறி உடைந்திருந்த இடைவெளியில அதை நீளமாய்ப் போட்டு அது உருண்டு விடாமல் பிடித்துக் கொண்டான்.

"மாப்பிள்ளை, வாருங்கள். இந்த மரக்கிளை மீது ஏறி மெதுவாய் வாருங்க. பயப்படாதீர்கள். நான் கெட்டியாகப் பிடித்திருக்கிறேன். வாருங்கள்," என்றான்.

சிவராமனுடன் வந்த ஆட்களில் ஒருவன் தடிமனான நைலான் கயிற்றை எடுத்துப் பிரசாத்திடம் வீசினான். "சார், இதை இடுப்பிலே கட்டிக் கொண்டு நடந்து வாருங்கள். கட்டை புரண்டாலும் நாங்கள் தூக்கி விடுவோம். தைரியமாய் வாருங்கள்," - என்றான்.

கண்களில் கண்ணீர் மல்க, அந்தக் கயிற்றை எடுத்துத் தன் இடுப்போடு சுற்றி முடிச்சிட்டான். கால்கள் தடுமாறின.

"அண்ணா, பதறாதே. நாங்கள் இத்தனை பேர் இருக்கிறோம். தைரியமா வா. கீழே குனிந்து பார்க்காதே. மரத்தின் மீது ஏறி நிதானமாய் வா. ம்... அப்படித்தான். இன்னும் நான்கே எட்டுதான். வந்து விடு." - குரல் கொடுத்துக் கொண்டே தன் கையை நீட்டி அண்ணனை இழுத்துக் கொண்டான்.

பயம், நடுக்கம், பசி மயக்கம், சோர்வு, அதிர்ச்சி என எல்லாம் மொத்தமாய்ச் சேர்ந்துவிட தன் குடும்பத் தாருடன் வந்து சேர்ந்து விட்டோம் என்ற நம்பிக்கையில் தந்தையின் காலில் விழுந்து அப்படியே மயங்கிச் சரிந்தான் பிரசாத்.

"கண்ணா, ராஜா, உனக்கு என்ன ஆயிற்று? கண் விழித்துப் பாரப்பா. பிரதாப், என்ன ஆயிற்று இவனுக்கு? கண்ணைத் திறக்கவில்லையே. என் பிள்ளைக்கு என்ன வாயிற்று?" - மகனை மடியிலேந்திச் சிவராமன் கதறினார்.

"அப்பா, அண்ணன் ரொம்ப சோர்ந்து போயிருக்கான். அவர்களிடமிருந்து தப்பித்து வந்ததில் உடல் முழுக்க காயம். வாருங்கள்... உடனே இவனை ஹாஸ்பிடலில் சேர்க்க வேண்டும். கமான் க்விக்!" - அண்ணனைத் தூக்கிக்



கொண்டு முன்னால் சென்றான். மற்றவர்கள் அவனைப் பின்தொடர, நடராஜன் மட்டும் அசையாமல் நின்றான்.

"வாங்க ஸார் போகலாம்," - என்றான் ஆகாஷ்.

"சுடத்தினவங்கள அப்படியே விட்டுட்டுப் போறதா?" - என்றான் வெறியோடு.

"அதை போலீஸ் பாத்துப்பாங்க ஸார். போலீஸ்ல சொல்லியிருக்கோமே."

"இல்ல, நான் அவங்களை வேட்டையாடணும். என் கண்ணம்மா விட்ட கண்ணீருக்கு அவங்க பதில் சொல்ல வேண்டும். மாப்பிள்ளை உடம்புல எத்தனை காயம் பார்த்தியா? கல்யாணத்தப்ப ராஜாவாட்டம் இருந்தவரு. இப்ப எப்படி கந்தல் துணி மாதிரி இருக்காரு பார்த்தியா. இவரை இந்தக் கோலத்துக்கு ஆளாக்கியவனை நான் சும்மா விட மாட்டேன். நீங்கள்லாம் போங்க. நான் அவங்களைத் துண்டு துண்டா வெட்டி இந்த ஆத்துல எறிஞ்சிட்டுதான் வருவேன்!" - என்றான் ஆத்திரம் அடங்காமல்.

"என்ன ஸார் இது? இவரை அனுப்பிவிட்டு நீங்களோ போலீஸோ வரட்டும் என்று அவர்கள் காத்திருப்பார்களா? ஒன்று இவரைத் தேடி அலைவார்கள். இல்லையென்றால் வேறு இடத்திற்கு ஓடியிருப்பார்கள். இப்போது அவர்களைத் தேடுவதைத் தவிர நமக்கு முக்கியமான வேலை ஒன்று இருக்கிறது சார். இவர்கள் ஹாஸ்பிடலுக்குப் போகட்டும். நாம் சென்று அண்ணியிடம் இந்த நல்ல விஷயத்தைக் கூறி அவர்களை ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் செல்வோம்.

"மனோகரை எப்படியும் போலீஸ் கவனித்துக் கொள்ளும். அப்படியே அவன் தப்பினாலும் நாம்

அவனை விடப்போவதில்லை. நம்மிடம் சிக்காமலா போய் விடுவான்? முதலில் வாருங்கள், வீட்டிற்குப் போகலாம்," - என நடராஜனின் கையைப் பற்றித் தன்னோடு அழைத்துச் சென்றான் ஆகாஷ்.

திடுரெனக் காற்று பலமாய் வீச ஆரம்பிக்க மழைத் துளிகள் சட் சட்டென்று விழ ஆரம்பித்தன. அனைவரும் ஓட்டமும் நடையுமாய் ஓடிச்சென்று காரில் ஏறியதும் மழை வலுக்க ஆரம்பித்தது. சுற்றுப்புறம் முழுவதும் இருள் பரவிவிட காரைப் பிரதாப் செலுத்தினான்.

உடல் முழுக்க இரத்தமாய்க் கிடந்த மகனைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தார் சிவராமன். பிரதாப் போனை எடுத்து ஒருவர் மாற்றி ஒருவராய்த் தகவல் கொடுத்துக் கொண்டேயிருக்க, கார் ஊட்டியை நோக்கிச் சீறிப் பாய்ந்தது.

காற்றும் மழையும் விடாமல் அதிகமாகிச் சூறாவளி உருவானது. காற்றின் சுழற்சியில் குடிசையின் மேற்கூரை ஒவ்வொன்றாய்ப் பறந்துவிட, மழைநீர் மொத்தமும் குடிசைக்குள் விழ, பதறி எழுந்தான் மனோகர். விடிந்து விட்டதா என எழுந்தவன் மேலேயிருந்து நீருற்ற அண்ணாந்து பார்த்தான். மேற்கூரை இல்லாமல் கரு மேகங்கள் சூழ்ந்த வானம் தெரிய, பதறிக் கிருஷ்ணாவை எழுப்பினான் மனோகர்.

அதற்காகவே காத்திருந்த கிருஷ்ணா எழுந்து சோம்பல் முறித்தான். அதற்குள் மினியும் எழுந்துவிட்டு, "இப்போ எதற்காக என் மீது தண்ணீர் தெளித்தாய்?" - என அண்ணனிடம் சீறினாள்.

"மேலே பார்" - எனக் கையைக் காட்டிவிட்டு, "ஐயோ, பிரசாத் எங்கே? கிருஷ்ணா எப்படித் தூங்கினாய்? இவன் எங்கே போய் விட்டான்" - என்றவாறு கதவைத் திறக்க, அது வெளியே பூட்டப்பட்டிருந்தது.



தன் தலையில் இருந்த பச்சிலையைப் பார்த்து, "அண்ணா, அவன் நம்மையெல்லாம் மயக்கமடைய வைத்துவிட்டு ஓடிவிட்டான். ஐயோ, எத்தனை நாளாய் மயங்கிக் கிடந்தோமோ! அண்ணா, அவன் வீட்டிற்குப் போயிருப்பானோ? போலீஸில் நம்மைப் பற்றிச் சொல்லி யிருப்பானோ? நம்மைத் தேடி போலீஸ் வந்திடுமா?" - பயத்தால் அரற்றினாள் மினி.

"தன்வினை தன்னைச் சுடும் என்பார்களே. அது சரிதான் மினி. நீதான் இந்த மருந்தை அவருக்குத் தெரியப் படுத்தினாய். இன்று அவரே இதைப் பயன்படுத்தித் தப்பிவிட்டார்!" - என்றான் கிருஷ்ணா.

"வாயை மூடு. எல்லாம் உன்னால் வந்தது. நடுச்சாமம் வரை இப்படித்தான் புலம்பி என் தூக்கத்தைக் கெடுத் தான். இல்லையென்றால் சிறு சப்தம் கேட்டாலும் விழித்திருப்பேன். போச்சு. நம் திட்டமெல்லாம் வீணாப் போயிற்று. இப்போது ஜெயிலுக்குத்தான் போகணுமா? அண்ணா வா, நாம எங்காவது ஓடிப்போயிடலாம்."

"பொறும்மா, நேற்று இரவுதான் நம்மை மயக்க மடையச் செய்துவிட்டு ஓடியிருக்கான். இதோ அவனுக்கு நான் வாங்கி வந்த சாப்பாடு அப்படியே இருக்கிறதே. இதோ பார் மினி. நிச்சயம் அவன் காட்டைவிட்டுத் தப்பியிருக்க முடியாது. எது வழி என்று கண்டுபிடிக்கவே அவனுக்கு நாலு நாளாகும். உடனே தேடினால் மாட்டி விடுவான். வா," - என்றவன் கதவைக் சுழற்றித் தனியே வைத்தான்.

மினி எழுந்து அண்ணன் பின்னே செல்ல, கிருஷ்ணா செய்வதறியாது நின்றான்.

"கிருஷ்ணா, சீக்கிரம் வா!" - மனோகர் அவசரப் படுத்தினான்.

"மனோகர், இந்த மழையில் எங்கே போய்த் தேடுவாய். காற்றும் பலமாக வீசுதே. டார்ச்சையும் காணவில்லை."

"அதற்காக அவனை அப்படியே விட்டுவிடுவதா? முட்டாள்! அவன் தப்பிவிட்டால் நாம் எல்லோரும் உள்ளே போக வேண்டும். சீக்கிரம் வா. இந்த மலையை விட்டு இறங்குமுன் பிடித்தால்தான் உண்டு. ம்..." - என்ற வாறு மிரட்ட, அதற்குமேலும் நின்றால் மனோகருக்குச் சந்தேகம் வந்துவிடும் என்று தோன்ற, கிருஷ்ணாவும் சேர்ந்து தேட ஆரம்பித்தான்.

பாறை சரிவு சந்து புதர் என ஓரிடம் விடாமல் தேடிச் சலித்தபோது பகல் முடிந்து இரவு எட்டிப் பார்த்தது. மீனி பயந்து போனாள்.

"அண்ணா, ஒருவேளை வீட்டிற்குப் போயிருப் பானோ?"

"முடியாதும்மா. நிச்சயம் முடியாது. நேற்றிரவு நான் வரும்போதே ஆற்றில் நீர் வரத்து அதிகமாயிற்று. மரப்பாலம் வழியே சிரமப்பட்டுத்தான் வந்தேன். ஒரு வேளை அவன் மலையை விட்டு இறங்கியிருந்தாலும் ஆற்றைத் தாண்ட முடியாமல் தவித்துக் கொண்டுதான் இருப்பான். ஏன்னா, மரப்பாலம் இருப்பது அவனுக்குத் தெரியாதே. வா, போய்ப் பிடித்துவிடலாம்," - என்றவாறு சரசரவெனக் கீழிறங்கினான்.

கிருஷ்ணாவிற்குச் சுரீரென்றது. 'இதை எப்படிச் சொல்ல மறந்தேன். இன்னும் ஆற்றைக் கடந்திருக்க மாட்டாரோ? மீண்டும் மாட்டிக் கொண்டால்...' நினைக்கையில் புல்லரித்தது. 'எப்படியாவது தப்பிப் போயிருக்க வேண்டும் கடவுளே...' மனதிற்குள் வேண்டிக் கொண்டே அவர்களைத் தொடர்ந்தான்.



மனோகருக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓட எந்தத் திசையிலும் பிரசாத்தைக் காணவில்லை. ஆத்திரத்தோடு மரப் பாலத்தின் மீது ஏறினான். அவனைத் தொடர்ந்து மீனியும் ஏற கிருஷ்ணா அவர்களைத் தடுத்தான்.

"மனோகர், அவசரப்படாதே. ஏற்கெனவே இந்தப் பாலம் மக்கிப் போயிருக்கிறது. இப்போது மழையும் காற்றுமாய் இருக்கிறது. ரிஸ்க் எடுக்காதே. நன்றாக இருட்டிவிட்டது. பாலம் எந்த நேரமும் விழ்ந்து விடலாம். நாம் எச்சரிக்கையாய் இருப்பதுதான் நல்லது. கீழே இறங்கு."

"என்ன நாக்குடா உன் நாக்கு? எந்த நேரமும் நல்லதையே பேச மாட்டியா? உனக்குப் பயம் என்றால் நீ வராதே. நாங்கள் போகிறோம்," - என்ற மீனியின் நாவில் சனி சம்மணமிட்டு அமர்ந்திருந்தார் என்பதை அப்போது யாரும் அறியவில்லை.

"மீனி, கோபப்படும் நேரமில்லை இது. சொன்னால் கேள். ஆற்று வெள்ளமும் அதிகமா இருக்கு. கீழே விழுந்தாலும் நீந்திக் கரையேற முடியாது. பொறுமையாய் இருந்து காலையில் தேடிப் போகலாம்," - என்றான் மீண்டும்.

"நீ பொறுமையாய் இரு. எங்களுக்கு அவகாசமும் இல்லை. மனதில் பயமும் இல்லை. நீ இரு. நாங்கள் போகிறோம். வாண்ணா, போகலாம். இவனைக் கூட்டி வந்தது பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம்

பார்ப்பதற்குச் சமம். இனி எந்த வேலையிலும் இவனைச் சேர்க்காதே!" - என்றவாறு நடக்க ஆரம்பித்தாள்.

மனோகரும் பதிலின்றி அவளுடன் நடக்க, சுழன்ற காற்றின் வேகத்தில் சடசட என்ற பெருஞ்சத்தத்தோடு அந்தப் பாலம் உடைந்து கீழே ஓடிய ஆற்றில் விழுந்து நீரோடு அடித்துச் செல்லப்பட்டது. மனோகரின் ஓலமும் மினியின் கதறலும் நீரினுள் அமுங்கிப் போயிற்று.

கண் முன்னே நடந்த விபத்தில் கதிகலங்கிப் போனான் கிருஷ்ணா. ஓடிச்சென்று உதவ முற்படும் முன்பே நீரோட்டம் அவர்களை வெகு தூரம் இழுத்துச் சென்றிருந்தது. பளீரென வீசிய மின்னலின் ஒளியில் இருவரின் தலை மட்டும் தூரமாய்த் தெரிய கிருஷ்ணாவின் கண்கள் தன்னையும் மீறிக் கண்ணீர் சொரிந்தன. அது மழை நீரோடு கரைந்தது.

## 27

நின்னைச் சரண் அடைந்தேன்
கண்ணம்மா - நின்னைச்
சரண் அடைந்தேன் - தன்செயல்
எண்ணித் தவிப்பது தீர்ந்து
நின்னைச் சரண் அடைந்தேன்!

மருத்துவமனையில் அனைவரும் சூழ்ந்து நிற்க பிரசாந் தாயின் மடி மீது தலை வைத்துப் படுத்திருந்தான். மகனின்



உடல் முழுக்கக் காயங்களைக் கண்டு பெற்ற மனம் துடித்தது. காயங்களைப் பஞ்சால் ஒற்றியெடுத்த நர்ஸிடம், "மெல்லம்மா. என் மகன் வலியைத் தாங்கிக் கொள்ள மாட்டான்!" - என்றாள் அம்பிகை.

"அதெல்லாம் அப்போ அம்மா. இப்ப நிறைய வலியைப் பட்டு வலியே மரத்துப் போச்சும்மா. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லைன்னு ஔவையார் பாட்டி சொன்னது சத்தியமான உண்மையம்மா. பாலுக்கும் விஷத்திற்கும் வித்தியாசம் தெரியாத முட்டாளா இருந்திருக்கிறேனே. உண்மையான அன்பு எது பொய்யான முகமூடி எது என்று பகுத்தறியத் தெரியாத மட்டியாய் இருந்திருக்கிறேனே. இந்தத் தண்டனை இந்தக் காயங்கள் எனக்குத் தேவைதானம்மா."

"அப்படிச் சொல்லாதே ராஜா. நீ என் குழந்தையப்பா. குழந்தைகள் தவறு செய்வது இயல்புதானே."

"தவறு செய்யலாம் அம்மா. ஆனால் பாவம் செய்யக் கூடாது. நான் பாவி. பாரதிக்கு எத்தனை பெரிய பாவம் இழைத்திருக்கிறேன். நான் தாலி கட்டிய நிமிடமே பெற்றவர், உடன் பிறந்தோர், சுற்றம், நட்பு என அனைத்தையும் விட்டு என்னை மட்டுமே நம்பி வந்தாளே.

"ஒரு நல்ல மனைவியாய் நடந்து கொண்ட அவளிடம் நான் ஒரு மனிதனாகக் கூட நடந்து கொள்ளவில்லையே. அவளிடம் அன்பாய் ஒரு வார்த்தை நின்று பேசியதில்லையே. வேறு ஒரு பெண்ணாக இருந்தால் நீயும் வேண்டாம், உன் தாலியும் வேண்டாம் என்று போயிருப்பாளே. ஆனால் என் பாரதி என்னைவிட்டுப் போகவில்லையே.

அவளை நான் அடித்து விரட்டியபோதுகூடப் போகவில்லையே. நான் ஒரு மிருகம் அம்மா. என்னை யாருக்குமே பிடிக்காது அம்மா!" - புலம்பியவனை நர்ஸ் அதட்டினாள்.

"ஸார், மருந்து போடணும். கொஞ்ச நேரம் பேசாம அமைதியா இருங்க. டிரிப்ஸ் ஏறுது. கையை அசைக்காதீங்க."

"ஸாரி சிஸ்டர், அசைக்க மாட்டேன். பட், நான் பேசணும். பேசியே ஆகணும்."

"நோ ஸார், உங்க உடம்பு ரொம்ப வீக்கா இருக்கு. ஸ்ட்ரெயின் பண்ணிக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். இப்ப உங்களுக்குத் தேவை கம்ப்ளீட் ரெஸ்ட். நல்லாத் தூங்குங்க. அப்புறமா நிதானமா பேசலாம். இப்ப ஒரு இன்ஜெக்ஷன் போடுறேன்," - என்றவாறு ஊசியைப் பிரசாத்தின் புஜத்தில் மென்மையாய்ச் செருகி எடுத்தாள் ஜெயஸ்ரீ.

"சிஸ்டர், என்னை நினைவிருக்கா உங்களுக்கு?" - ஆர்வமாய்க் கேட்டான் பிரதாப். ஒரு கணம் யோசித்து விட்டு, "ஸாரி ஸார்... நினைவில்லையே. யார் நீங்க?" - எனக் கேட்டாள் ஜெயஸ்ரீ.

"சிஸ்டர், இப்ப கொஞ்ச நாள் முன்னாடி ஒரு நாள் பனி மழை பெய்யும்போது நாம பார்த்தோமே, அந்த சூஸைட் கேஸைப் பத்தி கேட்டேனே!" - என்றவளின் இடுப்பில் பிறர் காணாவண்ணம் இடித்தாள் செல்லம்மா.

"நான் பக்கத்தில இருக்கும்போதே இப்படி வழிகிறாயா? தோலை உரித்துவிடுவேன்!" - என்றான் அவனுக்கு மட்டும் கேட்கும்படி.



"ஓ... யெஸ்... நினைவிற்கு வருகிறது. நீங்கள்தானா... ஸாரி, மழை நேரம். முகம் சரியா நினைவில்லை."

"அது போகட்டும் சிஸ்டர், எங்கள் குழப்பத்திற்கான தீர்வு அன்று உங்கள் பேச்சில் இருந்துதான் கிடைத்தது. நீங்கள் பேசுவதை நான் கேட்டிருக்காவிட்டால் அந்த யாமினியை நானும் நம்பியிருப்பேன். விரும்பிய ஒருவனுக்காக உயிரை விடத் துணிந்தவளை ஒரு லைலாவாக ஒரு அனார்கலியாக நினைத்து அவளுக்காக அப்பாவிடம் சண்டை கூடப் போட்டிருப்பேன்.

"நீங்கள் உண்மையைச் சொன்னதால்தான் அவளிடம் ஏமாறாமல் தப்பித்தேன். ரொம்ப தேங்க்ஸ் சிஸ்டர். உண்மையில் நீங்கள் எங்கள் சிஸ்டர்தான்!" - என்றான் ஓரக்கண்ணால் செல்லம்மாளைப் பார்த்துக் கொண்டே.

"இட்ஸ் ஓ.கே. ஸார். அவர் தூங்கட்டும். யாராவது ஒருத்தர் மட்டும் கூட இருங்கள். மற்றவர்கள் போகலாம். இல்லன்னா ஹாலில் வெயிட் பண்ணுங்க. பேஷண்ட்டைத் தொந்தரவு செய்ய வேண்டாம்!" - என்றவாறு மருந்துகள் அடங்கிய ட்ரேயை எடுத்துக் கொண்டு அவள் வெளியேறி விட,

"நீங்கள்லாம் போங்க. நான் எம் புள்ளைய விட்டு வரமாட்டேன்," - என்றாள் அம்பிகை. அவளருகே வந்தார் சிவராமன்.

"அம்பிகை, உன் உடம்பைப் பற்றி அக்கறைப்பட மாட்டாயா நீ? முதலில் சாப்பிட்டுவிட்டு மாத்திரை போடு. அதுதான் பிள்ளை கிடைத்துவிட்டானே. இனிப் பத்திரமாய் நம்மோடு இருப்பான். நீ கவலைப்படாமல் வா. கேண்டீனில் சாப்பாடு வாங்கித் தருகிறேன்."

"அவன் எப்படி நம்மோடு இருப்பான்? அதுதான் எனக்கு இந்த ஊர் குளிர் ஒத்துக் கொள்ளாது என்று கூட்டிட்டுப் போயிடுவீங்களே. பிறகெப்படி என் பிள்ளை என்னோடு இருப்பான்?"

"இருப்பான். இனி நம்மோடு கோவையில் இருப்பான். உடல் குணமாகும்வரை இருந்து நம்மோடு அழைத்துப் போய்விடலாம்," - என்றார் சிவராமன் உறுதியாய்.

செருகிய கண்களைத் திறந்தான் பிரசாத். "அப்பா, என்ன சொல்றீங்க. நான் அங்கே வந்தால் இங்கே என் வேலையை யார் பார்ப்பது?"

"அதைப் பிரதாப் பார்த்துக் கொள்ளட்டும். இனிமேல் நீ காட்டன் மில்லைக் கவனித்துக் கொள்," - என்றார் உத்தரவாய்.

"ஏன்... ஏன்?"

"ஏன்னா இனிமே உனக்கு ஊட்டி வேண்டாம். இங்கே இருந்தால் உன் மன நிம்மதி கெட்டுப் போய்விடும்."

"ஏம்பா, அதுதான் ஆண்டவனாய்ப் பார்த்து அவர்களுக்குரிய தண்டனையை வழங்கிவிட்டாரே, இனியென்ன பிரச்சனை வரும்? அண்ணன் வேண்டு மானால் இங்கேயே இருக்கட்டும்," - என்றான் பிரதாப்.

"இல்லடா, வேண்டாம். இவன் இங்கேயிருந்தால் கண்ட கழிசடை நினைவெல்லாம் வரும். இவனால் இயல்பாய் வாழ முடியாது. அதனால் எங்களுடன் கோவை வந்துவிடட்டும். அங்கே என் மருமகளோடு நம் வீட்டில் புதுவாழ்வைத் தொடங்கட்டும். உன் அம்மாவும் மூத்த மகனோடு வாழட்டுமே."



"அம்மாவோட இருக்க எனக்கு ஆசைதானப்பா. ஆனால், இன்னும் நீங்கள் என்னை நம்பவில்லையா? அவனை அவளது நினைவை நான் எப்போதோ தூக்கியெறிந்து விட்டேனப்பா. என்னை நம்புங்கள்."

"நான் உன்னை நம்புகிறேன் கண்ணா. ஆனால், உன் மனக்காயம் நன்றாய் ஆற வேண்டுமே. இங்கிருந்தால் சில இடங்கள் சில நினைவுகள் உன் காயத்தை ஆற விடாது. கிளறிவிடும். அதற்காகத்தான் சொல்கிறேன். உனக்கு எது நல்லது என்று அப்பாவிற்குத் தெரியாதா?"

"தெரியும் அப்பா. கண்டிப்பாய்த் தெரியும். நான் உங்களுடன் வந்து விடுகிறேன். இதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால் இங்கிருந்து சில கடமைகள் செய்ய வேண்டும் என்றிருந்தேன் அப்பா."

"அண்ணா, என்னவென்று சொல். நான் செய்து முடிக்கிறேன்."

"தேங்க்யு பிரதாப். அந்தக் கிருஷ்ணா ரொம்ப நல்லவன். அவனுக்கு நல்ல சம்பளத்தில் வேலை கொடு. அவனுக்கு அம்மா மட்டும்தான் இருக்கிறார்களாம். நம் குவாட்டர்ஸில் தங்கிக்கச் சொல்."

"சரி, அப்புறம்?"

"அந்த வன்னிமலையில் ஒரு காளி சிலை இருக்குதுடா. அதற்கு மேற்கூரை இல்லாமல் பனியிலும் மழையிலும் வெயிலிலுமாய் நனைந்து கேட்பாரற்றுக் கிடக்கிறது. அதற்கு ஒரு கோயில் கட்டிவிட வேண்டும்."

"இது என்ன ஆச்சர்யம்! அண்ணா, நீ என்று பக்திமான் ஆனாய்? கோயிலுக்குப் போக வேண்டும் என்றால் குதிகால் பிடரியில் படும் அளவிற்கு ஓட்டம் பிடிப்பாயே."

"அதெல்லாம் அப்போது. இந்தக் காளி ரொம்ப சக்தி வாய்ந்தது. பிரதாப், என்னை அங்கு அழைத்துப் போன அன்றே யாமினியின் நோக்கம் புரிந்து விட்டது. என்னை மயக்க நிலையில் வைத்தேனும் சாதித்து விடுவேன்" என்றாள்.

அனைவரும் முகம் சுழிக்க, வாசலுக்கு வெளியே நின்ற பாரதியின் கண்களில் நீர் கோத்தது.

"ஆனால், நான் அதை மறுத்தேன். அப்போதுதான் அந்தக் காளியிடம் என் சுயநினைவின்றிக் கூட இவளைத் தீண்டிவிடக் கூடாது. என் மனைவிக்கு நான் துரோகம் செய்துவிடக் கூடாது. நீதான் என்னைக் காக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். கடைசிவரை மினியின் எண்ணம் நிறைவேறவில்லை. நான் நானாகவே பரிசுத்தமாகவே திரும்பி வந்துவிட்டேன்.

"அதோடு அவர்களிடமிருந்து தப்பிவரும்போது அந்தக் காளியை வணங்கிய பிறகுதான் அந்த மூலிகையின் நினைவு வந்தது. அதன்பிறகுதான் அவர்களை மயக்கமுறச் செய்துவிட்டுத் தப்பி வந்தேன். இல்லையென்றால் ஆற்றைக் கடக்குமுன் நிச்சயம் அவர்களிடம் மாட்டி யிருப்பேன். என்னைக் காத்த அந்த வனதேவதைக்கு எப்படியும் கோயில் கட்டிவிட வேண்டும் பிரதாப்."

"கண்டிப்பாய்க் கட்டிவிடலாம். அப்புறம் வேறு எதுவும் இருக்கா?"

இம்முறை ஒருகணம் தயங்கினான் பிரசாத். "அதை என்று சொன்னால்... நீ எப்படி ஏற்றுக் கொள்வாய் என்று தெரியவில்லை."



"ஏன்? என்னவென்று சொல். என்னிடம் என்ன தயக்கம்?"

"தம்பி, அது வந்து நான் ஆற்றோடு போகும்போது என்னை ஒரு பெண் காப்பாற்றினாள் என்று சொன்னேனே. அவள் பெயர் உமையாள்."

"ஆமாம், சொன்னாய். அதற்கென்ன?"

"நம் வீட்டில் நீதான் திருமணம் ஆகாமல் இருக்கிறாய். அதனால் நீயே... - அவன் முடிக்கும் முன், "அண்ணா, என்னை மன்னித்துவிடு!" - என இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கிக் கும்பிட்டான்.

"ஏன்டா..."

"அண்ணன் தம்பியான நமக்கு அக்காள் தங்கை மனைவியாக வந்தால் நம் வீடு ஒற்றுமையாக இருக்கும் என்று... என்று... அம்மா சொன்னார்கள்!" - அன்னையின் மீது பழியைப் போட்டான். அம்பிகை விழித்தாள்.

"டேய்... நான் எப்போதடா சொன்னேன். அண்ணன் சொன்ன பெண்ணைக் கட்டிக் கொள். அருமையான பெயர். உமை உமா என்று எப்படியும் அழைக்கலாம்."

"அம்மா, உங்களுக்குப் பேத்தி பிறந்தால் அந்தப் பெயரை வைத்துவிடலாம். சரியா அண்ணா...?"

"அதைப் பேத்தி பிறந்த பிறகு பார்க்கலாம். நீ இப்போது என்னவோ சொன்னியே, அக்காள் தங்கை என்று. என்னடா அது?" - என்றார் சிவராமன்.

செல்லம்மாவின் இதயம் படபடக்க, மெல்ல நழுவி வெளியேறி அங்கு நின்ற அக்காவிடம் சென்றாள். அழுது

சிவந்திருந்த கண்களை அழுத்தமாய்த் துடைத்துவிட்டு புன்னகையோடு தங்கையின் கைப்பற்றி அறைக்குள் நுழைந்தாள் பாரதி.

பாரதியைக் கண்டவுடன் அனைவரின் பேச்சும் நின்று போனது. படுத்திருந்த பிரசாத் எழுந்து அமர்ந்தான். கண்களில் நீர் கோத்துக் கொள்ள,

"பாரதி, வந்துவிட்டாயா? என்னைப் பார்க்க வந்துவிட்டாயா? கடவுளே, உனக்கு நன்றி!" - என்றான் பிரசாத்.

பாரதி அமைதியாக நின்றாள். அந்த அமைதி அவன் மனதை அறுக்க, "பாரதி, நான் குற்றவாளி. எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுத்துவிடு. ஆனால் பேசாமல் மட்டும் இருந்து விடாதே. வயதுக்கோளாறில் ஏதோ புத்தி கெட்டுப் போனேனே தவிர, வழிதவறி நடக்கவில்லை நான். என்னை நம்பு. என் மீது ஆணையாக நான் எந்தத் தவறும் செய்யவில்லை!" - வலது கையைத் தன் தலை மீது வைத்துச் சத்தியம் செய்தான்.

இப்போதும் பாரதியிடமிருந்து பதில் வராமல் போகவே பிரதாப் அவளிடம் வந்தான்.

"அண்ணி, நான் சொன்னதுதான் நடந்திருக்கிறது. அண்ணனின் விருப்பமின்றித்தான் கடத்தி வைத்திருக் கிறார்கள். அண்ணன் உத்தமனாகவே திரும்பி வந்திருக் கிறான். இன்னும் என்ன அண்ணி கோபம்?"

"பிரதாப், வேண்டாம். அவளை வற்புறுத்தாதே. அவளது கோபம் நியாயமானது. இவளை வீட்டில் வைத்துக் கொண்டே நான் அடுத்தவளோடுதானே



சுற்றினேன். அது எப்படிப்பட்ட துரோகம். எந்தப் பெண்ணால் அதை ஏற்றுக் கொள்ள முடியும்? எந்தப் பெண்ணுமே தன் கணவன் தனக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும், அவர் மனதில் நாம்தான் இருக்க வேண்டும் என்றுதானே நினைப்பார்கள்.

"நான் அப்படி நடந்து கொள்ளவில்லையே. ஆனால் பாரதி! விதி வசத்தில் என்று உன்னிடம் கணவனாக நடந்து கொண்டேனோ அன்று முதல் உன்னை மட்டும் தான் நினைத்துக் கொண்டு உனக்காகவே வாழ வேண்டு மென்றுதான் இத்தனை போராடி மீண்டு வந்தேன்.

"நீ என்னை ஏற்றுக் கொள்வாய் என்றுதான் இன்னும் உயிருடன் இருக்கிறேன். இதுவரை வாழ்ந்த பிரசாத் என்றோ இறந்து விட்டான் பாரதி. இப்போது உன் எதிரில் இருப்பது உன் கணவன். உன்னை மட்டுமே நினைத்து வாழும் உன் கணவன். தயவு செய்து என்னை வெறுத்து விடாதே. என்னை மன்னித்துவிடு!" - கண்கள் கசிய மன்றாடினான்.

இப்போதும் பாரதி நிமிரவில்லை. "ஏன் அண்ணி, அண்ணன் இத்தனை சொல்லியும் உங்களுக்கு நம்பிக்கை வரவில்லையா? அவன் என்ன பெரிய கொலைக் குற்றமா செய்துவிட்டான். நல்லவள் என்று நம்பி ஒரு பெண்ணை விரும்பினான். அது தவறென்று திருந்தியும்விட்டானே.

"மாதவியோடு வாழ்ந்து திரும்பிய கோவலன் இப்படி உடல் முழுக்கக் காயம்பட்டுக் கண்ணகியைத் தேடி ஓடி வரவில்லை. மாதவியிடம் அற்ப விஷயத்திற்குக் கோபித்துக் கொண்டுதான் வந்தான். இதிலிருந்து தெரிய வில்லையா - அண்ணன் கோவலன் இல்லை அண்ணி,

"உங்களுக்கு அண்ணனின் வார்த்தை மீது நம்பிக்கை இல்லையா? தன் மீது ஆணையிட்டுச் சொல்கிறானே. சரி, அவனை நம்ப வேண்டாம். உடனிருந்தே காவல்புரிந்த கிருஷ்ணாவை அழைத்து வரட்டுமா? அவன் சொன்னால் நம்புவீர்களா?"

"வேண்டாம் பிரதாப்..." - என்றவாறு நிமிர்ந்தாள் பாரதி. கண்கள் நீரில் மிதந்தன.

"நீங்கள் எல்லோரும் மருத்துவமனையில் இருக்கும் போது நான் மட்டும் வீட்டிலிருந்தேனே. அப்போதே அந்தக் கிருஷ்ணா வந்து எல்லாவற்றையும் சொல்லி விட்டான். அதற்குப் பிறகுதான் நான் இங்கு வந்தேன்."

"அவன் சொன்ன பிறகுமா அண்ணி நீங்கள் நம்பவில்லை?"

"இல்லை, அவன் யாரென்றே எனக்குத் தெரியாது. இருந்தாலும் என் மனதை மாற்ற நீங்கள் ஏற்பாடு செய்த ஆளாக இருக்கும் என்ற கோபத்தோடுதான் வந்தேன். ஆனால் உன் அண்ணன் பேசிய அனைத்தையும் கேட்ட பிறகு என் கோபம் மறைந்துவிட்டது."

"பிறகென்னம்மா, இன்னும் என் பிள்ளையிடம் ஒரு வார்த்தை பேசவில்லையே. அவன் தவிப்பது உனக்குப் புரியவில்லையா?"

"புரிகிறது அத்தை. இருந்தும் அவரிடம் எப்படிப் பேசுவேன்? பிரதாப்பிற்கு இருந்த நம்பிக்கை எனக்கில்லாமல் போயிற்றே. நான் எப்படி?" - கண்ணீர் வழிந்தது.

"வேண்டாம் பாரதி. அழாதே. உன்னை நான் கம்பீரமாகத்தான் பார்க்க ஆசைப்படுகிறேன். உன் கம்பீரம்



குறைய வேண்டாம். என்னை மன்னித்து விட்டேன் என்று மட்டும் சொல்."

அவனருகே நெருங்கித் தலை கோதினாள். "அப்படி எல்லாம் பேசக் கூடாது. முதலில் அமைதியாய்த் தூங்குங்கள். உடம்பு சரியானதும் வீட்டிற்குப் போய்ப் பேசலாம். நான் பக்கத்தில் இருக்கிறேன். தூங்குங்கள்!" - என்றதும் அமைதியாய்க் கண்களை மூடிக் கொண்டான்.

மூடிய விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தது. "ஆண் பிள்ளை அழக்கூடாது. அமைதியாய்த் தூங்குங்கள்!" என்றாள் மெல்ல.

மனதில் பாரம் இறங்கிவிட, மனைவியின் அருகாமையில் மெல்ல மெல்ல உறங்கிப் போனான் பிரசாத்.

"மாமா, நான் இவரைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் அத்தையை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போங்க. செல்வா, அத்தைக்கு ஏதேனும் சாப்பாடு செய்து கொடு," - என்றாள் பாரதி.

"ஏய், என்னப்பா இது? ஆளாளுக்கு ஒன்னு சேர்ந்துட்டு என்னை அம்போன்னு விட்டுட்டீங்க. எம் மேட்டரை மறந்திட்டீங்களா?" எனக் கேட்டான் பிரதாப்.

"அட ஆமாம். என்னடா ஏதோ அக்கா தங்கை என்றாய். என்ன நீயும் யாரிடமாவது விழுந்துவிட்டாயா?"

"இல்லையப்பா, நிமிர்ந்துதான் நிற்கிறேன். எனக்கு இனிமேல் பெண் பார்க்க வேண்டுமில்லையா?"

"ஆமாம்."

"இதோ இந்தப் பெண்ணையே பார்த்து விடுங்கள் அப்பா," - எனச் செல்லம்மாவைக் காட்டினான்.

"அடப்பாவி, எவ்ளோ பெரிய விஷயத்தை இவ்வளவு எளிதாய்ச் சொல்லிவிட்டானே!" - அம்பிகை வாயில் கை வைத்தாள்.

சிவராமன் செல்லம்மாவை ஏற இறங்கப் பார்த்தார்.

"இது எப்போ இருந்துடா ஆரம்பமாச்சு?"

"ஐயோ, இல்லப்பா... உங்ககிட்டே கேட்டுட்டு நீங்க சம்மதிச்ச பிறகுதான் இவளை விரும்ப ஆரம்பிப்பேன்."

"சம்மதிக்கவன்னா..." - என்றார் மிடுக்காய்.

"நிச்சயமாய் உங்கள் பேச்சை மீற மாட்டேன். ஆனால், சத்தியமாய் வேறு ஒரு பெண்ணை மணக்க மாட்டேன். காலம் முழுக்க இப்படியே இருந்து விடுவேன். அப்புறம் உங்கள் விருப்பம்!" - என்றான் அலட்சியமாய்.

"என்னடா, என்னையே மிரட்டுறியா?"

"உண்மையைச் சொன்னேன்."

"பார்த்தியா, உன் பிள்ளையின் சாமர்த்தியத்தை, என்னையே மடக்கி விட்டான்!" - என்றார் மனைவியிடம்.

"அவன் என் பிள்ளை ஆயிற்றே..." - அம்பிகை பெருமையாய்க் கூற,

"சரிடா மகனே, எங்களுக்குச் சம்மதம். எப்போ கல்யாணம்?" என்றார் மகனிடம்.

"அது... செல்லம்மா... டீச்சரானதும்..."

"அதுக்குள்ள ஏன்டா சம்மதம் கேட்ட?"

"உங்க சம்மதம் கிடைச்சாத்தானே தைரியமா செல்லம்மாகிட்ட எம் மனசைச் சொல்ல முடியும்.



செல்லம்மா! என்னைக் கட்டிக்கிறியா?" - சத்தமாய்க் கேட்க, "ஐயோ, யார் முன்னாடி கேட்கறீங்க?" - என முகத்தை மூடிக் கொண்டாள் செல்லம்மா.

அனைவரும் சிரிக்க, ஓரமாய் நின்றிருந்த நடராஜன், "அப்போ நான் கிளம்புறேன் ஸார்," என்றான்.

"அட என்னப்பா கிளம்பறேன்ற. என் புள்ளைய காப்பாத்துன நீ அவன் எழுந்து நடமாடுற வரைக்கும் இருப்பா."

"இல்ல ஸார். ஊர்ல ஆயிரம் வேலை கிடக்கு. கண்ணம்மா கஷ்டப்பட்டுட்டு இருக்கேன்னுதான் ஓடி வந்தேன். இப்பத்தான் அது முகத்துல சிரிப்பைப் பார்த்திட்டேனே. இனி அது சந்தோஷமாக இருக்கும். எனக்கு அது போதும். நான் கிளம்பறேன்."

"ஏம்ப்பா, உன் அக்கா பொண்ணுங்களைக் கரை யேத்தத்தானே கல்யாணமே பண்ணாம இருந்த. இப்பத் தான் ரெண்டு பேரும் லைஃப்ல செட்டிலாகிட்டாங்களே. இனிமேலாவது கல்யாணச் சாப்பாடு போடுவியா?"

"இல்ல சார். வயசாகிப் போச்சு. எனக்கு அதிலெல்லாம் ஆர்வமும் கிடையாது. பேசாம வயல் வரப்புன்னு வாழ்ந்து என் காலத்தை ஓட்டிடுவேன்."

"அப்படியென்ன மாமா உங்களுக்கு வயசாகிப் போச்சு. நாங்க அருமையான பொண்ணா பார்க்கிறோம். நீங்க தாலி கட்டுங்க..." - என்றாள் பாரதி.

"இல்ல கண்ணம்மா, இந்த ஜென்மத்தில எனக்குக் கல்யாணம் இல்ல. அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா

அப்போ பார்த்துக்கலாம். என்னைப் பத்தி யோசிக்கிறதை விட்டுட்டு சந்தோஷமா இருங்க. நான் கிளம்புறேன்.

"பிரதாப், ஹோட்டல்ல பை இருக்கு. எடுத்திட்டு அப்படியே போயிடுறேன். மாப்பிள்ளையைப் பத்திரமா பார்த்துக்குங்க. நான் போயிட்டு அக்காவையும் மாமாவையும் அனுப்புறேன். வர்றேன்," - என்றவன் அதற்கு மேல் நிற்காமல் போய்விட்டான்.

"ஏன் அண்ணி, உங்க மாமா பேச்சுல ஏதோ விரக்தி தெரியுதே. ஏதேனும் லவ் பெயிலியரா?" - எனக் கேட்ட பிரதாப்பிடம் அவசரமாய் மறுத்தாள் பாரதி.

"சேச்சே, அப்படியெல்லாம் எதுவும் இல்லை. எப்பவுமே எங்க மாமா மனசில நாங்களும் எங்க குடும்பமும்தான்! இல்ல செல்லா..."

செல்லம்மாவின் மனம் பாரமானது. "ஆமாம், மாமாவின் மனதில் நாம்தான் இருக்கிறோம். எப்போதும் இருப்போம்!" - என்றாள் அமைதியாய்.

மாமாவின் மனதில் தான் இருப்பதையே உணராத பாரதி கணவனின் அருகில் வந்து அமர்ந்தாள். கணவன் கண் விழிப்பதற்காகக் காத்திருந்தாள்.